
# ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

நிலை : **தலைவர்**

பாட புத்தகம் எண்: **10**



<u>நிலைகள்:</u>

5. ஊழியர்

4. **தலைவர்**

3. குழு அல்லது பராமரிப்புத் தலைவர்

2. சீஷர்கள்

1. ஆரம்ப நிலையில் உள்ளவர்

***வேத பாட திட்டங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ந்த ஊழியராகவும் மற்றும் செயல்பாட்டு திறமையில் உயரவும், செயல்பாட்டு திறமையுள்ள ஊழியத்தை பெறவும் !!!***

***தன்னில் தானே படித்துக்கொள்ளவும், அதே வேளையில் மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் எளிதானது !!!***

# ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

**<u>நோக்கம்:</u>**

## → ஒன்றான மெய்தேவனாகிய அவரை அறிந்துக் கொள்ளுதல்

(வளருதல் / முதிர்ச்சியடைதல்)

- யோசுவா1:8, "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடத்துகொள்ளுவாய்."

- 2 பேதுரு 3:18, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

- 2 தீமோ. 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

- கொலோ. 1: 27, 28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."

## → பிறர் அவரை அறிந்துக் கொள்ள செய்தல்

(பெருகுதல் / இனப்பெருக்கமடைதல்)

- 2 தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

- 2 தீமோ. 3:16,17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

- எபே.2:10,"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

- 2 பேதுரு. 1:8, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

**<u>கொள்கை:</u> "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது!" (ரோமர்.11:36)**

(அறிவிலே அதிகரித்தல்; குணாதிசயத்தில் முதிர்ச்சியடைதல்; ஆவிக்குரிய வரங்களை உபயோகித்தல்)

## அட்டவணை பாட புத்தக எண்: 10


| | பக்க எண் |
|---|---|
| ◆ சபை நிறுவுதலின் முக்கிய கொள்கைகள் | 4 |
| ◆ பவுலுடைய சபை நிறுவுதலின் மாதிரியிலிருந்து கற்றுக் கொள்ளுதல் | 16 |
| ◆ G-12 அல்லது செல் திருச்சபைகள் (செல் என்பது பெருக்கமடையக் கூடியது) (12 அதிகாரங்கள்) (முகவுரை, சரித்திரம், செல்கள் எதற்காக?, திறந்தவெளி செல்கள், G-12 செல்லின் கட்டமைப்பு, உங்களுடைய குழுவை தெரிந்தெடுப்பது எப்படி?, G-12 செல் கூடுகையை எப்படி நடத்துவது?, சிறுவர்கள் இதில் எப்படி பொருந்தக் கூடும்?, இளைஞர் செல் குழுக்கள், செல் குழுக்கள் மூலமாக சுவிசேஷ பிரபல்யம், செல் குழுவுக்குள் வெற்றி தரும் தொடர்பு உறவுகளை எவ்வாறு விருத்தி செய்வது?, எப்படி ஆரம்பிப்பது?) | 26 |
| ◆ செல் சபைகளைப் பற்றிய சுருக்கமான கண்ணோட்டம் அல்லது G-12 செல் குழு தத்துவத்தின் யுக்தி | 71 |
| ◆ G-12 அல்லது செல் திருச்சபைகளை கையாளும் யுக்தி முறைகளை நடைமுறைப்படுத்துதல் (8 அதிகாரங்கள்) (செல் என்றால் என்ன? ஒரு செல் திருச்சபை அல்லது செல் குழுவை உடைய திருச்சபை? G-12 தரிசனத்தின் மதிப்பீடுகள், தரிசனத்தின் இருதயம், வெற்றியின் ஏணிப்படிகள், இயேசுவுடன் இடைபடுதல், தனிச்சிறப்பை பெற்ற பள்ளிகள், ஒரே வகையான இனத்தைச் சேர்ந்த குழுக்களின் வல்லமை) | 76 |
| ◆ திருச்சபை வளர்ச்சிக்கான வல்லமையுள்ள பிற கோட்பாடுகள் (10 அதிகாரங்கள்) (புதிய ஏற்பாட்டு திருச்சபையானது ஒரு வளந்துக்கொண்டிருக்கும் திருச்சபை, ஆதித் திருச்சபையின வளர்ச்சிக்குக் காரணமான ஏதுக்கள், சிறிய சபைகளுக்கான சபை வளர்ச்சி, உங்களுடைய திருச்சபையும் வளர முடியும், சுவிசேஷ பிரபல்ய ஊழியம், திருச்சபை வளர்ச்சிக்கான வியூக யுக்திகளை அமைத்தல், திருச்சபை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஏதுக்கள், திருச்சபை வளர்ச்சியின் இயந்திர நுட்பம், சிறியவைகள் கூட அழகானவைகளாயிருக்கக் கூடும், சாரம்சத்தைக் கூறுவோம்) | 91 |
| ◆ ஒரு பிரசங்கத்தை அல்லது வேத பாடத்தை ஆயத்தம் செய்வது எப்படி? (5 அதிகாரங்கள்) (பிரசங்க இலக்கியம், வேதபகுதி பிரசங்கம், வியாக்கியான பிரசங்கம், வாழ்க்கை வரலாறு சார்ந்த பிரசங்கம், பிரசங்கியார்) | 159 |
| ◆ பிரசங்கங்களையும், பாடங்களையும் எப்படி ஆயத்தம் செய்வது? (4 அதிகாரங்கள்) (நீவீர் ஏன் முன்பாகவே திட்டம் பண்ண வேண்டும?, முன்பாகவே எப்படி திட்டம் பண்ணுவது?, படிப்பதற்கென்று நேரத்தையும், இடத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவும், உங்களுடைய பிரசங்கத்தை அல்லது பாடங்களை ஆயத்தம் செய்யும்போது) | 203 |
| ◆ நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் கற்றுக் கொடுக்கும் பாடங்கள் (பிரசங்கிக்கவும், கற்றுக் கொடுக்கவும் தேவையான உதவிகள் மற்றும் மூலப் பொருட்கள்) | 216 |
| ◆ நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளும், எடுத்துக் காட்டுகளும் | 223 |
| ◆ இயேசு கிறிஸ்துவின் உவமைகளும், அற்புதங்களும் | 235 |
| ◆ வேதாகமத்தில் முதன்முறையாகச் குறிப்பிட்டுள்ள காரியங்கள் | 239 |
| ◆ பிரசித்தி பெற்ற வேதாகம கதாபாத்திரங்கள் - அவர்களின் பெயருக்குரிய அர்த்தங்களுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது | 242 |
| ◆ வேதாகமத்தின் தங்க அதிகாரங்கள் (படிப்பதற்கும், தியானத்திற்கும்) | 248 |
| ◆ புதிய ஏற்பாட்டு கட்டளைகள் | 251 |
| ◆ புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்கள் | 274 |
| ◆ வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் இழைக்கப்பட்டுமான பாவங்களின் அட்டவணை (370 வகைகள்) | 283 |

# சபை நிறுவுதலின் முக்கிய கொள்கைகள்

## சபை நிறுவுதல் சுவிசேஷ ஊழியத்தில் துவங்குகிறது:

சுவிசேஷ ஊழியம் சபை நிறுவுதலின் மையப்பகுதியாகும். இதுவே கிறிஸ்தவ சமயத்தின் திட்டமாகும். உண்மையான சபை நிறுவுதலில் மூன்று முக்கிய பொறுப்புகளுண்டு:

- சுவிசேஷ ஊழியம்,
- சமூக சேவை,
- சமூக சேவையின் நடவடிக்கை.

மனிதனுடைய ஆவிக்குரிய தேவையின் அடிப்படையில் சுவிசேஷ ஊழியம் சபை நிறுவுதலிலும், சபை வளர்ச்சியிலும் ஈடுபடுகிறது. மனிதனுடைய மதிப்பு உயர்வு இவைகளின் அடிப்படையில் சமூக சேவையானது துயர் துடைத்து முன்னேற்றமடையச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது. மனித நீதியின் அடிப்படையில் சமூக சேவையின் நடவடிக்கைகள், அரசியல், சமுதாயம், பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இந்த மூன்று பொறுப்புகளும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் கிரியை நடப்பிக்கிற பிதாவின் இருதயத்திலிருக்கிற தேவனுடைய திட்டத்தை செயல்படுத்துபவைகளாக இருக்கிறது. சுவிசேஷம் வேராகவும், சுவிசேஷ ஊழியமும், சமூக சேவையின் பொறுப்பும் கனிகளாகவுமிருக்கின்றன.

சமயம் பரப்பும் துறையானது சுவிசேஷ ஊழியம், சமூக சேவை என்பவைகளின் சந்தர்ப்பத்தில் விளக்கப்படல் அவசியம். சமயம் பரப்புதல் என்பது தெய்வீக அழைப்பு அல்லது கட்டளைக்கு மனிதன் பதிலளிப்பதேயாகும். கிறிஸ்து நம்மை இந்த உலகத்திற்குள் அனுப்பியிருக்கிறார் என்ற திட நம்பிக்கை மேலோங்க, சுவிசேஷ ஊழியம், சமூக சேவை என்பவைகளை உள்ளடக்கியதே கிறிஸ்தவ வாழ்க்கையின் முழுமையான பண்பாகும்.

## சுவிசேஷ ஊழியத்தின் பலன் சபை ஸ்தாபித்தலாக இருத்தல் வேண்டும்:

மத்தேயு 28:18-20 வசனங்களில் இயேசு கிறிஸ்து உரைத்திருப்பதுபோல, சகல ஜாதிகளையும் சீஷராக்குவதுதான் சுவிசேஷ ஊழியத்தின் இலக்கு ஆகும். சுவிசேஷ ஊழியத்தின் இலக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது மட்டுமின்றி, கேட்பவர்களைப் பின்தொடர்ந்து, அவர்கள் சீஷர்களாக மாறி ஸ்தல சபையின் ஐக்கியத்தில் இணைந்து இயேசுவை பின்பற்ற வேண்டுமென்பதேயாகும். <u>சீஷராக்குதல் என்பது ஒருவரது வாழ்க்கையில் ஐந்து பகுதிகளைக் கொண்டதாக இருக்கிறது. அவைகள்:</u>

1. இயேசுவைப் பின்பற்ற எடுக்கும் ஆரம்ப தீர்மானம்
2. தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் (வெளியரங்கமாக அறிக்கை செய்தல், பகிரங்கமாக சாட்சி கொடுத்தல்)
3. ஸ்தல சபையில் இணைந்து தன்னை சபைக்கு அர்ப்பணித்தல்
4. முறையாக சீஷராக்கப்படுதல்
5. ஸ்தல சபையில் பொறுப்புள்ள அங்கத்தினராகி சாட்சி கொடுத்தலிலும், ஸ்தல சபைக்கு சேவை செய்வதிலும் இறுதியாக சமுதாயத்திற்கு சேவை செய்கிறவர்களாகவும் மாறுதல்.

## சுவிசேஷ ஊழியம் சபை வளர்ச்சியின் பலனாக இருத்தல் வேண்டும்:

இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளைப்படி ஜனங்களை ஆதாயப்படுத்தி சகல ஜாதிகளையும் சீஷராக்குவதே சுவிசேஷ ஊழியத்தின் இலக்காகும். இப்படிச் செய்தல் புதிய ஆராதனைக் குழுக்கள் அல்லது புதிய சபைகளை உருவாக்குதலின் பலனாக இருக்கும். அந்த புதிய விசுவாசிகள் ஆராதனையிலும், ஜெபத்திலும், வேதபாட வகுப்பிலும் சாட்சி சொல்லுதலிலும் ஒருவரோடொருவர் இணைந்து செயல்படலாம். இதன் விளைவாக சபை வளர்ச்சியடைவது மட்டுமல்லாமல், பட்டணங்கள்,

நகரங்கள், கிராமங்களிலும் புதிய சபைகளும் தோற்றுவிக்கப்படும். ஆகவே, சுவிசேஷ ஊழியத்தின் பலனாக சபைகளும் வளர்ந்து பெருகுகின்றன. செயலூக்கமுள்ள சுவிசேஷ ஊழியத்தின் விளைவு சபை ஸ்தாபித்தலும் சபை வளர்ச்சியும்தான் என்று சொல்லலாம்.

## <u>சபை வளர்ச்சியின் உண்மையான விளக்கம் என்பதின் அர்த்தம்:</u>

- அங்கத்துவ எண்ணிக்கையில் பெருகுவதும்
- சபைகளின் எண்ணிக்கையில் பெருகுவதும்

மட்டுமல்லாமல் - விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சியிலும்
- சபைகளின் ஒழுங்கான வளர்ச்சியிலும்
- சபையானது எல்லா விதங்களிலும் தன்னிறைவுடையதாக இருத்தலுமேயாகும்.

ஆரோக்கியமான எந்த சபையும் மேற்சொன்னவைகளிலும் மற்றும் பிற பகுதிகளிலும் வளர்ச்சியுள்ளதாகக் காணப்படும். எல்லா பகுதிகளிலும் போதிய கவனம் சம அளவில் செலுத்தப்படுதல் மிக அவசியமாகும்.

## <u>அநேக சபைகள் சபை ஸ்தாபித்தலில் ஈடுபடாததற்குரிய காரணங்கள்?</u>

1. சபை ஸ்தாபித்தல் ஊழியத்தின் தன்மையைக் குறித்து தவறாக பொருள் கொண்டிருத்தல்
2. சுவிசேஷ ஊழியத்தின் இலக்குகள், விளைவுகளைக் குறித்து தவறாக பொருள் கொண்டிருத்தல்
3. சமயப் பரப்புத் துறை திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்காமல் தவறான இடத்தில் வைத்திருத்தல்
4. வரவேற்கும் மக்களின் நோக்கங்களையும், மக்கள் குழுக்களின் நோக்கங்களையும் தவறாக திரித்துக் கூறுதல்
5. சபையில் புதிய அசைவை ஆவியானவர் கொண்டு வரும்போது நம்பிக்கையின்மையுடனிருத்தல்.

## <u>வேதாகம அடிப்படையில் சபை ஸ்தாபித்தல்</u>

சபை ஸ்தாபித்தலைக் குறித்த பொதுவான கருத்து உலகத்திற்காக தேவன் கொண்டிருக்கும் அவருடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும். இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவின் தனிப்பட்ட ஊழிய திட்டத்தின் ஒரு பகுதிதான் சபை ஸ்தாபித்தல். இது இயேசு கிறிஸ்துவின் நேரடியான வாசகங்களிலும், உவமைகளைக் கொண்டு போதித்த போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

## 1. இது பிதாவின் இருதயத்திலிருந்த வேதாகம திட்டத்தின் அடிப்படையாகக் கொண்டது.

சபையானது உலகத்திற்குள் செய்யப்படுவதற்காக, அனுப்புகிற எல்லாவற்றையும் விவரிப்பதே திட்டம். காலம் நிறைவேறினபோது தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார் (கலா 4:4-6) தேவன் தாமே தேடுகிறவரும், இரட்சிக்கிறவருமாயிருக்கிறார் என்று கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய வெளிப்பாடு நமக்குக் காண்பிக்கிறது. மனிதன் தன்னோடு ஒப்புரவாக வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். பிதா தன்னை அனுப்பினது போல குமாரன் சபையை அனுப்புகிறார் என்று யோவான் 20:21ல் வாசிக்கிறோம். “பிதா என்னை அனுப்பியிருக்கிறதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். கிறிஸ்துவிலிருந்த தேவனுடைய திட்டத்தின் அடிப்படையில் தான் அத்திட்டத்ததைக் குறித்து நாமும் உணர்ந்திருத்தல் வேண்டும். இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே இயேசு அனுப்பப்பட்டார் (லூக்கா 19:10)

## 2. இயேசு கிறிஸ்துவின் போதனையை அடிப்படையாகக் கொண்டது.

சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிற மக்களை ஆதாயப்படுத்தி சபையின் கட்டுக்குள் கொண்டுவருவதின் அத்தியாவசியத்தை உணர்த்தும்படி அறுவடையின் உதாரணத்தை இயேசு உபயோகப்படுத்தினார்.

அறுப்புக்கு அதிகமான வேலையாட்கள் அனுப்பப்பட ஜெபிக்கும்படி தம்முடைய சீஷர்களுக்கு போதித்தார் (மத் 9:37) அறுவடை ஆயத்தமாயிருக்கும்பொழுது, பயிர்களை அறுத்து, கட்டுகளாக கட்டி களஞ்சியத்திற்குக் கொண்டு வர வேண்டும். இதைப் போலவே ஒரு கூட்டம் ஆயத்தமாயிருக்கும்போது போதித்து, ஞானஸ்நானம் கொடுத்து, ஸ்தல சபையின் ஐக்கியத்திற்குள் கொண்டுவர வேண்டும்.

நாம் தேடினால் மாத்திரம் போதாது, அவர்கள் சபையாகிய மந்தையில் சேர்க்கப்படுதல் மிக அவசியம் என்பதை ''காணமற்போன வெள்ளிக்காசு'', ''காணமற்போன ஆடு'' ஆகிய உவமைகள் போதிக்கின்றன. (லூக் 15:1-10) பெரிய விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் வரவில்லையென்று அறிவிக்கப்பட்டபோது, பெருவழிகளிலும், வேலிகளருகிலும் போய் ஜனங்களை விருந்துக்கு வரும்படி வருந்தி கேட்டுக் கொள் என்று கட்டளையிட்டான் (லூக் 14:23) விருந்துக்கு ஆட்களை அழைப்பது மட்டுமல்ல அவர்கள் வந்து விருந்தில் பங்கு பெறுகிறார்களா? என்பதையும் கவனிக்க வேண்டும். ஒரு கூட்ட மக்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத பட்சத்தில், அதற்குப் பதிலளிக்கும் இன்னொரு கூட்டத்தினரைத் தேடி கண்டுபிடித்து அவர்களை ஆவிக்குரிய விருந்துக்கு அழைக்க வேண்டும். ஜனங்களை கிறிஸ்தவர்களின் கட்டுக்குள் கொண்டுவரவேண்டும், சபைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்பதும் இயேசுவின் போதனையில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

## 3. பிரதான கட்டளையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

சபை நிறுவுதலின் கொள்கைகள் மத்தேயு 28:19-20ல் நாம் வாசிக்கிற பிரதான கட்டளையினடிப்படையில் அமைந்துள்ளது. நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவரையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். சீஷர்களைப் பார்த்து போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று உரைத்ததின் அர்த்தம் என்ன? இந்த பிரதான கட்டளையில் நான்கு முக்கியமான வார்த்தைகள் காணப்படுகின்றன. அவைகளாவன:

- புறப்பட்டுப் போங்கள்
- சீஷராக்குங்கள்
- ஞானஸ்நானம் கொடுங்கள்
- உபதேசம் பண்ணுங்கள்

''போ'' என்பது ஒரே முறை சொல்லப்படும் கட்டளை வினைச் சொல் என்று பொதுவாக கருதப்படுகிறது. இது இயேசுகிறிஸ்துவின் கடைசி கட்டளையாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இது சரியானதன்று. மூல பாஷையாகிய கிரேக்க மொழியில் சீஷராக்குங்கள் என்பதுதான் முக்கியமானது அல்லது அவசரத்தை உணர்த்தக்கூடிய கட்டளை வினைச்சொல்லாக அமைந்துள்ளதேயல்லாமல் புறப்பட்டுப் போங்கள் என்பது அல்ல. மற்ற சொற்களெல்லாம் துணை வினைச்சொற்களாகும். ''போ'' என்ற வார்த்தையான பெயரெச்சமாகும், இது போயிருத்தல் வேண்டும், போகும்போது என்று மொழிபெயர்த்திருந்திருக்க வேண்டும். எனவே, இது கட்டளை என்பது ஓரளவுக்குத்தான் சரி. ஆனால் சீஷர்களாக்கப்படுதலுக்குரிய ஒரு ஒழுங்கு முறையாகவே இது இருக்கிறது. ''சீஷராக்குங்கள்'' என்ற பதத்திற்கு கிரேக்க மொழியில் ஒரேயொரு வார்த்தைதான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஜாதிகள் என்று குறிக்கப்பட்டுள்ளதில் சீஷர்கள் என்று மொழிபெயர்த்திருந்திருக்க வேண்டும். சீஷராக்கும் செயலானது இஸ்ரவேல் அல்லது எருசலேமுக்குள் மாத்திரம் அடங்கக் கூடியவையல்ல. ஆனால் எல்லா தேசத்திற்கும் அதாவது எல்லா வகை மக்களும் இதில் அடங்குவர்.

விசுவாசிகள் ஆண்களையும், பெண்களையும் இயேசுவிடம் கொண்டு வந்து பொறுப்புள்ளவர்களாகவும், அநேகரை தங்களைப் போல் ஆதாயப்படுத்தி ஸ்தல சபையில் சேர்க்கிறவர்களாகவும் வேண்டுமென்று பிரதான கட்டளையானது கட்டளையிடுகிறது. இப்படிதான் எல்லாவகையான ஜனங்களையும் சீஷராக்குதல் வேண்டும். ஸ்தல சபையின் ஆராதனைக் குழுவில் புது விசுவாசிகளை சேர்க்காதவரைக்கும் சுவிசேஷ ஊழியத்தின் கடின உழைப்பு முற்றுப் பெறாதாதகவே இருக்கும். சபை ஸ்தாபிக்கும் ஊழியமானது விசுவாசிகளின் உண்மையையும், பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படியும் கீழ்ப்படிதலையுமே பிரதிபலிக்கிறது.

## 4. சபையைக் கட்டும் தேவனுடைய திட்டத்தினடிப்படையில் அமைந்துள்ளது

மத்தேயு 16:18ல் சபையை இயேசுவே கட்டுவார், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லையென்று வாக்குப்பண்ணியிருக்கிறார். இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று பேதுரு அறிக்கை பண்ணினதினால் அவரையும் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்களின் அஸ்திபாரத்தில் பங்குள்ளவராகும்படி தெரிந்தெடுத்தார் (மத்தேயு 16:16) சீஷர்களுக்கு இயேசுவைக் குறித்து தேவனளித்த வெளிப்பாட்டினை அடிப்படையாக கொண்டிருந்தது. கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைக் குறித்த அறிவும், அதைப் பார்த்த தனிப்பட்ட அனுபவமும் இருந்ததினால் அவரே கண் கண்ட சாட்சியாக இருந்தார். இவைகளுக்கெல்லாம் நாங்கள் சாட்சிகளாக இருக்கிறோம் என்று அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார். விசுவாச அறிக்கையும், தனிப்பட்ட அனுபவமும் அப்போஸ்தலர்களின் அஸ்திபாரத்திற்குரிய ஒப்பற்ற உண்மைகளாக இருந்தது, இதன்மேல் கர்த்தர் தன் சபையைக் கட்டினார்.

எபேசியர் 2:19-21ல்.. பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர் களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.

மேற்கூரிய இரண்டு வேத பகுதிகளிலிருந்தும் சபை ஸ்தாபிக்கும் தேவனுடைய நித்திய திட்டத்திற்கு, அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அஸ்திபாரமாக இருக்கும்படி தேவன் தெரிந்துகொண்டாரென்று தெளிவாகத் தெரிகிறதல்லவா. இந்த புதிய சபைகளைக் கட்டும் தேவனுடைய ஒப்பற்ற செயலை விசுவாச அறிக்கை, சாட்சியிடுதல், போதித்தல் போன்ற வரங்களினால் நிறைவேற்றியுள்ளார்கள். பேதுரு பவுல் மற்றும் பிற அப்போஸ்தலர்களின் வாழ்க்கை மற்றும் ஊழியங்களிலிருந்து நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது. விசுவாச அறிக்கையிடுகிற சீஷர்கள், நவீனகால மிஷினெரிகள் மற்றும் சுவிஷேசகர்கள் மூலமாக இன்றும் தேவன் தம்முடைய சபையைக் கட்டிக் கொண்டிருக்கிறார். இந்த உலகில் தேவன் தம்முடைய திருச்சபையைக் கட்டும் திட்டத்தில் நாமும் ஒரு அங்கமாக விளங்குவது நமக்களிக்கப்பட்ட மகத்தான சிலாக்கியமாகும்.

## 5. அப்போஸ்தல வரம் மற்றும் அதன் செயல்பாடுகளினடிப்படையில் அமைந்திருக்கிறது.

சபையைக் கட்டுவதற்காகவே பரிசுத்தாவியானவர் விசுவாசிகளுக்கு வரங்களைக் கொடுத்திருக்கிறார். 1 கொரிந்தியர் 12:28, ‘‘தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் ......’’ ஆகவே அப்போஸ்தல வரத்தை தேவ ஆவியானவர் சபைக்குத் தந்திருக்கிறார். அவர்களின் முதல் வேலை புதிய இடத்தில் போய் சுவிஷேசத்தைப் பிரசங்கித்து சபையைக் கட்டுவதாகும். பேதுருவும், பவுலும் நல்ல முன் உதாரணங்களாக இருக்கிறார்கள். 1 கொரிந்தியர் 3:6ல் பவுல் தன்னுடைய அப்போஸ்தல ஊழியமாக சபைக் கட்டுதலை தெளிவாக எடுத்துக் கூறுகிறார். ‘‘நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், ஆனால் தேவனே விளையச் செய்தவர்’’ என்று விளம்புகிறார்.

புதிய சபைகளின் செயல்பாடுகளுக்கு அப்போஸ்தல வரம் ஒப்பற்ற ஒன்றாகும். சபைகட்டும் குழு ஒன்றினை பவுல் வழிநடத்திக் கொண்டிருந்தார், பல பட்டணங்களுக்குச் சென்று சந்திப்பதும், சபை நிறுவுவதும் இவர்களின் வேலை. சபையை ஸ்தாபித்தபின்பு, அந்த ஸ்தலத்திலுள்ள தலைவர்களை நியமித்துவிட்டு புதிய இடங்களுக்குச் சென்றார். அப்போஸ்தல ஊழியத்தின் செயல்பாடுகள் என்பது, பொறுப்புகளை தன்னகத்தே வைத்திருந்து சபையின்மேல் அதிகாரம் செலுத்துவதல்ல, ஆனால் அந்தந்த ஸ்தல சபைகளின் தலைமைத்துவத்தின் கீழ்விட்டுவிட்டு புதிய இடத்தில் சபைகட்ட நகர்ந்து செல்லுவதாகும். புதிய இடங்களில் சபைகளை ஸ்தாபிக்க இன்றும் சிலரை அழைத்து வேறுபிரித்து அப்போஸ்தல வரத்தை தேவன் அளித்து வருகிறார்.

## 6. தேவனுடைய முதல் முயற்சியினடிப்படையில் அமைந்திருக்கிறது.

ஆவிக்குரிய நிலை, எண்ணிக்கை இவ்விரண்டிலுமே சபை வளர தேவன் காரணமாயிருக்கிறார். 1கொரிந்தியர் 3:5-8ல் தேவனே சபையில் வளர்ச்சியைக் கொடுக்கிறார். தன்னுடைய திட்டம் நிறைவேற ஜனங்களைக் கருவியாக பயன்படுத்துகிறார். அப்பொல்லோ யார்? பவுல் யார்? நாம் ஒவ்வொருவரும் விசுவாசிக்கும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட அவருடைய பணிவிடைக்காரர்கள். நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், விளையச் செய்தவர் கர்த்தர். நட்டவனாலுமல்ல, நீர்ப்பாய்ச்சுகிறவனாலுமல்ல விளையச் செய்கிறவர் தேவனே நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் சமமே, அவர்கள் தங்கள் வேலைக்குரிய கூலியைப் பெறுவார்கள்.

உண்மையில் தேவனே சபைக்கு வளர்ச்சியைக் கொடுக்கிறவர். நம்முடைய ஊழிய ஸ்தலத்தில் குறிப்பிட்ட குழுவினர் சுவிஷேசத்திற்குக் கீழ்ப்படியும்போதும், மற்றவர்கள் கீழ்ப்படியாதிருக்கிறபோதும் இந்த இரகசியத்தை நாம் காண்கிறோம். தேவன் தம்முடைய மேலான சித்தத்தின்படி, குறிப்பிட்ட காலத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியுப்படி, சில குறிப்பிட்ட குழுவினரை நடத்துகிறார், ஏனென்றால் சபையின் வளர்ச்சிக்கு முதல் முயற்சி எடுப்பவர் தேவனே. தன்னுடைய சித்தம் நிறைவேற அனுப்பப்பட்ட மனிதர்களை தனது கருவியாக பயன்படுத்துகிறார். அப்போஸ்தல புத்தகத்தில் ஆதி சபையின் விரிவாக்கத்திலிருந்து இது தெளிவாகிறது. இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் கர்த்தர் சபையில் சேர்த்தார் என்று அப்போஸ்தலர் 2:47ல் வாசிக்கிறோம். சபையை ஸ்தாபிப்பதிலும், கட்டுவதிலும் தேவனுடைய செயல்பாடுகளை காண்பிக்கிறது. ஜனங்களைத் தேவன் இரட்சித்து சபையில் சேர்க்கும் செயல்களில் ஈடுபடுகிறார் என்பதற்குச் சாட்சி பகரும்படி ஊழிய ஸ்தலத்தில் முன்னணியில் நிற்பவர்கள் சிலாக்கியம் பெற்றவர்கள். இவ்விதமாக தேவன் அகிலாண்டத்திலுமுள்ள தம்முடைய சபையைக் கட்டுகிறார்.

## 7. ஸ்தல சபையின் ஊழிய திட்டத்தினடிப்படையில் அமைந்திருக்கிறது

இந்த நாட்களில் ஸ்தல சபையின் ஊழிய திட்டத்தினை விளக்குவதில் அதிக குழப்பமும் வெற்றிடமும் நிலவுகிறது. இன்றுள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் விசுவாசிகள் மத்தியில் உச்ச நிலையை எட்டுகிற இரண்டுவிதமான குறிக்கோள்கள் நிலவுகின்றன. ஒன்று சமூக முன்னேற்றத்தையும், அரசியல் விடுதலையையும் நோக்கமாகக் கொண்டு செயல்படக்கூடிய “சமூக சுவிசேஷம்” ஆகும். இதில் மற்றொன்று அழிந்துபோகிற ஆத்துமாக்களைக் குறித்தே கவனம் செலுத்தக்கூடியது. இதில் அன்புக்கோ, வறுமை, பசியால் வாடுவோரைக் குறித்து எந்தவித கரிசனைக்கும் இடமில்லை. ஸ்தல சபையின் ஊழியத் திட்டத்தைக் குறித்து வேதம் கற்பிக்கும் போதனைகளுக்கு இப்படிப்பட்ட உச்ச நிலையையுடைய கருத்துக்கள் முரண்பாடானவைகள். ஆதிசபையில் வேதம் வாசிக்கிறதிலும், ஊழியம் செய்வதிலும் தங்களை அற்பணித்திருந்த போதிலும், பந்தி விசாரிக்க மூப்பர்களைத் தெரிந்தெடுத்தனர். ஜனங்களின் ஆவிக்குரிய, சரீர தேவைகள் இரண்டிற்குமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. மூப்பர்களில் ஒருவனாகிய ஸ்தேவான் பந்தியும் விசாரித்து, அதற்கப்பால் வசனத்தைப் போதிக்கும் ஊழியத்திலும் பங்கு கொண்டார். (அப் 6:1-8).

சுவிசேஷமும், சமூக பொறுப்பும் கொண்டதாக ஸ்தல சபையின் ஊழியத் திட்டம் இருக்கவேண்டும், அதில் சுவிசேஷம்தான் மிக முக்கியமானதும், ஊழியத்தின் மையக் கரிசனையாகவும் இருத்தல் மிக அவசியம்.

## 8. புதிய ஏற்பாட்டு சபையின் வளர்ச்சியின் மாதிரியின் அடிப்படையில் அமைந்திருக்கிறது

ஆதி திருச்சபை எப்படி வளர்ந்து, விரிந்து, பல இடங்களிலும் பெருகியது என்பதை அப்போஸ்தல நடபடிகளின் புத்தகம் சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறது. புதிய ஏற்பாட்டின் அறிக்கை எண்ணிக்கையைக் கொண்ட ஒரு பத்திரமாக அல்லது சான்றாக அமைந்திருக்கிறது. எருசலேமிலுள்ள ஆதி திருச்சபை 120 பேரைக் கொண்டு துவங்கிற்று. (அப் 1:15) பெந்தேகொஸ்தே நாளில் 3000 பேர் இச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (அப் 2:41-42) அதிவிரைவில் எருசலேம் சபையின் அங்கத்துவம் 5000 ஆக பெருகிற்று. (அப் 4:4) மறுபடியம் திரளான ஆண்களும், பெண்களும் சேர்க்கப்பட்டார்கள். (அப் 5:14) சீஷர்களின் தொகை அதிகமாக பெருகிற்று. (அப் 6:1,7) நாற்பது ஆண்டுகளுக்கு குறைவான கால கட்டத்தில் அன்றறியப்பட்ட மத நம்பிக்கையற்ற ஒவ்வொரு பகுதிகளிலும் புதிய

சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தவாவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின. (அப் 9:31; 16:5; 21:20).

மேற்சொல்லப்பட்ட ஆதி திருச்சபையின் வளர்ச்சி மாதிரியில் சபையானது எண்ணிக்கையிலும் வளர்ந்து, ஏற்கெனவே இருக்கும் விசுவாசிகளோடு, புதிய விசுவாசிகள் சேர்க்கப்படவேண்டும். மேலும் புதிய விசுவாசிகளைக் கொண்ட புதிய சபைகளும் ஆரம்பிக்கப்படவேண்டும். நமக்கு இருக்கிற சபைகளில் திருப்தி கொண்டு இருந்துவிடக்கூடாது. ஆதி சபை நமக்குக் காட்டும் வண்ணமாக சபையானது வளர்ச்சியடைய வேண்டும்.

புதிய ஏற்பாட்டு சபையின் வளர்ச்சியின் மாதிரி எண்ணிக்கையும், தரத்தையுமுடையதாக இருந்தது. ஒருவர் கீழ்க்கண்ட பிரகாரம் இதை விவரிக்க முடியும். புதிய ஏற்பாட்டில் சுவிசேஷ செயலூக்கம்தான் தரம் கொண்டதாக இருந்தது, இது எண்ணிக்கையில் உள்ள சொற்களினால் மாறாமல் கணக்கிடப்பட்டது. விசுவாசத்தையே தங்கள் தொழிலாகக் கொண்டவர்களின் எண்ணிக்கையைப் பொருத்தமட்டில் எண்கள் மிகச் சரியாக கூறப்பட்டுள்ளது. இவைகள் தொடர்ந்து பின்பற்றுதலிலும், ஞானஸ்நானம் பெருகிறதிலும் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் நிலைத்திருத்தலின் அடிப்படையிலும் அமைந்திருக்கிறது. கிரியையில்லாத விசுவாசம் செத்தது போலவே ஆவிக்குரிய வளர்ச்சியும் புதிய ஏற்பாட்டில் தரத்தினடிப்படையில் அடிக்கடி சொல்லப்பட்டுள்ளது. இது சாத்தியமான ஒன்று ஏனென்றால் தரமும், எண்ணிக்கையும், ஒரே மெய்ப்பொருளின் இரண்டு தோற்றங்களாகும்.

## 9. சுவிசேஷத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாகிருக்கிறது என்று ரோமர் 1:16ல் அப்போஸ்தலனாகிய பவுல் தெரிவித்திருக்கிறார். இதையே திரும்பவும் 1கொரிந்தியர் 1:18,23-24 வசனங்களில் தெளிவுபட கூறுகிறார். சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். கிறிஸ்துவே தேவ பெலனாக இருக்கிறார். இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவபெலன், இதை மூன்று முறை பயன்படுத்துகிறார். ஜனங்கள் பாவத்திலிருந்து விடுவிக்கக்கூடிய வல்லமை சுவிசேஷத்தில் இயல்பாகவே உள்ளது, இந்த வல்லமை சாத்தானிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கக்கூடும். மனிதப் பிரதிநிதிகளால் சுவிசேஷம் உண்மையாகப் பிரசங்கிக்கப்படுமானால், அது பலனைக் கொடுக்கும். சுவிசேஷம் உண்மையாகவும், செயலூக்கமுடைய விதத்தில் பரப்பப்படுமானால், ஜனங்களின் இரட்சிப்பிலும், சபைகள் நிறுவப்படுவதிலுமான பலன்களைத் தரவேண்டும். சுவிசேஷ வித்தானது உண்மையாக விதைக்கப்பட்டு கண்ணீராலும், ஜெபத்தினாலும் நீர்ப்பாய்ச்சினால் அதிகப்பலன்களைக் கொடுக்கும். சபைகள் நிறுவுதல் என்பதின் அர்த்தம் இதுதான்.

## 10. பரிசுத்த ஆவியானவரின் கிரியை அடிப்படையாகக் கொண்டது

கிறிஸ்தவ ஊழிய திட்டத்தின் சபைகளை ஸ்தாபித்தல் என்பது மனிதனுடைய முயற்சியினால் ஏற்படுகிற ஒரு துணிவு அல்ல, அது தெய்வீக செயல். இதை வழிகாட்டி கட்டுப்படுத்தி செல்பவர் பரிசுத்த ஆவியானவரே. ஆவியானவரின் வழிகாட்டுதலும், கட்டுப்பாடும் அந்தியோகியா சபையில் வெளிப்பட்ட தெளிவான உதாரணம் அப்போஸ்தலர் 13ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது பர்னபாவையும், சவலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களை பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டு செலுக்கியா பட்டணத்துக்கு வந்து சீப்புரு தீவுக்குப் போனார்கள் (அப் 13:2-14) இந்த மிஷினெரிகளே (அப்போஸ்தலர்கள்) சபைகளை ஸ்தாபிக்கிற முதல் குழுக்களாக பரிசுத்த ஆவியானவரால் அனுப்பப்பட்டனர். அதன்பின்பு அவர்களுடைய ஊழியப் பிரயாணங்களில் சீஷர்களை உருவாக்கும்படியாகவும், பல சபைகளை பல பட்டணங்களில் ஸ்தாபிக்கும்படியாகவும் ஆவியானவரே அவர்களை உபயோகப்படுத்தினார் (அப் 13:52,14:22) சுவிசேஷகனாகிய பிலிப்புவின் ஊழியத்திலும்

பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலும், கட்டுப்பாடும் இருந்ததை நாம் தெளிவாகக் காண்கிறோம். (அப் 8) சபைகளை ஸ்தாபிப்பதற்கு ஆட்களை தெரிந்தெடுப்பதிலும், அனுப்புவதிலும், உபயோகப்பதிலும் பெரும் விருப்பம் கொண்டவராய் இருந்தார்.

மிஷினெரிகளோ, சுவிசேஷகர்களோ பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்துதான் வாழ்கிறோம் என்ற நினைவாற்றலோடு வாழவேண்டும். நமது படிப்பும், பயிற்சியின் அளவும், அனுபவங்களும் ஆவியானவரின் வல்லமைக்குப் பதிலாக அமையவே முடியாது.

## <u>சபை ஸ்தாபித்தலுக்குரிய ஏற்புடைய கொள்கைகள்</u>

சபை ஸ்தாபித்தல் அடிப்படையாகவே அது தேவனுடைய கிருபைக் கொண்டு செய்யப்படுகிற தேவனுடைய செயல். ஆகவே இவைகள் வேதம் சார்ந்தவை. தேவனுடைய கிருபை கிரியை செய்யாவிடில் மனுஷடைய எல்லாவித முயற்சிகளுமே பயனற்றதாக மாறிவிடும். செயலூக்கமுள்ள சபை ஸ்தாபித்தல் நடைபெற வேண்டுமானால் நாம் வேதாகம கொள்கைகளைப் பின்பற்றவேண்டும். எப்படியாயினும் இந்த சத்தியத்திற்கு இன்னொரு பக்கமும் உண்டு. சபை ஸ்தாபித்தல் அடிப்படையிலே தேவனுடையதாயிருந்தாலும் அது தேவனுடைய இரட்சிப்பின் கிருபைக்குரிய மனிதனுடைய செயலாகவே அமைந்துள்ளது. மனித முயற்சிகளை தேவன் பயன்படுத்துகிறார். போதகர்களும், மிஷினெரிகளும், சுவிசேஷகர்களும் தேவனுக்குத் தேவைப்படுகிறது. நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களை நெருங்குவதற்கு நாம் அந்த ஜனங்களையும், அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் அறிந்து மனித இயலைக் கற்று சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். சபை ஸ்தாபித்தல் தேவனும், மனிதனும் இணைந்து செய்கிற ஒரு கூட்டு முயற்சியாதலால், வேதத்தின் கொள்கைகளையும், மனித இயலின் கொள்கைகளையும் படிப்பது அவசியமானதாக இருக்கிறது.

### A. கிறிஸ்தவர்களல்லாதவர்களை ஆதாயப்படுத்துவதையே முதன்மையான கடின வேலையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

கிறிஸ்து அற்றவர்களையும், அவிசுவாசிகளையுமே நாம் ஆதாயப்படுத்துவதில் முன்னுரிமை அளிக்கவேண்டும். கிறிஸ்தவர்களை ஆதாயப்படுத்துவதற்குப் பதில் நமது ஸ்தல சபையை உயிர் மீட்சியடையச் செய்வதிலேயே நாம் எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கத்தக்க சோதனை ஏற்படலாம். அப்படிப்பட்ட சோதனையை கவனமாக நீக்கிவிடவேண்டும். ஸ்தல சபையில் நிச்சயமாகவே ஒரு பொறுப்பு இருக்கிறது. அதனால் கிறிஸ்தவர்களல்லாதவர்களை சுவிஷேசத்தினால் ஆதாயமாக்கும்படி அனுப்பப்படுகிறோம். ஆனால் ஸ்தல சபையின் பொறுப்பு முதன்மையானதல்ல. ஆவியல் உற்சாகமடையவும், ஐக்கியத்திற்காகவும் ஸ்தல சபையில் தொடர்ந்திருந்து, அதன் பக்திவிருந்திக்காக நம்மால் இயன்றதை நாம் செய்து கொண்டிருக்க வேண்டும். ஊழிய ஸ்தலத்தில் உங்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய கீழ்க்கண்ட பொறுப்புகள் இருக்கலாம், அவைகள் முதியோர் கல்வி, சமூக முனனேற்ற திட்டங்களில் கல்வி மற்றும் மருத்துவப் பணிகள் என்பவைகளே. ஒரு தனிப்பட்ட ஊழியம் செய்யும்படி ஒருவர் அழைப்புப் பெற்றிருப்பாரானால், அதையே பின் தொடர்ந்து அப்படிப்பட்ட வேலைகளைச் செய்யவேண்டும். ஏனெனில் சமூகக்கரிசனையும் தேவனுடைய ஊழியத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். ஒருவருக்கு சுவிசேஷ பாரத்துக்கும் சபை ஸ்தாபித்தலுக்கும் அழைப்பு இருக்குமானால் அவருடைய உற்சாகம் வேறுகாரியங்களில் திசை திருப்பப்பட்டு விடக்கூடாது. சபை ஸ்தாபிக்கும் ஸ்தலங்களில் சமூக சேவைகளில் ஈடுபடுவோர் இருப்பார்களானால் அவர்கள் சுவிசேஷ வேலையை தங்கள் சேவையின் ஒரு பகுதியாகக் கொண்டு சபையின் வளர்ச்சிக்கு உதவக்கூடியதாக அமைந்திருத்தல் வேண்டும். புதிய சபைகளை ஸ்தாபிப்பதை விட்டுவிட்டு மேற்பார்வையிடுதல், நிர்வாக வேலைகளைக் கவனித்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு, ஆவிக்குரிய காரியங்களைப் பேணி வளர்க்காமலும், ஸ்தல தலைவர்களைப் பயிற்சிவிக்காமல் விட்டுவிடும் அபாயகரமான காரியமுண்டு. சபை ஸ்தாபிப்பவர்களை அதற்கென்றே விட்டுவிடவேண்டும். சபை கட்டும் பணியின் ஒரு பகுதியாக கிறிஸ்தவர்கள் தங்களைப் போன்ற கிறிஸ்தவர்களை உருவாக்க பயிற்சி கொடுத்து அவர்களும் தங்களுடன் இந்த ஊழியத்தில் உதவிகரமாயிருக்கச் செய்து புதிய சபைகளை நிறுவவேண்டும். சபை கட்டும் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் மிஷினெரிகள் பக்கவாட்டில் செல்ல தங்களை அனுமதிக்ககூடாது.

## B. பதில் அளிக்கும் ஜனங்கள் அல்லது ஜனக்கூட்டத்தினரை தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்.

தேவன் எல்லாவற்றிற்கும் மேலான தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும், ஜனக்கூட்டத்தினரையும் அல்லது குழுவினரையும், ஜாதியினரையும், சமுதாயத்தினரையும், தேசத்தினரையும் கூட சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக ஒரு குறிப்பிட்ட காலத்தைக்கு வைத்திருக்கிறார். அறுவடைக்கு நிலங்கள் எப்படி ''ஆயத்தமாயிருக்கிறது'' என்பதை காணும்படி கர்த்தர் சீஷர்களை அறிவுறுத்தியினார் (யோவான் 4:35) சுவிசேஷத்திற்குப் பதில் தரும் சமாரியாவிலுள்ள இருதயங்களையே குறித்து இயேசு சொன்னார். அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கிற அப்படிக்கொத்த இருதயங்களையே மிஷினெரிகள் இன்று காணவேண்டும். பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளவிட்டால் தானாய் ஒருவனும் என்னிடத்தில் வரான் என்று இயேசுவும் சொல்லியிருக்கிறார் (யோவான் 6:44) ஒவ்வொருவரும் தேவனுடைய அழைப்பிற்கு பதில் தரக்கூடிய தேவன் நியமித்த காலத்தைக் குறித்து இது பேசுகிறது. சபை ஸ்தாபிக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன்பு சுவிசேஷத்திற்கு பதில் தரக்கூடிய இதுவரை சந்தித்திராத ஜனக் குழுக்களுடைய பகுதிகளில் பார்வையிட்டு அளவிடுதல் வேண்டும். கலாச்சாரம், பழக்கவழக்கம், மொழி, மேற்சொல்லப்பட்ட வித்தியாசமான வகை இனங்களும் இந்த அளவிடுதலில் அடங்கவேண்டும்.

## C. பதில் தரும் பகுதிகளில் கவனம் செலுத்துதல்

சுவிசேஷத்திற்குப் பதில் தரும் பகுதிகளை காண்பது மட்டும் போதாது. ஆனால் அங்குள்ளவர்களை கிறிஸ்தவ விசுவாசத்தில் கொண்டுவரும்படி நமது முயற்சிகளில் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால், இவர்கள் சுவிசேஷத்திற்கு அளிக்கும் வரவேற்பு எவ்வளவு காலம் தொடரும் என்று நம்மால் அறிவதற்கு வழியே இல்லை. இவர்களோ அறுவடைக்கு ஆயத்தமான நிலங்களைப் போன்றவர்கள், விதை முதிர்ந்து கெட்டுப்போய் அழுகிவிடுவதற்கு முன்பு அறுவடை செய்யவேண்டும். நமது ஊழிய ஸ்தலங்களில் சென்றிராத இடங்களை அடைய முற்படும்போது அதைத் தள்ளிவிட்டு பலவிதமான செயல்களில் ஈடுபடக்கூடிய எண்ணம் உருவாகும். பலவிதமான செயல்கள் அவசியமாக இருப்பினும், அவைகள் ஒவ்வொன்றும் நமது தலையாய கடமையான சுவிசேஷ வேலைக்கும் சபை நிறுவுவதற்குமே உதவியாகவே இருத்தல் வேண்டும். அதைவிட்டுவிட்டு நமது காலம், சக்தி, தாலந்துகள், பணம் இவைகளை வேறுபக்கம் திருப்பக்கூடாது. காலம் கடப்பதற்கு முன்பு சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் ஒவ்வொருவரையும் கிறிஸ்தவ மந்தையில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்.

பல தேசங்களிலுமுள்ள நாட்டுப்புற பகுதிகளில் அல்லது கிராமப்பகுதிகளில் சபைகளை ஸ்தாபிப்பதற்கு ''தாக்கிவிட்டு ஓடு'' என்ற செயல்பாடு உதவக்கூடியதாக இல்லை. அந்த முழு சமுதாயத்தையும் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதற்குரிய நீண்ட காலத் திட்டமும் நோக்கமும் தேவைப்படும். ஒருவேளை அந்த இடத்திலே தங்கி அந்த ஜனத்தோடே வாழ்ந்து அவர்களில் ஒருவராக கலந்திருக்கும்படி தேவன் அழைத்திருக்கலாம். ஜனங்கள் மத்தியில் வாழ்வது அம்மக்களின் நம்பிக்கையைப் பெறவும், சுவிசேஷத்தை எளிதாக அறிவிக்கவும், ஆதாயப்படுத்தவும் உதவிகரமாக இருக்கும். சபை நிறுவுதல் எளிதான காரியமாக இல்லாததால் கவனம் செலுத்தப்பட்ட முயற்சிகள் மிக அவசியம். திறமையும், தாலந்துகள் நிறைந்த, மொழியை எளிதாக கற்று, புது கலாச்சாரத்தில் வாழ தங்களை சரிப்படுத்திக் கொண்டு, நடந்தும், மிதிவண்டிகளில் சென்று, பல மலைகளில் ஏறி, இவையெல்லாவிற்கும் மேலாக நல்ல உடல் நலத்தையுடையவர்களே இக்காரியத்திற்குத் தேவைப்படுபவர்கள். இவைகள் அனைத்தும் ஒரு நபரில் காண இயலாது. ஆனால் இவ்விதம் செயலாற்றும் ஒரு குழு இதற்குத் தேவைப்படுகிறது. சபை ஸ்தாபிக்கும் ஊழியத்தில் போதுமான அளவு உதவி செய்வதற்கும் அவர்களை உருவாக்கும் நிகழ்ச்சிகளுக்கும் அதிகமாக ஒருமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரம் அவசியமாகும்.

## D. எதிர்பாளர்களுக்கு மத்தியில் சாட்சியை பராமரித்தல் அவசியம்

எதிர்ப்பாளர்களைப் பொறுத்தமட்டில் நாம் செய்யவேண்டிய காரியங்கள் என்ன? என்று மிஷினெரிகளும், சுவிசேஷகர்களும் அடிக்கடி கேட்கிறார்கள். அவர்களை நாம் தள்ளிவிடுவோமா? அவர்களுக்கும்

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது நமது பொறுப்பல்லவா? ஆம் சுவிசேஷம் சென்றடையாத அத்தனை மக்களுக்கும் சுவிஷேசத்ததைப் பிரசங்கிப்பது நமது கடமையாதலால் எந்த மிஷினெரி ஸ்தலங்களையும் நாம் விட்டுவிட முடியாது அல்லது மக்கள் குழுக்கள் மத்தியில் ஒரு வேளை நாம் ஊழியம் செய்யும் இடத்தை அதே மாவட்டத்திற்கும் அல்லது ஜனங்கள் குழுக்களுக்கு மத்தியில் ஒரு பட்டணத்திலிருந்து வேறு ஒரு பட்டணத்திற்கு மாற்றிக் கொள்ளலாம். எதிர்ப்பான இடங்களில் சுவிசேஷ விதையை தொடர்ந்து விதைத்துக் கொண்டிருக்கும் போதுதானே நமக்கு சாதகமான சுவிசேஷத்திற்குப் பதிலளிக்கின்ற இடங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் அவசியமாகும். சுவிசேஷத்திற்கு இவர்களும் கீழ்ப்படியும்படி தேவனுடைய வேளை வரும் என்ற நம்பிக்கையோடும், எதிர்ப்பார்ப்போடும் நமது சாட்சியை காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

## E. குடும்பம் அல்லது குழுக்களாக தீர்மானம் எடுக்க முயற்சி மேற்கொள்ளுதல்

கிழக்கத்திய தேசங்களில் ஒருங்கிணைந்த குடும்பங்களாகவும், விரிவுபடுத்தப்பட்ட குடும்பங்களாகவும் மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குழுக்களாக தீர்மானிப்பது என்பது அக்குழுக்களின் நடைமுறையாகும். குலம் சார்ந்த மக்களும், ஜாதி சமுதாயங்களும் பாரம்பரியமாகவே குடும்பங்கள், குழுக்கள் சார்ந்த நிலையில் வாழ்பவர்கள். சபை நிறுவுதலின் ஊழியத்தில் ஈடுபடும் வேளையில் குடும்பமாகவோ ஒருங்கிணைந்த பல குடும்பங்களாகவோ குழுக்களாகவோ முழு கிராமமாகவோ மொத்தமாக இயேசுவை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி நாம் எதிர்பார்க்கவேண்டும்.

தனித்து தீர்மானிக்கக்கூடிய மேற்கத்திய முறைகள் கீழை நாடுகளில் குறிப்பாக அதிக கிராமங்களைக் கொண்ட நாட்டுப்புறங்களிலும் ஆதிவாசிகள் மத்தியிலும் பொறுத்தமற்று செயலற்றதாக இருக்கிறது. தனிப்பட்டவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது தள்ளிவிட வேண்டுமென்று அர்த்தமல்ல தனிப்பட்டவர்கள் கிறிஸ்துவண்டை வரும்போது, அவர்களுடைய சிநேகிதர்களையும், உறவினர்களையும் அழைத்து வரும்படி உற்சாகப்படுத்தவேண்டும்.

## F. சமநிலையிலுள்ள எண்ணிக்கை கொண்ட சபை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு எதிர்பார்க்க வேண்டும்

யாரேனும் சபை ஸ்தாபிக்கும் ஊழியத்தில் ஈடுபடுவார்களேயாகில் சபை வளர்ச்சியானது எண்ணிக்கையில் பெருகி வளரவேண்டியதில் நம்பிக்கையுடையவர்களாக இருத்தல் அவசியம். 1 தீமோத்தேயு 2:3-4ல் கூறப்பட்டிருக்கிறபடி "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் சபை வளர்ச்சி மாதிரியும் இதுபோன்றதே. ஒரு குறிப்பிட்ட நேரத்திலோ அல்லது கால கட்டத்திலோ குடும்பமாகவும், குழுக்களாகவும், முழுக்கிராமமாகவும், முழு குலமாகவும் கிறிஸ்தவ விசுவாசித்திற்குள் வருவார்கள் என்று விசுவாசிக்க வேண்டும். சபையில் திரள்கூட்டம் வருவதால் ஆவிக்குரிய காரியங்களில் சபையானது பெலவீனமாகிவிடும் என்று எண்ணக்கூடாது. அது உண்மையல்ல, மேலும் திரள் கூட்டமாக கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவும் தீர்மானத்தைச் சொல்லும்போது அதை சந்தேகிக்கவும் கூடாது. இயேசுகிறிஸ்தும் தன்னிடத்தில் வந்த (நிக்கோதேமு மற்றும் பணக்கார வாலிப அதிகாரி) தனிப்பட்டவர்களில் மாத்திரம் அக்கறை கொள்ளாமல் திரளான கூட்டத்தைக் குறித்தும் கரிசனையுள்ளவராக இருக்கிறார். அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்றார்." (மத் 9:36-38) அறுப்பின் எஜமான் திரளான ஜனங்கள் தன்னிடத்தில் திரும்ப வேண்டுமென்பதில் அதிக உற்சாகமுடையவராயிருக்கிறார், அவருடைய பார்வையில் அவர்கள் வெறும் எண்ணிக்கைக்குரியவர்களாயல்ல. ஆனால் தன்னுடைய ஜீவனையே அந்த விலையேறப்பெற்றவர்களுக்காக மரிக்கக் கொடுத்தார். ஒரு மிஷினெரி ஏதோ ஒன்றிரண்டு தனிப்பட்ட நபர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதில் திருப்தியடைந்துவிடாமல் முழுக் குடும்பமும், ஒருங்கிணைந்த குடும்பங்களும், குழுக்களும், சமுதாயமும் கிறிஸ்துவண்டை வரவேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டும். இவ்விதமாகத்தான் சபைகள் பெருகி சபை வளர்ச்சியின் மதிப்பை அதிகரிக்க இயலும்.

எண்ணிக்கையின் பெருக்கம் எதிர்க்கப்படுவதோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியின் சாதனை என்றோ கூறுவதற்கில்லை. ஆனால் அதுதான் பலனும் நிரூபனமுமாகும். உண்மையில் எண்ணிக்கையின் பெருக்கமின்றி ஆவிக்குரிய வளர்ச்சியிருக்க முடியாது. ஆரோக்கியமான சபைக்கு இரண்டுமே அவசியமாகும்.

## G. செயலூக்கமுள்ள சீஷத்துவத்தை உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும்.

செயலூக்கமுள்ள சீஷத்துவம் மிகவும் முக்கியமானதாகும். சுவிசேஷ ஊழியத்தின் நோக்கம் வெதுவெதுப்பான கிறிஸ்தவர்களையுடையதாக இருக்க அல்ல. ஆனால் ஜீவிக்கிறதும் தன்னைப்போலவே பிற விசுவாசிகளை பெறக்கூடியவர்களாக இருப்பதுமேயாகும். ஆறுமாதத்திலிருந்து ஓர் ஆண்டுவரையிலும் புதிய விசுவாசிகளின் அறிவுத் திறனுக்கு ஏற்றாற்போல ஒழுங்கும் கிரமமுமான வேதபாடம் நடத்துதல் அவசியம். ஞானஸ்நானத்தில் புதிய விசுவாசிகள் எடுத்த தீர்மானம் முடிவு வரைக்கும் உரியதல்ல. அது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்ப அற்பணிப்பு மட்டுமேயாகும். இன்றும் ஆழமான அற்பணிப்புக்குள் அவர்கள் செல்லத்தக்கதான வேதாகம சத்தியங்களை அவர்களுக்குப் போதிக்கவேண்டும். ஒழுங்காக ஆராதிக்கவும், ஜெபிக்கவும் தக்கதான போதக பராமரிப்பு அளிக்கப்படல் அவசியம். வேதபாட கூட்டங்கள், கன்வென்ஷன் ஸ்திரமாக தனித்து இயங்கக்கூடிய சபைகளுக்குரிய முதலீடுகளாகும்.

## H. வீட்டு சபைகளிலும், கொண்டாட்ட மையங்களின் ஒரு பகுதியாக புது விசுவாசிகள் ஆகும்படி உற்சாகப்படுத்தவேண்டும்

வீட்டு சபைகளைக் குறித்து இந்நாட்களில் அதிகமாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. இச்சபைகள் பெலமுள்ள தொடர்புடையவைகளாக இருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இப்படிப்பட்ட இடங்களில் புது விசுவாசிகள் நல்ல பெலத்தையும், உற்சாகத்தையும் பெற்றுக் கொள்வார்கள். ஸ்தல தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவருவதற்குரிய நல்லதொரு வாய்ப்புதான் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையாகும்.

## I. ஸ்தல தலைமைத்துவ பயிற்சிக்கு மிக முக்கியமான இடமளித்தல்

ஸ்தல சபைகளில் இரண்டுவிதமான தலைமைத்துவ பயிற்சிகள் அளிக்கப்படல் வேண்டியது அவசியமாகும். ஒன்று முழுநேர ஊழியமும், அதற்கு உதவி செய்தலும் மற்றொன்று தன்னார்வ தலைமைத்துவமுமாகும். தலைமைத்துவத்தைப் பொருத்த காரியங்களை ஸ்தல சபையே தீர்மானிக்கும் அவையாவன, தேவையான தலைவர்களின் எண்ணிக்கை, தகுதியின்படிகள், தலைமைத்துவம் வகிப்போரின் தகுதிகள் (வேதாகம வழிகாட்டுதலின்படி) முதலான தலைமைத்துவத்தைப் பொருத்த காரியங்களை ஸ்தல சபையே தீர்மானிக்கும். தலைமைத்துவ முன்னேற்றம் ஸ்தல சபையிலும் ஸ்தல சபை மூலமாகவும் நடைபெறுதல் மிக அவசியமாகும். சபையின் மூப்பர்கள் வேதத்தை கையாள்வதிலும், அனுபவத்திலும் முதிர்ச்சியடைந்தவர்களாக இருப்பதோடு, ஸ்தல சபையின் அங்கத்தினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கிகரிக்கப்பட்டவர்களாகவும் இருத்தல் அவசியம். அவர்கள் எழுதப்படிக்க தெரிந்தவர்களாக இருப்பது நல்லது, அப்படி படிப்பறிவற்றவர்கள் முதியோர் கல்வியில் சேர்க்கப்பட்டு கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். ஒழுங்கான வேதபாட போதனை ஸ்தல சபையின் எடுத்துக்காட்டாக இருப்பது அவசியம். நீண்ட கால வேதாகம பயிற்சிக்கு அனுப்பப்படுவதற்கு முன்பு மிக கவனமாக தேர்ச்சி செய்தல் மிக அவசியம். இறுதி தேர்ச்சி செய்வதற்கு முன்பு குறுகிய கால பயிற்சி முகாமிற்கு அனுப்பி அவர்கள் விசுவாசத்தின் தன்மை, அற்பணிப்பு, திறமை, கல்வி கற்கவும் பயிற்சி எடுக்கவும் அவர்களில் காணப்படும் ஆர்வம் ஆகியவற்றை மிஷினெரிகள் கணிக்கலாம். தலைமைத்துவம் வகிக்கிறவர்கள் இந்த புதிய விசுவாசிகளை தேவனுடைய ஊழியர்கள் என்று கருதி, ஜீவியத்திலும், ஊழியத்திலும் இணைத்து பயிற்சி அளிக்க வேண்டும். புதிய தலைவர்கள் தங்கள் தலைமை வகிப்பவர்களின் ஜீவியம், ஊழியம் இவைகளிலிருந்து அறிந்து கொள்வது புத்தகம், வகுப்பறைகளிலிருந்து அறிந்து கொள்வதைவிட அதிகமாயிருக்கும்.

# புதிய ஏற்பாட்டு சபை - அமைப்பும் செயலும்

**A.** <u>புதிய ஏற்பாட்டு சபைக்கென்று தெளிவான தனித்தன்மை இருந்தது</u> (அப் 2:41; I பேதுரு 2:9).

புதிய ஏற்பாட்டு சபை தான் அமைந்திருக்கும் சமுதாயத்திற்கு மத்தியில் அதைவிட்டு தனித்தன்மையான அடையாளத்துடன் விளங்கும் ஒரு உடன்படிக்கைக்குட்பட்ட ஒரு மக்கள் சமூகமாகும்.

1) இந்த சபையாகிய சமூகத்திற்குள் உட்பிரவேசிக்க வெளியிலிருப்பவர்கள் தீர்க்கமான முடிவெடுத்து உட்பிரவேசிக்கவேண்டும்.
2) விரும்பும்போது சேர்ந்துகொள்ளவும் விருப்பமில்லையெனில் விலகிப்போவதற்கும் இது ஒரு சமூக அல்லது மத சம்பந்தமான உறுப்பினர் சங்கம் அல்ல.
மெய்யாகவே மனம் மாறி, தண்ணீரால் ஞானஸ்நானம் பெற்றால்தான் இந்த சமூகத்தின் ஒரு அங்கமாக மாற இயலும்.
3) இந்த சபை சமூகத்தைச் சார்ந்தவர்கள் உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டு இராஜரீக ஆசாரியர்களும், பரிசுத்த ஜாதியும் கர்த்தருடைய ஜனமாகவும் சேர்க்கப்பட்டவர்கள்.

**B.** <u>புதிய ஏற்பாட்டு சபையானது அப்போஸ்தல உபதேசத்திற்கு என்று தன்னை அற்பணித்துக் கொண்டதாகும்</u> (அப் 2:42; எபே 2:20)

1) சபையில் இணைந்தவுடனே அவர்களுக்கு போதனைகள் அளிக்கப்பட்டது.
2) தீர்க்கமான அடிப்படையாக அமைந்திருந்த அப்போஸ்தலர் உபதேசம் கற்றுக்கொடுக்கப்பட்டது. நம்பத்தகுந்த சத்தியம் அதாவது எழுதப்பட்ட, ஏவப்பட்ட தேவனுடைய வார்த்தை. தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களும் (பழைய ஏற்பாடு) அப்போஸ்தலரின் குறிப்பேடுகளைக் (புதிய ஏற்பாடு) கொண்ட நம்பத்தகுந்த ஏவப்பட்டு, எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைஇன்று நமக்கு இருக்கிறது.
3) அப்போஸ்தலர்களே அதை கற்றுக் கொடுத்தார்கள் (தேவனுடைய வழியில் போதிக்கப்படும்படிக்கு தேவனே போதிக்கும் ஊழியங்களை ஏற்படுத்தியருந்தார்).

**C.** <u>புதிய ஏற்பாட்டு சபை உண்மையான ஐக்கியத்தை அனுபவித்தது</u> (அப் 2:42, 44-46)

1) தேவனுடைய உறவை மாத்திரம் எண்ணத்தில் கொண்டதாக அல்லாமல் தேவனுடைய சரீரமாகிய சபை பரிசுத்தாவியானவரின் பொதுவான ஜீவனையும் பகிர்ந்து கொள்ளக்கூடியதாகும் என்ற உண்மையையும் குறித்து விழிப்புணர்வு கொண்டதாகவுமிருந்தது.
2) உணவு, வீடுகள், உடமைகள் முதலானவைகளையும் கூட பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அவர்களது ஆவிக்குரிய ஐக்கியம் மேலோங்கியிருந்தது.
3) ஒவ்வொருவரும் தங்களைக் கட்டி எழுப்பக்கூடிய விதத்தில் உற்சாகப்படுத்திக் கொள்ளும்படி முடியும்போதெல்லாம் கூடிவந்தனர்.

**D.** <u>புதிய ஏற்பாட்டு சபை பகிர்ந்தளிக்கப்பட்ட ஆவிக்குரிய அதிகாரத்தின் கீழ் செயல்பட்டது</u> (எபே 4:11, அப் 14:23, பிலிப் 1:1, தீத்து 1:5)

வித்தியாசமான அலுவல்களிருந்தன - அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிஷேசகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள், மூப்பர்கள் (பேராயர்கள்) உதவிக்காரர்கள்/உதவிக்காரிகள்

**E.** <u>புதிய ஏற்பாட்டு சபை ஆராதிக்கும் சமூகமாகும்</u> (அப் 13:2; எபே 5:19-20; எபி 13:16)

ஆராதனையும், துதியும் தொடர்ந்தேர்ச்சியாக நடைபெற்றதால் சபையின் அங்கத்தினர்கள் தேவனுடைய நன்மைகளையும் ஈவுகளையும் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

**F.** <u>புதிய ஏற்பாட்டு சபை ஒரு ஜெபிக்கும் சமூகமாகும்</u> (அப் 2:42; 4:24-31)

எல்லாவற்றிற்காகவும் ஜெபிக்கும்படி ஜெபத்திற்காக அங்கத்தினர்கள் கூடிவந்தனர். இடைவிடாமல் ஜெபிப்பது என்றால் என்ன என்பதின் அர்த்தத்தை அறிந்திருந்தார்கள் (1தெச 5:17) அவர்கள் ஜெபித்தபோது காரியங்கள் சம்பவித்தன. (அப் 4:31; 12:12-14; 16:25,26)

**G.** <u>புதிய ஏற்பாட்டு சபை ஆவியின் வல்லமையை வெளிப்படையாக ஒழுங்காக அனுபவிக்கிறதாயிருந்தது.</u> (அப் 2:43; 1 கொரி 2:4, 14, 24-25)

ஊழியங்களில் அற்புதங்கள் நடப்பித்து தம்முடைய வார்த்தையையும், ஊழியத்தையும் உறுதிப்படுத்தி தேவன் சபையில் தொடர்ந்து அசைவாடிக் கொண்டிருக்கிறார் என்கிற அடையாளம் காணப்பட்டது.

**H.** <u>புதிய ஏற்பாட்டு சபை சாட்சி கொடுத்து வளருகிற சமூகமாக இருந்தது</u> (அப் 2:47; 4:4)

அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரின் புண்ணியங்களை அறிவிக்கிறதாகவே இருந்தது (1 பேதுரு 2:9) சபையின் சாட்சியானது சபைவளரக்கூடிய விதத்தில் ஒரு விளைவை உண்டாக்கக் கூடியதாகவே இருந்தது.

**I.** <u>புதிய ஏற்பாட்டு சபையானது 'சபை அனுபவங்களை' கட்டு வைத்து ஒழுங்குகளை அனுபவிக்கிறதாயிருந்தது.</u>
(மத் 18:17; அப் 15:22-29; ரோமர் 16:17; 1கொரி 5:13; 3 யோவான் 10)

**J.** <u>புதிய ஏற்பாட்டு சபைக்கு ஆராதனைக்கென்று நியமிக்கப்பட்ட நேரமிருந்தது.</u>

வழக்கமான யூதர்களின் ஓய்வு நாளுக்குப் பதிலாக, உயிர்த்தெழுந்த நாளாகிய வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய நாளாக மாறியது (அப் 20:7; 1 கொரி 16:2; வெளி 1:10)

**K.** <u>புதிய ஏற்பாட்டு சபையில் தேவனுடைய ஊழியத்திற்காக பணம் சேகரித்தார்கள்</u>
(ரோமர் 15:25-28; 1 கொரி 16:2; 2 கொரி 7-9)

**L.** <u>புதிய ஏற்பாட்டு சபையில் தேவையுள்ளவர்களின் தேவைகளுக்கு உதவக்கூடிய ஒழுங்கான நிகழ்ச்சி நிரல் இருந்தது</u> (அப் 2:25; 4:34-35; 6:1)

**M.** <u>புதிய ஏற்பாட்டு சபை மிஷினெரி தரிசனமுள்ள சபையாக இருந்தது</u> (அப் 8:4,40; அப் 13,14 அதிகாரங்கள்; 15:36; 21:15)

புதிய ஏற்பாடு சபை நிறுவும் ஊழியத்திற்கென்று அர்ப்பணிக்கப்பட்டதாகும், மேலும் ஒரு சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் அறியப்பட்ட உலகம் அனைத்திற்கும் சுவிஷேசம் சென்றடைய வேண்டும்.

## பவுலுடைய சபை நிறுவுதலின் மாதிரியிலிருந்து கற்றுக் கொள்ளுதல்

புதிய சபைகளை நிறுவுவதற்கு புதிய ஏற்பாட்டில் நாம் பின்பற்றக்கூடிய மாதிரியாக விளங்குபவர், யூதரல்லாத புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக இருந்த பவுல் அடியாராகும். (கலா 2:2) இவைகளைப் பின்பற்றக்கூடிய வழிமுறைகளுக்கு மிகச்சிறப்பாக விளங்கக்கூடியது அவருடைய மிஷினெரி பயணங்களும் சபைகளுக்கு அவர் எழுதிய நிருபங்களுமாகும். ஒவ்வொரு மிஷினெரி பயணங்களிலும் ஒரு முறையைத்தான் அடிப்படையாக பின்பற்றினார்.

### வேலையைத் துவக்குவதற்கு ஒரு அடிப்படையான ஸ்தலம் பவுலுக்கு இருந்தது.

அந்தியோகியாவிலுள்ள சபை பவுல் அப்போஸ்தலன் அவ்விடத்தை விட்டுத் தன்னுடன் ஊழியர்களோடு, பரிசுத்த ஆவியானவர் எங்கு அவரைப் பிரித்து, பர்னபாவையும் அவரையும் அனுப்பிய இடமான சிரியா நாட்டிலுள்ள அந்தியோகியா நகரத்திற்கு அவ்வப்போது வந்து திரும்பிப் போய் கொண்டிருந்தார். (இந்த ஸ்தலத்தில் தான் சீஷர்கள் முதன் முதலாகக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் புறஜாதியானவர்கள், யூதர்கள் அல்லர்.) அந்தியோகியா பவுல் அடிகளாரது பணி அடித்தளமாக அமைந்து அங்குள்ள ஸ்தலக் கிறிஸ்தவர்களுக்கு தங்களது சுவிஷேச பிரபல்ய பிரயாண ஊழியத்தின் விளைவுகளைப் பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தார். அங்குள்ள சீஷர்களைக் கட்டி எழுப்புவதிலும் பலப்படுத்துவதிலும் நேரத்தைச் செலவிட்டார். அவரது மிஷினெரி பயணங்கள் இரண்டு அல்லது மூன்று ஆண்டு இடைவெளியில் நடைபெற்றது என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். என்னவென்றாலும் ஒவ்வொரு மிஷினெரி பயணமும் வெவ்வேறு இலக்குகளைப் பணித்தளமாகக் கொண்டிருந்தன.

ஏற்கனவே பவுல் தனது முதல் மிஷினெரி பயணத்தின்போது அவர் புதிய விசுவாசிகளையும், சீஷர்களையும் தோற்றுவித்த நகரத்திற்கே திரும்பவும் வந்தார். (அப் 14:21) அவர்கள் இரட்சிக்கப்பட்ட பிறகு தேவனுடைய வசனத்தை அவர்களுக்குத் தெளிவாகப் போதித்தார்.

### பவுல் சுவிஷேச பிரபல்யத்தைத் தொடர்ந்து நடத்தினார் - மூப்பர்களை பணியில் அமர்த்தினார்.

அவர், இரண்டாவது முறையாக, அவர்களை வந்து பார்வையிடுவதற்கு முன்னர் (வசனம் 22ல்) நாம் படித்தறிவதாவது பவுல் அடிகளார், ''சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி'' அவர்களுக்குப் புத்தி சொன்னார். ஆவியில் பலனடைதல் என்பதற்கு கிரேக்க மொழியில் ''சார்ந்திருக்க ஏதோ ஒன்றைக் கொடுப்பது'' என்றும், ''உறுதிப்படுத்துதல;'' அல்லது ''பலப்படுத்துதல்'' என்றும் அர்த்தம் தரப்படும். இதற்குப் பின்னர் பவுல், பரிசுத்த ஆவியின் நடத்துதலால் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களைப் பணி நியமனம் செய்தும் பின்னர் ஜெபித்தும், உபவாசித்தும், அவர்களை (தேவனுக்கு) கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார். (அப் 14:23).

பவுல் அப்போஸ்தலன் அவரது இரண்டாவது மூன்றாவது மிஷினெரி பயணங்களின்போது இந்த இடங்களுக்குத் திரும்பி வந்தார். ''நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று போய்ப் பார்ப்போம் வாரும்'' என்றான். (அப் 15:36) அப்படியே பவுல் கொரிந்தியர் சபையைப் போய் மூன்று தடவை பார்வையிட்டார். (2 கொரி 12:14, 13:1) அந்த இடைப்பட்ட காலங்களில் தன் உடன் ஊழியர்களான தீமோத்தேயு, தீத்துவுடன் மற்றவர்களையும் அனுப்பி அந்தப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும்படி செய்தார். (1 கொரி 3:6, 4:16-17, 2 கொரி 1:19, 12:17-18, 1 தீமோத் 4:10-13) ''அதினாலே சபைகள், விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின.'' (அப் 16:5).

ஒவ்வொரு இடத்திலும் பவுல் தொடர்ந்து பின் பணி ஆற்ற செலவிட்ட நேரத்தை ஒரு சில நாட்களிலிருந்து மூன்று மாதங்கள் வரையிலும், சில சமயங்களில் 18 மாத காலங்கள் வரை நீடித்து இடத்திற்கு இடம் வித்தியாசமாக எடுத்துக்கொண்டார். பரிசுத்த ஆவியானவருடைய

நடத்துதலால் எபேசுவில் மூன்று ஆண்டுகள் தங்கி, சீஷர்களுக்குக் கர்த்தருடைய வசனத்தைக் கற்றுக்கொடுக்கவும், சுற்றுப்புறங்களிலுள்ள புறஜாதியாருக்கு பிரசங்கிக்கவும் கால அவகாசம் எடுத்துக்கொண்டார்.

நாமும் பவுல் அப்போஸ்தலனுடைய பல வகையான வழிமுறைகளைப் பின்பற்றி அவற்றை நமது ஊழியத்தில் உபயோகிப்போம்.

## ஒரு பணித்தளத்திலிருந்து அனுப்பப்பட்டனர்

பரிசுத்த ஆவியானவர் ஒரு ஐக்கியத்திலிருந்தோ அல்லது கபையிலிருந்து உன்னைத் தனியாக பிரித்தெடுத்து ஒரு மிஷினெரி தளத்திற்கு அனுப்புகிறார். சில சமயங்களில் உன்னைத் தனிப்பட்டதோர் ஊழியத்திற்கு அனுப்புகிறார். அங்கு பல சபைகளிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் பங்கை உன்னுடைய ஊழியம் வளரும்பொழுது பகிர்ந்து கொள்வார்கள். உன்னுடைய பணித்தளத்திலிருந்து வெளிப்பணி இடங்களுக்கு கர்த்தர் கொடுத்த அழைப்பின்படி பிரித்தெடுத்து அனுப்பும்பொழுது செல்கிறாய். பரிசுத்த ஆவியானவர் உனக்கு ஒவ்வொரு வெளிப்பணித்தளத்திற்கான ஸ்தலத்தையும் ஆத்தும ஆதாயத்திற்கான கால அவகாசத்தையும் காட்டுவார். இருதயத்தில் ஞானமுள்ளவர்கள் சரியான நேரத்தையும் வழிமுறைகளையும் அறிந்து கொள்ளுவார்கள். ‘‘ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும். எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு.’’ (பிரசங்கி 8:5b-6a)

## தொடர்ந்து செல் / கற்றுக்கொடு / சீஷர்களை உண்டாக்கு

ஒவ்வொரு வெளிப்பணித்தளத்திற்குப் பின்னரும் புதிய விசுவாசிகளை தேவ வசனத்தின் போதிப்பிலும் விசுவாசத்தைப் பலப்படுத்தியும் ஸ்திரப்படுத்தப்படவேண்டும். சுவிஷேச பிரபல்யத்திற்கான அடுத்த இடங்களுக்கு உடனடியாகப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டால் வெகு விரைவில் அந்தப் புதிய விசுவாசிகளைச் சந்திக்கும் சமயத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தாங்களாவது அல்லது தேவனால் அழைக்கப்பட்டு போதிக்கும்படியாக உடன் ஊழியர்களில் சிலரைப் பின் தங்கச் செய்துப் புதிதாகப் பிறந்த ஆட்டுக்குட்டிகளைப் போஷித்தும் (வசனத்தால்) பாதுகாத்தும் வரும்படி ஒழுங்கு செய்யப்படவேண்டும். ‘‘தீத்துவைக் குறித்து அவன் எனக்குக் கூட்டாளியும் உங்களுக்காக என் உடன் வேலையாளுமாயிருக்கிறான்.’’ (2 கொரி 8:23a) மேலும் 2 கொரி 12:17-18; 1 தெச 3:1-2 உடன் II தீமோத் 4:9-13 ஐப் பார்க்கவும். இந்த வெளிப் பணித்தளத்தின் ஆத்ம ஆதாயப் பணிகளுக்கிடையில் நீ உன் ஸ்தலப் பணித்தளத்திற்குத் திரும்பி வந்து ஸ்தலத் திருச்சபைக்கும் உன்னை வெளி ஊழியத்திற்கு அனுப்பியவர்களுக்கும், உன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். நீ ஒரு சுதந்திரமான ஊழியப் பணியைப் பெற்றவன் ஆனால் உன்னை ஆதரித்து உதவும் விசுவாசிகளுக்கும், ஐக்கியத்தினருக்கும் ‘‘புற ஜாதியார் மனந்திரும்பிய செய்தியை அறிவித்தும், தேவன் தங்களைக் கொண்டு செய்த யாவற்றையும்’’ அறிவிக்கவேண்டும். (அப் 15:3-4).

இவற்றைச் செய்த பின்னர் ஆத்தும ஆதாயம் செய்த பணித் தளத்திற்கு நீங்கள் திரும்ப வந்து நீங்கள் ஸ்தாபித்த சபைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். கர்த்தர் அனுமதிக்கும் காலத்தில் (தலைமைத்துவத்துடன்) வழிகாட்டி நடத்திச் செல்லும் அங்கத்தினருக்காக கவனித்து விழித்துக் காத்திருங்கள். அக்காலத்தில், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலாலும் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை அர்ப்பணித்து ஒப்புக்கொடுக்கவேண்டும். இதை நீங்கள் ஜெபம் செய்தும், உபவாசத்துடன் பின்னர் கைகளை வைத்தும், ஜெபித்தும் நிறைவேற்றவேண்டும். (அப் 14:23) இந்தக் கால அளவில் பெரும்பான்மையான அங்கத்தினரான விசுவாசிகளால் இந்த மூப்பர்களை வழிகாட்டி நடத்திச் செல்லும் தலைமைத்துவம் உடையவர்களாக அங்கீகாரம் பெற்றிருப்பார்கள். ‘‘அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.’’ (II தீமோத் 2:2) பவுல் அடிகளாரது வாழ்க்கை முறையும், போதனையும் ஏனைய வழிகாட்டி நடத்தும் தலைமைத்துவம் உடையவர்களும், மற்ற சீஷர்களும் பின்பற்றத் தக்கதான அடித்தளமாக விளங்கியது. ‘‘நான் ஆசியா நாட்டில் வந்த முதல் நாள் தொடங்கி எல்லாக் காலங்களிலும் உங்களுடனே இன்ன விதமாய் இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும் நான் கர்த்தரைச் சேவித்தேன். பிரயோஜனமுள்ளவைகளில்

ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல் வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம்பண்ணி தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்''. (அப் 20:18-21).

பவுல் அப்போஸ்தலன் போதித்தது போல நாமும் உடன் வேலையாட்களுக்கும், சக்தி மிகுந்த வழிகாட்டி நடத்தும் தலைவர்களுக்கும் உபதேசம் பண்ணவேண்டும். (II தீமோத் 2:2) ''இதோ நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்க மாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றையத் தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஏனென்றால் நான் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்.'' (அப் 20:25-27-31) வசனம் 31ல் இருந்து ஆவிக்குரிய தலைவர்களுக்கு பயிற்சி அளிப்பது இலேசான காரியமல்ல, தலைவலியாலும் ஏமாற்றங்களாலும் நிரம்பப் பெற்றது என்று அறிகிறோம். இது மட்டும் அல்ல!! தலைவர்கள் ஆனவர்களைப் பரிசுத்த ஆவியானவரது வழிநடத்துதலால் தேர்ந்தெடுத்து ஊழியத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டாலும் பவுல் அடிகளார் ''அந்த மந்தைகளுக்குள்ளே கொடிதான ஓநாய்கள் அந்த வழிகாட்டி நடத்தும் தலைவர்களுக்குள்ளே எழும்பி வருவார்கள்'' என்று எச்சரிக்கிறார். (அப் 20:28-30).

நமது பிரதான அப்போஸ்தலரான இயேசுவும் இந்த விதமான இருதயம் நொறுங்கிப் போவதை அனுபவத்தில் உணர்ந்தார். அவர் தன்னுடைய சீஷர்களுக்குள் யூதாஸ் ஸ்காரியோத்தையும் வைத்திருந்தார். அவர் மிகவும் கவனமாக ஓர் இரவு ஜெபத்தில் தனித்துத்தரித்திருந்து பின்னர் அவர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆகையால் வழிகாட்டி நடத்தும் தலைவர்களைக் கட்டி எழுப்புவதில் ஏமாற்றங்களையும் சந்திக்க ஆயத்தமாயிருங்கள்.

## திருச்சபை நிறுவுவதலுக்கான இருபத்தொரு அப்போஸ்தலக் கோட்பாடுகள்

''நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்''. (யோவான் 17:18).

1. பொறுமையும், வல்லமையும் ஒரு அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள். அடையாளங்களும், அதிசயங்களும், அற்புதங்களும் ஆகியவை பொறுமையுடனும் விடா முயற்சியுடனும் கூடிய ஒரு அப்போஸ்தல ஊழியத்துக்குரிய சிறந்த சாட்சியங்கள் ஆகும். (II கொரி 12:12) வாட்ச்மேன் நீ என்ற சீன தேசத்து சிறந்த அப்போஸ்தலர் கூறுகிறதாவது, ''ஒவ்வொருவரும் எதிர்ப்பு, அல்லது அதைரியமடைதல் மூலமாக வீழ்ச்சியுறும்பொழுது அப்போஸ்தலன் ஒருவன் மட்டுமே நிலைத்து நிற்பவன் ஆவான்.'' என்கிறார்.
   திருச்சபையை நிலை நாட்டுவதில் இது அத்தியாவசியமானதொன்றாகும். ஆகவே பவுல் எழுதுகிறார். ''புற ஜாதியாரை வார்த்தையினாலும், செய்கையினாலும் கீழ்படியப் பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும் கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை. இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்துவின் சுவிஷேசத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்'' (ரோமர் 15:18-19) இது மேலும் அப் 2:43; 5:12ன் மூலமாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

2. சுவிசேஷம் அறிவித்தல் மூலமாக புதிய விசுவாசிகளை எண்ணிக்கையில் பெருகச்செய்து (முதிர்ச்சி பெறுதல்) பூரணப்படுதல், பாதுகாப்பு அளித்தல் ஆகியவை மூலமாக சீஷர்களை உண்டாக்குதல் பின் தொடர்ந்த கிரியையான ஊழியப் பணியின் மூலம் அவர்களைப் பராமரித்தல் ஆவதை வேதாகமத்து முறைப்படி செய்யப்படுவதாகும். இதைச் செயலாற்றி புதிய விசுவாசிகளை இயேசுவின் சீஷராக்குவதில் அவர்களுக்கு அதிகமான போதனைத்தர வேண்டும். <u>கிறிஸ்து இயேசுவை பின்பற்றுகிறவனாக உன்னுடைய வாழ்க்கை முறை அமையும்பொழுது அந்த</u>

விளைவானது அவர்களிடத்தில் பெரியதொரு மாறுதலைக் கொண்டுவரும். ஆகையால் உன்னுடைய வாழ்க்கை முறையானது உன்னுடைய போதனையை வெளியில் எடுத்துக் காட்டுவதாக இருக்கவேண்டும். ''நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்'' (II தீமோத் 3:10-11a, 1கொரி 4:16-17) ஆகையால் ''என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன். நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.'' (அப் 20:18-19 ஐயும் 1கொரி 11:1 ஐயும் பார்க்கவும்)

3. புதிய விசுவாசிகளுக்கு, ஜலத்தினால் கொடுக்குப்படும் ஞானஸ்நானத்தின் கருத்தைப் போதிக்கவும். பவுல் மனந்திரும்பி மனமாறுதல் அடைந்தவுடனே பவுல் ஜலத்தில் ஞானஸ்நானம் பெற்றான். (அப் 9:18) இதைச் செய்து நிறைவேற்றியதால் இயேசு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் பேதுரு கொடுத்த முதல் சுவிஷேச செய்தியில் பேதுருவால் கொடுக்கப்பட்ட கட்டளையை பின்பற்றியிருந்தான். ''இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும், மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து, ''சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப் 2:37-38) பவுல் அடிகளார் இந்த ஞானஸ்நானத்தின் அர்த்தத்தை ரோமர் 6ம் அதிகாரத்தில் வளக்கிக் கூறுகிறார். நாமும் நமது பங்கிற்கு, புதிய விசுவாசிகளுக்கு ஜலத்தினால் பெறும் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தையும் அர்த்தத்தையும் விளக்கிக்கூறவேண்டும்.

மத்தேயு 28:19 உடன் மாற்கு 16:15-16 ஆன பகுதிகளிலிருந்து மனந்திரும்புதலும் ஜலத்தில் பெறும் ஞானஸ்நானமும் ஒன்றுக்கொன்று மிகவும் இணைந்துள்ளன என்று தெளிவாகக் கூறப்படுகிறது. ஜலத்தினால் பெறும் ஞானஸ்நானம் உனது இரட்சிப்பின்பொழுது என்ன நேரிடுகிறது என்பதற்கு அடையாளமாக விளங்குகிறது. உன்னுடைய பழைய ஜென்ம பாவத்தன்மையானது இயேசு சிலுவையில் மரித்தபொழுது சிலுவையில் அறையப்படுகிறது. ஜலத்தில் பெறும் ஞானஸ்நானம் சாத்தானுக்கு வெற்றிகரமாக கொடுக்கப்படும் பிரகடனமாகும். அவனுடைய அதிகாரம் தன்பிடிக்குள் வைத்துக்கொள்ளும் வல்லமை மேலும் அவனால் உன் ஜீவியத்தின் மேல் கொண்டிருக்கும் கட்டுகள் அனைத்தும் உடைக்கப்பட்டு விட்டன. உன்னுடைய மனந்திரும்பும் காரணத்தால் நீ உன் பாவங்களுக்காக மரித்து விட்டாய். ஞானஸ்நானத்தால் நீ உன்னுடைய பாவத் தன்மையை புதைத்துவிட்டு கிறிஸ்துவுக்குள் உன்னை அடையாளப்படுத்திக் கொண்டு கிறிஸ்துவுக்குள் நீ உயிர்தெழுந்து வெற்றிகரமானதோர் புது ஜீவியத்திற்கு ஆயத்தமாகிறாய். ஆகையால் கலாத்தியர் 3:26-27ல் எல்லா விசுவாசிகளுக்கும் கிறிஸ்துவால் ஆலோசனையாகக் கற்பிக்கப்படுகிறது. ''நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.'' (கலா 3:26-27)

4. பரிசுத்த ஆவியானவருக்குள் பெறும் ஞானஸ்நானத்தை இரட்சிப்புப் பெறுவதுடன் எக்காலத்திலும் பெறலாம்.(அப் 10:44-46) அல்லது ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுவதைத் தொடர்ந்து வரவேண்டும். அப் 2:38-39க்குத் திரும்ப வருவோமானால் பேதுரு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப்பெறுவீர்கள;'' என்று சொன்னான். (அப் 2:38-39) யோவேல் 2:28-29ல் கூறப்படும் வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், தூரத்தில் ஜீவிக்கும் அனைவருக்கும், மேலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரால் அழைக்கப்பட்ட அனைவருக்கும் உரியதாகும்.'' இது வேதாகமத்தில், இரட்சிப்பு, ஜலத்தினால் பெறும் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் பெறும் ஞானஸ்நானம் ஆகிய மூன்றும் சேர்ந்தே குறிப்பிட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ள பல இடங்களில் இதுவும் ஒரு உதாரணமாகும்.

பவுல் அப்போஸ்தலன் தான் இரட்சிக்கப்பட்ட பிறகு ஏதோ ஒரு விதமான இயல்பை அனுபவத்தில் உணர்ந்தான். ‘‘அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து அவன் மேல் கையை வைத்து, ‘‘சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்’’ என்றான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவைகள் விழுந்தது. அவன் பார்வையடைந்து எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான். (அப் 9:17-18ய) இந்தக் காரணங்களுக்காக எபேசுவிலே சில சீஷரைக் கண்டு நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான் (அப் 19:2a) இதே மாதிரியான கோட்பாடு அப் 10:47-48, யோவான் 3:5, லூக்கா 3:21-22, அப் 8:14-17 ஆகிய பகுதிகளிலும் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

5. கர்த்தர் நம்மை பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுக்கும் நோக்கமாவது உன்னதத்திலிருந்து வரும் வல்லமையால் பலப்படுத்தப்படுவதற்காகவேதான். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பரிசுத்த ஆவியின் ஈவுகள் ஞானஸ்நானத்திலிருந்து பரிசுத்த ஆவிக்குள் பிரவேசிக்கும் எனக் கூறும் வேதபகுதிகள் நிரம்பக் காணக்கிடக்கின்றன. ஆனாலும் வல்லமை என்பது முக்கியத்துவம் பெற்றுள்ளதால் நாம் முதன்முதலாக அவருடைய ஆவியில் ஞானஸ்நானம் பெற்று அவரை ஆராதிக்கவேண்டும். ‘‘உண்மையாய் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.’’ (யோவான் 4:23-24) ‘‘தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்’’ என்றார். இந்த விதமான கர்த்தருடன் கொள்ளும் ஐக்கியம் 1யோவான் 1:1-3; 1கொரி 1:9; பிலிப் 2:1ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

   ஆகவே, புதிய விசுவாசிகளை முதன்முதலில் தேவனுடன் ஓர் அன்புள்ள உறவுக்குள் வரவேண்டும் என்று உற்சாகப்படுத்தவேண்டும். தேவன் இதைப்பற்றி வெளி 2:1-7 வசனங்களில் தெளிவுபடுத்துகிறார். அவர் நம்முடைய வேலைகளில் கருத்துடன் இருப்பது மட்டுமல்ல, அந்தக் கிரியைகளுக்குப் பின்னால் ஒரு நோக்கத்தையும் பார்க்க விரும்புகிறார். ‘‘ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலையிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. அந்தக் கிரியைகள் தேவன் பேரில் முதன்முதல் கொண்டிருந்த அன்பிலிருந்து பெருகி வரட்டும்;’’ (வெளி 2:4-5a)

6. புதிய விசுவாசிகளுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதையும் ஆராதனைக்குரிய பல்லவிகள், பாட்டுகள் அனைத்தையும் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும். (1கொரி 14:15; கொலோ 3:16; யாக்கோபு 5:13b) மேலும் அவர்கள் ஜெபத்தில் தங்களுடைய பிதாவாகிய தேவனுடன் ஐக்கியத் தொடர்பு வைத்துக் கொள்ளும்படியும் போதிக்கப்படவேண்டும். மேலும் அவர்களுக்கு ஜெபநேரம் ஸ்தோத்திரத்துடன் நன்றி செலுத்தும் நேரம் என்றும் (1தெச 5:18) பாவ அறிக்கை செய்யும் நேரம் என்றும் (1யோவான் 1:6-10; ஏசாயா 59:1-2; சங்கீதம் 66:17-20) நம்மையே தாழ்த்திப் பணியும் நேரம், பரிந்து பேசும் நேரம், வேதனை (கலா 4:19) வெளிப்படுத்தும் நேரம் ஆவிக்குரிய போராட்டத்தை வெளிப்படுத்தும் நேரம் என்றும் விளக்கிக் கூற வேண்டும். சில சமயங்களில் உபவாசத்துடன் கூடிய ஜெபம் ஏறெடுக்கப்படும். (மத்தேயு 6:17-18 உடன் ஏசாயா 58:1-14)

7. புதிய சீஷர்களுக்கு அதிகாலையில் கர்த்தருக்காக காத்திருக்கும்படிக் கற்றுக் கொடுக்கப்படவேண்டும். கர்த்தாவே காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர். காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகிக் காத்திருப்பேன் (சங் 5:3) மேலும் நீதி 8:34-36யும் கவனித்துப் பார். கர்த்தருக்காக காத்திருக்கும் வேளைகளில் எப்படி கர்த்தருடைய சத்தத்தைத் தெரிந்து கொள்வதென்பதைக் கற்றுக்கொடுக்கவும் ‘‘என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது.’’ (யோவான் 10:27)

8. தேவ வசனமாகிய வேதத்தைப் படித்து அவர்களுடைய அனுதின அப்பத்தைப் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தைக் கற்பிக்கவேண்டும். தேவன் நம்முடன் இடைபடும் முக்கியமான வழிகளில் ஒன்று அவரது (வசனத்தின்) வார்த்தையின் வாயிலாகத்தான். புதிதாகப் பிறந்த குழந்தைகள் போல பரிசுத்தமான ஆவிக்குரிய ஞானப்பாலைத் தரும்படி வேண்டிக்கொள்ளுங்கள். நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். (1பேதுரு 2:2) இப்படியிருக்க கர்த்தர் தயையுள்ளவர் என்பதை நீங்கள் ருசி பார்த்ததுண்டானால் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். (1பேதுரு 2:1-2)

9. சோதனையை எப்படி மேற்கொள்வது என்று போதியுங்கள். புதிய விசுவாசியை அவர் தற்சமயம் அவர் கிறிஸ்துவில் புது சிருஷ்டியாக இருந்தாலும் பழையவைகள் மறைந்து கடந்து போனாலும் II கொரி 5:17ன் படி அவர் சாத்தானால் சோதனைக்குள்ளாக்கப்படுவார். சாத்தான் அவனுக்குள் ஓதும் முதல் காரியம் அவன் இரட்சிக்கப்படவில்லை என்பதாகும். அவனுக்கு வேதாகமப் பகுதிகளான யோவான் 1:12; எபேசியர் 1:5-6 ஆகிய பகுதிகளைப் படித்துக் காட்டவும் அவனுக்கு இந்த விஷயத்தில், இயேசு தாமே சோதிக்கப்பட்டார் என்பதைக் குறிப்பிட்டு காட்டுக. ஆனால் அவர் இயேசு, தேவனுடைய வார்த்தையால் (வசனத்தால்) அவனுடன் (சாத்தான்) பேசி அவனை எதிர்த்தார். (லூக்கா 4:1-13) அந்த விசுவாசியை திரும்பவும் 1கொரி 10:13 ஐக் கொண்டு உறுதிபடுத்தி ‘‘மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடேகூட அதற்குத் தப்பித்துக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.’’

10. அவர்கள் தங்கள் சிலுவைகளை சுமந்து கொண்டு, கிறிஸ்துவுக்காக துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு (விசுவாசிகளுக்கு) போதிக்கவேண்டும். அந்த புதிய விசுவாசி பின்வருபவற்றைக் கட்டாயம் கற்றுக்கொள்ளவேண்டும்,’’கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்’’ (கலா 2:20) மேலும் அந்த விசுவாசிக்கு II கொரி 4:10-11; ரோமர் 7; ரோமர் 8:1-18ஐயும் படித்து போதிக்கவேண்டும். பவுல் தன்னுடைய முதலாவது மிஷினெரி பிரயாணத்தின்போது சீஷர்களை உண்டாக்கி அவர்கள் துன்பங்களையும் அனுபவிக்க ஆயத்தப்படுத்தினார். ‘‘அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிஷேசத்தைப் பிரசங்கித்து, அநேகரை சீஷராக்கின பின்பு, லிஸ்தீராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து சீஷருடைய மனதைத் திடப்படுத்தி விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.’’ (அப் 4:21-22)

11. பரிசுத்தமான ஜீவியம் செய்யுமாறு அவர்களைக் கண்டிக்கவும் ‘‘நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.’’ (1பேதுரு 1:14-16) மேலும் (II கொரி 7:1; 1தெச 5:23; நியாயாதிபதிகள் 1:1 ஐயும் பார்க்கவும்)

12. அந்தப் புதிய கிறிஸ்தவன், முக்கியமாகக் கற்றுக் கொள்ளவேண்டியதாவது, இப்பொழுது அவன் விசுவாசியாக இருப்பதால் கிறிஸ்துவுக்குள் இருப்பவன் எவனோ அவனுடைய சுதந்திர பாகம் இன்னதென்றும் அறிந்திருக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும் பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் தாம்

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன், எல்லாத்துரைத்தனத்துக்கும் இம்மையிலே மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாய் உயர்ந்திருக்கத் தக்கதாக .... அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:17-23) வேதத்தில் கிறிஸ்துவின் ஸ்தானத்தைப் பற்றிச் சீஷருக்குப் போதிக்கும் பகுதிகள் நிரம்ப உண்டு. ''புற ஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்த சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.'' (கொலோ 1:27) அவர்கள் தினந்தோறும் இதை உரத்த சத்தமாக விசுவாசத்துடன் அறிக்கை செய்வார்களாக ''அவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் இருக்கும் அதிகாரத்தையும் இயேசுவின் நாமத்தினால் உண்டாகும் வல்லமையையும் கற்பிப்பதைப் புறக்கணிக்காது கவனத்துடன் இருப்பார்களாக. நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்.'' (யோவான் 17:6) ''அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பலப்படுத்தினது. அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக இந்த சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.'' (அப் 3:16)

13. ஒவ்வொரு புதிய விசுவாசியையும் தேவன் எந்தவிதமான ஆவிக்குரிய வரத்தைக் தொடுத்திருக்கிறார் என்பதைக் கண்டறிந்து கொள்ள அவர்கள் உற்சாகப்படுத்தவும் மேலும் அவர்களை உற்சாகப்படுத்தி அந்த வரங்கள் அன்பிலே அவர்களுக்குள் கிரியை செய்து நல்லொழுக்கத்தைப் போதிக்கும்படி உற்சாகப்படுத்துதல் வேண்டும். (1 கொரி 12:1-11; ரோமர் 12:4-18; 1 கொரி 12:27-31; II கொரி 14:1) மேலும் இதற்காக உதாரணத்தை நீர் செய்து காட்டுதல் மிகவும் அவசியம். ''அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது.'' (அப் 5:12)

14. கிறிஸ்தவர்கள் சரீரமாகிய திருச்சபையில் ஆவிக்குரிய வரங்களின் கிரியைகளாகிய செயல்பாடுகள், கிரியை செய்வதைக் குறித்து சபையின் ஐக்கியத்தை வற்புறுத்துவது அவசியமாகிறது. (1கொரி 12:12-31; ரோமர் 12:4-21) ஆதித் திருச்சபையில் நடந்த பல அடையாளங்கள், அற்புதங்களின் இரகசியம் அப் 5:12 கடைசி பகுதியில் கூறப்பட்டுள்ளது. ''அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது.''

ரோமர் 12:4-21 ஆன பகுதியில் ஐக்கியத்திற்காக ஏறெடுக்கப்பட்ட இயேசுவின் ஜெபத்திற்கான உத்தரவை வழிகாட்டு முறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இதை யோவான் 17:20-21,23 ஆகிய பகுதிகளில் பார்க்கலாம். ''நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே, நீர் என்னை அனுப்பிதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.'' (யோவான் 17:20-21, 23)

15. அந்த விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு தேவனிடமிருந்து பதில் கூறவும் நிறைவேற்றும்படியான ஓர் விசேஷித்த அழைப்பு உண்டு என்பதைப் போதிக்கவும். அங்கே ஒவ்வொருவரும் செய்யக்கூடிய விசேஷித்த ஊழியப் பணிகளுக்காக அழைக்கப்பட்டு சரீரமாகிய திருச்சபையானது சரியாக வேலை செய்யவும் மேலும் தேவனுடைய இராஜ்ஜியம் விரிவடைந்து பரவவும் செயலாற்றப்படவேண்டும். நீதி 29:18ல் தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள்

சீர்கெட்டுப்போவார்கள். கிரேக்க மொழியில் "perish" என்பது "ஏதுவும் ஒரு நோக்கமின்றி அலைந்து திரிந்து நடப்பது" என்று அர்த்தம் தரும். ஆகவே விசுவாசிகள் அனைவரும் திருச்சபை ஒட்டு மொத்தமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ தேவனுடைய தரிசனத்தை ஏற்றுக்கொள்வது கட்டளையாகிற்று. "ஏனெனில் நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்." (எபே 2:10)

16. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு (விசுவாசிகளுக்கு, ஊழிய பணிக்கும் சுவிஷேச பிரபல்யத்திற்கான தரிசனத்தையும் கொடுக்கவும். "இவ்விதமாய் மக்கதோனியாவிலும், அசாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். எப்படியெனில் உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல் நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப் பற்றிய உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று." (1 தெச 1:7-8) ஆகவே இது ஒவ்வொரு விசுவாசிக்கும் உரிய அந்த மகா அழைப்பை நிறைவேற்றுவது அவர்களது பொறுப்பாகும். (மத் 28:19-20 மாற்கு 16:16-18,20)

17. விசுவாசிகளுக்கு தங்களது ஐக்கியம், நீதி, ஜெபம் இவற்றால் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யும்படி போதியுங்கள். "விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்கு தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை." (அப் 4:32-35) II கொரி 8:1-15; II கொரி 9:1-15 ஆகிய பகுதிகளில் பவுல் பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தைப் பற்றி பேசுகிறார்.

மேலும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படவேண்டியதாவது "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே." (II தெச 3:10) உத்தம விதவைகள், அனாதைக்குழந்தைகள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளமுடியாதவர்கள் ஆகியவர்கள் மாத்திரமே திருச்சபையின் தர்ம பணத்தால் ஆதரிக்கப்படக்கூடியவர்கள். (1 தீமோத் 5:3-16)

18. அன்பு காணிக்கைகளோடு தங்கள் வருமானத்தில் 10% சதவிகிதத்தை குறைந்த பட்சம் தசம பாகமாக திருச்சபைக்குக் கொடுக்கவேண்டும் என்று புதிய விசுவாசிகளுக்கு கற்றுக்கொடுத்தல் அவசியமாகிறது. (மல்கியா 3:8-12; லூக்கா 18:12; எபி 7:5-9)

19. புதிய விசுவாசிகளுக்கு சுத்தமான ஆரோக்கியமான வேதாகம உபதேசத்தைப் போதிக்கவும். "நீ தானே உன் மட்டில் ஒழுங்கான வருகை தந்து, வேத வாசிப்பு (உபதேசம்) கோட்பாடுகள் ஆரோக்கியமான உபதேசம் இவைகளைப் போதிக்கவும்." (1 தீமோத் 4:17) அப் 20:25-27,31ல் பவுலுடைய முன் மாதிரியைப் பின்பற்றவும். "இதோ நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றையத் தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஆனபடியால் நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்கு புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்!! (அப் 20:25-37,38) அப் 2:42 சொல்லுகிறது, "அவர்கள் (சீஷர்கள்) அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்," இந்த வார்த்தை "devoted" (அப் 2:42ல்)

என்பது எல்லாக் காரியங்களும் இலகுவில் நிறைபெறவில்லை என்றும் உண்மையாகவே அவர்கள் விடாமுயற்சியுடனும் கடின உழைப்புடனும் அதைச் செய்ய வேண்டியதாயிற்று என்றும் மறைமுகமாகக் கூறுகிறது. இரட்சிக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவருமே சீடர்களாக வேண்டுமென்பது அவசியமில்லை. இயேசுவின் ஊழியம் இந்த உலகத்தில் செய்யப்படும்போதுங்கூட அவருடைய சீஷர்களில் அநேகர் அதில் இணைந்திருந்து ஒப்புக் கொடுத்தலுக்கும் அதனால் உண்டாகும் மதிப்பீடும் மிகவும் அதிகமாயிருந்ததால் அவரை விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். இந்த சமயத்திலிருந்து அவருடைய சீஷரில் பலர் ‘‘இது ஒரு கடினமான உபதேசம் இதை யார் கேட்பார்கள் (ஏற்றுக்கொள்வார்கள்)’’ என்று சொன்னார்கள். அவர்கள் திரும்பிப்போனார்கள். அவரை பின்வரும் நாட்களில் பின்பற்றினார்கள் இல்லை (யோவான் 6:60-66) ஆகவே வசனம் 44லும் வசனம் 65லும் இயேசு சொன்னதாவது ‘‘ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்’’ என்றார். (யோவான் 6:60-66).

மேலும் அப் 19:13-19ல் பவுலால் மனந்திரும்பியவர்கள் இந்த சம்பவத்திற்கு பின்னரே கனி கொடுத்தனர் என்பது வியப்புக்குரியது. அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றி வந்தார்கள். ஆனால் அவர்களுடைய முன்னாள் பாவமான மந்திர தந்திரங்களை விட்டுவிடவில்லை. பவுல் கலாத்தியர் சபையை பரிபூரணமான வளர்ச்சிக்கு கொண்டு வருவதில் மிகவும் போராடினான். ‘‘என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன.;’’ (கலா 4:19).

அப்போஸ்தலனாக உன்னுடைய ஊழியத்தில் மிகச் சரியான, பரிசுத்தமான (ஆரோக்கியமான உபதேசம் உங்களிடத்தில் முன்னுரிமை பெற வேண்டும். பொய்யான எந்த உபதேசமும் வஞ்சகத்தாலும் துராசையினாலும் கபடமுள்ளதாயும் இருக்கவில்லை. (1 தெச 2:3-4) அவசியம் இருக்குமானால் அதற்கு சம்பந்தப்பட்ட ஜனங்களை எதிர்த்து நிற்கவேண்டும், மேலும் முழுச்சபைக்கு முன்னர்கூட அவசியமிருந்தால் எதிர்த்து கொள்ளவேண்டும் (அப் 15:1-31, கலாத்தியர் 2:12,14 1 தீமோத் 6:3-5 II தீமோத் 2:14-26. அதிலும் விசேஷமாக II தீமோத் 4:1-5a)ஐப் பார்க்கவும்.

நீ போதிக்கிற அநேக மக்களிலும், சீஷர்களிலும் அநேகர் படிப்பறியாதவர்களாய் இருப்பார்கள். நீயாவது அல்லது உடன் ஊழியர்களாவது அவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தால் மிகுந்த பயன் அடைவார்கள்.

20. ஒரு ஆவிக்குரிய தலைவனாக நீ சிலசமயங்களில் ஒழுங்கு முறையை அமல்படுத்த வேண்டியதாயிருக்கும். அதுவும் வழிகாட்டிச் செல்லும் தலைமைத்துவத்திலும் (1 தீமோத் 5:19-21) திருச்சபையிலுங்கூட அதைச் செய்யவேண்டும் (அப் 5:1-11; 1கொரி 5; II கொரி 10:6) ‘‘நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது மற்றவர்களிடத்திலாவது மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை.’’ (1 தெச 2:6)

21. கடைசியாக பொறுப்புள்ள ஆவிக்குரிய பெற்றோராக கிறிஸ்துவையும் பவுலையும் பின்பற்றி அவர்கள் செய்த மாதிரியே நமது ஆவிக்குரிய பிள்ளைகளின் நலன்களை கண்காணித்து வரவேண்டும். ‘‘இவை முதலானவைகளையல்லாமல் எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாகிற கவலை என்னை நாள்தோறும் நெருக்கி ஏவுகிறது!! (II கொரி 11:28) ‘‘உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்’’ (II கொரி 11:2a) ‘‘நீங்கள் நற்சீர் பொருந்தும்படிக்கும் விண்ணப்பம் பண்ணுகிறோம்’’ (II கொரி 13:9b) உங்களுக்காக ஆவிக்குரிய குழந்தைகளுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறோம்’’. (கொலோ.1:9-14).

இதை நான் இயேசு, பிதாவுக்கு எறெடுத்த ஜெபத்தை இது சம்பந்தமாக செய்து முடிக்கிறேன். ‘‘நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன். நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டு வந்தேன். கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல் அவர்களில் ஒருவனும் கெட்டுப் போகவில்லை’’ (யோவான் 17:12).

பவுலுடைய உடன் ஊழியனாகிய எப்பாப்பிரா காவலில் இருக்கையில் திருச்சபைகளுக்காக ஜெபித்து வேண்டிக் கொண்டான். ‘‘எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாகவும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை நிற்கவேண்டும் என்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.’’ (கொலோ 4:12).

ஒருநாள் நிச்சயமாக நாம் பவுலுடனே கூடச் சேர்ந்து சொல்லத்தக்கதாய் ‘‘நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்.’’ (II தீமோத் 4:7-8)

# G-12, செல்கள் அல்லது செல்-திருச்சபைகள் பலுகிப் பெருகும்

## முகவுரை

இப்படிப்பின் பொதுக் கருத்தாவது மிகவும் சிக்கலாகத் தோன்றும். ஏதோ ஒன்றைப் படிப்பதற்கு எளிதாக்குவதற்காக ஆகும். இது ஊழியத்தில் உள் இணைந்துள்ள வளர்ச்சியிலும், பெருக்கத்தையும் விரும்பும் ஒவ்வொருவருக்காகவும் எழுதப்பட்டதாகும். இது போதகர் (பாஸ்டர்) பிரச்சாரகாரர்கள் (மிஷினரிகள்) மேலும் ஒவ்வொரு வகைப்பட்ட ஊழியர்களுக்காகவும் எழுதப்பட்டது. பரலோக இராஜ்ஜியம் விரிவடையச் செய்ய விரும்பும் எந்த நபரும் G-12 செல்கள் மேல்பெறும் தகவல்களின் மூலமாகப் பயன்பெறலாம்.

ஆதியாகமம் 1:22ல் கர்த்தர் ஆதாமையும், ஏவாளையும் பலன்தந்து பெருகுமாறு கட்டளையிட்டுத் தமது சித்தத்தை நிலைப்படுத்தி ஸ்தாபித்தார். பலுகிப் பெருகி பெருக்கல் பெறுவதே மனிதனுக்காகத் தேவன் ஏற்படுத்திய தெய்வீகத் திட்டத்தைச் சரியான (தப்பிதமற்ற) வழியில், (ஸ்தாபிப்பதே) நிலைநிறுத்துவதே முக்கியமானதாகும். "யோகோவா யீரே", நமது தேவைகளைச் சந்திப்பவர் அதை எடுத்துக் கொள்ளும் தேவன் அல்ல. லூக்கா 6:38ன் படி நமது தேவன் அதிகமாக கூட்டிக் கொடுப்பவர். அமுக்கிக், குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து கொடுப்பவர். எண் பெருக்கல் என்பது மனிதனாகத் தேர்ந்தெடுப்பது அல்ல அது ஒரு (தெய்வீகக்) கட்டளையாகும். திரளாய் வர்த்தித்து விருத்தியாகுதலுக்கும், பலுகிப்பெருகுதலுக்கும் இடையே நிச்சயமாக எவ்விதமான குழப்பமும் உண்டாகாத படிச் செய்வதற்காக கர்த்தர் ஜலப் பிரளயத்திற்கு பின்னர் இந்தக் கட்டளையை நோவாவுக்குத் திரும்பவும் கொடுத்தார்." (ஆதி 9:1-7) ஜலப்பிரளயத்தால் உண்டான அழிவு கர்த்தர் மனிதனுக்காக கொண்டிருந்த தமது சித்தத்தை மாற்றவில்லை. இன்றும் அவர் நம்மை வர்த்தித்து விருத்தியாகி பலுகிப் பெருகவே வேண்டுமென்று விரும்புகிறார்.

கர்த்தர் ஆபிரகாமுடன் பேசினபொழுது அவர் சொன்னதாவது "உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன்." தேவனுடன் கொண்டுள்ள உறவின் (கனியாவது) பலனாவது பெருக்கல் எண் முறையாகும். லேவி 26:9ல் கர்த்தர் திரும்பவும் ஆபிரகாமுடைய சந்ததியாயருக்காகத் தாம் கொண்டிருந்த திட்டத்தைத் திரும்பவும் வலியுறுத்திச் சொன்னதாவது, "நான் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து உங்களைப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்" என்றார். நாம் சாத்தானால் குழப்பி விடப்படாமல் தேவனுடைய உடன்படிக்கையானது பலன் தருவதாகவும் பெருக்கம் உடையது என்ற அர்த்தத்தை உடையதாகும். ஏதோ ஒரு முறையில் "சிறியது அல்லது ஏழையானது" என்பது "ஆவிக்குரியதாகவும், பரிசுத்தம் உடையது" என்ற விளக்கத்தைத் தருகிறது. சிறியதாயிருந்தால் சிறந்தது எனவும் ஒரு பொருளின்தாம் அதன் எண்ணிக்கை அளவைவிட முக்கியமானது என்பதற்கு வேத ஆதாரமில்லை. அது தேவனுடைய தென்றால் சிறந்தது, பெரியது எனக் கருதப்படும்.

ஊழிய வளர்ச்சி என்பது சொஸ்தமாக்கும் (சுகமாக்கும்) வரத்தைப் போல அல்லது செல்வமாகிய வளத்தைப் போன்றது. நீ அதைப் பற்றி தேவனுடைய வசனத்தில் பார்த்து அறியாவிட்டால் நீ அதை நம்பக்கூடாதது ஆகும். இங்கே நான் உனக்குச் சொல்லிக் கொள்வது ஊழிய வளர்ச்சி என்பதற்கு கர்த்தருடைய வசனத்தில் இடமுண்டு. இன்றும் பார்க்கக்கடவர். "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப் பண்ணினார். இதோ இந்நாளில் நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப்போலத் திரளாயிருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக" (உபாகமம் 1:10-11) கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின்படி உனது திருச்சபை தேவனுடைய திட்டம் மிகப்பெரியது, ஓராயிரம் மடங்கு பெரிதானது.

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டியதாவது நாம் இங்கே பணத்தை பற்றியோ அப்பம் அல்லது மீனைப் பற்றியோ பேசவில்லை. நாம் இங்கே கர்த்தர் மனிதர்களை தம்முடன் சரியான உறவு தொடர்பில் இருக்கும்பொழுது பெருகச் செய்வதைப் பற்றியே பேசுகிறோம். நீண்ட காலமாக திருச்சபைத் தலைவர்கள் அவ்வாறு இருக்கும் தன்மையில் திருப்தி கொண்டவர்களாகி வெளியே இழந்து போனதை (காணாமல்) மீட்பதற்கு பதிலாக தான் இருக்கும் நிலைமையில் அவ்வாறு

# செல் திருச்சபை பற்றிய சுருக்கமான கண்ணோட்டம் அல்லது G-12 செல் குழு தத்துவத்தின் யுக்தி (வியூகம்)

இயேசுவுடைய கட்டளையான புறப்பட்டு போய் எல்லா ஜாதியாரையும் சீஷர் ஆக்கும்படி சொன்னதற்கு பிரத்தியுத்தரமாக செல் திருச்சபையின் போர்க் காலத் திறமைக்கு இருக்கும் வெற்றிக்கான பொதிந்து கிடக்கும் வல்லமை வளர்ச்சியின் பெருக்கல், ஒரு நட்புறவுடன் உறவுத் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்பும் சந்தர்ப்ப சூழ்நிலையை கொண்ட உண்மையான சிஷ்யத்துவமும் ஆகும். அந்த சக்தியின் வல்லமையின் சிலவற்றை சுருக்கமாக கீழ்வரும் பகுதியில் எடுத்துக் காட்ட பரிசுத்த ஆவியின் வழிகாட்டும் முறையால் கரடுமுரடான அதே விவரங்களைக் கொண்டு நிரப்புகிறார் என்று நம்பிக்கையின் அடிப்படையில் சொல்லப்படுகிறது.

அதன் முக்கியமான சில திறவுகோல்கள் ஆவன: (1) உண்மையான சிஷ்யத்துவம் (2) மிகக் கவனத்துடன் தேர்வு செய்யப்படும் உன்னுடைய செல் குழு (3) பயிற்சி கொடுத்து வழி நடத்தி செல்பவரை பெருக்கலாக அடையச் செய்தல் (4) பாரமான வற்புறுத்துதலும் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து இருப்பதும்.

## உன்னுடைய செல் குழுவை ஆரம்பித்தல்

இரட்சிக்கப்படும் படியும் உன்னுடைய செல் குழுவில் அங்கம் ஆகும் படியும் நீ விரும்புகிற மக்களை சுவிசேஷம் அறிவித்தல் மூலமாகவும் அவர்களைத் தொடர்ந்து கிட்டிச் சேர்ந்தும் பயன்படுத்திக் கொள்க. கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிற அனைவரையும் வரவேற்று உன் செல் குழுவை 15 முதல் 20 நபர்களை மேல் மட்டத்தில் கொண்ட குழுவாக உன் குழுவை வளர்த்து விடு.

இரண்டாவதாக, கவனித்து, பிரித்தெடுத்து நீ பயிற்சி கொடுத்து வழி நடத்தி முன் செல்பவராக ஆக்கி அவர் மூலமாக ஒரு செல் குழுவை உருவாக்கி அந்த புதிய செல் குழுவை நடத்தி செல்லும் திறமை அவரிலே உண்டென்றும் மறைந்த கிடக்கிறதும் என்று நம்புவாயானால் அது நன்று.

இதனால் தான் ஒவ்வொரு செல் குழுவுக்கும் ஒரு தரிசனம் அல்லது ஒரு மையக் குறிப்பு (திருச்சபை தரிசனத்திற்குள்) தேவைப்படுகிறது. ஒரு பொதுவான ஆர்வமான இந்த காரணமானதுதான் செல் குழுவை ஒரே வகையான குழுவாக்கி அதுவே குழு அனைத்தையும் ஒன்று கூட்டிச் சேர்க்கிறது. குழு செயல் திட்டங்கள் ஐக்கியம், சுவிசேஷ அறிவிப்பு, கிறிஸ்தவ ஜீவியத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் முதலியன. இவ்வாறு உனது தரிசனத்தை உன்னுடைய செல் ஆரம்பத்தில் ஸ்தாபித்து விடு. இது மக்களைக் கண்டறிந்து கொள்ள உதவும். இந்த செல் குழுக் கூட்டமானது ஒரு வேதாகமப் படிப்பு முறை அல்ல என்பது முக்கியமானதாகும். ஆனால் அதன் இலக்கு கர்த்தருடன் ஐக்கியத்தை நோக்கியும் மற்றும் ஒருவருக்கொருவர் ஐக்கியத்தையும் பெற்று நிற்கிறது. மக்களை கர்த்தரை பின்பற்றியும் மற்றவர்களுடன் வளரவும் உதவுகிறது. இது மற்றவர்கள் வழி நடத்தி முன் செல்லவும் பெருக்கம் அடையவும் உதவுகிறது.

சாராம்சமாக: **வெற்றி பெரு - ஒருங்கிணைத்து விடு - சீஷர்கள் - அனுப்பு** (வெற்றியின் ஏணியாகும்)

## ஒரு செல்குழுவின் தரக் குறியீடுகள்

ஒரு உண்மையான தரம் வாய்ந்த செல் குழுவின் தரக் குறியீடுகள் நான்கு: ஆராதனை, பேணி வளர்த்தல், ஐக்கியம் மற்றும் நற்செய்தி செல்லாத இடங்களுக்கு சென்று அறிவித்தல் வெளி ஊழியம் செய்தல்

ஆராதனையில் விசுவாசிகள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு இருக்கத் தேடுவார்கள், அவருடைய அதிகாரத்திற்குள் வர விரும்புவார்கள்.

அவர்கள் ஒருவரை ஒருவர் கர்த்தருடைய வசனத்தில் பேணிக் காத்து வளர்த்து அவருடைய போதனைகளை அனுதின ஜீவியத்தில் கைக் கொள்ள விரும்புவர். மேலும் அவர்களுடைய மனதைப் புதுப்பிப்பதால் மறு ரூப சாயல் அடைவதாக நினைப்பார்கள்.

ஐக்கியத்தில் அவர்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்ற கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றவும் ஒருவரை ஒருவர் கட்டி எழுப்பவும் முனைவர். மேலும் ஜீவியத்தை உண்மையும் விசுவாசமுமுள்ள சிநேகிதத்தாலும் உறவுத் தொடர்புகளாலும் பகிர்ந்து கொள்ள விரும்புவார்கள். தங்கள் தேவைகளை கரிசனையுடன் கவனிப்பதற்கும் அப்பால் கிறிஸ்துவின் அழைப்பை நிறைவேற்றுவதில் ஒரு வல்லமையான வாஞ்சையோடு விசுவாசிகளுக்கு அழைப்பைக் கொடுத்து இழந்து போனவற்றைக் கண்டுபிடித்து சீஷர்களாக்கி அவர்கள் இழந்து போனவர்களை திரும்ப (மந்தையில்) சேர்த்தும், புதிய செல் குழுக்களாக பெருக்கல் ஆக பெருக்கம் காண்பார்கள்.

## செல் குழுக்களின் வலிமை பற்றியதோர் சிறு குறிப்பு

உன்னுடைய செல் குழு வளர வளர, வழிகாட்டி முன் செல்பவர் அந்த அங்கத்தினர்களுடன் இடைபட்டு அவர்களை அறிந்து கொள்ளுவார். அப்படி ஓர் பரஸ்பர நல்லுறவை ஒவ்வொருவருடனும் உண்டாக்கிக் கொண்டு ஆள் தன்மையுடன் பரஸ்பரமாகப் பகிர்ந்து கொண்டும், நட்புறவிலும் அன்புக் கட்டுகள் வளரப் பெற்று அது ஒரு வளரும் நம்பிக்கைக்கும், ஆழமான பகிர்ந்து கொள்ளுதலுக்கும் மேலும் வெளிப்படையான நடவடிக்கைகளை எடுத்தலும் ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லும். ஆகவே ஒரு தனிநபருடைய நட்புறவு இரண்டு மட்டங்களில் காணப்படுகிறது:

– (i) நீ அங்கத்தினராக இருக்கும் ஒரு செல் குழுவின் பிற அங்கங்கத்தினர்களோடு (படுக்கைக் கோடு மட்டத்தில்) இங்கே நீ ஆழமான நட்புறவை உண்டாக்கிக் கொண்டும் ஜீவியத்தில் பாசக் கட்டுகளையும் உண்டாக்கிக் கொள்வாய்.

– (ii) நீ வழிகாட்டி நடத்திச் செல்லும் ஒரு செல்குழுவின் நபர்களோடு (செங்குத்துக்கோட்டு மட்டத்தில்) இங்கே பெற்றோர், மூத்த சகோதரர் அல்லது சகோதரி என்று ஒப்பிடக் கூடிய ஒரு சூழ்நிலைக் கட்டத்தில் இருப்பதால் உன் செல் குழுவினர் உன்னிடம் நோக்கமாகப் பார்த்து இருப்பார்கள்.

ஞாபகத்தில் வைத்துக் கொள்க:-

# உன்னுடைய செல் குழு திருச்சபையானது நீ அங்கத்தினராக இருக்கும் ஒரு திருச்சபைதான்!

# வளர்ச்சி அடைந்தும் பயிற்சியும் பெற்ற ஒரு சிஷ்யனாக நீயும் ஒரு செல் குழு திருச்சபைக்கு வழிகாட்டி முன் செல்பவனாய் இருப்பாய். இங்கே நீதான் செல் குழுவின் வழிகாட்டி முன் செல்லும் தலைமைத்துவம் உடையவன்.

செல் குழு திருச்சபையின் தரிசனத்தில் ஒவ்வொரு நபரும் முதலில் ஒரு சிஷ்யன் பின்னர் ஒரு செல்குழு வழிகாட்டி முன் செல்பவர்.

இது வாரம் இருமுறை கூட்டம் கூடும் ஒன்று உன்னுடைய திருச்சபையும் மற்றொன்று நீ வழிகாட்டி முன் செல்லும் செல் குழுவுடன்.

## ஒரு வளர்ச்சியுறும் திறந்த செல் குழுவிலிருந்து ஒரு G-12 செல் குழுத் திட்டத்து (பூரணப்பட்ட செல்) திருச்சபையாக

நீ ஒரு செல் குழுவை ஆரம்பிக்கும்பொழுது புதிய நபர்கள் வந்து குழுவில் சேர்ந்து கொண்டிருப்பார்கள். எப்பொழுதென்றால் நீ ஜனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்காக, அவர்கள் தேவைகளுக்காக அவர்களுக்கும் அவர்கள் ஜீவியத்திற்காகவும் பிரச்சனைகளுக்காகவும் சூழ்நிலைமைகளுக்காகவும் (முதலியனவற்றிற்காக) ஆர்வம் காட்டி ஜெபித்து வரும்பொழுது, அவர்களுக்கு கவனமாக செவிகொடுத்தும், அவர்களோடு பகிர்ந்து கொண்டதை ஞாபகத்தில் வைத்தும் தன்னம்பிக்கையுடனும் நிதானத்துடனும் அவர்களது சாதாரணமான நிலைமைகளில் அவசியமான சமயங்களில் உதவி செய்தும் அவர்கள் வினாக்களுக்குப் பதில் அளித்தும் வசனத்தை விளக்கி எடுத்துக் கூறியும் இந்த எல்லா வழிகளிலும் தேவனுடைய அன்பை வெளிப்படுத்தியும் வந்தால் நிச்சயமாக மக்கள் சபையாகக் கூட்டி வருவார்கள். எங்கே தெய்வீகமான நல்லொழுக்கமும் ஐக்கியமும், சகோதரத்துவமும் அனுபவிக்கப்படுகிறதோ அந்த ஒவ்வொரு இடத்திற்கும் மக்கள் கவர்ந்திழுக்கப்படுவார்கள்.

நீ ஒரு தடவை உன் செல் குழு 15 முதல் 20 வரை அங்கத்தினர்களைப் பெற்று வளரும்பொழுது நீ வழிகாட்டி முன் செல்பவராக தலைமைத்துவம் உடையவராக உன்னுடைய 12 நபர்களை வழிகாட்டி முன் செல்பவர்களாக நீ பயிற்சி தர விரும்புகிறவர்களைத் தேர்ந்தெடுத்தும் நீ யாரை உன் செல் குழுவில் நீடித்து வைத்திருக்க விரும்புவர்களையே தேர்ந்தெடுப்பாயாக. இந்த 12 பேரும் வழிகாட்டி முன் செல்பவர்களாகப் பயிற்சி பெறுபவர், பயிற்சி பெற்ற பின்னர் அவர்களே தங்கள் செல் குழுக்களை ஆரம்பித்துத் திறந்து வைப்பார்கள். அந்த 12 பேரும் ஒவ்வொருவரும் தங்கள் செல் குழுக்களை ஆரம்பித்த பிறகு உன்னுடைய திருச்சபை செல் குழுவில் புதிய அங்கத்தினர்களைச் சேர்க்கக்கூடாது. ஆனால் அந்த 12 பேர்களான வழி நடத்தி முன் செல்பவர்களை மட்டும் சந்திக்கவேண்டும். அழைப்பின் பேரிலும் பரஸ்பர விருப்பத்தின் பேரிலும் அந்த திறந்த செல் குழு மூடப்பட்ட திருச்சபை செல் குழுவாக அதாவது G-12 செல் குழுவாக மாறி விடுகிறது. அந்த G-12 செல் குழுவில் நீடித்து இருப்பவர்கள் ஒரு நீண்ட கால ஒப்புவித்தலை தங்கள் செல் குழுவின் வழிகாட்டி முன் செல்பவருடன் அந்த செல் குழுவில் நீடித்து இருப்பதற்காக ஜீவிய கால நட்புறவின் அடிப்படையில் (கொள்கையளவில்) செய்து கொள்கிறார்கள்.

இந்த G-12 செல் குழு திட்டத்தில் இயேசுவையும் அவரது சீஷர்களைப் போலவே ஒரே ஒரு நெருங்கிய நண்பரை வைத்துக்கொண்டு மற்றவர்களிடம் நல்ல நட்புறவைக் கைக்கொள்ளவேண்டும். அந்த 3லிருந்து 4 பேர்களான ஒவ்வொரு நெருங்கிள நண்பரும் செல் குழுவுக்குள்ளே இரண்டு அல்லது மூன்று பேருடன் நெருங்கிய நண்பர்களாக இருக்கலாம்.

ஒரு திறந்த செல் குழுவிலிருந்து ஒரு மூடப்பட்ட திருச்சபை செல் குழுவாக மாறும்பொழுது விசேஷமான உணர்ச்சி மனோபாவம் அந்த நபர்களை மற்றொது செல் குழுவுக்கு மாறச் செய்யும் படி சொல்லும்பொழுது தேவைப்படுகிறது. இந்த மாறுதல் அவசியம் ஏனென்றால் அவர்கள் போதுமான அளவு ஆவிக்குரிய பிரகாரம் வளர்ச்சி அடையவில்லை. (ii) மேலும் அவர்களுக்கு குறைந்த அளவு வழிநடத்தி முன் செல்லும் திறமையானது இருப்பதால் ஒரு புதிய செல்லை வழி நடத்தி முன் செல்லும் அளவுக்கு வளர்ந்து இருப்பதில்லை. அந்த அங்கத்தினர்களை மாற்றுவதால் அவர்கள் மனது வருத்தம் அடையாதபடி மிகுந்த ஜாக்கிரதையான கவனத்துடன் செயல்படவேண்டும். ஒரு வழிகாட்டி முன் செல்பவர் அதிகமான எண்ணிக்கையுள்ள நபர்களை மற்றொரு வழி நடத்திச் செல்பவரிடம் மாற்றும் (நேர்கோட்டு மாற்றம்) அல்லது புதிய செல் குழுவை ஆரம்பிக்கும் அங்கத்தினர்களிடத்தில் மாற்றம் செய்யவும் செய்யலாம்.

(குறிப்பு:- உன்னுடைய திருச்சபை செல் குழுவில் உள்ள சீஷர்கள் ஏற்கனவே தங்கள் திருச்சபை செல்களை ஆரம்பிக்கக் கூடும். எப்பொழுதென்றல் நீ உன்னுடைய செல் குழுவை G-12 செல் குழுத்திட்டமாக ஸ்திரப்படுத்தும் முன்னர் அவ்வாறு செய்யலாம். அவர்கள் G-12 செல் குழுத் திட்டத்தில் உறுதியாக்கும்படி அவ்வாறு செய்யப்படலாம்.)

## G-12 செல் குழுத் திட்ட அமைப்பின் அதீதமான மேற்பார்வை:

1) இந்த G-12 செல் குழுத்திட்டம் எப்பொழுதுமே ஒரு திறந்த செல் குழுவாக ஆரம்பிக்கிறது. இதன் விளக்கமாவது யாராவது எந்த இடத்திலிருந்து வந்தாலும் அதில் கலந்து கொள்ளலாம். இந்தக்கூட்டம் கூடும் இடமும் அந்த இடத்திலாவது எந்த நேரத்திலாவது சுமார் ஒன்றரை மணி நேரம் நடத்தலாம்.
2) இந்த G-12 செல் குழுத்திட்டமானது ஒரு திறந்த செல் குழுவாக ஆரம்பித்தாலும் அதற்குத் தனியாக ஒரு கேந்திரம் அல்லது தரிசனம் ஆரம்பத்திலிருந்து இருக்கவேண்டும். ஒரு பொதுவான இலக்கை வைத்து நிரந்தரமான உறவுத் தொடர்புகளை ஏற்படுத்தி நடத்திச் செல்ல உதவிசெய்வது மிகவும் முக்கியமானதாகும்.
3) அந்த செல்குழு வளர வளர அந்த வழிநடத்தி முன் செல்பவர் தனது சிஷ்யர்களைத் தெரிந்தெடுக்க ஆரம்பிப்பார். அவர்கள்தான் பின் காலத்தில் நிரந்தரமானவர்களாக இருப்பார்கள். மேலும் தங்களை அர்பணித்துக் கொண்ட விசுவாசமுள்ள அங்கத்தினர்களாக நட்புறவு தொடர்புகளை அடிப்படையாக் கொண்டு அப்படி இருப்பார்கள்.

4) தாங்கள் வளராமலும், பிரவாகித்து ஓடாமலும், வழிகாட்டி முன் நடத்துபவருடன் இணைக்கப்பட்டும் அல்லது செல்குழுவின் தரிசனத்திற்கு விசுவாசமில்லாதவர்களை மற்ற செல் குழுவுடன் கடந்து சேர்க்கப்படுவார்கள். (நேர்கோட்டிலோ அல்லது செங்குத்து கோட்டின் முறையிலோ)

5) ஒரு திறந்த திருச்சபை செல் குழுவானது G-12 செல்லுடன் மூடப்படும் பொழுது (அல்லது மூடப்பட்ட திருச்சபை செல்லாக) அது பின்னர் நிர்வாகக் குழுவாக உருவாக்கப்பட்டு அதனுடைய சீஷர்கள் வளரவும், ஒருங்கிணைக்கவும் உதவுகிறது.

6) அந்த G-12 செல் குழுத்திட்டம் ஒருங்கிணையும்பொழுது G-12 செல் நடைமுறையானது பெருக்கல் முறையில் பெருக்கம் அடைந்து 12 மடங்காக பெருக்கம் பெறுகிறது. ஒவ்வொரு பெருக்கல் பெருக்கமும் தலைமுறை அல்லது மட்டம் என்றழைக்கப்படும்.

## யோசனையாகக் கூறப்பட்ட கூட்டத்தின் ஒழுங்கு முறையான நிகழ்ச்சி நிரல்

– முன்னுரை / அமைதியை உடைப்பவர் / வரவேற்பு
– ஆராதனை 20 நிமிடங்கள்
– ஐக்கியம் வசனத்தைச் சார்ந்து 30நிமிடங்கள்
– ஜெபம் மன்றாட்டு 25 நிமிடங்கள்
– தரிசனத்தை அறிவித்தல் / அறிவிப்புகள் 5 நிமிடங்கள்

பின்குறிப்பு: சரியான நேரத்தை குறித்து ஆரம்பித்தால் சரியான நேரத்தில் முடிக்கவும் அந்த காலத்தை கண்டிப்பான முறையில் ஆரம்பித்து முடிக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவும்.

ஞாபகத்திற்கு: ''சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். கர்த்தராகிய நான் ஏற்றக் காலத்தில் இதை தீவிரமாய் நடத்துவேன்''. (ஏசாயா 60:22)

<u>எளிய நடைமுறையில் செயல்படுத்துதலும் அதன் வலிமையும்:</u>

| | | | செல் குழு எண்ணிக்கை | | அங்கத்தினர்கள் | | மொத்தம் அங்கத்தினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மட்டம் 1 | 0 | 0 | 2 | X 1 X | 12 | = | 24 |
| மட்டம் 2 | 0 0 0 0 0 0 0 0 0 0 0 0 | 0 0 0 0 0 0 0 0 0 0 0 0 | 2 | X 12 X | 12 | = | 288 |
| மட்டம் 3 | . . .0 0 0 . . . . 0 0 0 .... | .... 0 0 0 .... 0 0 0 ...... | 2 | X 144 X | 12 | = | 3,456 |
| மட்டம் 4 | . . .0 0 0 . . . . 0 0 0 .... | .... 0 0 0 .... 0 0 0 ...... | 2 | X 1,728 X | 12 | = | 41,472 |
| மட்டம் 5 | etc. | | 2 | X 20,736 X | 12 | = | 500,000 |

<u>இந்த ''வெற்றி ஏணியைப்'' பற்றிய மேலும் ஓர் அரிய குறிப்பு</u>

இந்த செல்குழுத் திட்ட திருச்சபை யுக்திகளின் படி, இந்த நடைமுறை வளர்ச்சியை மேலே குறிப்பிட்டபடி சராம்ச குறிப்பாக பின்வரும் நான்கு சொற்களில் கூறி விடலாம். **வெற்றி பெறு -- ஸ்திரப்படுத்து -- சிஷ்யத்துவம் -- வெளியில் அனுப்பு.**

இந்த நான்கு வினைச் சொற்களும் செல் குழுத் திட்டத்தின் பலவிதமான வளர்ச்சி மட்டங்களுக்கு இணையாக சுருக்கமாக நின்று கூறுகின்றன.

# **வெற்றி பெறு** - கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி திறந்த செல் குழு மட்டத்தில் இதைச் செய்து குழுவின் வழி காட்டி முன் செல்பவரும் அதன் அங்கத்தினர்களும் இருவருமாக சேர்ந்து பயன்படுத்த வேண்டும்.

# **ஒருங்கிணைத்து விடு** - புதிய விசுவாசிகளை ஓர் அடிப்படையான வேதாகமப் படிப்பு, ஜெபம், ஊழியம் ஆகியவற்றைக் கொண்ட குறுகிய கால நிகழ்ச்சி நிரல் ஜெபத் தியான காலத்தில் ஒருங்கிணைக்கப்படவேண்டும். போதிக்கப்படும் பாடங்களாவன: மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, சாபங்களை உடைத்தல், விடுதலை, உள்ளான சொஸ்தமாகுதல், ஜல ஞானஸ்நானத்தைக் குறித்த போதனையைப் பகிர்ந்து கொள்ளுதல், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம், அந்நிய பாஷைகளைப் பேசுதல் திருச்சபை செல் குழுத் திட்டத்தின் தரிசனம் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் அவசியம்.

# **சிஷ்யத்துவம்** - விசுவாசிகளுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களை புதிய செல் குழுக்களின் வழி நடத்தி முன் செல்பவராகத் தகுதிப் படுத்துதல், இந்த நடைமுறை அமல்படுத்தும் பொழுதே பயிற்சி காலத்தில் சிஷரானவர் ஏற்கனவே தமது புதிய செல் குழுவைத் தொடங்கியிருக்கிறார். அவர் G-12 திருச்சபை செல் குழுத்திட்டத்தில் ஏற்கனவே அங்கம் வகிப்பவராக அவரது செல் பெருக்கம் (பெருக்கல் விதிப்படி) அடையத் தொடங்குகிறது.

# **வெளியில் அனுப்பு** - இந்த புதிய வழி நடத்தி முன் செல்பவர் இந்த G-12 செல் குழுத்திட்ட முறையை தன் யுக்திப்படியே பயன்படுத்தி பெருக்கம் செய்கிறார்.

# G-12 அல்லது செல் திருச்சபைகளை கையாளும் யுக்தி முறைகளை நடைமுறைப்படுத்துதல்

## அதிகாரம் 1 - செல் என்றால் என்ன?

நமது உடம்பில் மில்லியன் மில்லியன் கணக்காக செல்கள் அமைந்து அவைகள் ஒருங்கே இணைந்து கிரியை செய்கின்றன. நாம் அவைகள் இல்லாமல் உயிர் வாழ முடியாது. ஒவ்வொரு செல்லிலும் அதன் உள்ளுக்குள்ளே தானே DNA என்ற பரம்பரை இயல்புகள் அல்லது பண்புகளின் ஒத்திசைவை சுமந்து செல்கின்றது. இது ஜீவியத்தின் நிழற்படத்தின் பிரதி அச்சாகும். நமது உடலின் மூலமாக நாம் நம்மைச் சுற்றியுள்ள வெளி உலகத்தை போய்ச் சேர்ந்தும், ஸ்பரிசத்தால் உணரவும் முடியும். இல்லை என்றால் நாம் உருவமற்ற ஆவிகளாக நமது உலகத்தில் இயற்கையின் பாதிப்பையும் நம்மால் உண்டாகும் விளைவுகளையும் உண்டாக்க முடியாது. இயற்கையாகவே செல் அணுக்கள் தாங்களாகவே பெருக்கம் (பெருக்கல் விதிப்படி) அடைகின்றன. அவைகள் தங்கள் இனத்தையே தங்களது வடிவில் இனப்பெருக்கம் செய்தும், தங்கள் இடமாற்றம் செய்யும் தன்மையால் சுரப்பிகளின் பாதிப்பினால் அவைகளின் நடைமுறையின் படி பல்வேறுபட்ட கிரியைகளை நிறைவேற்றுகின்றன. இந்த மானிட சரீரத்தைப் பற்றி எது உண்மையோ அதுவே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப் பற்றிய உண்மையாகும். என்னவென்றாலும் உண்மை என்பது சமதூரக் கோடுகளாக அமைந்தது.

## ஆவிக்குரிய மரபணுக்கள்

இயேசு கிறிஸ்துவானவர் பன்னிருவரைக் குறித்து தம்மைப் பின்பற்றி வரும்படி அழைப்புக் கொடுத்ததிலிருந்து திருச்சபையின் ஆதி ஆரம்பமானது என்று நாம் பார்க்கிறோம். அவரது மகத்தான திட்டமாவது ஒரு அந்நியோந்நியமான சீஷர்களின் ஐக்கியத்தைத் தம்மை சுற்றி உண்டாக்கிக் கொண்டும் தனது ஜீவனை அவர்களுக்காக ஊற்றியும் - தனது மரபணுக்களை அவர்களுக்குள் செலுத்தவும் உண்டாக்கப்பட்டதாகும். இந்த சிறிய செல் குழு கூட்டமைப்பில் இயேசு அவர்களுடன் உறவு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுக்குப் போதித்தும், பயிற்சி அளித்தும் அதிகாரத்தையும் வல்லமையையும் அவர்களுக்கு பிரித்துக் கொடுத்தும் அவர்களை வெளி உலகத்திற்குள் அனுப்பி ஊழியம் செய்யவும் சாட்சியாக இருக்கும்படியும் அனுப்பினார்.

‘‘அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்கள் தம்மோடு கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கும்படி அவர்களை ஏற்படுத்தினார்.’’ (மாற்கு 3:14,15) பின்னொரு காலத்தில் பரிசுத்த ஆவியானவரும் இதே மாதிரியான ஊழியத்தை பின்னால் வரக்கூடிய விசுவாசிகளின் மத்தியில் பிரதியாகச் செய்யவும் கூடும் என்று தெரியப்படுத்தினார். பெந்தெகோஸ்தே பண்டிகைக்குப் பிறகு ஆதித் திருச்சபை பெற்றிருந்த ஜீவனையும், பலத்தையும் அவர்களுடைய பெரிய கூட்டு ஆராதனைகளை ஜெப ஆலயங்களில் நடத்தியும் இதை விசுவாசிகளின் வீடுகளில் கூடும் சிறிய ஐக்கியக் கூட்டங்களாகக்கூடி அதிகரித்தும் (ஆதித் திருச்சபை) அதை நடத்திச் சென்றார்கள். (அப் 2:41-47)

## அந்த அப்போஸ்தலர்களுக்கு ஒரு செல் குழு தரிசனம் இருந்தது

ஒரு மிக முக்கியமான திருச்சபை எருசலேமில் வளர்கிறது. அது ஒரு அபரிமிதமான அமானுஷ்யமான வல்லமையால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. (அப் 2:43) இயேசுவின் பாரம்பரிய மரபு அணு கிறிஸ்துவுடைய பண்ணிருவரால் வெற்றிகரமாக பெருக்கம் செய்யப்பட்டு இந்த வளரும் திருச்சபைக்கு வழங்கப்பட்டது. அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படும் இந்த சபை பெற்றது. (அப் 4:13) அவர்கள் தங்களுடைய ஜீவியத்தை எவ்வாறு தேவனுடைய வசனத்தால் கட்டி எழுப்புவது எப்படி என்று அறிந்திருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் எவ்வாறு ஒரு நெருக்கமான ஐக்கியத்தை ஒருவருக்கொருவர் உண்டாக்கிக் கொள்ளவும் அதனால் ஒருவர் தேவைகளால் பாதிக்கப்படக்கூடாது என்பதை அறிந்திருந்தார்கள். அவர்களுக்கு எழுப்புதல் வல்லமையால் எவ்வாறு இழந்துபோன மற்றவர்களை அண்டையில் சேர்ந்து அதனால் நொறுக்கப்பட்டவர்களையும் சீர்திருத்தம் செய்ய அறிந்திருந்தனர். அவர்களுக்கு எப்படி தேவனுடையதும், மனிதனுடையதுமான கவனத்தை பெறுவது என்பது தெரியும். (அப் 2:47) பரிசுத்த

ஆவியினால் முழுமை அடைவதற்கு வரவேற்பு பெற்ற இடமாக ஆதித் திருச்சபையின் ஜீவிய காலத்தில் செல் குழுக் கூட்டங்களே பயன்பட்டது.

எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்ட பிறகு திருச்சபை தீவிரமாக வளர்ந்து அன்று உலகம் என்று அறியப்பட்ட பிரதேசம் எங்கும் பரவியது. அவர்கள் தங்களுக்குச் சொந்தமாக ஆலயங்களை கட்டிக் கொள்ளவில்லை. பிறகு எப்படி இந்த விதமான திடீரென வெடிக்கும் வளர்ச்சியை அடைய முடிந்தது. அவர்கள் தொடர்ந்து ஒருவருக்கொருவர் வீடுகளில் கூடி அதை செல் திருச்சபையாக ஆக்கினார்கள்.

திருச்சபை வரலாறு முழுவதிலுமே எந்த சமயத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமை எழுப்புதல் ஆதிக்கத்தை இயங்கச் செய்ய தேவைப்பட்டதோ இந்த செல் என்ற தனிச் சிறப்புடையதொன்று திட்ட அடிப்படையில் தெரிவிக்க சீர்திருத்த பணிகளை முன் வைத்தது. ஒரு முக்கியத்துவம் வாய்ந்தவற்றில் முதன்மையான உதாரணமாவது ஜாண் வெஸ்லி என்பவரது ஊழியமும் விசுவாசிகளுக்கு அவர் போதித்த வகுப்பு முறைகளுமாகும். மிகவும் சம்பவமானதோர் வரலாற்றில் கடந்த முப்பது ஆண்டு காலமாக இந்த உலக முழுவதிலும் திடீரென வெடிக்கும் வளர்ச்சியை அனுப்புபவை செல் குழுத் திருச்சபைகள்தான்.

## ஒரு செல்லுக்கான தரக் குறியீடு

ஒரு சுத்தமான செல் குழுவின் தரத்திற்கான அடையாளங்கள் எவை? அவைகள் நான்கு ஆகும். ஆராதனை, போஷிப்பு, ஐக்கியம் மற்றும் வெளியில் சென்று பிரசாரம். ஆராதனையில் விசுவாசிகள் கிறிஸ்துவை கேந்திரமாக்கி அவருடைய அதிகாரத்தின் கீழ் வர விரும்புவார்கள். அவர்கள் தங்களை ஒருவருக்கொருவர் கர்த்தருடைய வசனத்திலிருந்து போஷணை செய்து கொள்வார்கள். மேலும் அதை அவர்களுடைய அனுதின ஜீவியத்தில் பயன்படுத்த விரும்புவர். அவர்கள் கிறிஸ்துவுடைய கட்டளையான "ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள்" என்பதை நிறைவேற்றுவதிலும் ஐக்கியத்தில் ஒருவரை ஒருவர் கட்டி எழுப்பவும் விரும்புவர். என்னவென்றாலும் அவர்கள் தங்கள் தேவைகளுக்கு அப்பால் போகவும் விரும்புவர். அவர்கள் ஒவ்வொரு விசுவாசிக்கும் கிறிஸ்து அளிக்கும் அழைப்பான இழந்தவைகளை மீட்டு சீஷர்களாக ஆக்கும் (மத் 28:19) நோக்கத்தோடு செயல்படுவர். இந்த இறுதியான உள்ளடங்கிய பகுதியே அந்த உண்மையான செல் குழுவை வேறுபடுத்தி ஒரு சாதாரணமான வேதாகமப் படிப்பு அல்லது ஜெபக் குழுவில் இருந்து தனிமைப்படுத்திக் காட்டுகிறது.

ஆராதனை இல்லாவிட்டால் அந்த குழுவுக்கு வறட்சியே ஏற்படும் வசனம் இல்லாவிட்டால் அவர்கள் அறை குறை கிறிஸ்தவர்களாய் இருப்பார்கள். ஐக்கியம் இல்லாவிட்டால் அவர்கள் குளிர்ந்து போவார்கள். வெளியில் சென்று ஆத்ம ஆதாயம் செய்யாவிட்டால் ஒரு செல் குழு தன்னைத் தான் உள்ளாராய்ந்து தனிமையில் மூழ்கி விடுவர். ஒருவர் ஏதோ ஒரு தரம் சொன்னது தனக்காக வாழும் ஒரு திருச்சபை தானாகவே மரித்துவிடும். ஒரு திருச்சபை மட்டுமே ஒரு தனிப்பட்ட ஸ்தாபனமாக அதன் அங்கத்தினர் அல்லாதவர்களின் நலனுக்காக நிலைத்திருக்கிறது. நாம் எங்கே ஆரம்பித்தோமோ அவ்விடத்திலே முடிக்கிறோம். இந்த உயிர் நூல் செல்லை போலவே விசுவாசிகளின் ஒரு செல் குழுத் திட்டமும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் அடிப்படை கட்டுமானம் ஆகும். அவைகள் இயேசுக் கிறிஸ்துவின் மரபணுக்களை பரிமாற்றம் செய்யும். அவைகள் தாங்களாகவே இனப்பெருக்கல் வழி, பெருக்கம் அடைந்து தமது இனவழி மரபுகளை திரும்ப உற்பத்தி செய்து வெற்றி ஏணியின் வழியாக செயல்படுகின்றன. எங்கெங்கு அவசியமோ தற்சமயம் இயங்கி வரும் குழுக்கள் வேறுபட்ட கிரியைகளுக்காக ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்றம் அடைந்து இந்த செல் ஊழியத்தின் நான்கு நிகழ்ச்சி நிரல் நிகழ்ச்சிகளை நிறைவேற்றுகின்றன.

"நீதிமானுடைய பலன் ஜீவ விருட்சம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்கிறவன் ஞானமுள்ளவன்." (நீதி 11:30)

## அதிகாரம் 2 - ஒரு செல் திருச்சபை அல்லது ஒரு செல் குழுவை உடைய திருச்சபை?

உலகமெங்கும் உள்ள பல திருச்சபைகளில் சிறு குழுக்களுக்கென்று ஓர் இடமுண்டு. சில அவற்றை தமது ஜீவியத்திலும் தரிசனத்திலும் வளரும் ஒரு பகுதியாகவும், அதே சமயம் மற்றவர்கள்

அதற்கென எந்த விதமான இடமும் வைத்திருப்பதில்லை. நாம் திருச்சபையை எவ்வாறு வைத்திருக்கிறோம் என்பதை திரும்ப யோசித்துப் பரிசீலனை செய்யவேண்டும். அதிக எண்ணிக்கையான பல திருச்சபைகளும், இயக்கங்களும் செல் ஊழியத்திற்காக ஒரு செயலூக்கமுடைய மாதிரிக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆரம்பிக்கும் குறியிலிருந்து ஒரு செல் திட்டத்தைப் பற்றிய விளங்கிக் கொள்ளுதலானது திருச்சபை வாழ்க்கைக்கு கேந்திரம் போன்றது என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். வேதாகமத்துப் படி சொல்லப்போனால் செல் குழுக்கள் திருச்சபையின் நிகழ்ச்சி நிரலில் ஓர் அங்கம் மட்டுமல்ல சற்று ஓரளவுக்கு அவைகள் திருச்சபை இயங்கி முன் செல்வதற்கு அடிப்படையான ஓர் முறையாகும். அதாவது அவைகள் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் அங்கத்தினர்களை ஒன்றாகத் திரட்டி போஷித்து, பயிற்சி அளித்து வரும் முறையாகும். அந்த ஒரு காரணத்துக்காகவே அவைகள் உண்மையான புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் முக்கியமான ஒரு பாகமாக விளங்குகின்றனர்.

## திருச்சபைக்கு புதிய ஏற்பாட்டு அணுகுமுறை

புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் ஒரு செல் திருச்சபையின் தரிசனம் இல்லாமல் தாங்கள் சாதித்து அடைந்ததை சாதித்திருக்க முடியாது. உதாரணமாக, பெந்தெகோஸ்தே நாளில் எருசலேமில் திருச்சபையில் 3000 பேர் சேர்க்கப்பட்டார்கள். அவர்கள் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்று தங்கள் விசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்து நின்றார்கள். அவர்கள் அனைவரும் அப்போஸ்தலர் போதனையினால் போதிக்கப்பட்டார்கள். அவர்கள் ஜெபத்தில் விசுவாசமுள்ளவர்களாய், சாட்சியாகவும் ஒப்புவிக்கப்பட்டதோர் ஐக்கியத்தில் ஒரு அங்கமாகவும் திகழ்ந்தார்கள். இன்றைய நிலைமையில் கிறிஸ்துவுக்காக ஒப்புக் கொடுப்பவர்களில் 93 சதவிகிதத்தினர் விழுந்து போனாலும் மீதி 30 சதவிகித்தினர் மாத்திரம் ஏதோ ஒரு வழியில் திருச்சபை காரியங்களில் ஈடுபாடு கொண்டு இயல்பாகவே நிலைத்திருக்கக் கூடிய இன்றைய நாளில் இது ஒரு தொலை தூர அறைகூவல் ஆகும்.

அந்த ஆதிகால சபையின் வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால் எந்த விதமான ஐயப்பாடுமின்றி இவற்றில் மிகுந்த கண்டுகொள்ளும் தனிச் சிறப்புப் பெற்றது. இந்த எருசலேமத் திருச்சபையில் இருந்த செல் குழுவின் மேல் உள்ள முக்கியமான அழுத்தம் தான்.

''அவர்கள் ஒரு மனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.'' (அப் 2:46) ஜெப ஆலயங்களில் அனுதினமும் தரித்திருந்ததுடன் வீடுகள்தோறும் ஒருவருக்கொருவர் வீடுகளிலும் சந்தித்து வந்தனர். அவைகள் வெறும் பயனற்ற இல்லச் சந்திப்புகளோ அல்லது வீட்டு ஐக்கிய குழுக்களோ அல்ல. அதாவது இந்நாளில் காணப்படும் பாரம்பரியமாக சிறு குழுக்களுடன் அணுகு முறையும் அல்ல. அவைகள் செல் குழுக்கள் தான். அவைகள் நுட்பமான சிறு சபைகள் அல்லது செல் குழு திருச்சபைகள் தான். அவைகள் ஒரு திருச்சபை என்ன செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் நிறைவேற்றினார்கள். அவர்கள் சாட்சி கூறினார்கள். ஐக்கியத்தில் இணைந்தார்கள், ஜெபித்தார்கள், அவர்கள் வளர்ச்சி அடைந்து ஏழைகளுக்காக கவனம் கொண்டார்கள். எல்லாம் செல் குழுவினால் நிறைவேற்றப்பட்டது. வேறொன்றும் சீஷர்களை உண்டாக்குவதில் பலன்களையும் அவர்களது திடீரென வெடிக்கும் வளர்ச்சிக்கு போதுமான விளக்கம் தர முடியாது.

## ஒரு சிறியதான அளவான திருச்சபை

இந்த செல்குழுத்திட்க் கோட்பாடு அல்லது செல் குழு சபைகளுக்கும் அநேக திருச்சபைகளில் இக்காலத்தில் பின்பற்றப்படும் பாரம்பரிய வீட்டுக் குழுக்களாக அணுகும் முறைக்கும் இரண்டுக்குமே பொதுவாக கொஞ்சமும் இருப்பதில்லை. வீட்டு ஐக்கிய குழுக்கள், ஜெபக் குழுக்கள், விசேஷ ஆர்வமுடைய குழுக்கள், வேதாகமப் படிப்பு குழுக்கள் இவைகள் அனைத்தும் ஏதோ கொஞ்சம் அளிக்கலாம். ஆனால் அவைகள் அனைத்தும் செல் குழுக்கள் அல்ல. அப்படியென்றால் செல் குழு என்பது என்ன? செல் குழு எனப்படுவது ''சபை விசுவாசிகளை சிறு கூட்டங்களாக அமைத்து, முக்கிய நோக்கங்களான ஆராதனை, தேவனோடு இணைப்பட்டு அனுபவித்தல், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்தல், சமூகத்தில் சுவிசேஷத்தை அறிவித்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காகவே.'' சுருங்கக் கூறினால் செல் குழுக்கள் ஒரு திருச்சபை ஆற்றும் பணியையே நிறைவேற்றுகின்றன.

ஆனால் சிறிய அளவில் மட்டுமே. இது செல் என்பது திருச்சபையின் ஒரு முதன்மையான அங்கமாக உண்மையான திருச்சபைப் பணியானது நிறைவேற்றப்படும் இடமாகும்

## செல் திருச்சபையா அல்லது பாரம்பரியத் திருச்சபையா?

இது ஒரு செல் சபைக்கும் மற்றும் பாரம்பரியத் திருச்சபைக்கும் இடையே உள்ள பல அடையாளங்காட்டும் வித்தியாசங்களுக்கு அழைத்துச் செல்கிறது. ஒரு பாரம்பரிய சபையானது நிகழ்ச்சி நிரலால் அமையப் பெற்றது. ஒரு செல் சபை ஜனங்களை மையமாகக் கொண்டது. ஒரு பாரம்பரியத் திருச்சபை மகத்தான திட்டங்களின் பலத்தின் மேல் கட்டப்பட்டது. உனக்கு பெரிய நல்ல நிகழ்ச்சிகள் இருந்தால் நீ பெரிய நல்லதொரு திருச்சபை உடையவனாவாய். ஆனால் ஒரு திருச்சபைக்கு நிகழ்ச்சி நிரல்கள் மட்டுமல்ல, ஜனங்களைப் பற்றிய கவனமும் தேவை. மக்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையை தொடர்ந்து திருச்சபையில் செயல்படவேண்டுமென்றால் அங்கு மத்திய அழுத்தமுள்ள ஊழியமே. மக்களை நேரில் அணுகுவது இந்த சிறிய குழுத் திட்டங்களையன்றி பெரிய ஆராதனை முறைகளால் அல்ல.

ஒரு பெரிய திருச்சபை கட்டிடத்தை மையமாகக் கொண்டது. வழக்கமாக இது தான் அடிக்கடி நேரிடுகிறது. அந்தத் திருச்சபை ஆலயத்தின் பரிமாணம், இடம் கட்டடக் கலையால் அலங்கரிக்கப்பட்ட தேவாலயக் கட்டடம் ஆகியவை திருச்சபையின் நடபடிக்கைகளைத் தீர்மானம் செய்கின்றன. ஜனங்கள் சபை ஆகப்பட்டவர்கள் ஆலய ஆராதனை முடிந்து கட்டடத்திலிருந்து மக்கள் கலைந்து சென்றவுடன் அந்த ஆலயத்தில் வேலைகள் அடுத்த ஒரு வாரத்திற்கு நடப்பதில்லை. ஆனால் ஒரு செல் சபையில் இப்படி நேரிட முடியாது. இந்த செல் திருச்சபை சமூகத்தை மையமாகக் கொண்டதல்ல. ஏனென்றால் அந்த செல் குழு அங்கத்தினர்கள் திருச்சபையின் முக்கியமான பணியில் பொறுப்பு எடுத்துக் கொள்கிறார்கள். இந்த மையமான ஊழியங்கள் அந்த வாரம் முழுவதும் கர்த்தர் அவர்களுக்குச் செய்தவற்றைக் கொண்டாடும் வாரமாகவும், மேலும் அதே மாதிரியான பணியை வருகிற வாரத்திற்கும் ஆயத்தம் செய்வதற்கும் மாதிரியாகிறது.

பாரம்பரியத் திருச்சபை ஒவ்வொருவருக்கும் அழைப்பை விடுக்கிறன்றது. ‘‘வாருங்கள்’’ என்று. ஆனால் செல்குழு சபையின் தூதுவானது ‘‘போ’’ என்பதுதான். பாரம்பரியத் திருச்சபையின் ஊழியத்தின் முன் மாதிரி அமைதியான முறையில் பிரதி கிரியைகளை எதிர்பார்க்கிறது. ‘‘கவனி’’ என்கிறது. ஆனால் செல் திருச்சபையின் ஜெயத் தொனியின் அழைப்பு ‘‘செய்’’ என்பதாகும். இது ஒரு சுறுசுறுப்பாக இயங்கும் ஊழியத்தின் எடுத்துக்காட்டாகும். மக்கள் அனைவரும் கிறிஸ்துவின் ஊழியத்தில் பங்கெடுத்துக் கொண்டு செயல்பட ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

இந்த வகையான செயல்பாடுகள் கோட்பாட்டு எண்ணத்தில் பெரும் மாற்றங்களை அநேகமான இன்றைய திருச்சபை தலைவர்களுக்கு இடையில் மறைந்து காணப்படுகின்றது. நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் செல் உயிரின் வல்லமையைக் கற்றுக்கொள்ளவேண்டும். G-12 செல் தரிசனம் ஒரு செல் சபையின் தரிசனம் இல்லாமல் கிரியை செய்யமுடியாது. இந்த ஒரே வழியில்தான் நாம் வெற்றிகரமாக நமது திருச்சபையில் அங்கத்தினர்களைத் திரட்டி கிறிஸ்துவின் பணியை செய்யவும். அவர் சரீரத்தில் ஒரு பகுதியாக கிரியை செய்யவும் முடியும்.

## அதிகாரம் 3 - G-12 தரிசனத்தின் மதிப்பீடுகள்

ஒவ்வொரு போதகரும் தங்கள் திருச்சபை எப்படி வளரச் செய்யவேண்டும் என்பதை அறிய விரும்புகிறார். ஆனால் ‘‘வளர்ச்சி’’ என்பது யுக்தி முறையை விட அதிகமானது. தேவனிடமிருந்து வரும் ஒவ்வொரு தரிசனமும் அதைத் தாங்கி நிறுத்தும் சில தகுதிகளுடன் வருகிறது. இந்த G-12 என்பது வளர்ச்சிக்கான யுக்திகளைவிட மேலானது. அது பூரணமாக வளர்ச்சி அடைந்த தரிசனமாக, சிஷ்யத்துவம், பேணி வளர்த்தல் செய்தித் தூதுக்குழு ஆகியவற்றில் அமைகிறது. இந்த புதிய நூற்றாண்டில் திருச்சபை ஜீவியத்திற்கு ஒரு மாதிரியான அமைப்பை தந்து உதவுகிறது.

சில ஆண்டுகளாக திருச்சபைகள் மிகுந்த உயர்வான ஒரு மதிப்பீட்டை மன்றாட்டு, ஆவிக்குரிய வரங்கள், ஆவிக்குரிய போர்கள், திருச்சபை வளர்ச்சி, சுவிசேஷ பிரபல்யம், செய்தி தூதுக் குழுக்கள், ஏழைகளின் பராமரிப்பு, பயிற்சி ஆள் திரட்டுதல் ஆகியவற்றிற்குக் கொடுத்திருந்தன. இந்தக்

காரியங்கள் அனைத்தும் G-12 தரிசனத்திற்குக் கேந்திரமாக உள்ளன. இவைகளை செல் குழுக்களின் மூலமாகவே மாத்திரம் அழுத்தமாக வெளிப்படுத்த முடியும். இது எதன் காரணமாக என்றால் அந்த வல்லமையுள்ள திருச்சபையின் ஜீவன் செல் குழுக்களில் ஆரம்பித்துக் கிரியை செய்கிறது.

அநேக போதர்களுடைய தரிசனமாவது சுவிசேஷ பிரச்சாரத்துக்கு மக்களைக் கூட்டி திரட்டுவது தான். இது ஆத்ம ஆதாயம் செய்யவும், வளர்ச்சிக்குத் தேவையானதை அளிக்கவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஊழியத்திற்கு அர்ப்பணிக்கவும் ஆக எல்லாவற்றையும் செய்கிறது. திருச்சபையானது இயேசுவின் ஊழியத்திற்காக அழைக்கப்படுகிறது. முழுநேர ஊழியர்களாக அல்ல. ஒரு திருச்சபையின் பரிமாணமானது இந்த பயனுள்ள ஆள்சேர்க்கும் இலக்குக்கு இரண்டாவது தான் இந்த படீரென வெடிக்கும் வளர்ச்சிக்கான தரிசனத்தில் முன்னேறி செல்பவர்களைப்பற்றி எந்த விதமான சந்தேகமும் இல்லை. இந்த G-12 செல் குழுத் திட்டத்தின் வெற்றிக்கான திறவுகோல் அதன் யுக்தியான செயல்பாட்டில் அல்ல. ஆனால் அந்த தரிசனத்தைத் தாங்கும் மதிப்பீட்டில் அடங்கி இருக்கிறது. இந்த யுக்தி வழிகளை கையாண்டு நாம் வெற்றி அடையலாம் என்று எண்ணக்கூடாது. நாம் இந்த சவாலுக்கு ஈடுகொடுத்து எழுந்து ஆவிக்குரிய பிரகாரமான அபிசேஷகத்தின் புதிய மட்டங்களில் உயர்ந்து எல்லாவற்றிற்கும் மேலாக அந்த மட்டத்தின் கீழ் மறைந்துள்ள மதிப்புகளை நாம் அணைத்து எழும்பி நிற்க வேண்டும்.

1. **இந்த G-12 செல் குழுவின் தரிசனம் சிஷ்யத்துவத்தை பற்றியது.**

   இயேசு கூறியதாவது ''சீஷராக்குங்கள்'' (மத் 28:19-20) என்றார். அவர் நமக்கு நற்செய்தியைத் தூதாகச் சொல்லவோ அல்லது தீர்மானங்கள் எடுக்கவோ மட்டும் சொல்லவில்லை. சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும் நம்பும் மக்களை சீஷராக்கவேண்டும். அவர்களுக்குப் போதித்தும், உருவாக்கியும், இயேசுவினுடைய நடத்தையிலும் சாயலிலும் உருவாக்கப்படவேண்டும். ஆனால் திருச்சபையானது சில சந்தர்ப்பங்களில் இந்த அம்சத்தில் கீழ்படிதலில் குறைவுள்ளதாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் ஆவதற்கு தீர்மானிக்கும் அநேக மக்கள் கிறிஸ்துவின் பாதைகளில் நடக்கும் உண்மை சிஷ்யர்களாக ஒருபோதும் ஆவதில்லை. இது மாறுதல் பெற வேண்டும். நாம் மக்களாகவும் திருச்சபைகளாகவும் இயேசுவுடைய கட்டளைகளுக்கு நமது முழுமையான கீழ்படிதலையும் தந்து நமது நிகழ்ச்சி நிரலின் உயர் மட்டத்தில் அவைகளை வைக்கவேண்டும். (யோவான் 14:15,21)

2. **இந்த G-12 தரிசனம் செல் குழுக்களுக்காக**

   செல் குழுக்கள் என்பவை மக்கள் சிறு கூட்டங்களாக வாரந்தோறும் கூடிவந்து, ஒருவரை ஒருவர் சிஷர்களாக கிறிஸ்துவை அறியாதவர்களிடம் அவரைப் பற்றி அறிவிக்கவும் கூடும் சிறு கூட்டத்தினர் ஆவார்கள். நாம் செல் குழுக்களை நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அவைகளில் தான் வளர்ச்சியின் ஆசீர்வாதம் இறங்கும் இடங்களாகும். புதிய ஏற்பாட்டுக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு செல்கள் தான் ஒரே வழியாகும். நாம் விசுவாசிகளாக சிஷ்யர்கள் ஆகவும் மற்றவர்களை சீஷர்கள் ஆக ஆக்கவும் வேண்டும்.

   அதாவது உனக்குத் தேவையான தனிப்பட்ட ஊழியத்தை எங்கு பெறுவதென்றும் அதை எங்கு கண்டுபிடித்து, உன் ஊழியத்தை கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் நிறைவேற்று எது என்பது தான்.

3. **இந்த G-12 செல் தரிசனம் வழி நடத்தி முன் செல்லும் தலைமைத்துவத்திற்குத்தான்**

   இந்த பெயரான G-12 பன்னிருவர் அடங்கிய நிர்வாகம் என்பதற்கு பொருளாக நின்று தரிசனத்தின் வழி நடத்தி முன் செல்லும் திறமையை விருத்தி செய்யும் அம்சத்தை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனுக்குள் பலம் வாய்ந்த வழி நடத்தி செல்பவன் ஆவான். நாம் இயேசுவுக்கு ஊழியம் செய்யவும் மற்றவர்களை அவரிடம் நடத்திச் செல்லவும் அழைக்கப்பட்டுள்ளோம். செல் குழுக்களை வழி நடத்தி முன் செல்பவர்கள் இந்த G-12 செல் குழுக்களில் சிஷ்யர்கள் ஆவார்கள். (இயேசுவின் 12 சீஷர்களைப் போல) ஆகவே ஊழியம் செய்யும் ஒவ்வொருவரும் இந்த தரிசனத்திற்கும் ஊழியர்கள் ஆவார்கள். இதன் அர்த்தமாவது எல்லாக் காரியங்களுக்கும் சரியான கணக்குக் கொடுத்தல் இருக்கிறது என்பதாகும்.

**4. இந்த G-12 தரிசனம் பெருக்கல் வழி இனப்பெருக்கம் பெறுவதற்கு**

இது தரிசனத்தின் தூண்டி விடக்கூடிய ஒன்று. உன்னில் கொண்டுள்ள இயேசுவின் நோக்கமாவது கனி கொடுப்பது தான். அவர் நீ உன் ஜீவயத்தில் வெற்றியுள்ளவனாகவே இருக்க விரும்புகிறார். (யோவான் 15:8) அவர் உன்னைக் கனி கொடுக்கவும், பெருக்கல் வழி முறையில் செல் பெருக்கம் செய்ய அழைக்கிறார். G-12 செல்லின் தரிசனத்தின் கிரியைகளால் வரும் வளர்ச்சி அங்கத்தினர்களை மற்ற திருச்சபைகளிலிருந்து மாற்றம் செய்வதால் வருவதில்லை. அது செல் குழுவின் வழியாக அதன் அங்கத்தினர்கள் தங்கள் குடும்பங்களையும், அயலகத்தார், நண்பர்களையும் சந்திப்பதால் வருகிறது. அதன் அர்த்தமாவது ஒவ்வொருவரும் இழந்து போனவர்களுக்காக ஒரு விதமான அதீதமான உணர்ச்சியுடன் அவர்களை நேசித்து இழந்து போனவைகளுக்காக அவர்களைச் சந்தித்தும் எந்த விதமான இழப்பையும் பொருட்படுத்தாது கிறிஸ்துவுக்காக இவற்றை நிறைவேற்ற வேண்டும்.

**5. இந்த G-12 தரிசனமானது தேவனுடைய மகிமைக்காகவே**

தேவனுடைய ஜனங்களைத் திரட்டிச் சேர்க்கும் பொழுது ஏதோ அதிசயமானதொன்று நேரிடுகிறது. இங்கே உன்னதமான நட்சத்திரம் என்ற தகுதி மறைந்து போக அந்த பணியானது எல்லோராலும் கிரியை செய்யப்படுகிறது. இந்த தரிசனத்தின் உண்மையான கதா நாயகர்கள் திருச்சபையின் அங்கத்தினர்களே. அவர்களில் மகா அபிஷேகம் பெற்ற வழி நடத்தி முன் செல்பவர்களில் கையளவு மக்களே அல்ல. இந்த வழியில் தேவன் உண்மையான மகிமையைப் பெறுவார். அடையாளங்கள், ஆச்சரியங்கள், அற்புதங்கள் மேலும் மகா பெரிய செயல்கள் அனைத்தும் திருச்சபை முழுவதிலும் நேரிடுகின்றது. ஒவ்வொருவருக்கும் செயல்படுமாறு ஒரு பங்கு உண்டு.

நாம் பார்க்கிறபடி இந்த தரிசனம் ஒரு முழுமையானதான ஒன்றாக ஒரு திருச்சபைக்கு அதை செயல்படுத்த கால அவகாசம் தேவைப்படுகிறது. அது அறிவுக்கு எட்டாத மாறுதல்களையும் திருச்சபை ஐக்கியத்தைப் பற்றி நாம் நினைக்கிற வழியில் கொண்டு வந்து நாம் எந்த வழியில் செய்கிறோமோ, அவ்வழியில் செயல்படுகிறது. விலையோ அதிகம். ஆனால் அதற்கு கொடுக்கப்படும் லாபம் தகுதியானதே.

## அதிகாரம் 4 - தரிசனத்தின் இருதயம்

இந்த G-12 மாதிரி செல் திருச்சபைகள் பெருக்கல் முறைப்படி பெருக்கம் அடைய வழிவகை செய்கிறது. புதிய வழி நடத்தி முன் செல்பவர்களுக்குப் பயிற்சியும் சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கு சிஷ்யத்துவமும் வழங்குமாறு உதவி செய்கிறது. இந்த எடுத்து காட்டின் நோக்கமானது அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு திறந்த செல்லின் வாயிலாக இழந்து போனவைகளை மீட்க வெளியில் கிட்டி சேர்ந்து அதனால் ஒவ்வொருவரும் வழி நடத்தி முன் செல்வராகி, தங்கள் காலத்தில் தங்களுடைய சொந்தமான செல் குழுக்களை நடத்தும்படி ஏதுவாகிறது. **ஒவ்வொருவருக்கும் ஊழியம் செய்யப்பட்டு ஒவ்வொருமே ஓர் ஊழியர் ஆகிறார்கள்**.

இந்த செல் குழுக்கள் தாங்களாகவே வகுக்கப்படுவதில்லை. அதற்கு பதிலாக பெருக்கல் வழி பெருக்கம் அடைகின்றன. ஒரு நபர் ஒரு செல் குழுவில் அங்கம் ஆகிவிட்டால் அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்து நான்கு கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்காக உபவாசம் செய்கின்றனர். ஒன்று ஒன்றாக அவர்கள் கிறிஸ்துவண்டை வழி நடத்தப்பட்டு அந்த செல் குழுவில் ஒரு பாகம் ஆகின்றனர். அந்த செல் குழு ஓரளவு வளர்ச்சி அடையும் பொழுது பெருக்கல்-பெருக்கம் ஏற்படுகிறது. அந்த செல் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் பின்னர் புது செல் குழுக்களை ஆரம்பிக்கின்றனர். மேலும் அவர்கள் தொடர்ந்து உதவி பெற்றும் அறிவுரை கூறுதலையும் ஊக்கத்தையும் முந்தைய செல்லில் இருந்து பெறுகின்றனர். அந்த மூல ஆதாரமான செல் குழு அங்கத்தினர்கள் தங்கள் சொந்த செல் குழுக்களை ஆரம்பித்த பின்னர் அந்த மூலாதாரமான செல் G-12 செல் குழுவாகிறது. இந்த G-12 குழுவானது வழிகாட்டி முன் செல்பவர்களை பெற்றும் இருக்கிறது. அவர்கள் தங்கள் சொந்த செல்களின் மூலம் வழி காட்டி முன் செல்வதற்காகப் பயிற்சி அளித்தும் அவர்கள் முன்னேற்றத்தைப் பகிர்ந்து கொண்டும் ஊக்குவித்தலுக்கும் ஆதரவுக்காகவும் கூடிச் சந்திப்பார்கள்.

## அதிகாரம் 5 - வெற்றியின் ஏணிப் படிகள்

இன்றைய உலகில் வெற்றி என்பது ஓர் சாதாரணமாக வழங்கும் சொல்லாகும். ஒவ்வொருவரும் வெற்றியை அடைய விரும்புகிறார்கள். அது ஒரு விசுவாசிக்கு என்னவென்று அர்த்தமாகிறது? இயேசுவின் பார்வையில் 'வெற்றி' என்பது என்ன? இயேசுவைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு அளவுகோலினால் நாம் வெற்றி என்னவென்பதை தீர்மானிக்கலாம். அவர் நமக்குச் செய்யும்படி சொன்ன எல்லாவற்றையும் அவருடைய கடைசி வார்த்தைகளாக சீஷர்களுக்குச் சொன்னவற்றின் சராம்சமாக, ''ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.'' என்பதே. (மத் 28:18-20.)

உன்னுடைய ஜீவியம் வெற்றியடைந்தது என்பதை இயேசுக் கிறிஸ்துவின் அழைப்பை நீ நிறைவேற்றியது வரையிலானதைப் பொறுத்தது ஆகும். அது சீஷர்கள் உண்டாக்கி நன்னடந்தையிலும் இயேசுவின் சாயலில் பூரணப்படுவது என்று அர்த்தம் கொடுக்கும். இந்த G-12 தரிசனம் என்பது சாதாரணமான நடைமுறையாக நமது எஜமானரது அழைப்புக்குக் கீழ்படிந்து விடுவது நமக்கு ஒரு வெற்றியாகும்.

வெற்றி என்பது உன் தரிசனம் இலக்கு, வாழ்க்கையின் நோக்கம் எல்லாம் நிறைவேற்றபடுகிறது என்ற கட்டாயமான அர்த்தத்தை தருவதாகும். ஆனால் சுயமான நிறைவு பெறுதல் என்பது உன்னுடைய ஜீவியத்தில் தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுதலைச் சாந்தது. அதாவது, உண்டாக்குதல் பூரணப்படுதல், இயேசு கிறிஸ்துவின் சீஷர்களை சேகரித்து திரட்டுதல் ஆகியவை வெற்றி என்பது படைப்பின் உடன்படிக்கையை நிறைவேற்றுதல் ஆகும். பூமியை நிரப்பி அதை கீழ்படுத்துங்கள். இத்துடன் தேவனுடைய ஆசீர்வாதமும் சேர்ந்து அது சொல்கிறபடி தேவன் அவர்களை ஆசீர்வதித்து தேவன் அவர்களுக்குச் சொன்னதாவது நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி 1:28).

ஜெயம் என்பது ஆபிரகாமுடைய ஆசீர்வாதத்திற்குள் பிரவேசித்தல் என்று தேவன் சொல்கிறார். ''நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் - பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்'' (ஆதி 12:2-3).

நீ இயேசுவுடைய மகத்தான கட்டளைக்கு கீழ்படிந்து புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கும் பொழுது நீ ஆபிரகாமுடைய ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிப்பாய். அவன் சகல காரியங்களிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான்.

**இந்த மகத்தான கட்டளைக்கு கீழ்படிவதற்கு நான்கு படிகள் உண்டு. ஒவ்வொன்றும் பூரணமான கீழ்படிதலுக்கு மிகவும் அவசியமானவை. அவையாவன: <u>ஜெயம் பெறு, ஒருங்கிணைத்து விடு, சீஷராக்கு, வெளியில் அனுப்பு என்பவையாகும்.</u>**

### ➢ ஜெயம் கொள்

புதிய விசுவாசிகளை நேரடியான தனிப்பட்ட நட்புடனான விசேஷ பிரச்சாரத்தாலும் விழாக்கள் மற்றும் சந்திப்புகளாலும் சபையில் சேர்க்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆராதனை முடிவிலும் வழிகாட்டி முன் செல்பவர் திருச்சபை முழுவதும் பாவிகளுக்காக ஜெபிக்கப்படும். ஜெபத்தினால் தாங்கள் முதல் முதலாக ஒப்புக் கொடுத்தவர்களை மேடைக்கு முன்னால் வரவழைக்கிறார். செல் குழு வழி நடத்தி செல்பவரால் நடத்தப்படும் ஆலோசனை தரும் குழு அந்த புதிய விசுவாசிகளுடன் சேர்ந்து தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஒருங்கிணைத்தல் நடைபெறுகிறது.

### ➢ ஒருங்கிணைத்தல்

இந்த தவணையில் குறிப்பாக தங்களைப் பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு நற்செய்தியும் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதால் அந்த மனிதர் தனக்குள் என்ன நேரிட்டது என்பதைப்

புரிந்து கொள்ள முடிகிறது. பிறகு அந்த நபருக்கு அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள யாராவது ஒருவர் ஓரிரு நாட்களில் வந்து சந்திப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த செல் குழுவின் வழிகாட்டி முன் செல்பவருடைய பொறுப்பாவது அந்த புதிய விசுவாசியை 48 மணி நேரத்திற்குள் சந்தித்தும் மறுபடியும் தனிப்பட்ட சந்திப்பாவது அவர்களுக்கு ஒரு வாரத்திற்குள் கொடுக்கப்பட வேண்டியது அவசியம்.

இந்த ஒருங்கிணைப்பு நடைமுறையானது ஒரு தொடர்ச்சியானது ஒருவருக்கொருவர் வேதாகமத்தைப் படிப்பதாலும் மற்றும் ஒரு வாரத்திற்குள் ஓர் புதிய சந்திப்பு நடைபெறுவதாலும் அது தொடர்கிறது. இந்த எதிர் சந்திப்பு தியானம் அந்த புதிய விசுவாசிக்கு கிறிஸ்துவைப் பற்றியதோர் அனுபவத்தை கொடுப்பதற்கு மையமாக்குகிறது. அந்த வார முடிவில் இரட்சிப்பின் நிச்சயம், உள்ளான சொஸ்தமாகுதல், விடுதலை, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் திருச்சபை பற்றிய தரிசனம் ஆகிய அம்சப் பிரிவுகளில் கவனம் பெறச் செய்கிறது. இந்த ஒருங்கிணைப்பு நடைமுறை பூர்த்தியானவுடன் அந்த விசுவாசி அடுத்த படியான பக்தி விருத்திக்கு முன் செல்ல தயாராகிறார்.

## ➢ சிஷ்யத்துவம்

இதன் நோக்கமாவது அந்த புதிய விசுவாசியை ஒரு புதிய செல் குழுவின் வழிகாட்டி முன் செல்பவராக ஆக்குவதுதான். ஆகையால் ஒவ்வொரு சிஷ்யருக்கும் ஒருங்கிணைப்பு முறை முற்றுப் பெற்றவுடன் அவர் வழிகாட்டி முன் செல்பவர்களின் பயிற்சி பள்ளியில் அனுமதிக்கப்பட்டு மேற்கொண்ட பயிற்சிக்கும் தகுதிபடுத்தலுக்கும் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். இந்த வழிகாட்டி முன் செல்பவரின் பயிற்சி பள்ளியில் அவருக்கு ஒவ்வொரு இரவிலும் ஒரு வார காலமாகப் பயிற்சி அளிப்பது 9 மாதங்களுக்கு கொடுக்கப்படுகிறது. அந்த வழிகாட்டி முன் செல்பவரின் பயிற்சி பள்ளியில் பயிற்சி பெறுங்காலத்தில் பாதி வழியிலே அந்த மாணவர்கள் தங்களுடைய சொந்த செல் குழுக்களை ஆரம்பிக்கிறார்கள்.

அந்த வழிகாட்டி முன் செல்பவர்களின் பயிற்சி பள்ளியிலுள்ள ஒவ்வொரு நபரும் ஒரு புதிய திருச்சபை செல் குழுவை நடத்த முன் வருகிறார்கள். அந்த புதிய செல் குழுவின் வழிகாட்டி முன் செல்பவர் ஆதரவையும், உதவியையும், போதனையையும் தனது முன்னாள் ஆதி செல் குழுவிலிருந்து தொடர்ந்து பெற்று வருகிறார். அந்த ஆதி செல் குழுவின் ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களுடைய செல் குழுக்களை தொடங்கிய பொழுதே அந்த ஆரம்ப ஆதி செல்குழு G-12 செல் குழுவாக ஆகி விடுகிறது. இந்த G-12 செல் குழு வழிகாட்டி முன் செல்லும் தலைமைத்துவக் குழுவாகிறது. பெருக்கல் வழி பெருக்கம் ஏற்படுகிறது. இந்த 12 என்ற எண் வளர்ச்சி அடைந்து 144 வழிகாட்டி செல்பவர்களாக தங்களுடைய சொந்த செல் குழுவுடன் வளர்ச்சி அடைவார்கள்.

## ➢ அனுப்பு

அந்த ஆதி முன் செல்பவர்களின் 12 செல் குழுவின் ஒவ்வொரு நபரும் தங்களுடைய 12 செல் குழுவை வளர்த்தவுடன் அடுத்தபடியாக இவர்கள் குழுக்களாக பிரித்து அமைத்துக் கொண்டு வார முடிவு எதிர் சந்திப்புகளை வழி நடத்தி முன் சென்று அவர்களுக்கென்று தங்கள் வழி நடத்தி முன் செல்பவர்களின் பயிற்சி பள்ளியை அமைத்துக் கொள்ளவேண்டும். அந்த செல் பெருக்கம் பெருக்கல் வழி ஏற்பட்ட பின்னர் வழிகாட்டி முன் செல்பவர்களின் பயிற்சி பள்ளியில் கற்றுக் கொடுக்க அதிகமான மக்கள் தேவைப்படுவார்கள். ஆதலால் அந்த ஆசிரியர் பள்ளியில் (அல்லது) T-track என்ற பாடசாலை, மக்களுக்கு எப்படி கருத்துக்களைப் போதிப்பது என்பதைக் கற்பிப்பதோடு அந்த போதனையை எப்படி மக்களது ஜீவியத்தில் கையாள வேண்டும் என்பதையும் காட்டுகிறது.

ஜெபித்து, ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கற்பதற்கும் அனுபவத்தைப் பெறுவதற்கும், பெற்று அந்த யுக்தியைப் பயன் படுத்தியும் அந்த ஜெயத்தின் ஏணியில் ஏறிப்போய் அதைப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கும் ஏற்றுக்கொள்.

## <u>வெற்றியின் ஏணி சாராம்சம்:</u>

### 1. ஜெயித்து விடு

புதிய விசுவாசிகளை சுய சுவிசேஷ பிரச்சார போதனையால் தன்பால், செல் குழுக்கள் மூலமும், சிறப்பு விழா கூட்டங்கள் மூலமும் ஜெயித்துக் கொள்ளவேண்டும்.

## 2. ஒருங்கிணைத்து விடு

புதிய விசுவாசிகளை முன் சந்திப்பு வேதாகமப் படிப்பு வார முடிவுகளில் வீட்டுச் சந்திப்பு நேரங்களாலும், பின் சந்திப்பு வேதாகமப் படிப்பு மூலமும் ஒருங்கிணைத்து விடு.

## 3. சிஷ்யர்கள்

சிஷ்யர்கள் பின்னர் வழிகாட்டி முன் செல்பவர்களின் பள்ளியில் பயிற்சி பெற்றும் செல் திருச்சபையின் அங்கமாகவும் பயன்படுத்தப் படுகிறார்கள். இந்த சிஷ்யர் பின்னால் ஒரு புதிய செல் குழுவைத் தொடங்கி G-12 செல் குழுத்திட்டத்தின் ஒரு பாகம் ஆகிறார். பிறகு அந்த வழிகாட்டி முன் செல்லும் 12 பேர் தங்களுக்கு 12 செல் குழுவை ஆரம்பித்து 144 பேராக மொத்தம் ஆகிறார்கள். இந்த செல் அமைப்புத் திட்டம் அந்த சபையிலிருந்து 12 யுக்திகள் குழுக்களாக அல்லது வலைகளாக வகுக்கப்படுகிறார்கள்.

## 4. வெளியில் அனுப்பு

இந்த வழிகாட்டி முன் செலபவர்கள் கூட்டங்கள் அமைப்பாகப் பிரிந்து அவர்களுடைய போர்க்கால சந்திப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தங்களது சொந்தமான வழி காட்டி முன் செல்பவர்கள் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்கிறார்கள். இந்த வழியில் அவர்கள் விடுவிக்கப்பட்டு தொடர்ந்து அதிகமான செல் குழுக்களை திருச்சபையில் வளர்க்கவும் அல்லது உலகத்திற்குள் அனுப்பப்பட்டு செல் குழுக்களையும் சபைகளையும் நட்டு வளர்க்கச் செய்கிறார்கள். இதன் இலக்காவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாத உலகத்தின் பகுதிகளே விசேஷமாக இலக்காகிறது.

# அதிகாரம் 6 - இயேசுவுடன் இடைபடுதல்

தரிசனமாவது எளிதானது நேரிடையானது. என்னவென்றாலும் அது பல பாகங்களான அம்சங்களைப் பெற்றது. இவைகளில் முக்கியமானதொன்று வார முடிவு சந்திப்பு ஆகும்.

இந்த ஒருங்கிணைப்பு நடைமுறையானது G-12 செல் குழு திட்டத்தின் வெற்றிக்கு கேந்திர ஸ்தானமாகும். எல்லா விசுவாசிகளும் இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு இந்த நடைமுறையின் அகமாகிய இருதயப் பகுதியில் சந்திப்பு அனுபவம் அமைந்து இருக்கிறது. இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தில் மூன்று பாகங்கள் உண்டு. அவை: முன் சந்திப்பு முனை, நேரடி சந்திப்பு முனை, பின் சந்திப்பு முனை ஆகும். இந்த சந்திப்பு வார இறுதி முடிவுகள் எவை? அவைகளின் முக்கியத்துவம் என்ன? ஒவ்வொருவரும் அவசியம் போகவேண்டுமா? அந்தச் சந்திப்புகளில் என்னதான் நேரிடுகிறது?

இந்த முன் சந்திப்பு முனைக் கூட்டங்களில், அந்த புதிய விசுவாசி அவருக்கு/அவளுக்கு கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய ஜீவியத்திற்கு சம்பந்தப்பட்ட அடிப்படை கோட்பாடுகளைக் கற்று அறிய வேண்டும். அந்த முன் சந்திப்புக் கூடுகைகளில் இருந்து யாராவது ஒருவர் தமது சார்பில் அந்த புதிய விசுவாசியை பல வேதாகமப் படிப்புகளின் வழியில் நடத்திச் செல்கிறார். இவைகளில் இரட்சிப்பின் நிச்சயம், ஜெபத்தின் வல்லமை, வசனத்தின் வல்லமை, விடுதலையின் குறிக்கோள்கள் ஆகிய தலைப்புகள் அடங்கும். இந்த முன் சந்திப்பு முனை ஊழியம் அந்த விசுவாசியை அந்த விதமான சந்திப்புகளுக்கு ஆயத்தம் செய்வதற்காகவே.

## ஆவிக்குரிய ஆயத்தம்

பின்னர் அந்த நேரிடையான சந்திப்பு இடம் பெறுகிறது. இது வழக்கமாக ஒரு வார இறுதியில் ஒரு உள்ளுறை மகா நாட்டிலோ அல்லது தியானச் சந்திப்பிலோ இடைபடுகிறது. ஒவ்வொரு சந்திப்புக்கு முன்னரும் அந்த புதிய விசுவாசியின் செல் குழுவானது மிகுந்த ஜெபத்தினால் தன்னை ஆயத்தம் செய்து கொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் உபவாசம் ஆவிக்குரிய போர் முறை ஆகியவைகளை அதில் பங்கெடுத்துக் கொள்ளுகிறவர்களுக்காக பயன்படுத்தி அவர்களை ஊக்குவிக்கவேண்டும். இந்த சந்திப்பு போர் முனை ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னதாகவே இந்த போர் வெற்றி அடைந்து ஆவிக்குரிய இராஜாங்கத்திலும் ஆவிக்குரிய போர் முறையினால் வெற்றி பெற்றாக வேண்டும். இந்த நடைமுறையினால் செல் குழு அங்கத்தினர் நிச்சயமாகவே ஓர் சிறந்த ஆச்சரியமுள்ள சந்திப்பை தேவனுடன் பெற்றவர் ஆவார்.

இந்த சந்திப்பு போர் முனை ஓரிரு நாட்கள் தியானக் கூட்டங்களை உலகத்தின் சாதாரணமான கவனம் சிதறும் ஏதுக்களுக்கு அப்பால் ஓர் அமைதியான இடத்தில் அமைந்ததை விட மிகச் சிறப்பானது. அது அந்த விசுவாசியின் ஜீவியத்தில் அவனை அல்லது அவளை பல முறை திரும்பிப் பார்க்கும் ஒரே சம்பவமாக இயேசுவுடன் அவர் இடைப்பட்ட சந்திப்பை நினைப்பூட்டுவதாக அமையும்.

## தேவனுடன் சந்திப்பு

பழைய/புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் வேதாகமம் மனிதர்களும் ஸ்தீரிகளும் மகத்தான ஜீவியத்தையே மாற்றும் இடைபடுதலான சந்திப்பு முனைகளை ஜீவனுள்ள தேவனுடன் சந்திப்புடன் அனுபவிக்க நேர்ந்ததாகக் காட்டுகிறது. ஆபிரகாம் தன்னுடைய சந்திப்பு முனையை தான் ஒரு பெரிய ஜாதியாக ஆவதற்கு முன் தேவனுடன் இடைப்பட்டான். (ஆதி 12) மோசேயும் இந்த விதமானதொன்றை இஸ்ரவேல் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நடத்திச் செல்வதற்கு முன் சந்தித்தான். (யோசுவா 5:13-15) ஏசாயா உன்னதமானவருக்குத் தீர்க்கதரிசியாக ஆவதற்கு முன் சந்தித்தான். (ஏசாயா 6:1-8) இயேசுவும் தனது பொதுவான பகிரங்கமான ஊழியத்தை ஆரம்பிக்கு முன்னர் சந்தித்தார். (மத் 3:13-16; லூக்கா 4:1a) பவுல் அப்போஸ்தலனும் அவனுடைய மனந்திரும்புதலுக்குப் பிறகும், புதிய ஏற்பாட்டு தத்துவ போதக நிபுணராக ஆவதற்கு முன்னரும் இடைப்பட்டு சந்தித்தான் (அப் 9:3-7) இந்த மாதிரியான மற்ற தற்கால திருச்சபைத் தலைவர்களின் சந்திப்பையும் அவர்களுடைய தனிப்பட்ட சுயமான எதிர் முனைச் சந்திப்புகள் தேவனுடன் நேர்ந்ததைப் பற்றியும் தேவன் அவர்களுக்கு ஆயத்தம் பண்ணி வைத்த முழு நேர ஊழியத்திற்குள் அவர்கள் செல்வதற்கு முன்னர் சந்தித்ததைப் பற்றியும் ஒருவர் கேள்விப்படலாம்.

## முற்றிலுமான நிலைமாற்றம்

இந்த எதிர் முனை சந்திப்புக்கு குறிக்கோளாவது முற்றிலுமான நிலைமாற்றம் ஆகி, விசுவாசியினிடம் கிறிஸ்துவின் நன்னடத்தைச் சாயலைப் பிறப்பிக்கச் செய்வதுதான். நாம் நமக்குள் ஒரு நிலை மாற்றத்தை உண்டாக்க வேண்டுமானால் நமக்கு தேவனுடன் ஓர் எதிர்முனைச் சந்திப்புத் தேவைப்படுகிறது. அது உன்னோடு நடத்தப்படும் ஓர் எதிர் முனைச் சந்திப்புங்கூட. இது எப்பொழுது நேரிடுகிறது என்றால் நீ உன்னையே உன் ஜீவியத்தில் தேவன் நீ செய்யும்படி விரும்புகிற மாற்றங்களை உனக்குள் துருவி ஆராயும்பொழுது ஏற்படுகிறது. முடிவாக இந்த எதிர்சந்திப்பு முனை செல் குழுவின் ஆழத்திற்கு எடுத்துச் சென்று உன்னிலே தானே. உலகில் நிலவுகிற அந்த உண்மையான நிலைமையை உன்னில் பிரதி பலிக்கச்செய்தும் அதற்கு மீட்பரான இரட்சகரின் அத்தியாவசியமான தேவையை உணர்த்துகிறது.

இந்த எதிர்முனை சந்திப்பு பின்வரும் தலைப்பு விஷயங்களையும் பிரச்சனைகளையும் மிகவும் ஆழமாக பகுத்தறிகிறது.

- ★ மனந்திரும்புதல்
- ★ பாவமன்னிப்பு
- ★ சாபங்களை உடைத்தல்
- ★ விடுதலை
- ★ உள்ளான சொஸ்தமாகுதல்
- ★ ஜலத்தினால் ஞானஸ்நானம்
- ★ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்
- ★ G-12 செல் குழு திட்டத் தரிசனம்

இந்த எதிர் முனைச்சந்திப்பின் மற்றொரு இலக்காவது நீ தேவனை முகத்துக்கு முகம் நேராய்ப் பார்ப்பது. அதாவது உன்னுடைய ஊழியத்தில் உனக்கு தடைசெய்யும் ஒவ்வொரு காரியத்திலிருந்தும் நீ விடுதலை அடைய வழி செய்கிறது. இந்த G-12 செல் குழு தரிசனம் ஒவ்வொருவரையும் சாத்தியமான வழிகாட்டி முன் செல்பவராகவும் அந்த எதிர் முனைச் சந்திப்பை வழிகாட்டி முன் செல்பவரது பயிற்சி பள்ளியில் நடைபெறவிருக்கும் பயிற்சிக்கு தயாராக்குவதற்குத்தான். இந்த எதிர் முனைச் சந்திப்புக்குப்பின்னர் புதிய விசுவாசிகள் ஓர் வரிசையான ஒருவருக்கொருவர் நடத்தும் வேதாகமப் படிப்பில் கற்றுத்தேறினால் அவர்களை கர்த்தருடைய வசனத்தில் ஆழமாகப் போதிக்கப்பட்டு

மேலும் அவர்கள் தேவனுக்கு ஒப்புவித்தலை ஒருங்கிணைக்கிறது. இந்த போதனை காலத்தில் புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய போர் முறைகளையும், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் உபயோகித்து எப்படி சோதனைகளை மேற்கொள்வது என்பதையும் தீங்கு விளைவிக்கும். ஒருவனான சாத்தானின் தாக்குதல்களை சமாளிக்கவும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

## எல்லோருக்குமான எதிர் முனைச் சந்திப்பு

புதிய விசுவாசிகளுக்கு மட்டும் எதிர் முனைச் சந்திப்பு என்பது இதன் அர்த்தமா? இல்லை. இவைகள் ஒவ்வொருவருக்கும் அவசியமே. பல சமயங்களில் இன்றைய நாட்களில் விசுவாசிகள் உண்மையாகவே G-12 செல் குழு திட்டத்தின்படி தங்கள் விசுவாசத்தில் ஒருங்கிணைக்கப்படவில்லை. இதன் கருத்துப்படி அவர்களது எதிர் முனைச் சந்திப்புகளில் சந்திக்கப்பட்ட பல பிரச்சனைகள் இன்னும் அவர்கள் ஜீவியத்தில் தீர்க்கப்படாமலே விடப்பட்டிருக்கிறது. துக்கமான விஷயமாக அவர்கள் வேதனை, அடிமைத்தனம், பிசாசின் சாபங்களால் சுமத்தப்பட்டு தங்கள் ஜீவியத்தின சில பகுதிகளில் இன்னும் விடுதலை பெறாமலே இருக்கின்றனர்.

இந்த G-12 செல் குழுத் தரிசனத்தில் நாம் எல்லோரும் மற்றவர்களை இயேசுவண்டை நடத்திச் செல்லும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர்களை சீஷர்களாக்கி கிறிஸ்துவின சாயலில் மாற்றவேண்டும். II தீமோத் 2:2 பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு மிகவும் தெளிவாக ''நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிகைத் தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தல் ஒப்புவி'' என்று சொன்னார். அவர்கள் தங்கள் முறை வரும்பொழுது திறமையுள்ளவர்களாகவும் தகுதி பெற்றவர்களாகவும் மற்றவர்களுக்கப் போதிப்பார்கள். தாங்கள் அனுபவத்தில் பெற்றதையும், பெற்றுக் கொள்ளாததையும் பற்றி யாரும் போதிக்கவோ, பேசவோ முடியாது.

இந்த திருச்சபை G-12 செல் தரிசனமாக மாறுதல் அடைவதில் ஒவ்வொரு அங்கத்தினரும் இந்த முழுமையான நடைமுறைக்குள் போய் ஆக வேண்டும். ஏனென்றால் அவர்கள் அந்த தரிசனத்தை பயனுள்ள வகையில் உண்மையை எந்த வழியிலும் திரித்துக் கூறுதலின்றி அதில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இது தரிசனத்தின் ஆவிக்குரிய மரபணுக்களை எடுத்துக் கொண்டு சீஷத்துவ நடைமுறையில் அதை பயன்படுத்த தயாராக இருக்கவேண்டும். இந்த எதிர்முனை சந்திப்புகள் உன் சொந்த நன்மைக்காக அல்ல. இந்த ஜீவியத்தை மாற்றும், புத்துணர்ச்சி அளிக்கும் அனுபவம் நீ வெளி உலகில் சென்று மற்றவர்களின் ஜீவியத்தில் இதன் பாதிப்பை உண்டாக்குவதற்காக செயல்படுகிறது.

## அதிகாரம் 7 - தனிச் சிறப்பை பெற்ற பள்ளிகள்

தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும்? (யோவான் 6:28) ''உண்டாக்க பூரணப்பட, சீஷர்களைத் திரட்டிச் சேர்க்க'' கொடுக்கப்டும் அழைப்பை ஏற்றுக் கொண்டு முற்றிலுமாக வளர்ச்சிக்குத் தேவையானதைப் பெற்று இந்தத் தனி சிறப்பு மட்டத்தை அடைவாயாக. தேவன் உன்னைப் பாராட்டுகிறார் என்பதை கருத்தில் கொண்டதுண்டா? நாம் முற்றிலுமாக நிச்சயமாயிருக்கக் கூடிய ஒரே காரியம் நாம் கர்த்தருடைய கண்களில் நித்தியமான தனிச் சிறப்பை பெற்றுள்ளோம். அவர் நம்மை நிரப்பவும் திறமை உள்ளவர்களாக நம்மை முழுவதுமாக உபயோகிக்க விரும்புகிறார். நம்முடைய பின் சூழ்நிலைமை கல்வி, சமூக அந்தஸ்து என்னவாக இருந்தாலும் பரவாயில்லை. நாம் அவருடைய பார்வையில் மதிப்பு பெற்றவர்கள் ''நீ என் பார்வைக்கு அருமையான படியினால் கனம் பெற்றாய்.'' (ஏசாயா 43:3).

இயேசு நம்மை இரட்சிக்க வந்தபொழுது அவர் நம்முடைய கடந்த காலத்திலிருந்து இரட்சிக்கவில்லை. அவர் நம்மை ஒரு நோக்கமுள்ள, பலன் தரும் ஜீவியத்தில் எளிதாகக் கடந்து செல்வதற்காக இரட்சிக்கப்படவில்லை. தேவன் நமக்குள் தாம் எதை வைத்திருக்கிறார் என்று நன்கு அறிவார். அவர் நம்மைத் தனிச் சிறப்பு உள்ளவர்களாகக் காண்கிறார். ''நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள். நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்.'' மத்5:13-14) இந்த உலகத்தில் நமக்கு நேரம் இருக்காது. ஆனால் தேவன் வைத்திருக்கிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் வேலை இன்மை என்று ஒன்றுங் கிடையாது. நாம் தெய்வீக பணி உத்தரவுகளுக்காக உண்டாக்கப்பட்டு தேவனால்

இரட்சிக்கப்பட்டு உள்ளோம். ‘‘நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும் உங்களை ஏற்படுத்தினேன்.’’ (யோவான் 15:16).

மைக்கெல் ஏஞ்சலோ தன்னுடைய சிறந்த சிற்பமான ‘‘தாவீது’’ என்பதை செதுக்கி உருவாக்கு முன் அந்தக் கல்லில் இருந்த வல்லமையை கண்டறிந்தான். தேவனும் நம் ஒவ்வொருவரோடும் இதையே செய்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னபடி ‘‘நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணி இருக்கிறார்.’’ (எபேசியர் 2:10).

நாம் எப்படி இருக்கிறோமோ, நம்மிடம் இருக்கும் எல்லாவற்றையும் கிறிஸ்து தமது திருச்சபையை உலகத்தில் கட்டி எழுப்புவதற்குப் பயன்படுத்த விரும்புகிறார். நிச்சயமாக நமது ஜீவியத்தை செலவிடவும், நமது மிகச் சிறந்த முயற்சிகளை தகுதி பெற்று நிறைவேற்ற இதை விடச் சிறந்த மகத்தான இலக்கு இருக்க முடியாது. சீஷயத்துவம் என்பது ஒரு முதலீடாக நித்தியமான காலத்திற்கு நீடித்து நின்று நம்பமுடியாத ஈவுகளை தருகிறது. (லூக்கா 22:28-30; மாற்கு 10:30)

## இயேசுவோடு கூட்டாளிகளாக

கிறிஸ்து தமது திருச்சபையைக் கட்டி எழுப்பியும் தேவனுடைய ராஜ்ஜியம் உலகத்தை மேற்கொள்ளுவதைப் பார்க்கும்பொழுது நாம் எப்படி அவருடன் கூட்டாளிகளாக செயல்படமுடியும். இயேசு சொன்னதாவது ‘‘நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதியாரையும் சீஷராக்கி’’ என்று சொன்னார். ஒவ்வொரு விசுவாசியும் தாங்கள் இயேசுவிடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொண்ட ஒன்றை மற்றவர்களிடத்திலும் திரும்பவும் உண்டாக்கும்படியாகக் கொடுக்கப்பட்ட போது அழைப்பை தாங்களும் பகிர்ந்து கொள்கிறார்கள். ‘‘இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்;’’ என்று அவர் சொன்னார். (மத் 10:8) சீஷராக்கப்பட்டவர்கள் மற்றவர்களையும் சீஷர்களாக்கவேண்டும் யோவான் 15ம் அதிகாரத்தில் இயேசுவால் சொல்லப்பட்ட கனி கொடுக்கும் ஜீவியத்திற்கு சாட்சியாகும். இதே மாதிரியான ரீதியில் யோவான் 2:12-14 வசனங்களில் விசுவாசிகளை, ‘‘தகப்பனார்களாக அல்லது ஆவிக்குரிய பெற்றோராக’’, என்று குறிப்பிடும் பொழுது மறைமுகமாச் சுட்டிக் காட்டுகிறார். பெற்றோர்களுடைய இயற்கை தன்மையானது அவனைப் போல/அவளைப் போல சந்ததிகளைப் பிறப்பிப்பது தான். அந்த எதிராளியின் வேலையாவது பெற்றோருக்கு விரோதமாக பிள்ளைகளை எழும்பச் செய்வது தான். (மத் 10:21) ஆனால் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் கிரியையாவது இந்த கடைசி காலங்களில் ‘‘பிதாக்களுடைய இருதயத்தை பிள்ளைகளிடத்திற்கும் திரும்பச்செய்வது தான்’’ (மல்கியா 4:6) ஆவிக்குரிய பெற்றோர்களின் கிரியையாவது மிகவும் முக்கியமாக சீஷர்களை உண்டாக்குவது தான்.என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக. என் ஆட்டுக்குட்டிகளை போஷிப்பாயாக (யோவான் 21:15-16).

புதிய சீஷர்களை போஷிப்பதும் மேய்ப்பதும் என்பது அவர்களை தேவனுடைய குடும்பத்திற்குள் ஒருங்கிணைப்பதுவே. இது செல் ஊழியத்தின் மூலமாக அவை செயலூக்கத்துடன் சாதிக்க முடிகிறது. இந்த செல் குழுத்திட்டத்தினால் புதிய சீஷர்கள் நெருக்கமான ஐக்கியத்தால் கட்டி எழுப்பப்பட்டு சீஷர்களை உண்டாக்குபவராக பயிற்சி பெறுகிறார்கள். இந்த G-12 செல் குழுத்திட்டத்தின் இலக்காவது நாம் பூரணமான சீஷர்களை உண்டாக்கி அவர்களைத் திரட்டி இயக்கியும் நமக்குச் சொந்தமான ஒரு செல் குழுவை உண்டாக்கி கிறிஸ்துவுக்காக நாம் ஜெயித்த மக்களுடன் செய்து கொள்ளவேண்டும்.

‘‘கர்த்தருடைய வல்லமையான நாளிலே ஜனங்கள் தயாராக இருப்பார்கள்’’ நாமும் கூட ஏசாயாவுடன் கூட ‘‘இதோ அடியேன் இருக்கிறேன்’’ என்று சொல்லுவோம். ஆனாலும் நாம் தேவையான அளவுக்கு வளர்ச்சி பெற்றிருப்பதாகவோ திறமையுள்ளவர்களாகவோ நாம் உணர முடியாது. வேதாகமத்தில் தேவனால் அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்களை ஆயத்தமாகவோ அல்லது ஆரம்பகாலத்தில் அதற்கு போதுமான வளர்ச்சி பெற்றதாகவோ அல்லது திறமையுடையவர்களாக நாம் உணர்வதில்லை. ஆனால் அவ்வாறு தாம் அழைத்தவர்களுக்கு இடர்பாடான நிலைகளை சமாளிக்கும் திறனையும் உதவும் வரை முறைகளையும் கொடுக்கிறார். இதன் காரணமாகவே தேவன் அப்போஸ்தல போதகர்களையும், பயிற்சியாளர்களையும் கிறிஸ்துவுடைய சரீரமாகிய திருச்சபைக்கு ஏற்படுத்தினார்.

“பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் ஏற்படுத்தினார்.” (எபே 4:12).

## நன்றாக ஊழியம் செய்ய அதிகாரம் தந்து

வழிகாட்டி முன் செல்பவர்களின் பாடசாலையைச் சேர்ந்தவர்கள் செல் குழு அங்கத்தினர்களை கிறிஸ்துவின் அழைப்பை தங்கள் ஜீவியத்தில் நிறைவேற்றும்படி தயாராக்குகிறார்கள். அந்த பள்ளியினர் முற்றிலும் சிறப்பாக சீஷர்களை உண்டாக்குவதிலும், செல் சபையை வழி நடத்தி முன் செல்லவும் ஆயத்தம் செய்கிறார்கள். அதற்கான பாடங்களின் தலைப்புகளில் அடிப்படையான கிறிஸ்தவ கோட்பாடுகளுடன் தன்னிலே பூரண வளர்ச்சி அடைவதும் கிறிஸ்தவ ஜீவியத்தின் திறமைகளும் செல் குழுவின் வழி நடத்தி முன் செல்லும் திறமையும் அடங்கும். எதிர் முனைச் சந்திப்புகளுடன் இந்த பாடசாலையின் வழி நடத்தி முன் செல்பவர்கள் நாம் விளங்கிக் கொள்ளக் கூடியதும், நாம் எதிர்பார்க்கும் பலன்களைத் தரும் பயிற்சியை இந்த சீஷர்களை உண்டாக்கும்பொழுதும் கூடவே தருகின்றனர். நம்முடைய இயற்கையான திறமை நம்மை இந்த அளவு வரைக்கும் நடத்திச் செல்லும். ஆனால் பயிற்சியுடன் நாம் மிகவும் உன்னதமான ஓர் உயர்மட்ட அளவுக்கு எழும்பிப் பிரகாசிக்கலாம். “தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு, அதற்கேற்றபடி செய்வார்கள்” (தானி 11:32)

## அதிகாரம் 8 - ஒரே வகையான இனத்தைச் சேர்ந்த குழுக்களின் வல்லமை

இந்த G-12 செல் குழுவின் தரிசனம் ஒரே வகையான செல் குழுக்களின் மூலமாக கிரியை செய்கிறது. இதன் அர்த்தமாவது, இந்த செல் குழு அமைப்புகள் பல விதமான வேறுபட்ட வலைப் பின்னல் குழுக்களைக் கொண்டது. அதாவது ஆண்கள் பின்னல் குழு, பெண்கள் பின்னல் குழு, இளைஞர் பின்னல் அணி, சிறுவர் பின்னல் அணி முதலியன. இந்த ஓரே வகையான குழுக்கள் **எப்படி, ஏன், என்று நன்றாக ஊழியம் செய்கிறது என்றால் அதைப்புரிந்து கொள்ள பல எண்ணிக்கையுள்ள திறவுகோல்கள் உள்ளன.**

**திறவுகோல் # 1.** இந்த தரிசனம் பல சமயங்களில் இந்த செல் குழுக்களை ஒரே வகையான கோட்பாடுடன் நடத்திச் செல்லும் முறையில் தரப்படுகிறது. நாம் இந்த வகையான (ஆண்கள், பெண்கள், இளைஞர், சிறுவர், தம்பதிகள்) ஆன அணி ஊழியங்கள் செல் குழு கோட்பாட்டின்படி நடத்திச் செல்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். இந்த ஒரே வகையான அணிகளின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள மூன்று குறிக்கோள்களுக்குட்பட்டன:

1. திருச்சபை ஓர் குடும்பம்.
2. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தனிப்பட்ட ஆசைகள், தேவைகள், அக்கறைகள் இருக்கும்.
3. ஒவ்வொரு குழுவும் மிகவும் நன்றாக ஆயத்தப்படுத்தி மற்றவர்களை அணுகி சீஷர்களாக தங்களைப் போலவே ஆக்கும்படிக்கும்.

இதன் விளக்கமாவது, மனிதர்கள் நன்கு தயராக்கப்பட்டு ஆண்களை சீஷராக்கவும், பெண்கள் சிறப்பாக பெண்களை நெருங்கி சீஷராக்கும் படிக்கும், அது போல செயல்பாடுகளில் ஈடுபடுத்தவும் உதவுகிறது. சில சமயங்களில் வளர்ச்சி என்பது இயற்கையாகவே நெருங்கிய இன உறவு முறைகளின் வழி ஆரம்பித்தும், மேலும் பல சிறிய குழுக்கள் இம்முறையிலும் ஸ்தாபிக்கப்படுகின்றன. ஆனால் இங்கே திருச்சபையின் கூட்டு வெளிப்பாடு அவசியமாகின்றது.

இந்த அம்சமான கலாச்சாரம் மீட்கப்பட்டு பரலோகத்தில் மகிமைப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த வித்தியாசங்கள் மக்களிடையே தடையாக இருப்பதில்லை. அவைகள் வேறுபட்ட அம்சங்களாகி ஐக்கியத்தை உயர்த்தி விசாலப்படுத்துகிறது. நாம் மக்களிடையே ஒன்றாகக் கூடி ஆசீர்வாத ஐசுவரியம் பெறுவது எப்பொழுதென்றால் நாம் ஒருவரை ஒருவர் வரவேற்கும்போதுதான். இதை இந்த பல திறப்பட்ட வேறுபாடுகள் கொண்டு வருகின்றன. இவைகளுக்கு பின்பு, நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலிலுமிருந்து வந்ததும்

ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்துக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். (வெளி 7:9)

**திறவுகோல் # 2.** நாம் ஒரே சரீரமாக ஒரே குடும்பம், ஒரே திருச்சபையாக இருக்கிறோம். நம்முடைய ஐக்கியம் நாம் எப்பொழுதும் ஒரே காரியத்தை, ஒரே நேரத்தில், ஒரே வழியில், ஒரே இடத்தில் செய்யவேண்டும் என்பது அர்த்தமல்ல!

ஒரு குடும்பம் தவறாமல் ஒழுங்காக ஒரே குடும்பமாக ஒன்று கூடி வரவேண்டும். ஆனாலும் பிள்ளைகள் ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும் நேரங்களுண்டு, இளம்வாலிபத்தில் இருப்பவர்கள் வேறென்றைச் செய்வர், தாயார் இன்னும் மற்றொருவர் வேறு ஒரு காரியத்தில் முனைந்திருப்பார்கள் - அப்படியே மற்றவர்களும் நாம் நமது ஆரம்ப செல் குழுவும் நமது குடும்பம் என்று எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நாம் நமது குடும்பங்களிலே முதலாவதாக சீஷராக்கப்படவேண்டும். அதன் பிறகே நாம் நமது ஒரே இனத்தைச் சேர்ந்த செல் குழுக்களில் நகர்ந்து ஈடுபடமுடியும். இந்த G-12 செல் குழுவின் தரிசனம் குடும்பங்களைக் கட்டி எழுப்புவது தான், அவைகளை பிரிவினைப்படுத்துவது அல்ல. ஆனால் நாம் ஒரே இனத்தைச் சேர்ந்த குழுக்களின் வல்லமையைப் புரிந்து கொள்ளவேண்டும்.

## ஒரே இன வகையான குழுக்களின் பலம் (அ) வல்லமை

ஒரே இன வகையான குழுக்கள் மக்களை கற்றுக் கொள்ளவும், ஒரே விதமான தேவைகள், ஒரே விதமான சவால்கள் சந்தித்தல், ஒரே வகையான ஆர்வங்களில் பகிர்ந்து கொள்ளுதல், ஒரே இனமான அறிமுகம், மொழி பேசுதல் ஆகியவற்றில் ஏக சிந்தையுள்ள ஜனங்களின் கூட்டத்தில் வளர்வதும் ஆகும். இந்த சுவிசேஷம் (அதாவது சுவிசேஷ பிரச்சாரமும் சீஷத்துவமும்) இந்த இன உறவுகள், ஒரே வகையான ஜனக்கூட்டம் ஆகிய வரிசைகளில் துரிதமாக பயணிக்கிறது.

இந்த கொள்கையானது இளைஞர் அணி ஊழியத்தில் ஸ்திரமாக நிறுவப்பட்டுள்ளது. இளைஞர்கள் சிறப்பான விருப்பமுள்ளவர்களாக தங்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ள வழி செய்கிறது. அவர்களது இசை, நாகரிகப் பண்பாடு, மனப்பக்குவம் அனைத்தும் அவர்களது கேள்விகள், மன அழுத்தங்கள், சோதனைகள் பற்றிய விசாரிப்புகளை இளைஞர் ஊழியத்தில் நன்கு விசாரிக்கலாம்.

இதே விதி பெண்களுக்கும் பொருந்தும் அநேக பெண்கள் ஊழியங்கள் இக்காலத்தில் நிறுவப்பட்டுள்ளன. பெண்கள் ஒன்றாகக் கூடி ஒருவருக்கொருவர் ஊழியத்தில் ஈடுபடும்பொழுது அவர்களிடையே கிரியை செய்யும் வல்லமையை நாம் கண்டு கொள்ளமுடியும். இது ஆண்களது ஊழியத்திற்கும் பொருத்தமானது, மனிதர்கள் மற்றவர்களுடன் கூட்டமாக இயங்கும்பொழுதும் ஒரே விதமான தேவைகள், வாஞ்சைகள், மன அழுத்தங்களைப் பகிர்ந்து கொள்ளும் பொழுதும் மனம் திறந்து செயல்படுவார்கள்.

**திறவுகோல் # 3.** சிஷ்யத்துவம் என்பது முன் மாதிரியான பங்கும், உவமைகள் உதாரணங்கள் மூலமாகப் போதிப்பதாகும். ஏதோ இவ்வாறு கொஞ்சம் எதிர் புதிரான ஆண்பால் பெண்பால் முன் மாதிரிகளால் சாதிக்க முடியும். ஒரு மனிதன் ஒரு பெண்ணுக்கு தெய்வ பயமுள்ள மனைவிக்கு முன் மாதிரியாக முடியாது. அப்படியே ஒரு ஸ்தீரியும் ஒரு ஆணுக்கு எப்படி வேதாகமத்து மாதிரியான கணவனாக இருப்பது என்பதை செய்து காட்ட முடியாது.

இதன் குறிக்கோளாவது (சீஷன்) "சீஷனைப் போலவே" என்பது தான். நீ மற்றவர்களை சீஷர்களாக்கும்பொழுது நீ உன்னையை பிரதி செய்கிறாய். இயேசுவுடைய 12 சீஷர்களுமே ஆண்கள்தான். ஆனாலும் அவருக்கு அவரைப் பின்பற்றும் பல ஸ்தீரிகள் இருந்தார்கள். உண்மையிலே அவர்கள் பெரும்பாலும் மிகுந்த விசுவாசம், பணிவு, ஆதரவளிக்கும் பெண்களாக இருந்தார்கள். பெண்கள் அவருடைய ஊழியத்தை நடைமுறை காரியங்களில் துணையாக நின்றனர். அவர் அவர்களை உயர்த்தி அவருடைய ஊழியம், போதகம், பிரச்சாரம் இவற்றில் உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத்திருந்தார். ஆனால் அவருடைய நெருங்கிய சீஷர்கள் (12 பேரும்) மனிதர்கள் தான். அந்தக் காலத்து கலாச்சாரத்து மரபுப்படிப் பார்த்தாலும் அங்கே பிதாவழி சமுதாய அமைப்பில் ஆண்களும் பெண்களும் அநேகமான பொதுக் கூட்டங்களில் பிரிக்கப்பட்டிருந்தனர். இதை இன்றும்

விவேகத்துடன் சமுதாயத்தில் கடைபிடிக்கப்படுகிற தென்பதைக் காணலாம். பவுல் மூத்த ஸ்தீரிகளுக்கும் இளமையான பெண்களுக்கும் போதனை அளித்து சீஷராக்குவதற்கு ஒரு தெளிவான நடைமுறை வழி காட்டும் விதிமுறையைக் கொடுத்திருந்தார். தீத்து 2:3-5ல் ''முதிர் வயதுள்ள ஸ்தீரிகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமையாகதவர்களுமாயிருக்கவும், தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்தீரிகள் தங்கள் புருஷரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் வீட்டில் தரித்திருக்கிறவர்களும் நல்லவர்களும், தங்கள் புருஷருக்கு கீழ்படிகிறவர்களுமாயிருக்கும்படி அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களை போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர் வயதுள்ள ஸ்தீரிகளுக்குப் புத்தி சொல்லு.''

**திறவுகோல் # 4.** இந்த ஒரே வகையான இனக் கொள்கையானது ஆண் பெண் இருபாலாரும் அல்லது ஒரே வயது குழுக்கள் பிரித்துத் தனித்தனியாக வைக்கப்படவேண்டும் என்பதல்ல. அதன் அர்த்தமாவது அவர்கள் ஆண், பெண், இளைஞர், சிறுவர்கள் என சிஷ்யராக்கப்பட்டு தங்கள் குடும்பங்களிலும் விரிவான திருச்சபையிலும் சீஷர்களாக தங்கள் ஸ்தானங்களை வகிப்பதற்காகத் தான். அவர்கள் சிறந்த கணவராக, மனைவிகளாக, தந்தையராக, தாய்மாராக, குழந்தைகளாக உருவாகிறார்கள்.

திருச்சபை ஆலய ஆராதனைகளும் விழா நிகழ்ச்சிகளும் ஒவ்வொருவரையும் அதனுள் சேர்க்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். திருச்சபையானது ஓர் குடும்பம். அந்தக் குடும்பம் ஒன்றாகச் சேர்ந்து வரவேண்டும்.

**இதற்கு எளிதான மூன்று நடைமுறை குறிப்புகள்**

1. உலகமெங்கிலும் இருந்து வரும் கனிதரும் அறிக்கைகளின்படி இந்த ஒரே வகையான இனக்கோட்பாடு வேலை செய்யவும், செய்யவும் கூடும் என்பது தெளிவாகக் காணப்படுகிறது.
2. இந்த G-12 செல் குழுவாக மாறுதல் பெறும்பொழுது நீ இருக்குமிடத்திலிருந்து ஆரம்பிப்பது முக்கியம். திருச்சபையான அவர்களுடைய மனிதர்களுடன் எந்தவிதமான ஒரே இனச் செல் அமைப்பையும் உண்டு பண்ணி அறிமுகம் செய்தல் வேண்டும். அதே மாதிரி பெண்கள், இளைஞர், சிறுவர்களுடனும் செல்லில் அறிமுகப்படுத்தவேண்டும். பிறகு அவர்களை மற்றவர்களை காலப் போக்கில் உருவாக்கவேண்டும்.
3. கூட்டமைப்பான யுக்தி முறையில் வல்லமை உண்டு. திருச்சபையின் இந்த ஒரே வகை இன செல் குழுக்களை தங்களுக்கு பொருந்துமாறு அமைப்பதில் ஐக்கியமாக இருக்கவேண்டும். இது எதிர்ப்புகளுக்கு காரணமாகக் கூடாது. ஆனால் அது நமக்குப் பல பாரம்பரியமான கருத்துக்களை அந்தக் குழுக்களைப் பயன்படுத்தும் G-12 தரிசனத்தை முற்றிலுமாக தத்து எடுத்துக் கொள்ளுவதை தடுக்கும். அந்தக் கருத்துக்களை நீக்கிவிட வேண்டிவரும்.

# திருச்சபை வளர்ச்சிக்கான வல்லமையுள்ள பிற கோட்பாடுகள்

## அதிகாரம் 1 - புதிய ஏற்பாட்டு திருச்சபையானது ஒரு வளர்ந்து கொண்டிருக்கும் திருச்சபை

இந்த உடனடியான தீடீரென வெடித்துத் தொடரும் ஆதித் திருச்சபை வளர்ச்சியானது சில முக்கியமான சத்தியங்களை வற்புறுத்துகின்றன.

1. **தேவன் தமது திருச்சபை வளரும்படி நோக்கமாயிருக்கிறார்**

தேவனால் நடப்படும் எதுவும் வளர்வதற்கு என்று ஆதியிலே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரே வளர்ச்சிக்கு மூல காரணரும் அவருடைய திறமை அனைத்திற்கும் இயற்கையிலுள்ள அனைத்துமே சாட்சியாக வெளிப்படையாக நிற்கிறது. திருச்சபையானது ''உண்மையான திராட்சைச் செடி கர்த்தரே அதன் திராட்சைத் தோட்டக்காரர்.'' (யோவான் 15:1) அவர் தாமே தமது திருச்சபையான உலகம் எல்லாவற்றிலும் கனிகொடுக்கும் படி விதித்திருக்கிறார்.

**புதிய ஏற்பாட்டு திருச்சபையானது நடப்பட்டு விரைவாக வளர ஆரம்பித்தது.**

முதல் நாளன்று 3000 ஆத்துமாக்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர். (அப் 2:41)
ஒரு வல்லமை மிக்க எதிர் முனைச் சந்திப்புக்கு பிறகு தொடர்ந்து 5000 ஆண்கள் (எத்தனை ஸ்தீரிகளும் சிறுவர்கள் இருந்தார்கள்?) திருச்சபையில் சேர்க்கப்பட்டார்கள். (அப் 4:4)
''திரளான புருஷர்களும் ஸ்தீரிகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடம் அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டனர்.'' (அப் 5:14)
''அந்நாட்களிலே சீஷர்கள் பெருகின போது'' (அப் 6:1)
''சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று.'' (அப் 6:7)
''பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டு கவனித்தார்கள்.'' (அப் 8:6)
''அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.'' (அப் 9:42)

ஆதித் திருச்சபையின் சரித்திரமாவது முரண்பாடற்ற தனிச் சிறப்புடைய வளர்ச்சியின் அட்டவணையாகும். அது எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற விதமான ஒரு மாதிரியை திருச்சபைக்குத் தந்ததாகும்.

2. **இயேசு உண்மையாகவே திருச்சபையைக் கட்டுவாரானால் அது வளர்ச்சி அடையும்.**

''என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை.'' (மத் 16:18)

திருச்சபையின் வளர்ச்சியையும், விரிவாக்கத்தையும் தடுப்பதற்கு அநேக விதமான எதிர்ப்புக் காரணங்கள் உண்டு. ஆனால் இயேசு தாமே கட்டுவாராகில் பாதாளத்தின் சகல ஞானமும், சாத்தானுடைய தந்திரங்களும், அனைத்தும் திருச்சபையானது ஜெயம் பெறுவதைத் தடுக்க முடியாது.

இயேசு மாத்திரமே திருச்சபையைக் கட்டுகிறவராக இருக்க வேண்டும்.
அது அவருடைய அனாதியான தெய்வீகத் தீர்மானத்தின்படி மாதிரியாகக் கட்டப்படவேண்டும்.

- தீய ஆவிகள் அதன் வளர்ச்சியை எதிர்க்க முடியாது.
- மதவாத அதிகாரங்கள் அதைத் தடுக்கின்றன.
- அரசியல் கற்பனை விவாதங்கள் அதைத் தடை செய்கின்றன.
- அறிவை ஆட்கொள்ளும் கொள்கை அதன் வழியை மறித்து தடுக்க முயற்சி செய்கிறது.
- சமய நம்பிக்கையின்மையும் தத்துவ ஞானமும் அதை அழித்து விட முயற்சி செய்கிறது.
- சமூகத்தில் செல்வாக்கு மிக்க நபர்கள் அதன் முன்னேற்றத்தை தடை செய்கிறார்கள்.
- பொய்யான சமயபக்தர்கள் அதன் முன்னேறிச் செல்லும் பாதையை தடுத்து நிறுத்த முயற்சிக்கின்றனர்.

**பாதாளத்தின் அரிய வாசல்களான (ஞானம், பலம், வல்லமை) முதலானவை திருச்சபையின் முன்னேற்றத்தை தடை செய்ய முடியாது.**

3. **புதிய ஏற்பாட்டுத் திருச்சபையான எக்காலத்திற்கும் (சபை நாட்களுக்கும்) சிறந்த எடுத்துக்காட்டாகும்.**
ஆதித் திருச்சபை வரலாறு அப்போஸ்தலர் நடபடிகள், நிருபங்களில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு சாதாரணமான திருச்சபை வரலாற்றின் வளர்ச்சியில் ஒரு சிறந்த அம்சத்தைப் பற்றிய அட்டவணைக் குறிப்பாக அல்ல. அது எக்காலத்துக்கும் பயன்படும் திருச்சபைக்கான முன் மாதிரி அமைப்பும் வரைபடமும் ஆகும்.

4. **முதல் நூற்றாண்டின் குறிக்கோள்கள் 21ம் நூற்றாண்டு திருச்சபைகளுக்கானவை**
வெளியரங்கமாக ஆதித் திருச்சபையின் இயக்க பணியும், ஒழுங்கு முறையும் அந்தக் காலத்து நடைமுறைக்கும் காலத்துக்கும் இடத்துக்கும் சிறந்த பொருத்தமுடையதாக இருந்தன. அந்த முதலாவதான ஆண்டுகளின் காலக் குறிப்புகளில் மிகவும் திட்டமாக அநேகக் கலாச்சார, ஏக காலத்து அம்சங்கள் காட்டப்பட்டிருந்தன. ஆனாலும் அதில் காலங்களுக்கு அப்பாற்பட்ட கோட்பாடுகள் பின்னொரு காலத்துக்குப் பொருத்தமாக மாற்றப்பட்டு எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பயனுள்ள முறையில் பயன்படுமாறு செய்யப்படக்கூடும். நாம் இந்த வகையான அம்சங்களை பின்வரும் படிப்புக் குறிப்புகளில் ஆராய்வோம். தேவனுடைய கோட்பாடுகள் மாறுபடக் கூடியவை அல்ல. ஆனால் அதன் வழி முறைகள் அப்படிப் பட்டதல்ல. நாம் பாறையின் மேல் நங்கூரத்தைப் போட்டு, காலங்களில் கடந்து செல்வோம்.

5. **பரிசுத்த ஆவியானவரே திருச்சபைக்கு ஜீவனானவர்**
ஒரு காரியம் அனைவருக்கும் பகிரங்கமானது. அந்தக் காரியமாவது, பரிசுத்த ஆவியானவர் தாமே ஜீவியத்தின் செயலூக்க காரணமாக ஆதித் திருச்சபையில் காணப்பட்டார். அவரே இயற்புடைய இயக்க ஊக்கியாக ஆதித் திருச்சபையை தூண்டி எழுப்பினர். அவரே தேவனுடைய வார்த்தையின் வித்தை உலகின் தூர அகலங்களில் பரப்பச் செய்த அமர்ந்த தென்றல் காற்று ஆவார்.

அவரே வலிமை வாய்ந்த அதிகாரம் தந்து ஊக்குவிப்பவராக முதல் ஆதி சீஷர்களுக்குள் விளங்கினார்.

அவரே திரளான மக்களின் ஜீவியத்தில் மாற்றம் செய்யும் ஜீவ சக்தியாக விளங்கினார். இன்றையத் திருச்சபையின் அங்கங்களாக தற்காலத்தில் மிகவும் திவீரமானதும் தீடீரென வெடிக்கும் வளர்ச்சியுடையனவாக விளங்குகின்றவை, பரிசுத்த ஆவியானவரைக் கனப்படுத்தி அவருக்கு இடம் தந்து அவரது சர்வ அதிகாரமுள்ள சித்தத்தை நிறைவேற்றுவதற்கு உரிமையளிக்கும் திருச்சபைகளேயாகும். துர் அதிர்ஷ்ட வசமாக அநேகக் கிறிஸ்தவர்கள் இந்த வகையான நீரோட்டத்தை பல விதமான பெயர்களால் உதாரணமாக பெந்தெகொஸ்தே என்றும் (அல்லது) இறைவனின் அருட்கொடை என்று அழைக்கின்றார்கள். இந்த விதமான போக்கு பொதுவான அகில உலகத் திருச்சபையை எதிர் எதிர் கொள்கைகள் கொண்ட பிரிவுகளாக அருட்கொடை உள்ளனவென்றும் அருட்கொடை உள்ளன அல்லாதவை என கூட்டமாகப் பிரிக்கப்பட்டு தனிப்பட்ட பிரிவுகளாக ஏற்பட்டு அருட்கொடை உள்ளன அல்லாதவைகளான குழுக்களை பரிசுத்த ஆவியானவருக்கு இடங்கொடுத்து அவரது அதிகாரத்தை வெளிக்குக் காட்ட சந்தர்ப்பம் அளிப்பதில்லை. ஆகவே நாம் மனமாற எப்படிப்பட்ட கோட்பாட்டு இணக்கமாக இருந்தாலும் அதை அங்கீகரித்து **பரிசுத்த ஆவியானவரே திருச்சபையின் ஆற்றல் வாய்ந்த ஜீவன் ஆனவர்** என்பதை அங்கீகாரம் செய்து அவரது வெளிப்பாடு இல்லாவிட்டால் திருச்சபையானது ஒரு கல்லறைத் தோட்டத்தைப் போல் இருக்கும். ஆகவே நாம் எல்லோரும் தேவனான பரிசுத்த ஆவியானவருக்கு அவருக்குரிய நியாயமான இடத்தை நிரப்ப திருச்சபையில் அனுமதிக்க வேண்டும்.

6. **இயேசுக் கிறிஸ்துவே திருச்சபைக்கு ஆண்டவர்**
''கிறிஸ்தவ ஆலயத்தில்'' பிரகடனஞ் செய்யப்பட்டு வல்லமையான அழுத்தமான வற்புறுத்தலுடன் கொடுக்கப்பட்ட முதல் செய்தியாவது ''இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்'' என்பதாகும். இந்த வல்லமையான பிரகடனம் ஆனது

திருச்சபையின் ஆரம்ப காலத்து ஏவுதல் தளமாகவும் மேலும் உண்மையான திருச்சபையின் மிக முக்கியமான கம்பீரமான ஆதிக்க வற்புறுத்துதலுமாகும். திருச்சபை வளர்ச்சியில் உண்மையான வெற்றியை பெற்று அனுபவிக்க வேண்டுமானால் நாம் இந்த செய்தியின் உள்ளார்ந்த உண்மையை அங்கீகரித்தும் பிரகடனமும் செய்யவேண்டும். **நாம் இயேசுவை திருச்சபையின் ஆண்டவராகும் உரிமையை அனுமதித்து எல்லாவற்றையும் அவரது ஆட்சியில் பூரணமாகுதல் வேண்டும்.**

அவர் தம்முடைய சொந்தமான திருச்சபையைக் கட்டுகிறார்:

- அந்தத் திருச்சபை அவரை இராஜ விசுவாசத்துடன் பிரகடனஞ் செய்யும்.
- அந்தத் திருச்சபை பயமின்றி தைரியமாக அவரை மகிமைப்படுத்தும்.
- அந்தத் திருச்சபையே மிகவும் பயமின்றி அவரே கர்த்தர் என்று அங்கிகாரம் செய்யும் சபையாகும்.

7. **வேதாகமமே அதிகாரப் பூர்வமான மாதிரியாகும்**

இந்த நவீன காலத்துத் திருச்சபை கர்த்தருடைய வசனத்தில் பால் திரும்பி வந்து அதன் கோட்பாடுகளையும், செயலாக்கக் கிரியைகளையும் வசனத்தின் மேல் மட்டும் இருக்க வேண்டும். எண்ணிக்கைக்கு அதிகமான குருமார் பயிற்சிக் கூடங்களும் வேதாகமக் கல்லூரிகளும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட மத ஸ்தானத்து போதனைகளைக் கற்பித்து தேவனுடைய ஆலோசனைகளுக்குப் பதிலாக ஏற்படுத்திக் கொள்கிறார்கள். எண்ணிறந்த நவீன காலத்து குருமார் பயிற்சி பீடங்கள் உண்மையான சுவிசேஷத்தின் நீர்த்துப் போன மிதவாதமான ஓர் போதனையைக் கற்பிக்கின்றனர். அவர்கள் அற்புதங்களை விளக்கஞ் சொல்ல முயன்று போலியான நற்செய்தி வசனங்களைக் கற்பித்தும் அவைகள் மனிதனின் அறிவு சார்ந்த பெருமையை புண்படுத்தாதவாறு பார்த்துக் கொள்கின்றனர். ஆதித் திருச்சபையானது சிறிதும் வெட்கமுமின்றி வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அது கலப்படமில்லாத தேவ வசனத்தைப் பிரகடனஞ் செய்தது. அது வேதாகமத்து உண்மைகளை நடை முறையில் கைக்கொண்டது. அது தனது பிரகடனங்களிலும் பழக்கவழக்கங்கள் எல்லாவற்றிலுமே வேதாகமத்தைச் சார்ந்து நடைமுறைப்படுத்தியது. அவர்கள் அனுபவித்த அந்த வளர்ச்சி முறையை நாம் மாதிரியாக பின்பற்றவேண்டுமானால் நாம் அதே ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

8. **கடைசி காலங்கள் அறுவடை செய்யும் காலங்கள் ஆகும்.**

வேதாகம தீர்க்கதரிசிகள் எப்பொழுதுமே தேவனுடைய இராஜ்ஜியம் கடைசியாக பெறும் ஜெயத்தைப் பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அவர்கள் மேசியாவின் வருகையைப் பற்றி தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அவர் பூமிக்கு வந்து தனது நீதியான அரசாட்சியை ஜாதிகளின் மேல் ஏற்படுத்துவார் என்றார்கள். மேலும் அவர்கள் இவை எல்லாம் சம்பவிப்பதற்கு முன்னால் உலகம் அளாவிய அளவுக் கடங்காத அளவில் அறுவடை இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அவரது இரண்டாவது வருகைக்கு முன்னால் ஆவியானவர் உலகம் எங்கிலும் மாம்சமான யாவர் மேலும் ஊற்றப்படுவார் என்றார்கள்.

இந்த அளவுக்கு மிஞ்சிய கடைசி காலத்து அறுவடையானது தனது பாதிப்பை உலகம் முழுவதிலும் உண்டாக்கும். அது திருச்சபையானது நாட்டப்படுவதால் நிறைவேற்றப்படும். ஆகவே தேவன் தற்காலத்தில் திருச்சபை நடுபவர்களாக ஒரு பெரிய திருச்சபை நடுபவர்களால் ஆன ஒரு சேனையை தயாராக்குகிறார். அவர்கள் இராஜ்ஜியத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்து புதிய ஸ்தல திருச்சபைகளை உலக ஜாதிகளின் கூட்டங்களின் மத்தியில் ஏற்படுத்துவார்கள். ஆதியாகமம் 12:1-3ல் கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்ததாவது உன்னுடைய சந்ததிகளின் மூலமாக “பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்றார். திருச்சபையானது ஆபிராமுடைய வித்தின் அம்சமாகும். அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுதலின் காலமாவது ஏறக்குறைய நம்மேல் இருக்கிறது. நாம் எல்லோரும் கடைசி கால அறுவடை செய்பவர்களின் ஒரு சிறிய பகுதியாக இருக்கும் தனிச் சலுகை பெற்றிருக்கிறோம். அந்த கடைசி காலத்து அறுவடையாளர்கள் பிரதி பலன்களைப் பெறுவார்கள்.

இந்த சலுகையை ஆதரிக்கும் சில வேதாகமத்து வசனங்கள்.

ரோமர் 4:13 ஆபிரகாம் அன்றியும் ''உலகத்தைச் சுதந்தரிப்பவன்'' என்று அழைக்கப்பட்டான்.

ஏரேமியா 32:27 ''இதோ நான் மாம்சமான யாவருக்கும் கர்த்தர்''

சங் 24:1 ''பூமியும் அதன் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.''

யோவேல் 2:28; அப் 2:17 ''மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்''

ஏசாயா 66:16 ''மாம்சமான எல்லாரோடும் வழக்காடுவார்''

ஏசாயா 40:5 ''கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும். மாம்சமான யாவும் அதை ஏகமாய் காணும்.''

ஏசாயா 66:23 ''மாம்சமான யாவரும் எனக்கு முன்பாக தொழுது கொள்ளுவார்கள்.''

சங் 145:21 ''மாம்ச தேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக் கடவது.''

சங் 2:8 ''அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்திரமாகவும் பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்.''

வெளி 5:9 ''சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து''

வெளி 7:9 ''சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து''

வெளி 11:15 ''உலகத்தின் இராஜ்ஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய இராஜ்ஜியங்கள் ஆயின''

**9. இயேசு மகிமையான ஒரு திருச்சபைக்காக வருகிறார்**

''கறை திறை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன்னே நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.'' (எபேசி 5:27).

கிறிஸ்து திரும்ப வந்து பெறும் திருச்சபையானது சிற்றின்பம், மாம்சீகம், பின்மாற்றம் ஆகியவைகளின்றிடமிருந்து உண்மையான சபையாக போலியாக பாவனை செய்தல் ஆகியவைகளைப் பெற்றிராது. அது ஒரு நவீன காலத்து சமூக அழுத்ததுடன், வலிமை இல்லாத சபையாக சின்றின்ப அடையாளங்களை தன்பால் பெற்றிராத சபையாகும். ஆனால் அது ஒரு மகிமையுள்ள சபையாக ஜீவனால் நிரப்பப் பெற்றும் வல்லமை நிறைந்தும் வளர்ச்சி அனுபவத்துடன் உலகின் நான்கு மூலைகளிலும் ஜெயத்தைப் பெற்றதாக இருக்கும். அது பலத்திலும் அதிகாரத்திலும் நிறைந்து பூமியின் நெடுக்கும் குறுக்குமாக இயங்கி தேவனுடைய இராஜ்ஜியத்தின் நற்செய்தியை உலகில் பிரகடனஞ் செய்து எங்கிலும் புதிய விசுவாசிகளின் குழுக்களை நிறுவி வருவதாகும்.

**10. அது உனக்காகக் கூட ஊழியம் செய்யும்**

நான் மென்மேலும் ஆராய்ந்து திருச்சபையின் மகிமையான வளர்ச்சியின் முன்னேற்றத்தை இந்த எழுப்புதல் காலங்களில் விவாதிப்போமானால் உனக்கு ஒரு யோசனை உன் மனதில் தோன்றும். உனக்குள் ஏதோ ஒன்று பின்வருமாறு சொல்லலாம். இந்தக் காரியங்கள் உண்மையாக இருக்கலாம். அவை உலகின் பல பாகங்களிலும் நேரிடலாம். ஆனால் அவைகள் இங்கே நான் ஈடுபடும் வேலையில் நேரிடக்கூடாது என்பது நான் நிச்சயமாக அறிவேன். இதே விதமான தந்திர யுக்திகளை சாத்தான் அடிக்கடி உபயோகிக்க முயற்சிக்கிறான். ஆனால் அது உன்னைத் தவிர யாருக்காவது நேரிடலாம். கர்த்தர் மனிதனை கனப்படுத்துகிறவர் அல்ல. அவர் ஒவ்வொரு சமூகத்தினரையும் அந்த விதமான முரண்பாடுள்ள அடையாளக் குறிப்புகள் இருந்தாலும் போய் சுற்றிப் பார்ப்பார். இந்த விதமான மகத்தான எழுப்புதலும் ஜாதிகளிடையே அறுவடையும் உலகம் எங்கும் நேரிடும். நீயும் அதில் ஒரு அங்கமாக இருக்கக் கூடும்.

## அதிகாரம் 2 - ஆதித்திருச்சபையின் வளர்ச்சிக்குக் காரணமான ஏதுக்கள்

திருச்சபை வளர்ச்சிக்கான மூன்று முக்கியமான ஏதுக்கள்:

1: **செயலூக்கம் உடைய வழி நடத்தி முன் செல்லும் தன்மை**

2: **திருச்சபையில் நல்லொழுக்கம்**

3: **சுவிசேஷ பிரபல்ய வெளி ஊழியம் செய்தல்**

## 1. செயலூக்கமுடைய வழிகாட்டி முன் செல்லும் தலைமைத்துவம்

### A. கர்த்தரால் (அ) தேவனால் நியமிக்கப்படுதல்

பற்பல திருச்சபை ஸ்தாபனங்களில் ஊழியர்கள் இறையியல் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்ற தவறான கருத்து நிலவுகிறது. ஆனால் நடைமுறையில் ஒரு மாணவர் நீண்ட காலம் இறையியல் கல்லூரிகளில் மாணவராக இருப்பாரானால் திருச்சபையை ஸ்தாபனம் செய்வதிலோ ஒரு போதகராக வல்லமையாக ஒரு சபையை அதிகரிக்கச் செய்ய முடியும் என்பதில் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. தத்துவ நிபுணர்கள் பொதுவாகத் திருச்சபைகளை முன்னடத்திச் செல்வதில்லை. மேலும் அவர்களுடைய சபைகளில் வல்லமையான வளர்ச்சியைக் பொதுவாகக் காணவும் முடியாது.

ஒரு உண்மையான செயலூக்க தலைவர்களுக்கான முக்கியமான காரியமாவது அவர்களால் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்டும், நியமிக்கப்பட்டும் இருக்க வேண்டும். அந்த விதமான வரமான ஈவுகளை அங்கீகரித்தும், பராட்டியும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்ளப்படவும் வேண்டும்.

### B. அப்போஸ்தல வரங்கள்

அப்போஸ்தலர்கள் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழிய வரங்களாவன: அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள், மேய்ப்பர்கள். (எபேசி 4:11)

### C. அபிஷேகம் பெற்றவர்கள்

இயேசு தமது சீஷர்களுக்கு, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்று கட்டளையிட்டார். (பரிசுத்த ஆவி)

லூக்கா 24:19 - ''காத்திருங்கள் .... வரைக்கும் ...''

அப் 1:8 - ''நீங்கள் பெலனடைந்து''

அப் 2:4 - ''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு''

அப் 4:31 - ''தேவ வசனத்தை தைரியமாய் சொன்னார்கள்''

அப் 10:38 - ''இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார்''

அப் 13:9 - ''அப்பொழுது பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் இருந்தான்''

எபேசி 5:18 - ''மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறைந்து இருந்தனர்''

### D. ஐக்கியப்பட்டு

ஆதிதிருச்சபையில் தலைமைத்துவத்தையுடையது ஆனது. ஒரு குழுவால் ஆகிய வழிகாட்டி முன் செல்லும் தலைமைத்துவத்தையுடையதாய் இருதயத்திலும், ஆத்துமாவிலும் ஆவியிலும் ஐக்கியமுடையதாய் இருந்தது. அவர்கள் ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தேவனுக்காக காத்திருப்பதிலும் தரித்திருந்தார்கள். அவர்களுக்குள் ஓர் அழமான ஆவிக்குரிய ஐக்கியம் உண்டாயிற்று. ஆகவே, ''அப்பொழுது பேதுரு பதினோருவரோடுங்கூட நின்று'' (அப் 2:14) அவர்கள் ஓரே குரலில் பேசுவது போல் தோன்றியது. திருச்சபையில் உள்ள இன்றைய ஊழியக் குழுக்கள் இவற்றை மதித்தும், பாராட்டியும் இம்மாதிரியான ஐக்கியத்திற்கு முயற்சியும் செய்ய வேண்டும்.

அப் 2:1 - ''ஒருமனப்பட்டு, ஓரிடத்தில்..''

அப் 2:42 - ''அந்நியோந்நியத்திலும் உறுதியாய் தரித்திருந்தார்கள;''

அப் 2:44 - ''விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.''

அப் 2:46 - ''ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்து''

அப் 4:32 - ''விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்''

அப் 4:24 - ''அவர்கள் அதைக் கேட்டு ஒருமனப்பட்டு தேவனை நோக்கி சத்தமிட்டு''

அப் 2:14 - ''பேதுரு பதினோருவரோடுங்கூட நின்று''

### E. அவர்கள் ஜெபத்தில் நிறைந்திருந்தனர்

நாம் இப்பொழுது பேசியதான ஐக்கியம், ஆதித் திருச்சபையின் ஆரம்ப கால ஜீவியத்திலான ஜெப ஜீவியத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது. இந்த விதமான ஐக்கியமும் ஒருமனப்பாடும்

திருச்சபையின் மொத்த ஒன்றுபட்ட ஜெபத்தை வல்லமை மிக்கச் செயலூக்கம் உடையதாக ஆக்குகின்றது. இவை இல்லாவிட்டால் சபையாரால் ஏறெடுக்கப்படுகிற ஜெபம் ஈடுபாடின்றியும், வல்லமை குறைந்ததாகவும் இருக்கும். ஒரு திருச்சபையாக அவர்கள் சத்தத்தை ஒன்றுபட்டு உயர்த்தினால், அற்புதமான பதில்கள் அந்த ஜெபங்களுக்குக் கொடுக்கப்படும்.

அப் 1:14 - ''ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்''
அப் 2:42 - ''ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்''
அப் 4:24 - ''ஒருமனப்பட்டு தேவனை நோக்கி சத்தமிட்டு''
அப் 4:31 - ''அவர்கள் ஜெபம் பண்ணின போது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது''
அப் 13:3 - ''உபவாசித்து ஜெபம் பண்ணி''
அப் 14:23 - ''மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து உபவாசித்து ஜெபம் பண்ணி''

**F. அவர்கள் வல்லமையானதாக பிரகடனஞ் செய்தார்கள்**
அப் 2:14 - ''பேதுரு ... உரத்த சத்தமாய் அவர்களை நோககி''
வேதாகமத்தின்படி யோவேல் 2; சங் 16:8-11; சங் 68:18; 110:1.

**G. அவர்கள் உரத்த சத்தமாய் பிரகடனஞ் செய்தார்கள்**
தைரியத்தைப் பற்றிய சில விளக்கங்கள்: அச்சமற்ற, உறுதியான நம்பிக்கையுள்ள, உரிமைக்காக வற்புறுத்தலுள்ள, துணிந்து செயலாற்றுதலுக்கான, அதிகாரத்துவமாக, (தயவு செய்து ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தையும் உன் பிரசங்கத்தோடு பொருத்திப் பார்த்துக் கொள்க).

அப் 4:11 - ''பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு''
அப் 4:29 - ''உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி''
அப் 4:31 - ''தேவ வசனத்தைத் தைரியமாய் சொன்னார்கள்''
அப் 9:27 - ''தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தைத் தைரியமாய் பிரசங்கித்ததையும்''
அப் 9:29 - ''கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய் பிரசங்கித்து''
அப் 14:3 - ''அங்கே அநேக நாள் சஞ்சரித்து தைரியமுள்ளவர்களாய் போதகம் பண்ணி''
அப் 18:26 - ''அப்பொல்லோ - ஜெப ஆலயத்தில் தைரியமாய் பேசத் தொடங்கியபோது''
அப் 19:8 - ''மூன்று மாதமளவும் தைரியமாய் பிரசங்கித்து''
2 கொரி 7:4 - ''மிகுந்த தைரியத்துடனே உங்களுடன் பேசுகிறேன்''

தைரியமும் அதிகாரமும் பிரசங்கத்தில் இடம் பெறுவது எதன் மூலம் என்றால்:
தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கும்பொழுது
– ''உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி'' அப் 4:29
– சொந்த அனுபவத்திலிருந்து பேசும்பொழுது. அப் 4:20 - ''நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக் கூடாதே.''

**H. அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர்**
அப் 4:8 - ''அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்து அவர்களை நோக்கி''
பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பது ஒரு அனுதின அனுபவமாக எப்பொழுதும் தடையின்றி தொடர்ந்து வருகிற அவசிய தேவையாகும். நாம் பரிசுத்த ஆவியின் நிறைவை எப்பொழுதும் நம்மில் நிலைத்திருக்க வைத்திருக்க வேண்டும். எபேசு 5:18ம், வசனத்து வினைச் சொல்லின் காலம் ''ஆவியினால் நிறைந்து'' என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

**I. அவர்கள் வல்லமையான எதிர் முனைச் சந்திப்புகளை அனுபவத்தில் கண்டனர்**
a) தேவனுடைய வல்லமைத் தெளிவாக வெளிப்படும்பொழுது
b) தேவனுடைய வல்லமை எதிர்க்கும் சக்திகளை எதிர்க்கும் பொழுது
c) தேவனுடைய வல்லமையானது சாத்தானையும் அசுத்த ஆவிகளையும் எதிர்க்கும்பொழுது
அப் 2:14-39 - இது ஒரு வல்லமையான எதிர்முனைச் சந்திப்பு வல்லமையாகப் பிரசங்கித்தல்
அப் 2:34b - அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.
அப் 3:1-10 - பேதுரு யோவான் மூலமாக வல்லமையான ஊழியம்
அப் 3:11-26 - சாலமோன் மண்டபம்

அப் 5:1-11 - அனனியாவும் சப்பீராளும்
அப் 5:12-16 - அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது.
அப் 6:8 - ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.
அப் 8:5-6 - பிலிப்பு... கிறிஸ்துவைக் குறித்து அங்குள்ளவர்களுக்குப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு
அப் 9:36 - பேதுருவும் தொற்காளும்
அப் 9:42 - அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசம் உள்ளவர்களானார்கள்.
அப் 10:34 - கொர்நேலியுவின் வீடு 44-48 இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில்
அப் 11:21 - கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது.
அப் 13:8-12 - பவுலும் எலிமாவும்
அப் 14:9 - லிஸ்தீராவில் பேதுரு, ''நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்''
அப் 16:16-19 - பவுல் அந்த வேலைக்காரப் பெண்ணைக் காப்பாற்றினான்.
அப் 16:25-34 - பிலிப்புப் பட்டணத்துச் சிறைச் சாலையில்
அப் 19:11 - பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.
அப் 19:14-16 - ஸ்கேவாவின் குமாரர்கள் (எச்சரிக்கை)
அப் 26:13-44 - பவுலுடைய ஞானமுள்ள வார்த்தைகள்
அப் 28:3-5 - பவுலும் விரியன் பாம்பும் (மாற்கு 16)

## 2. திருச்சபையில் நல்லொழுக்கப் போதனை

### A. பேதுருவின் செய்தியும் அறிவுரையும் வற்புறுத்துவை

பேதுருவினுடைய வல்லமையான செய்தியின் பாதிப்பு ஜனத் திரளின் மேல் விளங்கியதுடன் அவனுடைய அழுத்தமான சத்தியமான சிலுவையில் அறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்பது இதற்குப் பின் சம்பவித்தவைகளுக்கு அடித்தளமாக அமைந்தது. அது சுவிசேஷத்தின்படி நியதிகளைத் தெளிவுபடுத்தியதுடன் மேலும் அந்த புதிய விசுவாசிகளை சத்தியத்தின் போதனைகளை அறியும்படி செய்யவும். அதன் பின் வருபவற்றில் ஸ்திரமாக இருக்க ஆயத்தம் செய்யவும்.

அப் 2:37 - இதை அவர்கள் கேட்டபோது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி இந்த வார்த்தையால் குத்தப்பட்டவர்களாகி என்பது அவர்கள் இருதயம் எதிர்கொள்கைகள் முன்னால் தெரிந்து கொண்ட கருத்துக்கள் இருதயத்தில் தைத்தது.

அப் 2:37 - அவர்கள் (பேதுரு) அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

<u>பேதுருவுடைய கண்டிப்பான கட்டளை</u>

A மனந்திரும்பு
B ஞானஸ்நானம் பெறுங்கள்
C பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் - அதாவது புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அப் 2:40 - ''மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்''

நமது ''பாவத்திலிருந்து இரட்சிப்பும், அதன் வல்லமையும் அதற்கான தண்டனையும்'' நாம் மனந்திரும்பி கிறிஸ்துவை நமது கர்த்தரும் ஆண்டவருமாக ஏற்றுக் கொள்ளும்பொழுது பெற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த மாறுபாடுள்ள சந்ததியினிடமிருந்து (மாறுபாடுள்ளதும் தவறிழைக்கிறதுமானதும் கலகம் செய்கிறதும், கிளர்ச்சி செய்கிறதுமான) இவைகளிலிருந்து விடுதலை பெறும் இரட்சிப்பானது, கீழ்படிதலினாலும், போதனையின் படி நடப்பதாலும், அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட நம்பிக்கையினாலும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அப் 2:41 - ''அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்''

அப் 2:42 - ''விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள்''

**<u>அப் 2:42 சொல்லுகிறதாவது ''அவர்கள் நான்கு காரியங்களில் உறுதியாய் தரித்திருந்தார்கள்''</u>**

**a: <u>அப்போஸ்தலருடைய உபதேசம்</u>**

''உபதேசம்'' என்பது இந்த சந்தர்ப்பத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட தத்துவ போதனையோடோ அல்லது அவர்களது மதக் கொள்கைகளை ஒழுங்குபடுத்தி அமைவதுடனோ சிறிதும் சம்பந்தப்பட்டதாக ஆகாது. ஆனால் அது அவர்கள் புதிய ஜீவியத்தில் வாழ்வதோடு நடைமுறைப் பிரச்சனைகளோடு ஆண்டவருடைய மகிமைக்காக செயலூக்கமுடையதாக இயங்குகிறது. இந்த அப்போஸ்தலருடைய உபதேசமானது சுமார் மூன்று ஆண்டுகளாக அவர்கள் இயேசுவின் அருகாமையில் தங்கி வாழ்ந்து தாங்கள் கற்றுக் கொண்டதும் மனதில் வாங்கிக் கொண்டதுமான வாழ்க்கை முறையாகும். அவரால் (இயேசு) அவர்களுக்கு பரலோக இராஜ்ஜியத்திற்கான வாழ்க்கை முறையின் கொள்கைகளாக உபதேசிக்கப்பட்டதாகும். அவர் அவர்களுக்கு நல்லொழுக்க விதிகளை (உதாரணங்கள் நடைமுறையில் கைக்கொள்ளுதல் ஆகியவற்றால் போதித்து) தேவனுடைய இராஜ்ஜியத்திற்குத் தகுதியான வாழ்க்கை முறையாகச் செய்தார். அவர்கள் இந்த விதமான புதிய ஜீவிய வழிமுறையை புதிய விசுவாசிகளுக்கு மேற்கொண்டு போதித்தனர்.

இந்த புதிய ஏற்பாட்டு வழக்கில் போதனைக் கோட்பாடுகள் நேர்மையான நடத்தையுடன் இயேசுவின் சரீரமாகிய திருச்சபையுடன் நல்லுறவுத் தொடர்புகளை மிகவும் அவசியமாகத் தவறாது இணைத்தது. தீமோத்தேயுவுக்கு ''இந்த உபதேசத்துக்கு செவிகொடுக்குமாறு'' புத்தி சொன்ன பிறகு பவுல் தொடர்ந்து (I தீமோத் 4:16) கிறிஸ்துவின் திருச்சபையில் பல வகைப்பட்ட அங்கத்தினர்களும் எவ்வாறு உறவுத் தொடர்புள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று நினைப்பூட்டுகிறார். (I தீமோத் 5:1-16) இவ்வாறே தீத்து 2:1-10 சொல்லுகிறார்.

**b: <u>KOINONIA அல்லது ஐக்கியம்</u>**

இந்த ''ஐக்கியம்'' என்ற வார்த்தைக்கு koinonia என்று கிரேக்க மொழியில் சொல்லப்படும். அதற்கு நமது திருச்சபைகளில் இக்காலத்தில் பொதுவாக புரிந்து கொள்ளும் அர்த்தத்தைவிட ஓர் ஆழமான அர்த்தம் கிரேக்க மொழியில் உண்டு. அது பலமான கூட்டாளித்துவத்தையும் பெருமிதம் கொண்ட உறவு முறைகளையும் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. அது புதிய ஏற்பாட்டு அமைப்பில் வெளிப்படையாக புதிய உடன்படிக்கைத் தொடர்பு முறைகளைக் குறிப்பிடுகிறது. அதனுள்ளாக நாம் கர்த்தராகிய ஆண்டவருடன் கிறிஸ்து மூலமாக உறவு முறையில் இப்பொழுது இணைக்கப்பட்டும் மேலும் அதன் மூலமாக ஒருவருக்கொருவர் ஆழமான ஒப்பந்த தொடர்புகளால் பிணைக்கப்பட்டுள்ளோம்.

**c: <u>அப்பம் பிட்குதல்</u>**

''வீடுதோறும் அப்பம் பிட்டு'' என்பது பொதுவானதோர் போஜனத்தை கூட்டமாக பகிர்ந்து கொள்வது என்பதை விட அதிகமானதோர் அனுமானத்தைத் தருகிறது. மேலும் அது ஒப்பந்த உடன்படிக்கை உறவு தொடர்புகளுடன் கூடிய துணைப் பண்புகளை குறிப்பிட்டு காட்டுவதுடன் மெய்யானதோர் உபசரிக்கும் பண்பை புது உடன்படிக்கையின் ஐக்கியத்தின் பங்காளிகளால் அன்புடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

**d: <u>ஜெபங்கள்</u>**

ஜெபங்கள் என்பது முந்தைய மூன்று வகையான ஏதுக்களுக்கு பின்னாக வருவது சந்தர்ப்ப சூழ்நிலைமைகளால் அல்ல. இந்த ஐக்கியமான ஜெபங்களின் பண்பானது இந்த வகையான கூட்டமைப்பின் மூலமாக மாத்திரம் வரக்கூடும். அதாவது அந்த கூட்டமைப்பு பலமாக பிரிக்கக்கூடாதபடி ஐக்கியத்தில் அவர்கள் இருக்கிற பிரகாரம் இருக்கும் பொழுதுதான். அவர்களுடைய ஒருமித்த ஒப்புக் கொடுத்தலின் தன்மையாவது அத்துடன் அவர்களுடைய புதிய இரட்சிக்கப்பட்ட வாழ்க்கை நடைமுறையுடனும் அவர்களுடைய பரிந்து பேசுதலில் ஆழ்ந்த வல்லமையான செயலூக்கத்தை கொண்டதாய் இருந்தது.

## B. அடிப்படையான போதனைகள்

அப் 2:40 - ‘‘இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி’’ அவர்களுடைய கல்வி ஞானமானது வகுப்பறைகளில் சந்தர்ப்பங்களிலும் நன்கு கற்ற கல்வியினாலும் இல்லாமல் வாழ்க்கையின் நடைமுறைகளிலிருந்தும் தனிப்பட்டதாகும். மேலும் அந்த வார்த்தையின் நவீன கொள்கை முறையில் தத்துவ ஞானமுமல்ல. அது வேதாகமத்துப்படி, ஆவிக்குரியதும் நடைமுறையில் இயங்குவதுமாகும். உம் அப் 1:1 ‘‘இயேசுவானவர் தாம் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும்’’ என்பதன் படி.

## C. அறிவுரையாளரின் அறிவுரை பகருதல்

‘‘பூரணமான முதிர்ச்சி பெற்றவரும் நம்பத் தகுந்தவருமான ஆலோசனையர்களுடைய இளைய தலைமுறையினரான ஊழியர்கள் மீதுள்ள பாதிப்பு.’’

‘‘நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.’’ I கொரி 4:16; 11:1; பிலிப் 3:17; I தெச 1:6; II தெச 3:7-9

## D. தோழமை அல்லது சிநேகிதம்

அப் 4:23 - ‘‘அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்து’’

அப் 4:32 - ‘‘விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்’’

அப் 4:33 - ‘‘கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள். அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.’’

ஒரு திருச்சபைக்குள் இருக்கும் விசுவாசிகளின் ஐக்கியமானது ஒரு (மன்றம்) கழகத்துப் பணியில் நசிந்து போக அனுமதிக்கக் கூடாது. அப்படியென்றால் அது சாதாரணமானதாகவும் கட்டி அமைக்கப்பட்ட முறையிலும் இருக்கும். அதன் அங்கத்தினர்கள் நண்பர்களாகவும் தோழர்களாகவும், ஆவிக்குரிய கருத்தில் அமைந்த தோழமையையும் சகோதரத்துவத்தையும் ஜீவனுள்ளதும் நிலைத்து நிற்பதுமானதோர் நிலையில் நிலைத்திருக்க அவசியமாகிறது.

## E. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது (அப் 4:32b)

நான் இப்பொழுது குறிப்பிட்டுச் சொன்ன உறவுத் தொடர்பு பாணியானது தங்களுடைய ஜீவியத்தையும் உடமைகளையும் கூட சேர்த்து மனமகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள அவர்களுக்கு ஏதுவானது. அவர்களுக்குள் நிலவிய ஓர் ஆழமான அன்புடன் கூடிய கருத்துணர்ச்சியானது அவர்கள் ஒருவருக்காக ஒருவர் வாழவும், தங்கள் ஜெயத்திலும் பாரத்திலும், அனுபவங்களிலும் ஒரு மனமார்ந்த சகோதரத்துவ ஆவியினால் உண்டாயிருக்கக் காரணமாயிற்று.

## F. அவர்களுடைய தாராளமான, தியாகமுள்ள கொடைப் பாங்கு (அப் 4:34-37)

திருச்சபையின் ஆதி ஆரம்ப காலத்திலிருந்து அதன் அங்கத்தினர்கள் திருச்சபையின் பலவிதமான நிகழ்ச்சிகளுக்கு நிதி ஆதரவு தந்து ஆதரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். ஆகவே அந்தத் திருச்சபையான சுயாட்சியுடனும் சுய ஆதரவுடனும் சுயமான பிரச்சாரம் ஆகியவைகளால் ஒரு உண்மையான புதிய ஏற்பாட்டு திருச்சபைக்குரியவைகளைப் பெற்று அந்த மாதிரி சபையாக விளங்கியது. சில நாடுகளில் நிதி ஆதரவுக்காக கடல் கடந்த நாடுகளை எதிர்பார்க்கும் ஒரு விதமான போக்கை திருச்சபை நாட்டப்படுவதற்கும் அதன் வளர்ச்சிக்கும் தேவையாக எதிர்பார்க்கின்றனர். இது ஒரு தவறாகும். அது மிகவும் கடினமானதும் நிச்சயமாக அதிகமான சவால் ஆகவும் ஒருவருக்கு சொந்த நிதி ஆதரவு தருவது நிறையப் பெற்றதாகும். ஆனால் நீண்ட கால அளவில் திருச்சபை சிறப்பு நலன் பெற்றதும் பலம் மிக்கதுமாக ஆக்கப்படுகிறது. யாரோ ஒருவர் இந்த விதமான கவனக் குறிப்பைத் தந்திருக்கிறார். நான் அதை பெரிதான உண்மையாக நம்புவதாவது எந்தத் திருச்சபையோ அல்லது ஸ்தாபனமோ இறக்குமதியாகும் நிதியுடன் ஆரம்பிக்கப்பட்டவை அவற்றிற்கு ஏற்படும் குறைபாட்டினால் அவை செத்துப்போகும் அபாயம் உண்டு.

## G. தாங்கள் அவமானமடைவதற்கு சந்தோஷப்பட்டனர் - அப் 5:41

அந்த ஆதித் திருச்சபை மிகுந்த எதிர்ப்பையும், வேறுபடுத்துவதிலும், சித்திரவதையிலும், அதற்கு பதிலாக வளர்ச்சியை பின்னடையச் செய்வதோ அதன் வளர்ச்சியை தடை செய்வதோ சித்திரவதைக் காற்றானது எழுப்புதலின் அக்கினியை விசிறி எழும்பச் செய்தது. நான் எனது தனிப்பட்ட முறையில் அடிக்கடி பொதுவாகக் குறிப்பிடுவதாவது எதிர்ப்பு அதிக வலிமையுடன் இருக்குமானால் திருச்சபையும் அதன் விசுவாசிகளும் அதிகமான பலமுடையவர்கள் ஆவார்கள்.

வேளா வேளைகளில் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும் மக்களுக்கு அது சிரமம் உள்ளதாகவும் கடினமானதாகவும் இருக்கும் என்று நான் உணர்ந்தால் ஒரு கால் அது யாராவது ஒருவரை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுப்பதிலிருந்து தடை செய்யும் என்பதல்ல. ஆனால் அதன் எதிர்மறைக் கிரியையே உண்மையானதாகும். இன்னும் மக்கள் கிறிஸ்துவண்டை வருகிறார்கள். அவர்களுடைய ஒப்புக் கொடுத்தலின் தன்மையும் பலமும் மென்மேலும் ஆச்சரியப்படத்தக்கதாகும்.

## H. போதுமான நிர்வாகமும் ஸ்தாபனமும் - அப் 6:1-7.

வளருகின்ற வேதனைகளை மேற்கொள்ளுதல் திருச்சபை வளர்ச்சியில் சுயமாக ஈடுபாடு உடையவர்கள் வளர்ச்சியானது மெதுவாக படிப்படியாக முன்னேறுவதை அறிவார்கள். ஒரு உணர்ச்சிகரமான உயரும் வளர்ச்சியின் காலத்திற்கு பிறகு நாம் அடிக்கடி ஒரு தேக்க நிலையை அடைவோம். இந்த விதமான தற்காலிக இடைவெளியான சில பிரச்சனையின் காரணமாக ஏற்படுகிறது. அந்தப் பிரச்சனையை சரியாக கவனித்துக் கொண்டு செயல்பட்டால் மேலும் அதிகமான வளர்ச்சிக்கு நடத்திச் செல்லும். இதுவே அப் 6:1-7ல் குறிப்பிடப்படுகிற தெளிவான காரியமாகும். இந்த பிரச்சனைக்குத் தீர்வு ஆனது அதிகமான ஊழியர்களை நியமிப்பதாலும் வேலையைப் பகிர்ந்து கொடுப்பதை அறிமுகப்படுவதினால் மட்டுமே முடியும். (ஒரு பணியை மற்றவரிடம் நம்பி ஒப்படைப்பதாலும் அவர்களுக்கு அந்த பணியை நிறைவேற்றி முடிப்பதற்கு அவசியமான அதிகாரத்தை தருவதால் மாத்திரமே நடப்பதாகும்).

<u>அந்தப் பிரச்சனை:</u>

a: **வாய்ப்பாட்டு பெருக்கலின் படியான பெருக்கம்** அடிக்கடி தனக்கு சொந்தமான பிரச்சனைகளைக் கொண்டு வருகிறது. ஆனால் அடிக்கடி “வளரும் வேதனைகள்” என்று குறிப்பிட்டுச் சொல்லப்படும். என்னவென்றாலும் அந்த வகையான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது வழக்கமாக மேலும் அதிகமான வளர்ச்சிக்கு கடத்திச் செல்கிறது.

b: **முறுமுறுத்தல்** உள்ளே கலகங்களையும் ஐக்கிய குறைவையும் விசுவாசிகளிடையே உண்டாக்குகிறது.

c: **போதுமான ஸ்தாபன அமைப்பு இல்லாமை.** இந்த அமைப்பின் ஒழுங்கு முறைகள் அந்த தீவிரமாகச் சம்பவிக்கும் வளர்ச்சியுடன் சமமாகத் தொடர்ந்து போவதில்லை. இந்த சம்பவம் திருச்சபை வளர்ச்சிக்கு சரியான முறையான ஸ்தாபன அமைப்பும் நிர்வாகமும் மிகவும் அவசியமென்பதை அறிமுகம் செய்கிறது. சென்ற சில ஆண்டுகளாக அநேக திருச்சபைகள் இதன் உண்மைக்கு ஒப்புறவாக வேண்டி இருந்தது. இதற்கு முந்திய காலங்கள் ஸ்தாபன அமைப்பு நடைமுறைகள் திருச்சபை வட்டங்களில் அதிகமாக காணப்படாது. ஆனால் சமீப காலத்து நாடக பாணியான வளர்ச்சி வேக அளவுகள் பல சபைகளில் காணப்படுவதால் இந்த அம்சம் மிகவும் சிக்கலானதாகத் தோன்றுகிறது.

d: **இனம் சார்ந்த ஒற்றுமையின்மை** போதுமான ஸ்தாபன அமைப்பு இல்லாமை சில இன வேற்றுமைகளையும், மனக் குமுறல்களையும் உண்டாக்குவதால் அவைகள் ஒற்றுமையின்மையையும் தேவையில்லாத விரும்பத் தகாத மனக் குமுறல்களையும் மேலும் அதிகரிக்கச் செய்கிறது. நாம் சந்திக்கும் பிரச்சனைகள் வேறு பல சில மாறுவேடங்களை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவைகளில் அதிகமானவைகளை அபிவிருத்தி செய்த ஸ்தாபன ஒழுங்கு முறைகளால் மேற்கொள்ள முடியும்.

<u>பிரச்சனைக்குத் தீர்வு:</u>

a: **சரியான நேர்மையான முன்னுரிமைகளை ஸ்திரப்படுத்துதல்.** எதைக் கொடுக்க வேண்டும் - எதைக் கொடுக்கக் கூடாது.

அப்போஸ்தலர்கள் தாங்கள் ஆவிக்குரிய பணிகளைப் புறக்கணித்து இருப்பது அவர்களுக்குத் தகுந்ததல்ல என்பதைத் தீர்மானித்து ஆவிக்குரிய பணிகளான ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் (அப் 6:4) இடைவிடாமல் தரித்திருப்பதற்கு வசதியாக விதவைகளை அன்றாடக பந்தி விசாரணை செய்தல் போன்ற நடைமுறைப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக முன்னதை தவிர்ப்பது சரியல்ல என்று கருதினார்கள். ஆகவே அது தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்து அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்தினார்கள்.

b. **ஒப்படைத்தல்.** ஒப்படைத்தல் முறையானது முற்றிலும் வேதாகமத்தைச் சார்ந்தது. பல சமயங்களில் அது எத்திரோவின் கோட்பாடு என்று குறிப்பிடப்படுகிறது. (யாத் 18:13-27) அதன் அடிப்படை கொள்கைகளைக் கவனிக்கவும்.

i: தகுதியான ஆட்களை தேர்வு செய்யவும். வ 21. (தேவனுக்கு பயந்து மனிதர்களும், உண்மையுள்ளவர்களும் பேராசை அற்றவர்களுமான நபர்கள்)

ii: அவர்களுடைய பணிகளைக் கற்றுக் கொடுக்கவும் வசனம் 20.

iii: அவர்களுடைய ஊழியத்திற்கு நியமிக்கப்படவேண்டும். வசனம் 21b.

iv: அவர்களுக்குப் போதுமான அதிகாரத்தைக் கொடு. வசனம் 22. (அவர்களும் உங்களுடன் பாரத்தை சுமக்கவும்.)

v: அது வழிகாட்டி முன் செல்பவருக்கு இலகுவாக்கும். வசனம் 22b.

vi: அது ஜனங்களுக்கு நன்மையைச் செய்யும். யாத் 18:18.

**அப்போஸ்தலர்களுங்கூட இந்தக் கொள்கைகளைக் கைக் கொண்டார்கள்:**

1. சரியான மனிதர்களைத் தெரிந்து கொள்ளுதல். வசனம் 3.
   a. நற்சாட்சி
   b. பரிசுத்த ஆவியினால் நிறைந்து
   c. ஞானமும்
   d. விசுவாசத்தால் நிறைந்த - வசனம் 5 - ஸ்தேவான்.

2. சரியான வேலைகள் ஏற்படுத்திக் கொடுத்தல்
   a. பணியைக் குறிப்பிட்டு வரையறுத்துக் கொடு.
   b. அதை தெளிவாக விளக்கிச் சொல்லவும் - சிறப்பாக எழுத்தில்
   c. அவர்களுக்காக ஜெபிக்கவும் (வசனம் 6b)
   d. பொறுப்பாண்மை தரவும் - அதிகாரம். (அதிகாரத்திற்கு முன் பொறுப்பு)
   e. அவர்களுக்கு முறையான அங்கீகாரம் தர வேண்டும்.

3. பயிற்சி பெறும் இளைஞர்கள் சிஷ்யராக்குதல்
   பின்வரும் நடைமுறைகளால்:
   a: போதனை
   b: செய்து காட்டுதல்
   c: ஈடுபாடு கொள்ளச் செய்தல்
   d: மதிப்பீடு செய்தல்

4. மகிழ்ச்சிக்குரிய பலாபலன்கள். அப் 6:7
   a: தேவனுடைய வசனம் பரவிற்று.
   b: சீஷர்களுடைய எண்ணிக்கை அதிகமாகப் பெருகிற்று.
   c: அநேகமான ஆசாரியர்கள் விசுவாசத்துக்குக் கீழ்படிந்தார்கள்.
   (இதன் காரணமாக ஏன் அதிக எண்ணிக்கையுள்ள ஆசாரியர்கள் விசுவாசத்துக்கு கீழ்படிந்தார்கள் என்பது ஏனென்றால் அப்போஸ்தலர்களுக்கு ஊழியத்திற்காகக் காத்திருப்பதற்கு அதிகமான நேரம் இருந்தது. மேலும் அவர்கள் தங்கள் பிரசங்கத்தையும் உபதேசத்தையும் பயனுள்ளதாக ஆக்க முடிந்தது)

d: பிலிப்பு, ஸ்தேவானைப் போன்ற கண்காணிகள் அப்போஸ்தலர் ஊழியத்திற்கு உயர்த்தப்பட்டார்கள்.

## 3. சுவிசேஷ பிரச்சார நடவடிக்கைகள்

### A. ஒரு பிரத்தியேகமான வெளியரங்கமான பிரகடனம்

அப் 26:26 - ‘‘இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல’’ இது (கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்) வெளியரங்கமான பிரகடனம் வல்லமையான ஒரு தோற்றமாக ஆதித் திருச்சபையின் வளர்ச்சியில் இருந்தது. அப்போஸ்தலர்கள் அவர்களுடைய செய்திகளைப் பயமின்றி பொது ஜனங்கள் கூடும் இடங்களுக்கு எடுத்துச் சென்று பயமின்றி சுவிசேஷ நற்செய்தியைப் பிரகடனஞ் செய்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நவீன காலத்துத் திருச்சபையானது பெரிதாக அதனுடைய தந்தக் கோபுரங்களுக்குள் பின் வாங்கிச் சென்று அதிலும் மிகவும் ஆழமானதும் வல்லமையானதுமான பிரகடனத்தை சிறைப்படுத்திய ஏற்கனவே நம்பிக்கையூட்டப்பட்டதும் ஒப்புக் கொடுத்ததுமான பார்வையாளர்களுக்கு முன்பாகக் கொடுக்கப்படுகிறது. பொது ஜனங்கள் நம்பிக்கை யூட்டப்பட்ட எண்ணிக்கைகளில் திருச்சபைக்குள் சேருவார்களானால் திருச்சபைக்குள் சுவிசேஷ பிரச்சாரம் நியாயமானது தான். ஆனால் இது இவ்வாறு இருக்காவிடில் திருச்சபையானது பொதுவாக வெளியே போய் அவர்களுடைய செய்தியை உண்மையாகவே கேட்கும்படியாக அவசியமுள்ள ஜனங்களுக்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். தயவு செய்து பின்வரும் சம்பவங்களைப் படித்து பொது மக்களுக்கு அது வெளிப்படுத்தப்பட்டதைக் குறிப்பாகக் கவனிக்கவும்.

அப் 2:14-39. பேதுருவுடைய மகத்தான பெந்தெகொஸ்தே செய்தி

அப் 3:1-10. பேதுருவும் யோவானும் ஜெப ஆலயத்தில்

அப் 3:11-26. சலொமோன் மண்டப வாசலில் கூடியிருந்த ஜனங்கள்

அப் 8:4-25. சமாரியாவில் பிலிப்பு

### B. மிஷனரி கூட்டு ஸ்தாபனங்கள் (அ) சுவிசேஷ தூதுவர் சங்கம்

திருச்சபை மக்கள் சிதறப்பட்டு (அப் 8:1-4) போன பின்னர் அவர்களுக்கு இறுதியாக தேவன் அவர்களை எருசலேம் முதல் யூதேயா, சமாரியா, அங்கிருந்து பூமியின் கடைசி பரியந்தம் சாட்சிகளாக வெளியில் சென்று எட்டி பரந்து நிற்கும்படி விரும்புகிறார் என்ற செய்தியைப் பெற்றனர். (அப் 1:8) திருச்சபையானது வெகு விரைவில் வல்லமை மிக்க சுவிசேஷ தூதுவர்களை அனுப்ப ஆரம்பித்தது.

அப் 13:1-3

அப் 13:4 -சீப்புரு தீவு

அப் 13 - அந்தியோகியா

அப் 14:1 - இக்கோனியம் முதலியன

### C. வல்லமை (அ) பல மிகுந்த எதிர் முனைச் சந்திப்புகள்.

வல்லமையான எதிர்முனைச் சந்திப்புகள் ஒருங்கிணைந்த பலமிக்க ஆயுதங்களாக சுவிசேஷ பிரச்சாரத்திற்கு இணைப்பட்டன. எங்கெங்கே அப்போஸ்தலர்களும் சீஷர்களும் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தார்களோ அங்கெல்லாம் இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்தபடி அடையாளங்களும் அற்புதங்களும் நிகழ்த்தப்பட்டன. மாற்கு 16:15-20.

‘‘இப்படி எருசலேம் துவக்கி சுற்றிலும் இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்திருக்கிறேன். அற்புத அடையாளங்களின் பலத்தினாலும் தேவ ஆவியின் பலத்தினாலும் நடப்பித்தவைகளை அல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை.’’ என்று பவுல் அப்போஸ்தலன் அறை கூவுகிறார். ரோமர் 15:18b-19 இவ்வகையான சாட்சிகள் இன்றும் நடைமுறையில் இருக்கின்றன. எங்கெங்கெல்லாம் சுவிசேஷம் இந்த வழியில் பிரசங்கிக்கப் படுகிறதோ அங்கெல்லாம் மகத்தான முன்னேற்றமும் வளர்ச்சியும் காணப்படுகிறது.

**D. <u>பிற வகையான ஊழியர்களின் நடவடிக்கைகள்</u>** (திருச்சபையில் ஈடுபடுத்திக் கொள்ளுதல்)

ஆதித் திருச்சபையின் எழுப்புதல் என்பதில் ஊழியர் அல்லாதவர்கள் ஒரு குறிப்பிட்ட சிறப்பான பங்கு கொண்டிருந்தனர். திருச்சபை சிதறப்பட்டுப் போன பிறகு அப்போஸ்தலர் மாத்திரமே எருசலேமில் தரித்திருந்தார்கள். (அப் 8:1-4) சபையில் மீதியானவர்கள் சித்ரவதையால் சிதறப்பட்டு விட்டனர். ஆகவே இந்த புகலிடம் அடைந்தார்கள். எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் சுவிசேஷத்தை அறிவித்து பிரபலப்படுத்தினார்கள். அவர்களது ஊழியம் சாதாரணமான பிரசங்கத்தோடு அமையாது வேறொரு மாதிரியான ஊழியமாக அதன் மூலமாக இயேசுவை பற்றி அவர்கள் எங்கெல்லாம் பேசப்போனார்களோ அங்கெல்லாம் இயேசுவை பற்றி பேசினார்கள். (Greek: “laleo”)

என்னை பொறுத்த மட்டில் நான் நம்பிக்கையுடன் கருதுவதாவது இந்த மகா எழுப்புதலும் கடைசி கால அறுவடையுமே சேர்ந்து அவற்றில் ஊழியர்களாக அர்ப்பணிக்கப்படாதவர்கள் பிரதானமாகவும் பலமாகவும் பிரசன்னமாயிருப்பார்கள். (நான் அபிஷேகம் அல்லது அர்ப்பணிக்கப்படுதல் என்பதை அதன் தொழில் முறை மொழியில் நிலவும் கருத்துப்படி ‘ஒரு அர்ப்பணிக்கப்பட்டவர்’ என்பவர் ஒரு இறையியல் கல்லூரியில் பயிற்சி பெற்று ஒரு கல்லூரிப் பட்டமும் பெற்றவராக இருக்க வேண்டும்) அந்த மகத்தான அறுவடை தற்காலத்தில் நடைபெறுவது சீனா மக்கள் குடியரசு நாட்டில் நடைபெறுவதாக இருக்கலாம். இதற்கு அறுவடை மேம்பாட்டுடைய ஒரு எடுத்துக்காட்டாகும். அந்த பல ஆயிரக்கணக்கான செயலூக்கம் உடைய வழிகாட்டி முன் செல்லும் தலைவர்களில் ஒரு குறைந்த சதவிகித ஊழியர்களே இறையியல் கல்லூரியில் பயிற்சி பெற்றிருப்பர். அதிலும் மிகக் குறைந்தவர்களே எந்த வகையான ஸ்தாபனத்தாலும் அதிகாரப்பூர்வமாக அர்ப்பணிக்கப்பட்டிருப்பார்கள்.

**E. <u>பரிசுத்த ஆவி அருளும் துணிச்சல்</u>**

வேறுபடுத்திப் பார்த்தல், மிரட்டல்கள், சித்திரவதை ஆகியவற்றின் மேல் முகப்போக்கில் ஆதித் திருச்சபைக்கு ஒரு விசேஷமான துணிச்சல் அவர்களுடைய பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையாக இருந்தது. அப் 4:18-31ல் காணப்படும் சம்பவமானது அவர்களுடைய பலவீனமான ஸ்தானத்தையும் அதிகார வர்க்கத்தினருடைய மிரட்டுதல்களுக்கு அவர்கள் காட்டிய துணிச்சலான எதிர்ப்புக்கும் ஒரு நேர்த்தியான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அப் 4:18 - இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கட்டளையிட்டார்கள்.
அப் 4:29 - தைரியத்தோடு சொல்லும்படி அனுக்கிரகித்தருளும் என்றார்கள்.
அப் 4:31 - தேவ வசனத்தைத் தைரியமாய் சொன்னார்கள்.
இந்த விதமான துணிச்சலானது சுவிசேஷத்தை செயலூக்கத்துடன் பிரபலப்படுத்துகிறவர்களுக்கு மிகவும் அவசியமான தேவையாகும். இந்த விதமான வேறுபாடுகள், மிரட்டல்கள் இல்லாவிட்டாலும் சுவிசேஷத்தை அச்சமின்றியும் செயலூக்கத்துடன் பிரபலமாக அறிவிப்பதற்கு மகா தைரியமும் துணிச்சலும் அவசியமாகிறது. இந்த விதமான பிரச்சாரமானது திருச்சபையின் பலம் மிகுந்த வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகிறது.

**F. <u>அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள்</u>** (அப் 4:13)

இரட்சிக்கப்பட்டு மீட்கப்படாத சமூகத்தினருக்குங் கூட அந்த சீஷர்கள் இயேசுவுடனே கூட உபயோகமான நல்ல நேரத்தைக் கழித்தார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இந்த சீஷர்கள் கிறிஸ்துவுடனே கூட அனுபவித்த அந்நியோந்நியமான ஐக்கியத்தின் விளைவுகளைப் பற்றி அனைவரும் அறிந்திருந்தனர்.

**G. <u>அனுதின நடவடிக்கைகள்</u>**

தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவை கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். (அப் 5:42) திருச்சபையின் சாட்சியும், பிரச்சாரமும் அவர்களுடைய அனுதின வாழ்க்கையின் குறிப்பிடத்தக்கப் பண்பாக அமைந்தது.

# அதிகாரம் 3 - சிறிய சபைகளுக்கான சபை வளர்ச்சி

சமீப காலத்தில் ஒரு புதிய சபை கட்டுதலை நாட்டியவர்களுக்காவும் அல்லது சபை கூடுதல் சிறியதாக உள்ளவர்களுக்காகவும் ஒரு வேளை தங்களுக்கென்று ஆலயக் கட்டடம் இல்லாதவர்களுக்காகவும். ஆனால் அங்கத்தினர்கள் நிதி நிலவரம், வசதிகள் ஆகியவைகளுக்கு குறைந்த அளவு கிட்டும் தன்மை இருந்தாலுங்கூட **உன்னுடைய திருச்சபை இன்னும் வளரக் கூடும்.**

## உன்னுடைய சபையை இயேசு பார்த்தது போல் பார்க்கவும்

மத்தேயு 18:20ல் திருச்சபையை அதன் எளிய வடிவ அமைப்பில் ஒரு சுருக்கமான நேர்த்தியான சொற்பொருள் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். இயேசு ஒரு சந்தர்ப்பத்தில் திருச்சபை அலுவல்கள் பற்றிய ஒரு கருத்தூன்றிய விவாதத்தின் போது சொல்லுகிறதாவது, ''இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்றார். ஆகவே ஒருத் திருச்சபையானது அதன் சிறிய வடிவத்தில் இருப்பதாவது.

a: குறைந்தது இரண்டு அல்லது மூன்று பேர்
b: இயேசுவின் நாமத்தினாலே கூடிவரும் பொழுது
c: அங்கே அவர்கள் நடுவிலே இயேசு இருக்கிறார்.

அங்கே பின்வருபவை குறிப்பிடப்படவில்லை.

a: ஒரு ஆலயக் கட்டடம்
b: எந்த விதமான பொது வழிபாட்டு முறை அல்லது ஆராதனை முறை
c: அர்ப்பணிக்கப்பட்ட குருமார் (அ) இறையியல் பட்டதாரிகள்
d: ஸ்தாபன அமைப்புத் திட்டம்

அந்த நாலு சுவிசேஷங்களிலும் இயேசுவின் உலகப் பிரகாரமான ஊழியத்தைக் குறிப்பிடும் பொழுது மூன்று இடங்களில் மட்டுமே ''ஆலயம்'' என்ற பதமும் 80 முறையாக ''இராஜ்ஜியம்'' என்ற வார்த்தையும் சொல்லப்பட்டிருக்கிறதென்பது ஆர்வ நோக்குக்குரியது. ஆனால் அந்த மூன்று ஒத்து வாக்கியங்களும் நமக்கு சில முக்கியமான பாடங்களை எவ்வாறு எந்த நோக்குடன் இயேசு திருச்சபையைக் கருதினார் என்று கற்பிக்கிறது.

1) மத் 16:16-18 சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை. பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்'' என்றார்.

கவனத்திற்கு:

- அது இயேசுவானவரே திருச்சபையைக் கட்டுகிறார்.
- அதன் அஸ்திபாரம், வெளிப்பாடு, பாவ அறிக்கை யாவும் கிறிஸ்து யார் என்பது.
- தேவன் மாத்திரமே அந்த வெளிப்படுத்தலைக் கொடுக்க முடியும்.
- தேவன் தமது இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை அப்போஸ்தல வரம் உள்ள மனிதர்களுக்கு
- பரலோகத்தில் திறக்கப்பட்டது எதுவோ அது திறக்கப்பட கட்டளையிடப்படும்.
- அவர்கள் தேவன் பரலோகத்தில் கட்டியதை அவர்களால் கட்டி எழுப்பிப் போடவும் முடியும்.

2) மத் 18:15-20ல் உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம் செய்தால் அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து. அவன்

உனக்கு செவி கொடுத்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவி கொடாமல் போனால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவி கொடாமற் போனால் அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. சபைக்கும் செவி கொடாதிருப்பானானால் அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ''அல்லாமலும் உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்'' என்றார்.

கவனத்திற்கு:

- திருச்சபையானது விசுவாசிகளின் சகோதரத்துவத்தை (Greek: ''koinonia'') உடையது.
- தேவன் சகோதரர்களை சுறுசுறுப்பாக ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் பின்பற்ற விரும்புகிறார்.
- திருச்சபை என்பது ஒரு கூட்டம் அல்லது மக்கள் திரளாகக் கூடியிருப்பதாகும்.
- அவர்கள் ஒருமனப்பட்டு கேட்பதெல்லாம் தேவனால் கொடுக்கப்படும்.
- இரண்டு அல்லது மூன்று பேர் எங்கே அவருடைய நாமத்தினால் கூடி இருக்கிறார்களோ அவர்கள் நடுவில் அவரும் இருப்பார்.

## திருச்சபையை விட ஐக்கியத்தை எண்ணிப்பார்

திருச்சபை என்பது ஆண்டாண்டு காலமாக அதிகமான துணைப் பண்புகளைச் சுட்டிக்காட்டும் சொற்களையும் பொது நலக் குழுக்களையும் வேதாகமத்துப்படி அல்லதா அம்சங்களையும் தன் பால் சேர்த்துள்ளது. ஆகவே திருச்சபை என்பதை சொற்பாங்குகளின்படி யோசித்துப் பார்த்தால் நமது மனதில் ஒரு அதிகமான வேதாகமத்தைச் சார்ந்து அல்லாத ஒரு உருவகத்தை மையப்படுத்தி நோக்குகிறது. ஒரு திருச்சபையின் அமைப்பையும் இயல்பையும் வருணிப்பதற்கு அதிகமாக அடிக்கடி நாம் உபயோகிக்கும் வார்த்தையாவது ''ஐக்கியம்'' என்பதாகும். இதை கிரேக்க பதமானது koinonia என்பதாகும். இந்த வார்த்தை தான் ஒரு திருச்சபை எப்படி இருக்க வேண்டும் என்பதை வர்ணிக்க மிகவும் சிறந்த பதமாகும்.

koinonia அல்லது ஐக்கியம் என்பது மிகவும் ஆழமான, செல்வம் உடைய, பலம் மிக்க, மிகுந்த உள்ளார்ந்த அந்நியோந்நியமும் அங்கு உள்ளதாய் இருக்கும் கூட்டாளித்துவத்தை ஒருங்கு இணைத்தல் என்பதை விவரிப்பதாகும். இது இந்த மாதிரியான பிரயோகத்தில் பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

- தேவனுடன் நமக்கு இருக்கும் உறவுத் தொடர்பு
- கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் ஒருவருக்கொருவர் உள்ள உறவு தொடர்புகள்.

கிறிஸ்துவின் பார்வையில் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபன திருச்சபையும் ஒரு koinonia ஆகும். ஓர் ஜீவனுள்ள, அதிர்கிற பல மிகுந்த தங்களை ஒப்புக் கொடுத்த விசுவாசிகளின் ஐக்கிய கூட்டணி ஆகும். அவர்களுடைய ஒப்புக் கொடுத்தலாவது முதலாவது தேவனுக்கும் இரண்டாவதாக ஒருவருக்கொருவர் ஒப்புக் கொடுத்தலை உடையது. இந்த koinonia என்பதன் அடிப்படையான அர்த்தமாவது கூட்டாளித்துவம் என்பதாகும். விவாகம் என்பதில் எடுத்துக்காட்டாக வேதாகமத்தில் காட்டப்படுவது இந்த மாதிரியின் ஒரு இலட்சியமாகும். இதன் அங்கத்தினர்கள் கூட்டாளித்துவ உறவு முறையில் சம பங்குதாரர்கள். அதன் நடவடிக்கைகளில் அவர்கள் முழுவதுமாக பங்கெடுத்துக் கொண்டு, அதனுடைய பொறுப்புகளிலும் சலுகைகளிலும் சமமாக பகிர்ந்து கொள்வார்கள். இந்த விதமான தன்மையுடைய உறவுத் தொடர்புகளை விளக்கும் வார்த்தைகளாவன: பகிர்ந்து கொள்பவர், பங்கெடுத்துக் கொள்பவர் இணையாக செயல்படுபவர், தோழன் பங்கு கொள்பவர் என்பனவாகும். மிகவும் கவர்ச்சிகரமானதும், கட்டாயமாக ஈர்க்கும் அம்சமாக ஆதித் திருச்சபையில் நிலவியது.

இந்த விதமான தொடர்பு உறவு முறை என்று நான் நம்புகிறேன். இந்த வகையான பாங்கான நிலைமையே அதில் பங்கு கொள்பவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு பக்க அம்சத்தையும் தொட்ட ஒரே ஒரு காரியம் ஆகும். அது சவால் நிறைந்ததாகவும், மன நிறைவை அளிப்பதாகவும் இருந்தது. அதுவே கவர்ச்சிகரமான கனிமமாக திரளான மக்களைத் தன் சுற்று வட்டத்திற்குள் கவர்ந்திழுத்தது. நான் மேலும் நம்புவதாவது இந்த வகை உறவுத் தொடர்பு அதீதமான கவர்ச்சி உடையதாக இன்று விளங்குவதுடன் எந்தவொரு திருச்சபையிலும் இந்தத் தன்மையான தொடர்பு உறவை மேலோட்டமாக பயன்படுத்தும். எந்தத் திருச்சபை ஐக்கியத்திலும் இவ்வகையான தொடர்பு பலமிகுந்த நோக்கத்தையும் வளர்ச்சியையும் அனுபவத்தில் அடையும்.

## வீடுகளில் திருச்சபை

லூக்கா 9:1-6லும் லூக்கா 10:1-12லும் முதல் சுவிசேஷகர்களாக எப்போதோ அனுப்பப்பட்டவர்களை இயேசுவானவர் அபிஷேகித்து அர்ப்பணிப்பதைப் பார்க்கிறோம். இதற்குப் பல ருசிகரமான குறிப்புகள் உண்டு . அவைகளில் ஒன்று அவர்கள் தனிப்பட்டவர்களின் இல்லங்களை தாங்கள் தங்கும் இடமாகவும் அவர்கள் செயல்பாடுகளின் அடித்தளமாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். இதுதான் அவர்கள் தனிப்பட்ட இல்லங்களை சுவிசேஷ பிரச்சாரத்திற்கு அடித்தளமாகவும், மேலும் அவர்களுடைய புதியதாக தோன்றி நிலவிய சபைகளின் செயல்பாடுகளை இயக்கி நடத்தும் இடமாகவும் உபயோகிக்கும் நீண்ட கால பாரம்பரியம் ஐயமறத் தோன்றியதெனக் கொள்ளலாம்.

ஆதித் திருச்சபைகளின் செயல்பாடுகளில் பெரும்பான்மையானவை புதிய விசுவாசிகளின் வீடுகளிலே நடைபெற்றது. ஆகவே இயேசுவானவரும் அவரது அப்போஸ்தலர்களின் பார்வையில் ஒரு வீட்டில் இயங்கிய சபை பூரணமான ஒழுங்கு முறை சபையாக அதற்கென்று தனியான பிரதிஷ்டை செய்யப்பட்ட ஓர் கான்கீரிட் கட்டடமோ அல்லது பொது ஆராதனை முறையோ அதை முறைப்படி உறுதி செய்ய அவசியமில்லை என்பது கண்கூடு. ஆகவே ஆதித் திருச்சபையில் சுமார் மூன்று நூற்றாண்டுகளாக பிரதிஷ்டை செய்யப்பட்ட கட்டடங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் உன்னுடைய சபையில் சில அங்கத்தினர்கள் என்றாலும், ஓர் வீட்டில் கூடி வந்தாலும் நீ வெட்கப்படவோ அல்லது குழப்பமடையவோ அவசியமில்லை. நீ திருச்சபையின் மாதிரியிலும், அநேக திருச்சபைகள் இந்த முறையாக ஆரம்பிக்கப்பட்ட வகையிலும் ஒத்து இருக்கிறாய்.

## சிறிய சபைகளில் செயலூக்கத்திற்கான முக்கியமான ஏதுக்களாகிய காரணங்கள்.

## A: மந்தைக்கு மேய்ப்பனாக இரு.

கிறிஸ்துவை நல்ல மேய்ப்பனாக ஒப்புமைப்படுத்தியும் விசுவாசிகளை அவருடைய மந்தை என ஒப்புமை படுத்தியுள்ளது. நல்லதானதொன்று போதகர்களானவர்கள் விசுவாசமுள்ள துணை மேய்ப்பர்களாக கிறிஸ்துவின் சார்பில் தங்கள் மந்தையின் பேரில் கவனம் கொள்ள வேண்டும்.
சங்கீதம் 23 இந்த மாதிரியான விதத்தில் ஆர்வத்தை தூண்டக் கூடியது. யூதப் பாரம்பரியத்தின் படி அந்த சங்கீதம் ஆடுகளின் ஜீவியத்தில் ஒரு நாள் பகலையும் ஒரு இரவையும் பிரதிபலிக்கிறது. அந்த ஆடுகள் ஓர் அதிசயமான மேய்ப்பரைக் கர்த்தரில் பெற்றிருப்பதை ஒரு பாக்கியமாக எண்ணிப் பார்க்கின்றன.
ஆடு எந்த விஷயங்களில் நன்றிக் கடன் பெற்றுள்ளன என்பதைக் கவனித்துப் பார்.
கர்த்தர் என் மேய்ப்பர். (மேய்ப்பர்)
அவர் ஆடுகளுக்குப் போதுமான உணவை தருவதாக உறுதி அளிக்கிறார். (கொடுப்பவர்)
அவர் வழிகாட்டி முன் செல்பவராக ஆடுகளுக்கு முன்பாகப் போய் சரியான வழியில் நடத்துகிறார். (வழிகாட்டி முன் செல்பவர்)
அவர் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமரப் பண்ணுகிறவர். (பாதுகாக்கிறவர்)
அவர் பசுமையான மேய்ச்சல் இடங்களில் இளந்தளிர்களை ஆகாரமாகத் தருகிறார். (போஷிப்பவர்)
அவருடைய ஊழியத்தில் புத்துணர்ச்சி அளித்தும் புது பெலனும் அளிக்கிறார். (புது பெலன் அளிப்பவர்)
அவர் நீதியை முன் மாதிரியாக வைத்து (நீதியின் பாதைகளில்) ஆடுகளைப் பின்பற்றச் செய்கிறார். (முன் மாதிரியானவர்)

மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். (ஆறுதல் அளிப்பவர்)
அவர் பாதுகாப்பாக ஆடுகளை பட்டியில் வைத்து காக்கிறார். அங்கு ஓநாய்களும் கழுதைப் புலிகளும் வர முடியாது காக்கிறார். (காவல் காப்பவர்)
என் தலையை எண்ணெயால் அபிஷேகம் செய்கிறார். (அபிஷேகம் செய்பவர்)
அவர் ஜீவிய காலமெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரச் செய்கிறார். (நம்பிக்கை தருபவர்)
ஆட்டு மேய்ப்பனின் வீட்டில் ஆடுகள் நீடித்த நாட்களாக நிலைத்திருப்பவை. (பிற்காலத்துக்காக நம்பிக்கையை தூண்டுபவர்)

## B: உன்னுடைய ஊழியத்தை விருத்தி செய்

நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும் படி கவனமாக இருப்பாயாக. (கொலோ 4:17) வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. “மூப்பராகிய சங்கத்தார் உன் மேல் கைகளை வைத்த போது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும் படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு இவைகளிலே நிலைத்திரு. உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை கொண்டிரு. இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்.” (I தீமோத் 4:13-16).

தேவன் ஒரு திருச்சபையை அதன் தலைமைத்துவத்தை விட பெரிதாக வளர விட முடிவதில்லை. அவரை உன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஊழியத்தையும் விருத்தி செய்யும்படி அனுமதித்தால் திருச்சபையுங்கூட உன்னோடு வளரும். உன்னுடைய வளர்ச்சி பூரணமான உன் ஜீவியத்திலும் ஊழியத்திலும் நன்மையைப் பெற்று கூட வளருவதாகும். ஆதி அப்போஸ்தலர்கள் ஊழிய வளர்ச்சிக்கு உயர்ந்ததோர் முன்னுரிமை அளித்து ஜெபத்தில் தரித்திருப்பதிலும், தேவ வசனத்தைப் படிப்பதிலும் வசனத்தைப் பரப்பும் ஊழியத்திற்கும் கொடுத்திருந்தார்கள். (அப் 6:4)

## C: அடிப்படை கோட்பாடுகளை கைக்கொண்டு அப்பியாசித்துக் கொள்.

திருச்சபையின் வளர்ச்சியையும் பரிமாணத்தையம் கருத்தில் கொள்ளாது பின்பற்ற வேண்டிய மூன்று அடிப்படை கோட்பாடுகள்.

- செயலூக்கமான தலைமைத்துவம்
- திருச்சபையை நன்னெறிப்படுத்தல்
- சுவிசேஷ பிரபல்ய செயல்பாடுகள்

(இந்த கொள்கைகள் முந்தைய அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. அவைகளைக் கவனமாகப் படித்து விசுவாசத்துடன் அப்பியசித்துக் கொள். இவைகள் சிறிய திருச்சபைக்கு அத்தியாவசியமாகவும் செயலூக்கம் பெற்றும் பெரிய சபையைப் போன்று செயல்படும்).

## D: OIKOS என்ற கட்டு இணைப்பை உடைக்காதே

புதிய சிறு கூட்டமான சபைகளில் பொதுவாக பெரும்பான்மையானவர்கள் புதிய விசுவாசிகளாக இருப்பார்கள். இது அவர்களுக்கு இருக்கும் அநேக அனுகூலங்களில் ஒன்றாகும். இதில் பல அனுகூலங்கள் இருக்கின்றன. அவையாவன:

- புதிய விசுவாசிகள் அனைவரும் அவர்களுடைய முதல் அன்பின் மகிழ்ச்சியான கட்டுக் கடங்காத பாச நிலையில் இன்னும் இருப்பார்கள்.
- அவர்கள் குதுகாலத்தால் நிறைந்து, செயல்பாட்டுடன் இருப்பார்கள்.
- அவர்கள் தங்களுடைய சாட்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதலை இலகுவாகக் காண்பார்கள்.
- அவர்களுக்கு கிறிஸ்தவர் அல்லாத நண்பர்களுடன் இன்னும் ஒப்பந்தங்களை நீடித்து வைத்து கொண்டு இருப்பார்கள்.

நீ அவர்களை அத்தகைய நண்பர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுமாறு ஊக்க மூட்டுவது முக்கியமாகும். ஏனென்றால் அவர்கள் வருங்கால வாய்ப்பினை எதிர்பார்க்கக் கூடிய சுவிசேஷ பிரபல்யத்திற்கேற்ற களமாக இருப்பார்கள். வேதாகமம் இந்த விதமான குடும்ப அங்கத்தினர்களையும் தனிப்பட்ட OIKOS என்று அழைக்கிறது. (அதாவது உன்னுடைய தொடர்பும் ஒன்றுக்கொன்று

செயலாற்றும் வட்டத்திற்குள் இருக்கும் மக்கள்) அவர்களுக்கு சாட்சியாக இருப்பதும், கிறிஸ்துவுக்காக அவர்களை மேற்கொண்டு கொண்டு வருவதும் விசேஷமானதோர் சுவிசேஷ பிரச்சாரத்தைப் பயனடையச் செய்யும் வழியாகும்.

## E: ஒரு சிறிய திருச்சபையின் விசேஷமான அம்சங்கள்:

திருச்சபை வளர்ச்சியின் யுக்தி முறைகளில் சில அம்சங்கள் பெரிய திருச்சபைகள் பயன்படுத்தி ஈடுபடுத்திக் கொள்வது சுலபமாகத் தோன்றினாலும் ஆனால் இங்கே சில வகையான தோற்றங்களில் எந்த விதமான கூடுதல் சபைகளும் எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அவைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

# **ஜெபத்தின் மேல் பலமான அழுத்தம் தருதல்.** ஜெபமானது ஆதித் திருச்சபைகளின் பிறப்பு சூழ்நிலைமையாகவும் இன்றைய திருச்சபை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஏதுவாகவும் இருக்கிறது. எல்லா மட்டங்களிலும் எழுப்புதல், ஆரோக்கியமான வளர்ச்சியான விருத்தி, பல மிகுந்த வளர்ச்சி முதலானவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அது கூட்டமைப்பிலும் எல்லா விதமான குழுக்கள் மற்றும் தனி நபர்கள் மத்தியிலும் செயலாக்கப்பட வேண்டும். ஜெபமானது வளர்ச்சியின் எல்லா மட்டங்களிலும் அவசியமானது. அது பிறப்பில் உதவி செய்தும் நிலைநிறுத்தியும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகிறது.

# **பரிசுத்த ஆவியின் சூழ்நிலை மண்டலம்.** ஒரு மெய்யான பரிசுத்த ஆவியின் சுற்றுப்புற சூழ்நிலைக்கும் சுற்றுப் புறத்திற்கும் இரண்டு காரியங்கள் அவசியமாகிறது. முதலாவது தடை செய்யப்படாதப் பரிசுத்த ஆவியின் பிரசன்னம். சுதந்திரமாக பங்கெடுத்துக் கொள்ளுதல். பரிசுத்த ஆவியின் கனிகளும் வரங்களும் வெளிப்படையான வெளிக்காட்டப்படுதலாகவும் அது தானே இயங்கியும் ஆனாலும் ஒரு ஒழுங்கான முறையில் காட்டப்படவேண்டியது அவசியம். பரிசுத்த ஆவியின் விடுதலைப் பிரசன்னத்தைப் போல் எதுவும் இருக்க முடியாது. அவருடைய பிரசன்னமே வித்தியாசத்தை உண்டாக்கும்.

# **உவகை தரும் தனி மனிதர் சார்ந்த அந்நியோந்நியம்.** சிறிய சபைகளின் கூடி வருதல்களுக்கு விசேஷமான அனுகூலங்கள் கிடைக்கப் பெற இருக்கின்றன. அவற்றுள் ஒன்று உவகை தரும் வழக்கமான முறையில் அமையாத சிநேகிதப் பண்புடன் கூடிய கவனம் அளித்துப் பெறும் சூழ்நிலையாகும். இது அடிக்கடி அப்படிப்பட்ட சபைகளுக்கு சிறப்பம்சமாக அமைகிறது. மக்கள் ஒருவரையொருவர் தனிப்பட்ட முறையில் அறிந்து பழகும்படி வழி செய்கிறது. நட்புறவும், உறவுத் தொடர்புகளும் தனிப்பட்ட மனிதர் சார்ந்த நிலையில் பூரண திருப்தி தருவதாகிறது.

# **எல்லா விசுவாசிகளுக்கும் ஆசாரியத்துவம்.** சிறிய ஒன்று கூடும் சபைகளில் முழு நேர ஊழியர்கள் மிகக் குறைந்த அளவில் இருப்பார்கள். எல்லா விதமான தயாராக இருக்கும் உதவியானது உடனடியாக தேவைப்படும்போது கிடைப்பது மிகவும் பராட்டுதலைப் பெறும். ஒவ்வொருவருக்கும் மதிப்பு செய்யப்பட்டு அவசியமான போது தேவைப்படுவர். இந்த விதமான சந்தர்ப்ப நிலைமையானது திருச்சபை அங்கத்தினர்களுக்கு செயல்படுவதற்கு அவர்களுடைய ஆசாரியத்துவம் முறையை வெகு எளிதாக்குகிறது. மேய்ப்பன் தொழில் செய்தும், பேணி வளர்க்கவும், நன்னெறிப்படுத்தவும் ஒரு இயற்கையான பாணியில் இந்த மாதிரியான அமைப்பில் எடுத்து செயலாற்றக் கூடும்.

# **துதியை தூண்டி எழுப்புதலும் ஆராதனையும்.** பெரிய திருச்சபையில் அதிகமான எண்ணிக்கையானவர்கள் ஆராதனை சூழ்நிலை முறையை சாதாரணமாக கையாளும்படி செய்யக்கூடும். ஆனால் சிறிய கூடிவரும் சபையினர்கள் அடிக்கடி முறை சாரா ஓர் வழியை கையாண்டு அதை ஆராதனையில் மகிழ்ச்சியான ஆவியின் சுதந்திரத்தை ஏதுவாக்குகிறது. ஓர் மகிழ்ச்சியான ஆவியின் இயல்பான பண்பும், சுதந்திரமும் மகிழ்ச்சியின் ஆரவாரமும் ஓர் சிறிய கூடிவரும் சபைக்கு சிறப்பான பண்பாக அமைத்துக் காட்டுகிறது. இதற்கு மாறாக பெரிய திருச்சபைகளில் கட்டுக்குள் அமைந்த போக்கு காணப்படுகிறது. அந்த கட்டுப்பாடு குறைந்த சூழ்நலையில் மக்கள் சுதந்திரமாக உணர்ந்து பங்கு கொள்வதுடன் மகிழ்ச்சியான ஆராதனை வழிபாட்டை கையாளச் செய்கிறது.

# **இசைவான நடைமுறையில் பிரசங்கித்தல்.** சுதந்திரம், ஒழுங்கு முறைப்படி அமையாமை ஆகியவை பிரசங்கித்தலும் உண்மையாகவே பொருந்தும். பெரிய ஆலயங்களிலுள்ள பிரசங்க பீடம் பல சமயங்களில் பிரசங்கிப்பவரை செயலிழக்கச் செய்து ஒழுங்கு முறையில் அமைந்த ஒரு பிரசங்கத்தை செய்யும்படி தூண்டுகிறது. ஆராதனை ஒழுங்கு முறையில் பிரசங்கித்தல் என்ற அம்சமானது சந்தேகமின்றி சிறப்புக் கூறும் பகுதியாக வரம்புக்கு மீறிய செல்வாக்குடைய பாங்காக அமைகிறது. இக்காலத்தில் ஜனங்கள் எளிதானதும் இசைவானதுமான நடைமுறைச் செய்திகளையே கேட்க விரும்புகின்றனர் என்று நான் நம்புகிறேன். நடைமுறைக்கேற்றதும் இறையியல் படியான ஆய்வுக் கட்டுரையின்படி பிரசங்கித்த காலம் சென்று போயிற்று. ஜனங்கள் சாதாரணமான விஷயங்களையும் வாழ்க்கைப் பிரச்சனைகளை எவ்வாறு மேற்கொள்வதென்பதையும் அறிய விரும்புகின்றனர். அவர்கள் மற்றொரு வார நாட்களை நம்பிக்கையுடனும் ஊக்கத்துடன் செலவழிக்க வகை செய்யும் ஏதோ ஒன்றைக் கேட்க விரும்புகின்றனர்.

# **ஆவிக்குரியதும் சமூகத்துக்குரிய ஐக்கியத்துக்கான செயல்பாடுகள்.** ஒன்று கூடும் சிறிய கூட்டங்கள் ஐக்கியத்தை மகிழ்ச்சியுடன் செயல்படுத்திப்போற்றத் தக்க வகையில் கை கொடுத்து உதவுகின்றனர். இந்த வகையான ஐக்கியம் சமூக உள் பார்வையளவில் இளைப்பாறுதலுடன் அதிகமான ஆவிக்குரிய செயல்பாட்டு அளவை பெரிது படுத்துகிறது. இளைப்பாற்றிக் கொள்ளவும் கவனச் சிதறல்களை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும் சந்தர்ப்பங்களை உண்டாக்குக. அதற்காக வெளியே செல்லும் சுற்றுலாக்கள் ஐக்கிய பந்தி போஜனங்களை ஏற்பாடு செய்யவும். இந்த மாதிரி சமயங்களில் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் மிகவும் அதிகமாக அறிந்து கொள்ள உதவுகிறது.

## F: ஒரு கட்டிடத்தைப் பற்றியது என்ன?

திருச்சபை நடவடிக்கைகளுக்காக ஒரு பொருத்தமான மனதிற்கு ஏற்ற சொந்தமான ஓர் இடம் இருக்குமானால் அதற்கு உண்மையாகவே சில அனுகூலங்கள் உண்டு. எப்படியென்றாலும் சிறிய கூடிவரும் சபைகளில் காணப்படும் தவறுகளில் அடிக்கடி வருவதொன்றானது அதன் அனுகூலங்களுக்கு வரம்புக்கு மீறி மதிப்பு தந்து வெகு சீக்கிரத்தில் கட்டுவதற்கோ அல்லது விலைக்கு வாங்குவதற்கோ முயற்சிப்பது தான். இன்றைய உலகில் நிலமும் கட்டடங்களும் அதிகமான செலவன வகைகள். ஒரு தடவை ஐக்கியமானது இவற்றைப் பெறுவதற்கு ஈடுபட்டால் மற்ற செலவினங்களுக்கு அடிக்கடி நிதி நிலைமை இருக்காது.

ஆகவே வெளிப்படையாகத் தெரிந்த ஆலயக் கட்டிடத்தை விட முக்கியமான காரியங்கள் பல இருக்கின்றன. இவைகள் முதலாவதாக ஸ்தாபிக்கப்படவேண்டும். மிகவும் முக்கியமாக முன்னுரிமை பெறுவது ஒரு பலமிக்க ஊழியக் குழுவை உருவாக்குவதுதான். அத்துடன் அதற்கான அதற்குத் தேவையான அடிப்படையான தளத்தையும் உண்டாக்குவது தான். வருங்காலத்துக்கான ஓர் தீர்க்கதரிசனப் பார்வையுடன் எப்பொழுதும் உன்னுடைய ஊழியக் குழுவை உருவாக்க முயற்சி செய். தற்போதைய உடனடியான திருச்சபையின் வளர்ச்சியின் படிகளுக்கு அப்பால் உன்னை இழுத்துச் செல்லக் கூடியதான ஒரு குழுவை பற்றிக் கொள்ளவும். உதாரணமாக தற்சமயம் உன்னிடம் 50 பேர் கூடிவரும் சபையில் இருப்பார்களானால் உன்னை 250தான இலக்குக்கு அப்பால் கொண்டு செல்லக் கூடிய ஒரு குழுவை உருவாக்குவதற்கு முயற்சி செய். இந்த வகையான திட்டமிடுதல் கீழ்படிதலின் நிர்வாகத்தை திருப்பு முனையின் நிர்வாகத்தை விட சிறந்ததெனக் காட்டுகிறது.

ஒரு இள வயதான திருச்சபையை ஒரு சுவிசேஷ பிரச்சாரக் குழு சபையாக பயிற்சி தந்து உருவாக்க வேண்டும். அது உள்ளே இருக்கும் அக திருச்சபைக்கும் கடல் கடந்த முன்னணிகளில் நிற்கவும் அது தன்னுடைய நிதி ஆதாரங்கள் அனைத்தையும் வீட்டு மனை விற்பனை களத்தில் இணைபடுவதற்கு முன்னர் செயல்படுத்தப்படவேண்டும். ஆகவே வழக்கமாக பலவிதமான கட்டடங்களும் வசதிகளையும் திருச்சபைகள் குத்தகைக்கு விடுவதோ குடக் கூலிக்கு விடுவதோ அதை திருச்சபை வளர்ச்சி அடையும். ஒரு குறிப்பு முனைவரை அனுமதித்து பிறகு விலைக்கு வாங்குவது மிகவும் எளிதில் செய்யக்கூடியதும், சிக்கனமானதாயும் தோன்றும் வரை நீடிக்க வேண்டும். பல திருச்சபைகள் சேமிப்புக் கிடங்குகளை குத்தகைக்குத் தருவது விலைப்பயனுள்ளதாகவும் நிர்வாகிக்கக் கூடியதாகவும் காண்கின்றனர். ஒரு இளமையான வளர்ச்சியுறும் ஒரு கூடிவரும் சபைக்குக் கொடுக்கும் என்

ஆலோசனையாவது எதையும் விலைக்கு வாங்குவதோ அல்லது கட்டுவதோ அந்த ஐக்கியம் பெரிதாக வளர்ந்து, நிதி வருமானமும் சமன் பெற்று அது வரவு செலவுத் திட்டத்தை பாதிக்காத அளவு செயல்படக் கூடுமானால் அது வரை அவை தவிர்க்கப்படவேண்டும். சரியான, தகுதி பெற்ற ஓர் இடத்தை வாங்குவது ஒரு பெரிய தேவையாக வரவு செலவுத் திட்டத்தின் மேல் இருக்குமானால் அதை செயல்படுத்துவதில் கண்டிப்பாக இருப்பதைத் தவிர்த்து அது மற்ற செயல்பாடுகளை மட்டுப்படுத்துவதைக் குறைத்துப் பார்க்கவும்.

## G: ஒரு பெரிய திருச்சபையாக உருமாறுதல்

உன்னுடைய "சிறிய சபை வளர்வதற்கு" நீ மிகவும் ஜெபத்துடன் செயல்படுவாயானால் அநேகமான பல பெரிய திருச்சபைகள் உன்னுடைய சபையை இன்று இருப்பது போலவே ஒரு காலத்தில் தொடங்கப்பட்டன என்பதை நினைத்துப் பார். வளர்ச்சிக்கான தடைச் சுவர்களை தகர்த்து ஒரு காலத்தில் சிறியதாகவும் ஒரு வேளை அடையாளம் காணப்படாததாகவும் இருந்த திருச்சபை பின்னர் ஒரு காலத்தில் பெரியதாகவும், பல மிக்கதாகவும் அதிகமான செல்வாக்கு படைத்ததாகவும் வளர்ந்த சபையின் அங்கமாக இருப்பது ஒரு மனதிருப்தியுடன் நிறைவேற்றும் அனுபவமாகும். திருச்சபையை நாட்டும் ஊழியமும் திருச்சபை வளர்ச்சியும் சவால் மிகுந்ததாக அதற்கான அர்ப்பணிப்பும், ஒப்புக்கொடுத்தலும் கடின உழைப்பையும் வேண்டுவதாக இருக்கிறது. ஆனால் ஜனங்களை தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வந்து அவருக்குள் எல்லாக் காரியங்களிலும் வளர்ந்து வருவதைக் காண்பது வேறெந்த காரியங்களையும் விட மிகுந்த மனதிருப்தி தருகிறது.

# அதிகாரம் 4 - உங்களுடைய திருச்சபையும் வளர முடியும்

கடந்த இருபது ஆண்டு காலங்களுக்கு மேல் "திருச்சபை வளர்ச்சி என்ற கோட்பாடு" கிறிஸ்தவ உலகத்தின் மீது தீடீரென வெடித்தது. உலகமெங்கிலும் மனுஷரால் முயற்சி செய்யப்பட்ட யுக்தி முறைக்கும் மேலானது என்பதற்கு சாட்சிகள் உள்ளன. அது வெளிப்படையாக ஒரு தெய்வீக தீர்க்கதரிசன நோக்கமாகும். பெரிய, சிறிய தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட பொதுவான இறுதி கால அறுவடை காலம் என்பது நமது காலத்தில் வந்திருக்கிறது என்பதற்கு குறிப்படையாளமாகும்.

இந்த மிகப் பெரிய இயல்பானது அதீதமானதும் துடிப்புள்ளதாக இந்த உலகின் வளரும் நாடுகளில் காணப்படுகிறது. இந்த லௌகிகமான மேற்கத்திய உலகம் அதிகமாக ஆவிக்குரிய எழுப்புதல் இல்லாமல் இருக்கும் பொழுது மற்ற கண்டங்களிலுள்ள உலக நாடுகளில் வலிமை மிக்க தடையின்றி அதீத வேகத்துடன் செயல்படும் எழுப்புதல் மூலமாக புதிய விசுவாசிகளையும் ஆயிரக்கணக்கான கூடிவரும் சபைகளையும் பிறப்பித்து உண்டாக்குகிறது. அநேக சமுதாயங்களில் ஆயிரக்கணக்கான கூடி வரும் சபைகள் ஆண்டு தோறும் உருவாக்கப்பட்டும் அநேகமான ஸ்தாபிக்கப்பட்ட கூடிவரும் சபைகள் பரிமாணத்தில் ஆதிதமாக அதிகரிக்கின்றன. இதற்கு மிகவும் ஆச்சரியமான உதாரணமாக ஆசிய நாடுகளில் ஒன்றில் திகழும் சபையைப் பற்றி சொல்லலாம். அது 800,000 அங்கத்தினர்களைக் கொண்டு மேல் நோக்கி வளர்கிறது. ஆனாலும் மற்ற ஆயிரக்கணக்கானவை பார்வைக்கு அதிகமான பார்வைக்கு கௌரவம் அற்றவையாக இருந்தாலும் மனத்தில் நிற்கக் கூடிய திருச்சபைகளின் எடுத்துக்காட்டுகளாக அங்கத்தினரின் தொகை அதிகரிப்பிலும் செல்வாக்கிலும் விளங்கின்றன. அடுத்த சில பத்தாண்டுகளில் திருச்சபை நாட்டப்படுவதும், திருச்சபை வளர்ச்சியும் ஆசியா ஆப்பிரிக்கா லத்தீன் அமெரிக்கா முதலிய நாடுகள் எங்கும் துரிதமாக சிறப்புறும் என்று நான் நம்புகிறேன். இந்தப் பகுதிகளிலுள்ள திருச்சபைகள் மகத்தான மிஷினரி முயற்சிகளைத் தொடங்கி மேற்கத்திய நாடுகளில் செயலாற்றி அவைகள் ஒரு அகில உலக ஆவிக்குரிய அறுவடையாக முன்னால் காணப்படாத அளவுக்கு விரைவு படுத்துவார்கள் என்று மேலும் நம்புகிறேன்.

**இங்கே திருச்சபை வளர்ச்சியின் தனித்தன்மையான அம்சமானது நீடித்து நிற்கும்**

- ஏனென்றால் சர்வ வல்ல தேவன் அதற்கு ஆக்கியோனாக இருக்கிறார்.
- ஏனென்றால் இப்பொழுதே அதற்கான தீர்க்கதரிசன காலமாகும்.
- ஏனென்றால் உலகமெங்கும் இருக்கிற திருச்சபைகள் எண்ணிக்கையில் அதிகரிக்கும் பொழுது அவைகள் அதிகமான திருச்சபைகள் நாட்டப்படவும் அதிகமான சபை வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கு பொறுப்பு எடுத்துக் கொள்வர்.

- ஏனென்றால் வேதாகமம் கிறிஸ்து அரசாட்சி செய்ய திரும்ப வருவதற்கு முன் அடையாளமாக அகில உலகமெங்கும் ஒரு மகத்தான அறுவடையை முன்னுரைக்கிறது.

நாம் திருச்சபை வளர்ச்சியின் படிப்பை ஆரம்பிக்கும் காலத்தில் நாம் இந்த அடிப்படையான கேள்வியான ‘‘திருச்சபை என்பது என்ன’’ என்பதை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்.
நாம் ஏற்கனவே நமது முந்திய பாடப் பகுதியில் திருச்சபை என்பது ஒரு கட்டடம் அல்ல. ஒரு மத சம்பந்தமான ஸ்தாபனம் அல்ல, மதச் சம்பந்தமான அங்கமான பிரிவுமல்ல, மதத்தின் செயல்பாடுகள் நடத்தும் மையமான கேந்திரமுமல்ல என்று படித்தோம்.

ஒரு சபையென்பது செங்கற்களாலும் சுண்ணாம்பினாலும் உண்டானதல்ல மேலும் மரத்தாலும் இரும்பாலும் ஆனதல்ல. அது அதிகமான மக்களைக் கொண்டது. திருச்சபையானது ஒரு அழைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினால் ஆனது. கிரேக்க மொழியில் ‘‘Ecclesia’’= அழைக்கப்பட்டவர்கள் (மக்கள்) அதாவது ‘‘இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள்’’ (கொலோ 1:13) அழைக்கப்பட்டு உட்படுத்தப்பட்டவர்கள் தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டவர்கள் (கொலோ 1:13) அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் (ரோமர் 8:28) ஆக மேற்கூறியவர்களால் ஆனது. திருச்சபை நாட்டப்படுவதற்கும் திருச்சபை வளர்ச்சிக்கும் நம்முடைய பிரதானமான நோக்கமாவது இருளில் இருக்கிற மக்களை இருளிலிருந்து வெளியிலும் தேவனுடைய மகிமையான இராஜ்ஜியத்தின் வெளிச்சத்திற்கும் வருமாறு அழைப்பு விடுப்பதாகும்.

## ஆகவே திருச்சபை என்பதாவது:

– ஒரு மீட்கப்பட்ட ஜனக் கூட்டம். லூக்கா 1:68; கலா 3:13; I பேதுரு 1:18; வெளி 5:9
– ஒரு மீட்டுக் கொடுக்கும் கூட்டம். மத் 5:13-16. (உலகத்திற்கு சாரமும் (உப்பு) வெளிச்சமுமாய்
– சுறுசுறுப்பான ஆவியினால் அதிகாரம் பெற்ற கூட்டம். அப் 8:4
– உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி முன் குறித்தோர் கூட்டம். அப் 1:8b; சங் 2:8.

## நமக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு:

a: ஒரு பரம அழைப்பு. எபி 3:1. ‘‘பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள்’’
b: ஒரு உன்னதமான அழைப்பு. பிலிப் 3:14. ‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பு’’
c: ஒரு பரிசுத்த அழைப்பு. II தீமோத் 1:9. ‘‘பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.’’
d: நாம் ஐக்கியத்திற்குள் அழைக்கப்பட்டோம். (Koinonia) கிறிஸ்துவோடும் அவருடைய ஜனங்களோடும். (I யோவான் 1:3)
e: நாம் சீஷ்யத்துவத்திற்காக அழைக்கப்பட்டோம். மத் 28:19-20.
f: நாம் சாட்சிகளாக இருக்கும்படி அழைக்கப்பட்டோம். அப் 1:8.
g: நாம் ஊழியர்களாக இருக்கும்படி அழைக்கப்பட்டோம். கலா 1:5.

## திருச்சபை வளர்ச்சிக்கான முன் நிபந்தனையயான சில தேவைகள்:

**A: தரிசனம்.**
‘‘ஒரு தெளிவான தரிசனம் இல்லாவிட்டால் இந்தத் திட்டம் பயனற்றதோர் முயற்சி ஆகும்.’’

**B: வாஞ்சை**
அந்தத் திருச்சபை வளரும்படி வாஞ்சிக்க வேண்டும். ‘‘எந்தத் திருச்சபையும் வளர்ச்சி அடையும்படி வாஞ்சிப்பதில்லையா’’ என நாம் சொல்லக் கூடும். துக்ககரமான பதில் ‘‘இல்லை’’ என்பது தான். சிலர் சிறிது மிஞ்சியுள்ள மனப்பான்மை பெற்றிருப்பர். கடைசியான காலத்தில் தேவனற்ற உலகத்தில் திருச்சபையானது மிகச் சிறிய (மிஞ்சியதாக) மீதியானதாக ஆகிவிடும் என்று நம்பப்படுகிறது. ஒரு திருச்சபை தீவிரமாக வளருமானால் சில ஆவிக்குரிய உண்மைகளை அல்லது தன்மையை கட்டாயமாக விட்டுக்கொடுத்து விடும் என்று ஒரு போக்கில் நினைக்கின்றார்கள். சிலர் நாம் எண்ணிக்கையையும் (அளவையும்) தனி இயல்பையும் பெற்றிருக்க முடியாதெனவும் மேலும் அவர்கள் தனி இயல்பு என்று தாங்கள் நம்புவதைத் தெரிந்து எடுத்துக் கொண்டு மிகச் சிறியதாயிருப்பின் அதன் தனித் தன்மையும் சிறப்புடையதாய் இருக்கும் என்று அதையே தெரிந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

அநேக திருச்சபைகளில் திருச்சபை வளர்ச்சிக்கான சவாலைச் சரியாக சந்திப்பதில்லை. அநேக சபைகளில் திருச்சபை வளர்ச்சிக்காக சரியான முறையில் அதை நோக்கி முன்னேற தெரிவதில்லை. சிலர் தங்களுடைய சபை வளர்ச்சி அடைவதை முயற்சி செய்கிறார்கள். ஆனால் அது சரியாக நடைபெறவில்லை என்று உணருகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக சில திருச்சபைகள் அதற்குத் தேவையான விலையைக் கொடுப்பதற்கு தயாராக விருப்பப்படுவதில்லை. சிலர் தங்களுடைய சௌகரியமான மண்டல வட்டத்திலிருந்து வெளியே வருவதற்குத் தயாராக இருப்பதில்லை.

**அநேக திருச்சபைகள் சவாலைச் சந்தித்து ஏற்றுக் கொள்ள அச்சப்படுகிறார்கள்.**
தோல்விக்காக அஞ்சி அது சரியாக வேலை செய்ய முடியாது என்ற நிலைக்குட்படுவோமோ என்ற பயம் மேலிடுகிறது.
வளர்ச்சிக்கான பொறுப்பை ஏற்பதில் அச்சமுறுதல்.

- அதற்காக அதிகப்படியான வேலையை ஏற்படுத்துதல்
- அதற்காக தேவைப்படும் கூடுதல் நிதி நிலைமை
- அவர்களுடைய அலுவலக இடத்தை பெரிதாகச் செய்யும்படியான பொறுப்புணர்ச்சி
- மேய்ப்பனான தலைமைத்துவம் அந்த தரிசனத்தை ஏற்று ஒப்புக் கொள்ளுதல்
- அதை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.
- அதற்கான போதுமான பயிற்சியைத் தர வேண்டும்.
- அவர்களை முன் மாதிரியினால் நடத்த வேண்டும்.
- அவர்கள் விசுவாசிகளுக்கு சவால் விடுத்து செயலூக்கமடையச் செய்யவேண்டும்.
- அவர்கள் ஜெபத்துடன் தக்க இயக்க பலத்துடன் இடைபட வேண்டும்.

**C: திசை அறிதல்.**
நீ எங்கே போகிறாய் என்று உனக்குத் தெரியாத பொழுது எந்த வழியில் சென்றாலும் அந்த இடத்திற்கு உன்னைக் கொண்டு போய் விடும். ஒவ்வொரு திருச்சபைக்கும் தரிசனம் தேவை இலக்குங்கூட - அதாவது நீ எங்கே போகிறாய் என்பதும் அவ்விடத்திற்கு எப்படிப் போய் சேர்வாய் என்பதும் ஆகும்.

**இதற்கான தரிசனத்தைத் தேவனிடமிருந்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**
இதற்காக நீ விருப்பத்துடன் கற்பனை செய்வதோ அல்லது வினோதமான மனோ ராஜ்ஜியத்தில் ஈடுபட்டு ஒரு விதமான மனதின் ஓவியத்தை உன் திருச்சபை வளர்ச்சியைப் பற்றி அது எந்த விதமாக வளரலாம் என்று எதிர்பார்ப்பது விவேகம் ஆகாது.

- நீ அதைப் பற்றி ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.
- உன்னுடைய மனத்திலிருந்து முன்பு முன் யோசனையாக செய்யப்பட்ட கருத்துக்களை நீக்கி விட வேண்டும்.
- நீ தேவனுடைய ஆவியானவரை கிரியை செய்யம் படி செய்வதைக் கற்றுக் கொள்ளவேண்டும்.
- நீ உனக்கு நம்பிக்கையான உடன் ஊழியர்களுடன் உன் தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- நீ ஆவிக்குள்ளான ஐக்கியத்தை நிச்சயமாகத் தேடிக் கொள்ளவேண்டும்.
- அதைப் பற்றி நேர்முகமாக ஜெபிக்கவும். அதை மையமான கேந்திரத்திற்குக் கொண்டு வரவும்.
- அந்த தரிசனம் உனது ஆவியில் உள்ளே இருக்கட்டும்.
- அதை எல்லாவிதமான திட்டவட்டமான விவரங்களுடன் எழுத்து வடிவத்தில் கொடுக்கவும்.
- அதைப் பற்றி நேர் முகமாகப் பேசு. உன்னிடமும் உன் குழு அங்கத்தினர்களுடன் இதைச் செய்.
- தரிசனம் என்பது ஆவிக்குரியது. அதன் இலக்கு நடைமுறைக்குட்பட்டது.
- தரிசனத்தைத் தெளிவுபடுத்து. அதை இருப்பதாக நிச்சயப்படுத்து. தூண்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டு அளவைக்குட்பட்டு உண்மையாக, அடையக்கூடியதாக இருக்கவேண்டும்.

**D: உன்னுடைய இலக்கை புறக்கோடிடு அந்தத் தரிசனத்தை எப்படி அடைவாய் என்பது பற்றி.**

**A: எப்படி?**

இந்த விதமான வளர்ச்சியை உலக நடப்புப் பிரகாரம் எங்ஙனம் சாதிப்பாய்? தேவன் தம்வசம் ஒரு மார்க்கமான வளர்ச்சியை வைத்திருப்பதில்லை. அது ஒரு திருச்சபையிலிருந்து மற்றொரு திருச்சபைக்கும் மாறுபடும். தேவனுடைய நோக்கத்தை உன்னுடைய நிலைமையில் என்னவென்பதை அறிந்து கொள்.

**B: எப்பொழுது?**

இந்த விதமான வற்புறுத்தலை எப்பொழுது நாம் ஆரம்பிக்கலாம். ஒரு கால கட்டத்திற்குள் நிலை நாட்டப்பட வேண்டுமா? குறைந்த அல்லது நீண்ட கால இலக்குகளா?

**C: யாரோடு?**

ஆட்கள் எண்ணிக்கை பலம், இந்த நிகழ்ச்சி நிரலில் பங்கு கொள்பவர்கள் யார்? அந்த பலவேறு அம்ச மட்டங்களிலும் நடத்தி முன் செல்பவர் யார்?

**D: என்ன?**

இதற்காக என்ன விதமான தேவைகள் அவசியமாகும்? இதற்கு என்ன செலவாகும்? வரவு செலவு திட்டத்தில் தேவையானவை எவை?

**E: உறுதியான தீர்மானம்**

திருச்சபை வளர்ச்சி என்பது மிகவும் எளிதான தேவைகளைக் கோரும் வேலை அல்ல. அங்கே ஒரு கால் தடைகள் இருக்கலாம். மேலும் அதைரியப்படுத்துதலும் இடர்பாடுகளும் உண்டு. சந்தேகமின்றி நீ முன்னேறிச் செல்வதற்கு உறுதியான தீர்மானம் இன்றியமையாதது.

**F: மீள்பார்வையும் விரும்பிய விதத்தில் மாற்றி அமைத்துக் கொள்ளுதலும்**

இந்த நிகழ்ச்சி நிரல் முரண்பாடற்ற நேரான குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மீள்பார்வை செய்யப்படுவதும் அதற்கான சரிபடுத்தும் நடைமுறையும் நேர்த்தியான ஒத்திசைவுக்காக பிழைத்திருத்தமும் அவசியமாகும்.

## அதிகாரம் 5 - சுவிசேஷ பிரபல்ய ஊழியம்

“சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று.” (2 தீமோத் 4:5) இந்த வார்த்தைகள் பவுல் அப்போஸ்தலனால் தீமோத்தேயுவுக்கு சொல்லப்பட்டவையாகும். அவைகள் ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு திருச்சபைக்கும் பொருத்தமானவைகளே. ஒவ்வொரு ஸ்தல திருச்சபையும் சுவிசேஷ பிரச்சாரப் பணியைச் செய்யாவிட்டால் அது தன்னுடைய ஊழிய பக்க பலத்தை சரியான சீராகவும் முழுமையாகச் செய்வது ஆகாது. ஒவ்வொரு போதகரும், கூடிவரும் சபையினரும் உண்மையாகவும், ஜெபத்துடனும் அவர்களுடைய சூழ்நிலைமையிடத்தை மதிப்பீடு செய்து அவர்கள் இந்தக் கட்டளையை நிறைவேற்றுகிறார்களா என்று பார்க்கவும். மேலும் அவர்கள் தேவன் சித்தத்தை அவர்கள் தாமே நிறைவேற்றுகிறார்களா என்றும் அவர்களுடைய சமூகம் சித்தி பெறாமல் இந்த முக்கியமான காரியத்தில் உள்ளதா என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## சுவிசேஷ பிரச்சாரத்தை அழுத்தமாக வற்புறுத்துதல்

சுவிசேஷ பிரபல்யமாவது நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதும் பிரகடனஞ் செய்வதும் அறிவிப்புகள் கொடுத்தலும் சிறப்பாக நற்செய்தியையும் குறிப்பாக கிறிஸ்து இயேசுவின் இரட்சிப்பின் நற்செய்தியை பிரபலப்படுத்துவதாகும். சுவிசேஷ பிரபல்யம் என்பது கிறிஸ்துவுக்காகவும் அவருடைய இராஜ்ஜியத்திற்காகவும் செய்தலும் ஆனால் இவை இல்லாவிட்டால் திருச்சபை வளர்ச்சி அடைய முடியாது. அது திருச்சபை வளர்ச்சிக்கு அடித்தள ரேகையாகும்.

ஒரு சபையில் வளர்ச்சி என்பது ஜனப் பெருக்கத்தின் காரணமாக ஏற்படலாம். (உங்களுடைய அங்கத்தினர்களுக்கு பிறந்த குழந்தைகளால்) அல்லது அங்கத்தினர்கள் மாற்றம் பெறுவதால் (கிறிஸ்தவர்கள் தங்கள் அங்கத்தினர் உரிமையை உங்களுடைய சபைக்கு மாற்றிக் கொள்வதால்) ஆனால் மெய்யான வளர்ச்சியானது உண்மையான நற்செய்தி பிரச்சாரம் செய்யப்படாவிட்டால் நேரிட முடியாது. ஆகவே மத மாற்றமும் புதிய விசுவாசிகளைப் பேணிப் பாதுகாப்பதால் மட்டுமே முடியும்.

**– சுவிசேஷ பிரச்சாரத்தின் மீது அழுத்தமான வற்புறுத்துதல்**
ஜனங்களுக்கு சாட்சியாகச் செயல்படுவதும், கிறிஸ்துவுக்காக ஜனங்களை ஜெயித்து சேர்ப்பதும் நமது ஊழியத்தின் அம்சமாகவும் நித்திய ஜீவனுக்காகவும் அதன் பக்கமாக நாம் ஈடுபடக்கூடியது இது மட்டுமேயாகும். நாம் தேவனுடைய சமூகத்தில் வந்து விட்டால் அவரைத் துதித்து ஆராதிக்க முடியும். அதுவும் நித்திய நித்திய காலமாக ஆனால் நாம் அவருக்காக ஜனங்களை கவர்ந்திழுக்க முடியாது. நாம் அதைச் செய்யப் போவதென்றால் இப்பொழுதே அதை நாம் செய்தாக வேண்டும். ''இப்பொழுதே அதை செய்''.

**– சுவிசேஷ பிரபல்லியமாவது என்ன?**
இந்த வார்த்தையின் மூல அர்த்தமாவது பகிர்ந்து கொள்ளுதல் பிரசங்கித்தல் அறிவித்தல் ஆகியவை கிறிஸ்துவின் இரட்சிப்பின் நல்ல செய்திக்காக.

**– நாம் ஏன் சுவிசேஷம் அறிவித்தலை வற்புறுத்தி அழுத்திச் சொல்ல வேண்டும்?**
ஏனென்றால் தேவனுடைய இரட்சிப்பான கிறிஸ்துவின் மரணம் உயிர்தெழுதல் மூலமாக கிடைக்கப் பெற்றது. இந்த செய்தியானது வேதாகமம் முழுவதிலும் அடிப்படையான கோட்பாடாகக் காணப்படுகிறது. இரட்சிப்பாகிய அதன் சிவப்புக்கோடு வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை ஓடிக் கொண்டிருக்கிறது. ஆகவே சுவிசேஷ பிரச்சாரம் அல்லது நற்செய்தியைப் பரப்புதல் மிகவும் முக்கியமான பணியாக எந்தவொரு மனுஷனும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். சுவிசேஷ பிரச்சாரம் தேவனுடைய இருதயத்தின் ஓட்டமாகும். அதுவே கிறிஸ்து உலகில் வந்ததற்கு ஓர் முக்கியமான காரணமாகும். அவர் நமது இரட்சிப்பை தனது மரணத்தின் மூலமாகவும் உயிர்தெழுதலின் மூலமாகவும் சம்பாதிக்க வந்தார். (அவர்) ''இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்.'' (லூக்கா 19:10) காணமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் அளவும் தேடித் திரியானோ (லூக்கா 15:4).

நாம் சுவிசேஷ பிரச்சாரத்திற்கு வற்புறுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டும் ஏனென்றால்: (1) வேதாகமம் அதை வற்புறுத்துகிறது; (2) இயேசு அதை வற்புறுத்தினார்; (3) ஒவ்வொரு வளருகின்றதும் கிறிஸ்துவுக்காக மக்களைச் சம்பாதிக்கும் சபையும் அதை வற்புறுத்துகிறது. நாம் நம்முடைய திருச்சபையின் அங்கத்தினர்களை சுவிசேஷ பிரபல்யத்தில் கருத்தாய் இருக்கும்படி செய்யவேண்டும். சுவிசேஷ அறிவிப்பைப் பற்றி பிரசங்கிப்பதாலும், சுவிசேஷ அறிவிப்பைப் பற்றிக் கற்பிப்பதாலும், சுவிசேஷப் பிரச்சாரத்தைச் செய்து காட்டுவதாலும் மக்களை சுவிசேஷப் பிரச்சாரத்திற்காக பயிற்றுவிப்பதாலும்.

## சுவிசேஷ பிரபல்யம் - உள்ளேயும் வெளிப்புறத்திலும்

<u>சுவிசேஷ அறிவிப்பு திருச்சபைக்குள்ளும், வெளியிலும் நடைபெறவேண்டும்.</u>

## # ஆலயத்தின் சுவர்களுக்குள்ளே

**✸ சுவிசேஷ பிரச்சார ஆராதனைகள்.**
அநேக சபைகள் தங்கள் சுவிசேஷ அறிவிப்பு ஆராதனைகள் துதி ஆராதனைகள் வெற்றிற்குப் பதிலாக விழாக்களைக் கொண்டாட்டமாகச் செய்கின்றன. அவை சுவிசேஷம் என்னும் கருக்குள்ள கரையோரத்திலிருந்து பின்னோக்கி போய்விட்டன. அவைகள் ஆழமான என்ற வகைப்பட்ட ஒன்று கூடி வரும் கூட்டங்களை, எழுப்புதல் மிகுந்த சுவிசேஷ கூட்டத்திற்கு பதிலாக ஏற்றுக் கொண்டுள்ளன. அநேக காரணங்கள் (சாக்குப் போக்குகள்) இந்த விதமான இயக்கப் போக்கிற்குக் கூறப்படுகின்றன. ஆனால் அதற்கான காரணமாவது வழக்கமாக கிறிஸ்தவர் அல்லாதவர்கள் அந்த சபைகளில்

போதுமான எண்ணிக்கையில் வருகை தராமல் இருப்பதால் வராந்திர சுவிசேஷக் கூட்டம் நடத்த முடிவதில்லை. போதகர்கள் சாதாரணமான சுவிசேஷத்தைப் பரிசுத்தவான்களுக்க வாரந்தோறும் பிரசங்கிப்பதில்லை. பிரயோஜனப்படக் கூடியது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்திருக்கின்றனர். ஆகையால் அந்த நேரத்தைப் பரிசுத்தவான்களுக்கு போஷிப்பான சத்தியத்தைப் போதித்தல் நல்லது என்று கருதுகின்றனர்.

இந்த பிரச்சனைக்கு உண்மையான தீர்வானது அங்கத்தினர்கள் சாட்சி கூறுவதில் சுறுசுறுப்பாக செயல்பாட்டுடன் ஈடுபட்டு ஒவ்வொரு வாரமும் விசுவாசிகள் அல்லாதவர்களை திருச்சபைக்குக் கொண்டு வருவார்களானால் அந்த சிறிய கண்மாய் மீன்களால் (ஆத்துமாக்களால்) நிரப்பப்படும். போதகரே, ஓய்வுநாள் மாலை ஆராதனை வேளையில் உங்களது ஜனங்களை பயிற்றுவித்து, மறுபடியும் பயிற்சி கொடுத்து சாட்சி சொல்வதற்கும் சுவிசேஷம் அறிவிக்கவும் பயன்படுத்தலாம் அல்லவா? பிறகு கிறிஸ்துவுக்காக திருச்சபைக்கு மக்களைக் சுறுசுறுப்பாகக் கொண்டு வரும்படி ஊக்கப்படுத்துங்கள். உங்களது ஓய்வுநாள் இரவு கூட்டங்களைத் திரும்பவும் வல்லமையான சுவிசேஷ கூட்டமாக மாற்றவும் அதன் பின்னர் தேவன் அநேக ஆத்துமாக்களை மீட்கிறார் என்பதைப் பார்க்க விசுவாசியுங்கள்.

**✷ ''நட்புடன் உபயோகிப்பவர்'' சுவிசேஷக் கூட்டங்கள்**

''நட்புடன் உபயோகிப்பவர்'' என்ற சொற்றொடர் கணினி உலகத்துடன் வழக்கில் கொண்டு வரப்பட்டு கணினிகளையும் அதன் நிகழ்ச்சி நிரல்களை, சுலபமாகப் பயன்படுத்திக் கொள்வதும் எளிதாகக் கொண்டு செல்வதற்கும் உபயோகப்படுத்தப்படுவதாகும். மேலும் அந்த சொற்றொடர் செயலூக்கத்துடன் நடைபெறும் சுவிசேஷ பிரச்சாரக் கூட்டங்களை குறிப்பிட்டு விவரிப்பதற்கு நல்ல வழியாக இருக்கக் கூடியதாயிருப்பதால், அந்த கூட்டங்களையும் ''நட்புடன் உபயோகிப்பவர்'' என்று விசுவாசிகள் அல்லாதவர்களுக்கும் முன்னாள் கிறிஸ்தவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கும் பயன்படுத்தலாம். நட்புடன் உபயோகிப்பவர் கூட்டங்களில் ஒரு நட்புப் பாங்கான சூழ்நிலை இருக்கவேண்டும். அது மகிழ்ச்சியாகவும் நேர் முகமாகவும் இருக்க வேண்டும். புதிதாக வருகை தருபவர்கள் உடனடியாக வரவேற்கப்பட்டும் அதற்கான உணர்ச்சி கூட்டம் நடைபெற அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

அவ்வகையான கூட்டங்கள் நடைபெற உதவும் விசேஷமான அம்சபோக்குகளாவன:

– மகிழ்ச்சியான ஆனந்தக் களிப்புள்ள உயிரோட்டமான சங்கீதம் (இசை)
– வல்லமையான பரிசுத்த ஆவியின் சூழ்நிலையும் அதில் மக்கள் தேவனுடைய பிரசன்னத்தை உணர்வதும்
– சமயத்திற்குத் தேவையான எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய பிரசங்கம்
– பிரசங்க பீடத்திலிருந்து வரும் வல்லமையான அழைப்புகளால் மக்கள் ஆழமாகத் தூண்டப்பட்டு தங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தல்
– ஒரு சரியான பின் தொடரும் செயல்பாட்டுத் திட்டத்தால் புதிய விசுவாசிகளை விசுவாசத்தில் நிலை நிறுத்துவதற்கு

**✷ தேடுவோர் கூட்டங்கள்**

சில திருச்சபைகள் சமீப காலத்தில் ''தேடுவோர் கூட்டங்களை'' சிறப்பாய் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். இவைகள் விசுவாசிகள் அல்லாதவர்களுக்கு விசேஷமாக தனிப்பட்ட முறையில் உருவாக்கப்பட்டது. இவைகள் வேண்டுமென்றே இயற்பில் சமயசாற்பற்று விளங்குகின்றன. அவைகள் ஆராதனை வழிபாடுகள் அல்ல. ஜனங்கள் கூடிவரும் சபையினர் போல் அல்லாது பார்வையாளர்கள் போல காணப்படுவார்கள். இந்தக் கூட்டங்களில் நாடக பாணியில் பெரும்பாலும் அமைக்கப்பட்டு சுவிசேஷமானது நாடக அமைப்புடன் வெவ்வேறு பாணியில் தரப்படுகிறது. எந்தவொரு திருச்சபையும் பெரிதாக இல்லாவிட்டாலும் அதற்கான சரியான வசதிகளைப் பெற்றிருக்காவிட்டாலும் இந்த வகையான தோற்றப் பிரசன்னத்தை செய்து காட்டுவது எளிதல்ல. என்னவென்றாலும் தேடுவோர் சார்ந்த ஆராதனைக் கூட்டம் என்ற கருத்தாவது இந்த பாணியில் ஆன ஆராதனை என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதி ஒவ்வொரு சபையில் மனத்தில் யோசனை செய்ய வேண்டும். அவைகளை முக்கியமானதாக கருத்தில் கொண்டு நமது ஆராதனைகள் எந்த முறையில் உபயோகிப்போர் நட்பாக இருக்கிறது என்று ஆரம்பித்து நமது கூடிவரும் கூட்டங்களை விசுவாசிகள் அல்லாதவர்களின் கவனத்தைக் கவர்ச்சிப்பதென்பதையும் நமது ஆவிக்குரிய தராதரத்தை விட்டுக் கொடுக்காது செயல்படுவதில் காத்துக் கொள்ள வேண்டும்.

**✷ ஆத்தும ஆதாயம் செய்வோரின் மகா நாடுகள்.**
ஜனங்களை ஆத்துமா ஆதாயம் செய்யும்படி விழிப்பாய் இருக்கும்படிச் செய்ய உதவுவது சில மகா நாடுகளை நடத்துவதும் விவாக சம்பாஷணைக் குழுக்களையும் பயிற்சித் திட்டங்களையும் அந்த பாட சம்பந்தமாக நடத்துவதேயாகும். அதைச் சிறப்பாக விளம்பரப்படுத்து ஜனங்கள் அதற்கு வரும்படி ஊக்கப்படுத்து. அவர்கள் அங்கு வருவதற்கு எவ்வளவு எளிதாகச் செயல்படமுடியுமோ அவ்வளவு எளிதாக செயல்பட முயற்சியுங்கள். இந்த நிகழ்ச்சியை குடும்பம் மொத்தமாக ஆஜராக இருக்கும்படி பார்த்துக் கொள்வதை இலக்காக வைத்துக் கொள்ள ஆத்தும ஆதாயம் பற்றிய ஒரு பத்திரிக்கை வாயிலாக அவர்களைக் கொண்டு செல்லலாம் அல்லவா? அந்த மக்களை கர்த்தருடைய மேடை சம்பந்தப்பட்ட பணிகளிலும் ஆலோசனை கூறுவதற்கும் பயன்படுத்திக் கொள்க. தாங்களே சாட்சியாக இருக்கும் கலையில் பயிற்றுவித்து வரவும். நீயே ஒரு விசுவாசமுள்ள சாட்சியாக இருந்து முன் மாதிரியாக இருந்து மற்றவர்களையும் கிறிஸ்துவண்டை நடத்து. மேய்ப்பன் தனது 99 ஆடுகளுக்காக கவனம் எடுத்துக் கொண்டு அவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அந்த இரவில் வெளியில் சென்று காணமற்போன ஒரு ஆட்டுக்காக தேடிப் போவான் அல்லவா? (லூக்கா 15:4).

# ஆலய உடைமைகளுக்கு அப்பால்

**✷ சுவிசேஷ பிரபல்யத்தை செல் குழுக்கள் மூலம் செய்வது**
மறுபடியும் ஸ்தல திருச்சபைக்கு உள்ளே செல் குழுக்களை உருவாக்குவதைச் சிபாரிசு செய்கிறோம். இந்த வலிமை மிக்க சிறிய குழுக்கள் சிறந்ததோர் சூழ்நிலையை உண்டாக்கி நன்னெறிப்படுத்தியும் புதிய விசுவாசிகளை சிஷ்யர்களுமாக ஆக்குகிறது. என்னவென்றாலும் அவைகள் சுவிசேஷ அறிவிப்புக்கும் சிறந்த அடித்தளமாக அமைகின்றன. வீடுகளில் கூடும் கூட்டத்திற்கு வருகிறவர்கள் ஆலயத்திற்கு போகாதவர்கள். இந்த செல் குழுக்கள் வழக்கமாக அவர்களுக்கு ஆலயத்தை விட மிக நெருக்கமாக பழகுவார்கள். அங்குள்ள சூழ்நிலை ஒரு தேவாலயத்தை விட மதச் சார்பு சற்றுக் குறைந்ததாக இருக்கும். அதன் எண்ணிக்கை சிறியதாக மிரட்டல் குறைந்ததாகவும் இருக்கும். அதன் சூழ்நிலை மிகச் சாதாரணமாக இருக்கும். மகிழ்ச்சி தரக்கூடிய மாலைபொழுது, சாப்பாடு, களி விருந்துக் கூட்டங்கள், வீடியோக் காட்சிகள் யாவும் சந்தோஷத்தைக் கொடுக்கும்.

இந்த செல் குழுவை சாதாரணமாகப் போதிக்கும் கவனம் எடுத்துக் கொள்ளும் ஒரு சாதகமாக உபயோகிக்காமல் சுவிசேஷத்தை எட்டிப் பிடிக்கும் பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தும்படி வற்புறுத்தவும். அந்த வற்புறுத்துதலை வெளி உலகத்தில் ஜனங்களைக் கிட்டிச் சேர்ந்து அவர்களை ஆதாயம் செய்யும் காரியத்தின் மீது வைக்கவும். மேலும் அங்கத்தினர்களை இந்தக் குறிக்கோளை மனதின் எல்லாவற்றிற்கும் மேலாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும்படி ஊக்கப்படுத்துக.

**✷ சமூக சேவைப் பணிகள்**
அநேக சமுதாயப் பிரிவுகளில் தேவையுள்ள தனிமையாக இருக்கும் மக்களுக்காக பொது சேவை பணி அமைப்புகள் இருக்கின்றன. நான் ஆஸ்பத்திரிகள், முதியோர் இல்லங்கள், அனாதை விடுதிகள், சிறைகள், உடல் ஊனமுற்றோர் இல்லங்கள் அல்லது கல்வி நிறுவனங்களை நான் குறிப்பிடுகிறேன். இந்த அநேகமான இடங்களில் கைம்மாறு கருதாது பணிபுரியத் தயாராக இருக்கும் நபர்களை ஏதாவது ஒரு துறையில் தேவைப்படுவார்கள். இது கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஆச்சரியமான சந்தர்ப்பத்தைக் கொடுத்து தங்களை விட குறைந்த அதிர்ஷ்டமுள்ள சகோதரர்களுக்கு பணி செய்ய உதவும். நட்புடன் கூடிய சுவிசேஷ அறிவிப்பு இந்த மாதிரி சூழ்நிலைச் சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்படக் கூடும். ஆனால் அது சமார்த்தியத்துடனும் நிதானமான யோசனையுடனும் செயல்பட வேண்டும். இதில் அதீதமான உணர்வுள்ள கிறிஸ்தவர்களால் ஆசீர்வாதத்தை விட பிரச்சனை உண்டாவதற்கு இடமுண்டு. ஆனால் உனது சமூகப் பிரிவைக் கவனித்துப் பார்த்து ஜெபத்துடன் அதன் எந்த அம்சத்தில் சுவிசேஷ பிரச்சாரக் களமாக உபயோகிக்க போதுமான திறமைகள் உண்டு என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் அதன் சம்பந்தமாக ‘‘சக்கரங்களின் மேல் உணவு’’ என்ற சேவைப் பணி வகைகள் உண்டு. மேலும் மற்ற சமூக சேவைக்கான நிகழ்ச்சித் திட்டங்களிலும் சில கிறிஸ்தவர்கள் உதவி செய்வதை மேற்கொள்ளுவதுடன் அதே நேரத்தில் நற்செய்தியைப் பரப்புவதற்கும் புத்தியுள்ள சமயோசிதமான வழிகளை செயல்படுத்தும் சமயங்களையும் கண்டறிய வேண்டும்.

✷ **ஒவ்வொரு திருச்சபையும் ஆத்தும ஆதாயம் செய்யும் கேந்திரமாகும்**
எந்தவொரு திருச்சபையும் எவ்வளவு சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருந்தாலும் ஆத்தும ஆதாயம் கேந்திரமாகக் செயல்படக்கூடாதென்பதற்கு எந்த விதமான வேதாகம ஆதாரமான காரணமுமில்லை. இதன் பொறுப்பானது போதகரையும் அவருடைய செயல் குழுவையும் பெரிதும் சார்ந்ததாகும். ஒரு ஸ்தல ஸ்தாபன சபை வழக்கமாக அதன் போதகரின் முன் மாதிரியையும் தலைமைத்துவத்தையும் பின்பற்றுகிறது. தேவனுக்கு முன்பாகப் போதகருடைய பொறுப்பாவது அதை வழிகாட்டி முன் சென்று அதற்கு அறிவுரை தருவதுமாகும்.

## 1. முற்றிலும் பூரணமான, உண்மையான மதிப்பிடுதல் செய்க

நாம் எங்கிருக்கிறோம். இங்கிருந்து எங்கு போகிறோம்? நாம் ஒரு நேரான பயன் தரும் மாறுதல்களை செய்ய ஆரம்பிக்கும் முன்னர் நம்முடைய தற்போதைய நிலைமையை முழுவதுமாக மதிப்பீடு செய்தல் வேண்டும். நமது மனதின் அடித்தளத்தில் அல்லது உள்ளுணர்வாக நமது திருச்சபை மகத்தான முன்னேற்றத்தையோ அல்லது ஆச்சரியமான வளர்ச்சியை சாதித்ததாகவோ உணருமுன்னால் இதை நிவாரணம் செய்வதற்கு நாம் பூரணமானதோர் குறிப்பிட்ட பரீசீலனை செய்வது அவசியம். பரீசீலனை என்பது நோயைக் கண்டறிதலுக்கு முன்னர் நடத்தப்படும். மேலும் நோய் வருவதற்கான காரணத்தை அறிதல் சொஸ்தமாக்குதலுக்கு முன்னர் செய்யப்படுவதாகும். நாம் ஜீவியத்தின் இன்றியமையாத அடையாளங்களைப் பரிசோதனை இட வேண்டும்.

ஒரு மருத்துவ பரிசோதனை செய்யும்பொழுது மருத்துவர் நாடியைப் பிடித்து பரிசீலிப்பார். இரத்த அழுத்தம், மூச்சு விடுதல் முதலியவற்றையும் பார்ப்பார். இவைகள் ஓர் ஜீவனின் பலமுள்ள அடையாளங்கள்.

<u>ஒரு திருச்சபையின் இன்றியமையாத அடையாளங்கள் யாவை? இங்கே சில யோசனைகள்:</u>

- ஜீவன் (கிளர்ச்சி, உயிருட்டுதல்,உறுதி, ஆவி, பலம்)
- இயக்கம் (பயன்தரும், கனி கொடுக்கும், ஜெநிப்பிக்கும் தன்மையுடைய செயல்பாடுகள்)
- பலம் (விசுவாசிகளுடைய ஆவிக்குரிய பலம்)
- வளர்ச்சி (கிறிஸ்துவுக்குள் வளருதல், ஆவியில் பூரணப்படுதல்)
- மறுபடி ஜெநிபித்தல் (தங்கள் தங்கள் ஜாதியின்படியே. ஆதி 1:11-12)

ஆரோக்கியமான வளர்ச்சி எப்பொழுதும் பல பக்கங்களை நோக்கி நடைபெறும். உதாரணமாக ஒரு செடி அல்லது ஒரு மரம் வளர்கிறதென்றால்: (1) **மேல் நோக்கி**, அதாவது சூரியனை நோக்கி (2) **கீழ் நோக்கி**, அதாவது மண்ணுக்கு கீழே போய் சேர்வது (3) **வெளி நோக்கி,** அதாவது வளர்ச்சி அடையவும் கனி கொடுக்கவும். அது மேல் நோக்கி வளர்ந்து அதனுடைய வேர்களை பூமிக்குள் செல்லாமல் அதே வேக அளவில் வளர்ச்சி அடையாவிட்டால் அது அநேக நாட்கள் நீடித்து நிற்க முடியாது. வளர்ச்சியானது சம அளவில் நடைபெறாவிட்டால் அது வீழ்ச்சி அடைய நேரிடும்.

இயேசுவும் பல திசைகளிலான வளர்ச்சியை செய்து காட்டினார். லூக்கா 2:52. இயேசுவானவர் ஞானத்திலும் (மனதுடன் அறிவார்ந்த வளர்ச்சி) வளமை வளர்த்தியிலும் (இயற்கையான தோற்றத்திலும் சரீர வளர்ச்சியிலும்) தேவ கிருபையிலும் (ஆவிக்குரிய வளர்ச்சியுடன் விருத்தியிலும்) மனுஷர் தயவிலும் (சமூக மக்களுடன் ஒருவருக்கொருவர் தனிப்பட்ட விருத்தியிலும்)
திருச்சபை வளர்ச்சி என்பது வெறும் எண்ணிக்கை அதிகரிப்போ அல்லது திருச்சபை வருகை எண்ணிக்கை விபரமோ அல்ல. அது எண்ணிக்கையால் ஆனது மட்டுமல்ல, தகுதி பெற்ற தன்மையினாலும் ஆனது.

<u>ஆகவே திருச்சபை வளர்ச்சியில் விருத்தி அடைவதிலும் பல மார்க்கங்களிலும் ஏககாலத்தில் நடைபெற வேண்டும்:</u>

- ஆவிக்குரிய பூரண வளர்ச்சி. எபேசி 4:15
- ஐக்கியத்தில். அப் 2:41-47; எபேசி 4:1-6,15.
- ஊழியங்களில். ரோமர் 12:3-8
- ஆவியின் வரங்களை பயன்பாட்டில். I கொரி 12:14
- சாட்சி கூறுவதில் மற்றும் ஊழியத்தில். அப் 1:8; மாற்கு 16:15-20.

- சீஷர்களை உருவாக்குவதில். 2 தீமோத் 2:1-2
- எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியா, பூமியின் எல்லைபரியந்தம் திருச்சபை நாட்டப்படுதல். அப் 1:8
- சுவிசேஷ தூதுக் குழு இயக்கத்தில். மத் 28:19-20.

## சில முக்கியமான வினாக்கள்.

1: வாழ்க்கைக்கு இன்றிமையாத அடையாளங்களை நாம் எப்படி அளந்து கொள்வது?
2: நாம் சரீரப்பிரகாரமான மற்றும் மாற்றம் செய்யும் வளர்ச்சியைத் தவிர நாம் என்ன சதவிகிதத்தில் வளர்கிறோம்?
3: நமது உண்மையான வளர்ச்சியின் வேகம் தூண்டுதலான எழுச்சி உடையதா அல்லது திருப்திகரமானதா? ஆம்/இல்லை

**ஒரு தீர்மானிக்கப்பட்ட பிரதியுத்தரம்**
தேவன் இந்தத் திருச்சபையை ஒவ்வொரு வழியிலும் வளரச் செய்ய விரும்புகிறார். நாம் அவருடைய வழிகளைக் கண்டறிந்து கொண்டு அவருடன் கூட்டுறவுடன் ஒத்துழைக்க விரும்புகிறோம். அது வளர்வதைப் பார்க்கவும் விரும்புகிறோம். நாம் ஜெபத்துடன் கண்டுபிடித்து அவரது தரிசனத்தின் மேல் நமது திருச்சபையையும் சமூகத்தையும் கட்ட விரும்புகிறோம். அவருடைய கிருபையினாலேயும் அவரது உதவியினாலும் திருச்சபை பல மிகுந்த இன்றிமையாத வளர்ச்சியை நோக்கி நடைபோடுகிறது.

## 2: தரிசனத்திற்கு ஒப்புக் கொடுத்தல்.

ஒரு விதமான கூட்டுறவு முயற்சியில் அதாவது திருச்சபை வளர்ச்சியானது அதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் முற்றிலுமாக அவருடைய தரிசனத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி வேண்டுகிறது.

- முற்றிலுமாக அதற்குள் (விசுவாசிக்க) நம்பிக்கை வேண்டும்.
- அதை அவர்கள் ஐக்கியத்திற்கான தேவனுடைய சித்தமாகப் பார்க்க வேண்டும்.
- அவர்கள் அத்துடன் ஒருங்கினைத்ததும் முக்கியமானதுமான அங்கமாக உணர வேண்டும்.
- அவர்களை முழு இருதயத்தோடு கூடிய ஈடுபாட்டுடன் ஒப்புக் கொடுக்கச் செய்ய வேண்டும்.
- எந்த விதமான பங்கை எடுத்து செயல்படுத்தவும் அந்த தரிசனத்திற்காக உன்னை எப்பொழுதும் தயாராக வைத்திரு.
- அதற்காக அனுதினமும் ஜெபிக்கவும்.
- உன்னுடைய நிதி ஆதாரங்களையும், தசமபாகம், காணிக்கை முதலானவற்றை அதில் முதல் ஈடு செய்வதற்கு தயாராக இரு.

இதை ''ஒரு போதகருடைய தரிசனமாகவோ'' அல்லது ''திருச்சபையின் தரிசனமாகவோ'' கருதுவது மட்டும் போதாது. அதை அனைவரும் ''**நமது தரிசனமாக**'' அங்கீகரிக்க வேண்டும்.

**இந்த விதமான தரிசனத்தைச் சாதிப்பதற்கு பின்வரும் காரியங்கள் நடைபெற வேண்டும்.**

## = போதகர்(கள்)

அவர்கள் முழுவதுமாக தேவன் அவர்களது சபையை வளர்ச்சி அடையும்படி விரும்புகிறார் என்பதை முற்றிலுமாக விசுவாசிக்க வேண்டும்.
அவர்களுடைய திருச்சபை தேவனுடைய திட்ட நோக்கத்தில் என்னவாக இருக்கக்கூடும் என்பதைப் பற்றிய தரிசனத்தைப் பெற வேண்டும்.
அதற்காக மெய்யான இலக்குகளை உருவாக்கிக் கொண்டு அது எப்படி நேரிடக்கூடும் என்பதற்காக செய்ய வேண்டும்?
அது அந்த கூடிவரும் சபையின் அங்கத்தினர்களின் அன்பு, மரியாதை, நம்பிக்கை ஆகியவைகளைப் பெற அவர்களுக்கு அந்தத் தரிசனத்தைத் தெளிவாக அறிவித்து அவர்கள் ஈடுபாட்டைச் சம்பாதிக்க வேண்டும்.

## = அங்கத்தினர் ஸ்தானம்

அங்கத்தினர்கள் தங்கள் தலைவர்களுக்கு அன்பு காட்டியும் மதித்தும் அவர்களுடன் வேலை செய்வதற்கு ஆவலாக இருக்க வேண்டும்.

அவர்களுடைய திருச்சபையைப் பற்றிய தூண்டுதல் உணர்ச்சி பெற்றவர்களாக அதன் வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கை வைக்க வேண்டும்.
கிறிஸ்துவே எல்லாவிதமான ஜீவியப் பிரச்சனைகளுக்கும் சரியான விடையும் தீர்வும் ஆவார் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.
அவர்கள் தங்கள் மனத்தைத் திறந்து வைப்பதுடன் பணப்பையையும் திறந்து வைத்து அந்தத் தரிசனத்தை நிறைவேற்ற வேண்டும்.
அதில் முற்றிலும் பூரணமான ஈடுபாட்டுடன் தகுதியாக செயல்படக்கூடிய விதத்தில் இயங்க வேண்டும்.

## அந்த தரிசனமாவது இருக்க வேண்டிய விதம்:

**தூண்டி ஊக்குவிக்கப்படுதல்**, தெய்வீக தூண்டுதலுக்கான அடையாளங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
**வரையறுக்கப்பட்டு**, மிக ஜாக்கிரதையாக பூரணமாக யோசனை செய்யப்பட்டு
**தெளிவாக்கப்பட்டு**, மிகவும் தெளிவாக தெரியப்படுத்தப்பட்டு
**உள்ளக் கிளர்ச்சியுடன் சாதிக்கப்படக் கூடியதாகவும்**
**எளிதில் கிடைக்கக் கூடிய**
**ஆள் பலத்தை வைத்து அவர்களை ஈடுபடுத்தி வைக்கக்கூடிய திறமை பெற வேண்டும்.**

## தலைமைத்துவம் உடையவரும் அங்கத்தினர்களும் பின்வருபனவற்றைச் சந்திக்க வேண்டும்:

- நாம் உண்மையாகவே திருச்சபை வளர்வதை விரும்புகிறோமா?
- நாம் அதற்காக எந்த விலையைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறோமா அது என்னவாக இருந்தாலும்?
- நாம் உண்மையாகவே திருச்சபை வளர்ச்சிக்கான தரிசனத்தைப் பெற்றிருக்கிறோமா?
- நாம் அதற்காக நிகழ்ச்சி நிரலான இலக்குகளைப் பெற்று அவற்றின் மூலமாக இது நிகழ வேண்டும்.
- நமக்கு வரக்கூடிய தவிர்க்க முடியாத மாறுதல்களுக்காக நாம் திறந்த மனதுடன் இருக்கிறோமா?
- வளர்ச்சி இயங்கும் செயல்பாடுகளுக்கு ஆதாரமாக உதவும் சில ஏதுக்கள் எவை?
- நான் அதற்கு செயலூக்கம் தரும் வகையில் எனதுத் தனிப்பட்ட முறையில் நான் என்ன செய்ய முடியும்.
- நமது சேவை பாணியில் அந்நியர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் என்ன மாறுதல்கள் முன்னதில் ஏற்பட வேண்டும்.
- நமது திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரை நமது ஆண்டவராக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோமா?
- நமது கனத்தையும் துதியையும் தேவனுக்கு மட்டுமே செலுத்துவதற்குத் தயாராக உள்ளோமா?

தலைமைத்துவம் உடையவர்களையும் அங்கத்தினர்களையும் ஒருங்கே இணைந்து இந்த அட்டவணையைப் படித்து பரீசிலிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு நபருக்கும் தங்களுடைய பிரதியுத்தரத்தைத் தருவதற்கு சவால் விடுங்கள். இதை ஒரு சாசனமாக உருவாக்கி அதை ஒவ்வொரு நபரும் தங்கள் சொந்த பத்திரமாக கையொப்பமிட்டு தங்கள் வசத்தில் ஒரு உடன்படிக்கையின் அங்கீகார படிவங்களை வைத்துக் கொள்ளும்படி செய்யுங்கள். ''மாறுதலுக்கும் வளர்ச்சிக்குமான நமது ஒப்புதல் உடன்படிக்கை'' என்று அதற்குத் தலைப்புப் பெயர் கொடுங்கள்.

## 3. சுவிசேஷ பிரச்சாரம் (அ) பரப்புதல் என்பது என்ன?

கிறிஸ்துவுக்காக மக்களை வெளியில் கிட்டிச் சேர்ந்து அவர்களை நிலை நிறுத்துவதற்கான அரங்கத்தை ஏற்படுத்துவதற்கு பிரசங்கம் செய்வதும், போதிப்பதும் ஆகியவை சுவிசேஷம் பரம்புதல் என்ற ஆய்வுப் பொருளுக்குத் தேவையாகும்.
சுவிசேஷ பிரபல்லியம் என்றால் என்ன என்பதற்கான எளிமையான விளக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. சுவிசேஷ பிரபல்லியம் என்றால்:

- இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களிடம் இயேசு கிறிஸ்துவை பற்றிய நற்செய்தியை பகிர்ந்துக் கொள்ளுதல்
- எத்தனை பேர்களிடம் நற்செய்தியை பகிர்ந்துக் கொள்ளமுடியுமோ அத்தனை பேர்களிடமும் நற்செய்தியை பகிர்ந்துக் கொண்டு அவர்களை இரட்சிப்பின் அறிவுக்குள்ளாக கொண்டு வருதல்.
- சுவிசேஷ பிரபல்லியம் என்பது கிறிஸ்துவை மற்றவர்களிடம் கொண்டு செல்லுதல் மற்றும் மற்றவர்களை கிறிஸ்துவிடம் கொண்டு வருதல்.

## இங்கே சுவிசேஷம் பரப்புதலுக்கு சம்பந்தமான புதிய ஏற்பாட்டு கிரேக்க வார்த்தைகள்:

a: **சுவிசேஷம் பரப்புதல் செய்ய:** ("evangelizo") அப் 8:4, "சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்"

b: **சாட்சிகள்:** ("martureo" = martyrs) அப் 1:8, "நீங்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள்."

c: **பிரபலப்படுத்துதல்:** ("kerusso") அப் 8:5, "பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்."

d: **அறிவித்தல்:** ("datangello") அப் 17:3, "வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து நான் உங்களுக்கு அறிவிக்கிற இயேசுவே கிறிஸ்து என்று காண்பித்துத் திருஷ்டாந்தப்படுத்தினான்."

e: **நியாயங்கள்:** ("dialagomi") அப் 17:2, "பவுல் வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்தான்."

f: **புத்தி சொல்லுதல்:** ("peitho") அப் 18:4, "ஓய்வு நாள் தோறும் அவன் (பவுல்) ஜெப ஆலயத்திலே சம்பாஷணை பண்ணி யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான்."

g: **சீஷராக்கி:** (matheteusate") மத் 28:19, "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி."

## சுவிசேஷ பிரபல்யத்திற்கான நடைமுறையானது பின்வரும் வரிசை முறையில் காணக் கிடைக்கிறது:-

**✷ வருகை தந்து இருத்தல்.**
ஒரு கிறிஸ்தவன் வருகை தந்து இருத்தல் என்பதே தன்னில் தானே பிரசன்னமாயிருப்பது. ஒரு சுவிசேஷ பிரபலத்திற்கு ஏதுவாகும். ஒரு விசுவாசியின் வாழ்க்கை மூலமாக (சாட்சி) இந்த முன்னாள் கிறிஸ்தவன் சுவிசேஷத்திற்கு மாதிரியாக வாழ்ந்து காட்டப்படும் சந்தர்ப்பத்தைப் பெறுகிறான். சில மக்கள் எப்பொழுதாவது படிக்கக் கூடிய ஒரே நிருபங்களாக நாம் இருக்கலாம். (I கொரி 3:2)

**✷ சுவிசேஷ பிரபலத்திற்கு முன்.**
சுவிசேஷம் அறிவிக்கு முன்னர் செய்ய வேண்டிய ஆயத்தப் பணிகளை கவர்ச்சிகரமாக முன் வைக்க முடியுமா? இது நட்புறவு சுவிசேஷ அறிவிப்பாக ஈடுபடுத்தப்பட்டு அதன் வாயிலாக விசுவாசிகள் உண்மையாகவே விசுவாசிகள் அல்லாதவர்களை நட்பாக்கிக் கொள்கிறார்கள். அதற்காக சுவிசேஷத்திற்கான நம்பகத் தன்மையை நமது ஜீவியம் அன்பு, ஆர்வம், மனதுருக்கம் ஆகியவற்றால் உண்டாக்கிக் கொள்வதாகும். விவசாய பாஷையில் (மொழியில்) சொல்வதென்றால் சுத்தப்படுத்துதல், உழவடித்தல் விதை விதைக்கும் பணி ஆரம்பிப்பதற்கு முன்னதாக நிலத்தைப் பண்படுத்தல் ஆகியவை தொடங்கப்பட வேண்டும்.

**✷ பிரபலப் படுத்துதல் அல்லது எடுத்துக்காட்டுதல்**
நபராவது அல்லது இலக்காக வைத்திருக்கும் கூட்டமாவது நேருக்கு நேராக கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு கொண்டு வந்து நிறுத்தும் பொழுது இந்த விதமான எடுத்துக் காட்டுதலாகும். சுவிசேஷ நற்செய்தி தூதுவை மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளும் எளிய முறையில் தரப்பட்டு

அதன் காரணமாக அதற்குச் செவி கொடுப்போர் முழுவதுமாக சத்தியத்தில் போதிக்கப்பட்டும் நற்செய்தி நூலில் கிறிஸ்துவைப் பற்றிய உட்கருத்துக்களை முழுவதுமாக அறிந்து கொள்ள உதவி செய்யும்.

**✷ நயந்து போதித்து நம்ப வைத்தல்.**

இந்த எடுத்துக்காட்டு நற்செய்தியின் அம்சமாவது அதன் மூலமாக ஒரு நபர் நயந்து போதிப்பதால் ஒரு நேரடியான தீர்மானஞ் செய்து கொண்டு அந்த செய்திக்கு செயல் மூலமாக பிரதியுத்தரம் தர வேண்டும். இந்த நடைமுறையில் பரிசுத்த ஆவியானவர் இடைபட்டு அந்த நயந்து போதிக்கும் முறைக்கு மூல காரணமாகிறார். அவருடைய செல்வாக்கு இல்லை என்றால் நாம் நயந்து போதிப்பது வல்லமையற்றதாகும். என்னவென்றாலும் சாட்சிகளாகிய நாம் நமது தனிப்பட்ட முறையில் நேர் முகமாக ஈடுபாடு கொள்ள வேண்டும். நமது மூலமாக பரிசுத்த ஆவியானவர் இடைபடுவார். ஆகவே நாம் மனிதர்களை நயந்து போதித்து கிறிஸ்துவின் மூலமாக கர்த்தருடன் ஒப்புரவாகச் செய்ய வேண்டும். (II கொரி 5:20)

**✷ ஒருங்கிணைத்தல்**

இதன்படி பல வழி முறைப்படிகள் மூலமாக புதிய விசுவாசிகளை ஒரு ஸ்தல ஸ்தாபன ஐக்கியத்தில் ஒருங்கிணைப்பது அவசியமாகிறது. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஆவிக்குரியப் பிரகாரமாக உள் இணைத்து வைக்கிறார். நாமும் சபையில் சாதாரணமாக இணைந்து கொள்ளும்படி உற்சாகப்படுத்தவேண்டும். அநேக வழிகளில் மீன்களைப் பிடிப்பது இலகுவானதாகும். ஆனால் அவற்றை நிலை நிறுத்துவதும், சுத்திகரிப்பதும் ஆகிய அம்சங்களை அமல்படுத்துவதற்கு அதிகமான பொறுப்பும், ஜெபமும், தியாகமும் அவசியமாகிறது. குறிப்பாக ஸ்தல திருச்சபையில் புதிய விசுவாசிகளை வரவேற்பதற்கும் அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கும் ஈடுபடுத்தி அவர்களை ஐக்கிய குழுக்களில் இடம் பிடித்து வைத்து, அவர்களது ஒப்புக் கொடுத்தலைப் பின்பற்றி தங்களது புதிதாகப் போடப்பட்ட அஸ்திபாரத்தில் கட்டி எழுப்பி ஆரம்பிக்கப்படவேண்டும்.

**✷ மறுபெருக்கம் செய்தல்**

இந்த சுவிசேஷ பரப்பு முறையானது அந்த புதிய விசுவாசிகள் தங்களது ஜாதியின் படியே பலுகி பெருகும் வரைக்கும் முழுமை பெற்றது ஆகாது. புதிய விசுவாசிகளுக்கு உடனடியாக அவர்களது பொறுப்பைப் பற்றிய விழிப்புணர்ச்சியையும் அவர்களது சாட்சியையும் விசுவாசத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் தனி சலுகை பற்றியும் உணர்த்தப்படவேண்டும். அவர்களை உற்சாகப் படுத்தியும் மற்றவர்களைக் கிறிஸ்துவண்டை நடத்திச் செல்லவும் குறிக்கோளாக வைத்து செயல்பட உற்சாகப்படுத்தப் படவேண்டும். இது வெகு விரைவில் நடைபெற ஆரம்பிக்காது. ஆனால் நீண்ட காலம் அதை விட்டு விட்டால் பின்னர் அதை நிறைவேற்றுதல் மிகக் கடினமாகும். இயேசுவும் சில புதியவர்களைப் பார்த்து நீண்ட காலமாக அதை விட்டு விட்டால் பின்னர் அதை நிறைவேற்றுதல் கடினமாகும் என்றார். ஆதலால் இயேசு ஒரு புதிய விசுவாசியைப் பார்த்து ‘‘நீ உன் வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்குச் செய்த பெரிய காரியங்களைப் பிரசித்தப்படுத்து’’ என்றார். புதிய விசுவாசிகள் வழக்கமாக ஆத்துமா ஆதாயம் செய்வதில் மிகச் சிறந்தவர் ஆவார்கள்.

- அவர்களுடைய புதிய அன்பான உறவு முறையில் ஒன்றையொன்று தொற்றிக் கொள்ளும் உற்சாகம் காணப்படுகிறது.
- அவர்களுக்கு தங்களுடைய இரட்சிக்கப்படாத நண்பர்களுடன் இன்றியமையாத வலிமையுள்ள தொடர்பு உண்டு.
- அவர்கள் அனுபவித்த சுவிசேஷ பிரபல்யத்தின் நடைமுறையானது இன்னும் அவர்கள் மனதில் புதிதாக இருக்கிறது.
- அவர்களுக்கு திருச்சபை அல்லாத கலாச்சாரம், பாஷை, எதிர்பார்ப்புகள் இவற்றில் சற்று அதிகமாக விழிப்புடன் இருப்பார்கள்.
- அவர்கள் சற்று அதிகமாகவும் எளிதாகவும் முன்னாள் கிறிஸ்தவ சமுதாயத்துடன் உறவு கொள்வர்.

## 4. உன்னுடைய திருச்சபை தானே சுய ஆய்வு செய்யும் ஆய்வாளரா? அல்லது புறப்பொருள் ஆய்வாளரா?

அநேகத் திருச்சபைகள் தங்கள் வளர்ச்சியைக் காண்பதில் தவறுகின்ற காரணமாவது தாங்களாகவே தங்கள் மனப்பான்மை, நடபடிக்கை நிகழ்ச்சிகளில் சுய ஆய்வுள்ளவர்களாக இருப்பதுதான். சுய ஆய்வாளர் என்பதன் அர்த்தம் பிரதானமாக தங்களுக்கு சொந்தமான யோசனைகள், ஆசைகளைப் பற்றிய கருத்தொற்றுமை தான். சில சபைகள் இவ்வாறு ஆனதற்குக் காரணம் துக்ககரமானது. அவைகள் ''என்னை ஆசீர்வதிப்பார்'' என்ற சிறிய குழுக்களாக உருவானதுதான். அவர்களுடைய நடைமுறை நிகழ்ச்சிகள் நடவடிக்கைகள், திட்டங்கள் அனைத்தும் அதன் அங்கத்தினர்களின் நன்மைக்காக ஏற்படுத்திக் கொண்டதுதான். ஆனால் அவர்களில் அதிகமானவர்களுக்கு இதைப் பற்றி விழிப்புணர்வு இல்லைதான். அவர்கள் இந்த விதமாக ஆவதற்குத் திட்டமிடுவதில்லைதான். அவர்கள் வழக்கமாக உண்மையான உலகத்து வாழ்க்கையிலிருந்து தங்களை விடுபட்டவர்களாக காணாதிருக்கும் காரியத்தில் மட்டுமே. அவர்கள் தாங்கள் அறியாமலே ஒரு துறவியின் அம்சங்களைக் கொண்டவர்கள் ஆகிறார்கள். அந்தத் துறவி இந்த உலகின் ஜீவியத்தில் ஈடுபாடு கொண்டு பின்னர் தாங்கள் உருவாக்கிக் கொண்ட ஒரு கற்பனை உலகத்தில் தனிமையைக் காண விரும்புவதின் காரணத்தினால் தான். அவர்கள் தங்களுக்கென்று ஒரு மத சம்பந்தமான ஆறுதலின் மண்டலத்தை படைத்துக் கொண்டு அந்த உன்னதமான தனிமையை அவர்கள் உறுதியான பற்றுடன் தங்கள் சமயவெறி செயல்பாடுகளில் அப்பியாசம் செய்து கொள்கின்றனர். அவர்களுடன் உடன்பிறந்த இயல்பானதும் கனியற்றதுமானவர்களாய் அவர்களின் கிட்டச் சேர்ந்துப் பிடித்த நடவடிக்கைகளிலும் வளர்ச்சியிலும் குறைபாடுள்ளவர்களாகக் காணப்படுவதற்கு சகல விதமான ஆவிக்குரிய சாக்குப் போக்குகளைச் சொல்லுவார்கள்.

இதற்கு முற்றிலும் மாறாக புறநோக்கு ஆய்வாளர் என்பதற்கான சொற்பொருள் விளக்கமாவது மிகவும் முக்கியமாக புற உலகுக் காரியங்களைக் கருத்தில் கொண்டிருப்பதாகும். இந்த விதமான விளக்கத்தையே என் மனத்தில் கொண்டு ''அடிக்கடிப் பயன்படுத்தப்படும் விளக்கமான மிகவும் ஒழுக்கக்கேடான வெளியே போகும் மனிதன்'' என்பதை விட பொருத்தமானதாகக் காண்கிறேன்.

இயேசுக் கிறிஸ்துவின் திருச்சபையானது இந்த உலகத்தை விட்டு தனிமைப்பட்டதாகவோ அல்லது அதனுள் மூடியால் மறைக்கப்பட்டதாகவோ இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டதல்ல. அது ''சுவர்களற்ற திருச்சபையாகவே'' இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டது. உண்மையான சபை என்பது ஒரு கட்டடம் அல்ல. அது மீட்கப்பட்ட மீட்கப்பட வேண்டிய மக்களால் ஆனது. அது உலகத்திற்குள் புறப்பட்டுப் போய் தேவனுடைய இராஜ்ஜியத்தின் செல்வாக்கின் மகிமையை நிலை நிறுத்தும் வாஞ்சையுடைய செயல்பாட்டுடைய மக்களால் ஆனது. மனித குலத்தின் சத்துருவை மேற்கொண்டு, மனிதர்களையும் ஸ்தீரிகளையும் அந்த சத்துருவின் பிடியிலிருந்து விடுவிக்கும் செயல்பாட்டு வாஞ்சையுடைய மக்களே அதைச் சார்ந்தவர்கள். நாம் நமது திருச்சபைகளை பயன்படுத்துவோருக்கு நட்பாக உருவாக்குவதற்கு நம்மை நிச்சயமாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

மன நிலை உணர்வுள்ளதும் வெளிப்படையான நட்பு மனப்பான்மையுள்ள சூழ்நிலையை உண்டாக்குவதனாலும் அதனால் புதிய மனிதர்களை மிக அதீதமான வரவேற்பு பெற்றவர்களாக உணரச் செய்தும், சுதந்திரமான உணர்வுடனும், திரும்பி வருவதில் ஆர்வம் உள்ளவர்களாகச் செய்ய வேண்டும். உன்னுடைய திருச்சபையை (முன்னாள்) முந்தைய அந்நிய கிறிஸ்தவர்களின் கண்பார்வையில் பார்க்க முயற்சி செய். அவர்கள் உன்னை, உன்னுடைய செயல்பாடுகளை உன்னுடைய திட்டங்களை எப்படிப் பார்க்கிறார்கள்? நீ ஈடுபாடு கொள்ளும் சமயச் சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்கள் இவற்றை கருத்து விளக்கம் செய்யவோ புரிந்து கொள்ளவோ அவர்களால் முடியுமா? அவர் பல ஆலயங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சமயப் பேச்சு மரபுகளை விளங்கிக் கொள்ள முடியுமா? அவர்களுடைய உண்மையான தேவைகளுக்கு தகுந்த பொருத்தமான அர்த்தமுள்ளதாக உன் செய்தி இருக்குமா? உன்னுடைய நற்செய்தி அறிவிப்பு அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளில் மெய்யான நற்செய்தியாக அவர்களுக்கு இருக்குமா?

## 5. செயலற்ற தன்மை அல்லது கிளர்ச்சியற்ற நிலையை நீக்கி விடுதல்

அநேகமான திருச்சபைகளில் தாங்களாகவே செயலற்ற தன்மையை தங்கள் மீது சுமத்திக் கொண்டதாகத் தோன்றுகிறது. அந்தக் காரணங்களான தாமதமாகச் செயல்படுதல், தடை செய்தல் ஆகியவற்றால் அல்லது வெளியில் நடத்தப்படும் எந்த வகைச் செயல்பாட்டையும் முழுவதுமாக தடை செய்யப்படுகிறது. சில திருச்சபைகளை செயலாற்றி முன்னோக்கிப் போகச் செய்வது ஒரு காரை தடைக் கோலின் மேல் கையை பலமாக அழுத்திக் கொண்டு ஓட்டுவதைப் போல உள்ளது. இந்த சராசரி கூடிவரும் கூட்டத்தார் கீழே அமர்ந்து, அமைதியாக இருந்து நன்கு கவனித்துக் கேட்பவர்களாக பழக்கப்படுத்தி விடப்படுகிறார்கள்.

அநேக ஆலயக் கட்டடங்களில் பாரம்பரிய அமைப்பான மேடை, பிரசங்க பீடம் சாய்மான ஆசனங்களில் வரிசை ஆகியவை இவை தான் முக்கியமான திருச்சபை செயல்பாடுகள் என யூகிக்கச் செய்கின்றன. ஜனங்கள் வாரந் தவறாமல் பிரசங்கங்களைக் கேட்பதற்காகவே ஆலய வழிபாட்டை கடைபிடிப்பதோடு திருப்தி அடைகிறார்கள். ஆனால் இந்த வகையான செயல்முறையானது தேவன் தமது சபைக்காக நோக்கத்தோடு ஏற்படுத்தியதாக இல்லை. அது ஒரு போதும் இல்லை என்றாகும். இது பரிசுத்த ஆவியால் பெந்தெகொஸ்தே நாளில் நியமித்ததற்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கிறது.

நாம் இந்த விதமான செயல்பாடு இல்லாத தன்மை, பாராமுகம் ஆகியவற்றை உதறித் தள்ளிவிட்டு நம்மைத் தட்டி எழுப்பிக் கொண்டு சுவிசேஷம் பரப்பும் பணியை நிறைவேற்ற வேண்டும். இழந்து போனவர்களுக்கு கிறிஸ்துவே வழியும் சத்தியமும் ஜீவனும் ஆனவர் என்று சொல்ல வேண்டும். உலகத்தில் உள்ள அனைத்து கூடி வரும் சபைகளும் சுவிசேஷம் பரப்பும் பணியில் இணைக்கப்பட்டால் இந்த உலகம் மிகச் சொற்ப காலத்திற்குள் ஜெபிக்கும். துரதிர்ஷ்ட வசமாக கர்த்தரின் சேனைகள் முகாம்களில் நிம்மதியாகத் தூங்குகின்றன. நாம் எக்காள தொனியை எழுப்பி ஒலித்து முழங்க வேண்டும்.

<u>மிகவும் அதிகமாக நிலவுகின்ற செயல்படாமைக்கு காரணங்களாவன:</u>

– **அச்சம் அல்லது தைரியமின்மை**
– **அறியாமை.** சுவிசேஷம் அறிவிக்கும்படி போக தெரியாமல் இருப்பது.
– **அனுபவமின்மை.** அதற்காக போதுமான அளவு ஒன்றுஞ் செய்யாததால் நம்பிக்கையை பெறாமல் இருப்பது.

<u>இந்த செயலாற்றாமை நிலையை எப்படி உதறித் தள்ளுவது</u>

- மிகவும் வல்லமையாக மக்களுக்கு சவால் விட்டு அழைப்பது.
- அவர்களுக்கு புத்துணர்ச்சியை கொடுக்கும் முன் மாதிரியாக இருப்பது.
- அவர்களுக்குப் போதுமான பயிற்சியும் இலக்கை குறித்த நோக்கமும் அளிப்பது.
- அருகில் சேர்ந்து எட்டி பிடிக்கும் செயல்பாடுகளை நிர்மானஞ் செய்வது.
- திருச்சபையை உபயோகிப்போர் நட்பாக ஆக்குவது.
- வளர்ச்சியின் மீது வற்புறுத்தி மக்கள் முன் வைப்பது.

## 6. நட்புறவுத் தன்மையை ஊக்கமூட்டி விடுவது

புதிய விசுவாசிகளை கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒருங்கிணைத்துக் கொள்ளும் விதமாவது அடிக்கடி அவர்களுடைய முந்திய உறவு தொடர்புகளைத் தங்கள் குடும்பம், நண்பர்களுடன் கொண்டிருந்தவைகளை உதறித் தள்ளி விட்டு அவர்களுடைய புதிய ஜீவியமானது தங்களுடைய உடன் கிறிஸ்தவர்களுடன் மட்டுமே ஈடுபாடு கொள்கிறது. இது ஒரு துக்ககரமான அம்சமாகும். அதாவது உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிறிஸ்துவுடன் தொடர்பு கொள்வதற்கான ஒரு தருணம் கட்டாயம் வரும் என்று உணர்கிறேன். ஆனால் அதற்காக புதிய விசுவாசிகள் தங்களது முன்னாள் சமூக அமைப்பிலிருந்து தங்கள் தொடர்புகளை வெட்டிக் கொள்வதோ அல்லது தங்களை முற்றிலுமாக பிரித்துக் கொள்வதென்பாதோ அவசியமில்லை என்று நான் நம்புகிறேன். ஆனால் முடிந்த வரை அர்த்தமுள்ள தொடர்பையும் பொது நோக்குடன் ஒன்று சேர்வதையும் நீடித்து வைத்துக் கொள்வதால் பழைய உறவினர் நண்பர்களுடன் சுவிசேஷத்தின் தாக்கத்தை ஸ்திரப்படுத்த முடியும்.

இதை அடிக்கடி கிரேக்க மொழியில் “OIKOS EVANGELISM” என்று சொல்லுவார்கள். கிரேக்க வார்த்தையான OIKOS என்பது குடும்பம், உறவினர், இல்லத்தார், (வேலைக்காரரையும் சேர்த்து)

அல்லது நமது சொந்தம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவண்டை வந்த பலர் புதிய விசுவாசிகளுடைய OIKOS ஆவார்கள். ஆகவே OIKOS என்ற சுவிசேஷ அறிவிப்பு ஆனது ஒரு புதிய மதம் மாறிய நபர் தனது குடும்பத்தை பொது நோக்கு கூட்டம், நண்பர்கள் ஆனவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து கிறிஸ்துவண்டை நடத்தும்பொழுது செயல்படுகிறது. இது அந்திரேயாவுக்கு நேர்ந்தது. (யோவான் 1:40-41) யோவான் சொன்னதைக் கேட்டு அவருக்குப் பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு ‘‘மேசியாவைக் கண்டோம்’’ என்று சொன்னான்.

பல நவீன காலத்து அளவு மேற்பார்வைகள் திருச்சபை வளர்ச்சியைப் பற்றிக் கூறும் பொழுது இந்த விதமான சுவிசேஷ அறிவிப்பு மிகுந்த பயன்தரக்கூடிய முறை என்கிறது. ஒரு குறிப்பிட்ட மாதிரியான மேற்பார்வைத் திட்டம் எவ்வாறு மக்கள் திருச்சபைக்கு வந்தார்கள் என்பதை பின்வருமாறு தெரிவிக்கிறது.

**மக்கள் ஏன் முதலாவதாக திருச்சபைக்கு வந்தார்கள் என்பதற்கான காரணங்கள்:**

| | |
|---|---|
| விளம்பரங்களுக்கு பிரதியுத்தரமாக | 2% |
| போதகரின் மூலமாக | 6% |
| ஒருங்கிணைந்த சுவிசேஷ அணுகி கிட்டிச் சேர்ந்த முறையாக | 6% |
| நண்பர்கள், உறவினரின் செல்வாக்கின் காரணமாக | 86% |

இந்த விதமான பதில் செயல்பாடு உலகம் முழுவதிலும் நியாயமான முறையில் ஒரே சீராகக் காணப்படுகிறது.

## 7. உன்னுடைய வலைகளை பழுதுபார்த்தல்

எபேசியர் 4:12. சொல்வதாவது, ஊழியர்களுடைய பிரதானமான வேலையாவது ஊழியப் பணிக்காகப் பரிசுத்தவான்களை தேவையான போதனை அறிவுரைகள் தந்து தயார் செய்வதாகும். இந்த கிரேக்க வார்த்தை ‘‘தேவையான அறிவுரை போதனை தந்து’’ என்பது (katatismos), பல வித்தியாசமான வழிகளில் வியாக்கியானம் செய்யப்படுகிறது. இது வேதாகமத்தின் மற்ற பாகங்களிலும் காணக்கிடக்கிறது. ஒரு இணைந்த ஒப்புமையானது முதிர்ந்த எலும்பைக் கட்டுதல், மிகவும் கவனமாக எலும்பை ஒன்றாகச் சேர்த்து இணைத்து அதன் முந்திய உபயோகத்திற்கும் பலத்திற்கும் பயனுள்ள விளைவுகளுக்கும் திரும்பக் கொண்டு வருவதாகும். மற்றொரு கருத்தாவது வலைகளைப் பழுதுபார்த்தல் என்பதாக அதாவது அவைகளின் உண்மையான தேவைக்குப் பயனுள்ளதாக்குவதாகும். பல திருச்சபைகள் தங்களது வலைகளில் ஒன்று பழுது பார்த்து அல்லது வேறு ஒன்றாக மாற்றி மீன்களைப் பிடிப்பதற்கு தகுதியாக ஆக்குவதாகும். (அதாவது மனிதர் ஸ்தீரிகள், பையன்கள், பெண்கள்) நாம் சுருக்கமாக சில வலைகளைப் பற்றி பார்க்கலாம்:

### A: <u>புதிய ஜனங்களை வரவேற்பது</u>

உன்னுடைய திருச்சபை புதிய அங்கத்தினர்களை எப்படி வரவேற்கிறது. செயலூக்கம் தருகிற மாதிரியா? அல்லது அதற்கு வேறு விதமாகவா? இதற்காக மிக்க செயலூக்கத்துடன் இடைபடும் நபர்கள் குறிப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? புதிய விசுவாசிகளை உற்சாகமாக வரவேற்க வேண்டும். ஆலயத்தை விட்டு வெளியிடங்களிலும் அவ்வாறே வரவேற்கப்படவேண்டும். அவர்களை மறுபடியும் வாசலண்டை வரும்பொழுதும் அவ்வாறு வரவேற்க வேண்டும். யாராவது ஒருவர் அவர்களுக்கு இருக்க ஆசனத்தைக் கண்டுபிடிக்க உதவி செய்து அவர்கள் சௌகரியமாக இருக்கும்படி செய்ய வேண்டும். மற்றவர்கள் (அவர்களுடன்) புதிதாக வருபவர்களுடன் அமர்ந்த படியே ஊழியத்தில் இடைபட்டு ஆராதனை வழிபாட்டை புரிந்து கொள்ளவும். அதை அவர்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கச் செய்ய வேண்டும். அவர்களை பிரசங்க மேடையிலும் இருந்து வரவேற்பு கொடுத்து அவர்களுடைய வருகைக்கு ஞாபகச் சின்னமாக ஏதாவது நினைவுப் பொருளைத் தரவேண்டும். மிகவும் கவனமாக அவர்களின் பெயரையும் விலாசத்தையும் மேற்கொண்டு தொடர்பு கொள்வதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டும். உங்களுடைய ஆராதனையையும் சேவையையும் திட்டமிட்டு முன்னாள் கிறிஸ்தவர்களையும் இணைத்து அவர்களுடன் ஒரு பகுதியாக உணரச் செய்ய வேண்டும்.

**B: <u>ஆராதனை</u>.**

அநேக ஆலயங்களில் ஆராதனை வழிபாடு சோகமாகவும், கருத்தூன்றியதாகவும் இருக்கும். ஆராதனை முறையானது அதிகமான கடினமானதாகவும் மக்களை அந்நியர்களாக உணரச் செய்யும். அந்த மாதிரியான பாரம்பரிய சமய செயல்பாடுகள் அடிக்கடி தூண்டி எழுப்பக் கூடியதல்லாதவையாகவும் மிகவும் சோர்வையும் உண்டாக்கும். திருச்சபை ஆலயமானது நகரத்திலே ஒரு மகிழ்ச்சிகரமான இடமாக அமைய வேண்டும். ஆராதனை கனத்திற்குரியதாகவும் மிகவும் வேகமற்றதாகவும், பாரமாகவும் நீண்ட நேரம் இருப்பதால் சலிப்பையும் தருவதாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையான சோக மயமான, வேகமற்ற சமய சம்பந்தமான பாடல்களைத் தவிர்த்து விட வேண்டும். மேலும் மகிழ்ச்சி தரும் இசையை உபயோகித்து ஆத்துமாவை உயர்த்தும் எழுப்புதலானதை பயன்படுத்த வேண்டும். மக்கள் காலா காலமாகக் காத்திருக்காமல் திரும்பத் திரும்ப விரும்பி வரும் விழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம்.

**c: <u>பிரசங்கித்தலும் போதனையும்</u>**

பல திருச்சபை வட்டங்களில் நல்லதோர் பிரசங்கமும், போதனையும் ஒரு எச்சரிக்கை உணர்வுடன் பாரமான கடமைச் செயல்பாடாக இருக்க வேண்டும் என்ற தவறான கருத்து நிலவுகிறது. இயேசுவுடைய ஊழியம் இந்தப் பிரகாரமாக அமைந்ததல்ல என்று நான் உணர்கிறேன். அக்கினி பற்றி எரியப் பேசும் யோவான் ஸ்நானகன் பவுல் அப்போஸ்தலன், பேதுரு மற்றும் வேதாகம பிரசங்கிமார்கள் இந்த விதமாக பிரசங்கித்ததில்லை. அவர்களுடைய பிரசங்கங்கள், காலத்திற்கு ஏற்றதாகவும், வல்லமையாகவும் காலப்போக்கினை சார்ந்ததாகவும் இருந்தது. இயேசுவைப் பற்றி ''சமானியமான பொது மக்கள் அவர் போதிப்பதை விருப்பத்துடன் கேட்டார்கள்'' என்று சொல்லப்படுகிறது. மற்ற சொற்களில் கூறுவதென்றால் அவருடைய போதனையை விறுவிறுப்புடன் பிடிப்புள்ளதாகவும் கண்டார்கள். அவர்களுடைய உண்மையான வாழ்க்கைத் தேவைகளைப் பற்றியே பேசினார். அவர்களுடைய பார சுமைகள் எந்த வழிகளில் இலகுவாக்கப்படும் என்பதையும் அவர்கள் இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் அனுபவிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

செயலூக்கமுடைய நல்லதோர் பிரசங்கமானது எதிர்மறையாகவும் கண்டனம் செய்வதாகவும் இருக்கக் கூடாது. மனந்திரும்புதலுக்கான தேவையைப் பற்றி கூட நேர்முகமாகச் செய்யப்படலாம். <u>இன்றைய நாட்களில் மக்கள் பலவகையான வேறுபட்ட பிரச்சனைகளால் சுமையேற்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிர்மறை அல்லாது கட்டி எழுப்பும் உதவி தரும் செய்திகளையே கேட்க வேண்டும். அவைகளால் அவர்கள் தேவனோடும் தங்களோடும் மற்ற அயலகத்தாரோடும் சாமாதானத்தைக் கண்டு கொள்ளலாம்</u>. ஆகவே, நிச்சயமாக உண்மையான பிரசங்கம் என்பது மக்களை ஒரு போதும் சலிப்படையாமல் மக்கள் தாங்கிக் கொள்ளும் ஏதோ ஒன்றாக அமைய வேண்டும். உன்னுடைய செய்தியை விளக்க உதாரணங்களுடன் உருசிகரப்படுத்தவும். மக்கள் எளிதில் கண்டு உணரத் தயாராக இருக்கும் காரியங்களைப் பற்றி பேசவும். சமய பிதற்றல் பேச்சுகளையும் சொற்றொடர்களையும் வார்த்தைகளையும், குறிப்பிட்ட அறிமுகமானவர்கள் மட்டுமே விளங்கக் கூடியனவற்றை ஒருபொழுதும் உபயோகிக்கக் கூடாது. தினசரி பேச்சு மொழியைப் பேசப் பயன்படுத்து. இதை சராசரி நபர் புரிந்து கொள்ளவும். அதை கண்டறிந்து கொள்ளவும் மிகவும் ஆயத்தமாயிருப்பான்.

<u>பிரசங்க மேடையில் இருந்து விடுக்கும் அழைப்பு</u>. (கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி மக்களை அழைத்தல்)

ஒரு பயன்தரும் சுவிசேஷ பிரசங்கியுடைய வெற்றிக்கு ஒரு பகுதியாக மக்களை ஊக்கப்படுத்தி செய்தி முடிவில் தீர்மானம் எடுக்கச் செய்யும் திறமையாகும். நீ விழிப்பாக இருந்து கவனிக்கத் தேவையான சில காரணங்கள்:

a: **காலமாகிய காரணம்** (ஏதுக்கள்). காலத்தை நிர்ணயிப்பது மிகவும் அத்தியாவசியமானது. உன்னுடைய செய்தியை எப்பொழுது முடிப்பது என்பதில் உள்ளுணர்வுடன் கருத்தாயிருந்து எப்பொழுது வேண்டுகோளை ஆரம்பிக்கலாம் என்பதை உணர்ந்து கொள்.

b: **பலமாகிய ஏது**. உன்னையே பலமிழந்து தளர்ச்சி ஆக்கிக் கொள்ளாதே. அவ்வாறே உன்னை செவி கொடுத்து கேட்பவர்களையும் ஆக்கி விடாதே.

c: **மென்மையான காரணம்**. உன்னுடைய செய்தியிலிருந்து மிகவும் மென்மையாக

வேண்டுகோளுக்கு நடத்திச் செல். உன்னுடைய செய்தியை திட்டமிடும் பொழுதே உன்னுடைய வேண்டுகோள் விடுப்பதையும் திட்டமிட்டுக் கொள். உன்னுடைய செய்தியை ஆயத்தம் செய்ய எவ்வளவு கால அவகாசம் எடுத்துக் கொள்கிறாய். உன்னுடைய வேண்டுகோளை ஆயத்தம் செய்வதைப் போலவே பாதி கால அவகாசம் எடுத்துக் கொள்கிறாயா?

d: **ஆவிக்குரிய காரணம்.** ஆவிக்குள் நடத்திச் செல். பொதுவாக பிரசங்கம் செய்யும் நபரே வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

e: **உணர்ச்சி வசப்படும் காரணம்.** இந்த உணர்ச்சிகளைக் கிளப்பும் முறையும் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் இசையையும் பயன்படுத்தப் பயப்படாதே. மக்கள் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். அநேகத் தீர்மானங்களுக்கு நியாயமான உணர்ச்சி வசப்படும் காரணமுண்டு.

f: **விசுவாசம் என்னும் காரணம்.** விளைவுகளுக்காக விசுவாசி, தரிசனத்தில் பார், எதிர்பார்ப்பாய், பெற்றுக் கொள்வாய்.

g: **பலநோக்குக் காரணம்.** நீ வளைந்து கொடு, முன்னுரைக்காதே, உன்னுடைய பரிசுத்தப்பட்ட கற்பனையில் தேவனை நோக்கி மக்களை எப்படி தேவனிடத்திற்கு நடத்துவது என்பதைக் காட்டும் படி கேட்கவும்.

## D: சுவிசேஷ பிரசித்த அறிவிப்பு

பவுல் தீமோத்தேயுவை தனது மேய்ப்பன் ஊழியத்தை மிக அதிகமாக ஒரு சுவிசேஷகனுடைய வேலையை உபயோகிக்கச் சொன்னார். (II தீமோத் 4:5) ஒவ்வொரு பிரசங்கியும் அவருடைய குறிப்பிட்ட வரங்களை அல்லது தன்னுடைய ஊழியத்தில் சில சுவிசேஷ வற்புறுத்தல்களை அறிமுகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆராதனைக் கூட்டத்திலும் பிரசங்கிப்பவர். அந்த சாயல் கோணத்தில் தன் பிரசங்கத்தைத் திருப்புவாரானால் அதற்கு சுவிசேஷ பயனை அளிக்கும் வல்லமை உண்டு. மேலும் முடிவில் முன்னாள் கிறிஸ்தவர்களை கிறிஸ்துவை தங்கள் இரட்சகரும் ஆண்டவரும் என்று அறிக்கை செய்ய சந்தர்ப்பம் தந்தால் மேற்கூறிய பயனை அடைவார். உன்னுடைய கூடிவரும் சபையினர் இந்த வற்புறுத்தும் வேண்டுகோளை விழிப்புடன் காண்பார்களானால் அவர்கள் தங்கள் நண்பர்களையும் உடன் கூட்டத்தினரையும் அந்த சபையைச் சேரும்படி எந்த வகையான கூடுகை திட்டமிடப்பட்டாலும் அவர்கள் சேரும்படி வரவேற்பு தருவதில் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாக விளங்குவார்கள்.

மேலும் சுவிசேஷ பிரச்சார வற்புறுத்துதல் உமது சபையிலும் திட்டத்தில் அறிமுகப்படுத்தக் கூடிய பல பயனுள்ள வழிகள் உண்டு. அவைகளை உருவாக்குவதில் சிரத்தைக் காட்டு. தேவனிடம் ஜெபித்து ஜனங்களைக் கிட்டிச் சேர்ந்து தேவனுக்காக அவர்களை லாபமாகச் சேர்ப்பதற்கான புதியதும் வித்தியாசமான வழிகளைக் காண்பிக்கும்படி கேட்டுக் கொள்க. இந்த வகையான பிரத்தியேகமான வற்புறுத்துதலைச் செய்யாவிட்டால் உன் சபை ஒருக்காலும் வளர வழியுமில்லை. மேலும் நீ அதனால் பெறக்கூடிய தூண்டுதல் கிளர்ச்சி நிலையையும் நிறைவேறுதலையும் கர்த்தரால் உங்களிடையே எதைச் சாதித்து நிறைவேற்ற முடியும் என்பதில் காணப் பெறமாட்டாது.

## E: சிறப்புக் குழுக்கள்.

அங்கு பல எண்ணற்ற வகையான மனிதத் தேவைகள் உள்ளன. அதற்காக ஊழியம் செய்யும் பொருட்டு அதே விதமான பிரச்சனைகளைச் சந்திக்கும் மக்களுக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் சந்தர்ப்பம் அளித்து ஊழியத்தை நிறைவேற்றலாம். (உம்) மணமாகாத தாய்மார், தனி நபர்கள், காது கேளாதோர் ஊழியம், முதியோர்கள் முதலியவர்கள். மற்ற சிறப்புப் பயிற்சி பெற்ற குழுக்கள் அதிகமான கவனத்தையும், வசதிகளையும் சிறப்பு ஊழியர்களையும் தேவையாகப் பெறுகிறவை ஊழியங்களான போதைக்கு அடிமைப்பட்டவர்கள். நரம்பு தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அது போன்ற கருணையையும் சிரத்தையான கவனத்தையும் அளிக்கும் ஊழியங்களாகும்.

## F: செல் சபை குழுக்கள்.

செல் குழுக்களானவை இலட்சிய அமைப்புகளாக பல வகையான அம்சங்களைக் கொண்ட ஊழியத்தை அவைகள் பெரிய கொண்டாட்டங்களால் அமைந்த கூட்டத்தில் சரிவர செயல்பட முடியாததாகையால் செல் குழுக்களே தகுதியானவையாகும். இந்த விதமான அமைப்பின் போக்கு பிற்காலத்து சபைகளில் பகிரங்கமாக சாட்சியாக இருக்கும். இதைப் பின்னால் படிக்கலாம்.

**G:** **<u>வாலிபர் மத்தியில் ஊழியம்</u>.**

இன்றைய இளைஞர்களின் தேவைகள் முன்னாட்களில் இருந்ததை விட மிகச் சிக்கலானது. உலகமெங்கிலும் நமது சமுதாய இளைஞர்கள் மகத்தான சவால்களையும் சோதனைகளையும் முந்தைய நாட்களை விட மிக அதிகமாகச் சந்திக்கின்றனர். இதற்கு வித்தியாசமானதோர் அணுகுமுறையும் அழுத்தமும், பொதுவான திருச்சபை செயல்பாடுகளை விட அதிகமாக தேவைப்படுகிறது. அதிலும் திருச்சபையானது இளைஞர்களை அணுகிக் கிட்டிச் சேர்ந்து நமது தேசத்து இளைஞர்களை நம் பக்கம் கவர்ந்து சேர்த்துக் கொள்வது அவசியமும் அவசரமும் ஆகிறது. அநேகர் சொல்லுகிறதாவது. ''அவர்தான் நாளைய சபையினர்'' என்று கூறுவர். ஆனால் உண்மையல்ல. மேலும் அந்தக் கூற்றையே திரும்பவும் **இன்றைய இளைஞர்கள் நம் பக்கம் ஜெயிப்பவர்கள். நாளைய உலகத்தையும் ஜெயிப்பார்கள்** என்று சொல்வதே சிறந்ததாகும். ஒவ்வொரு திருச்சபையும் இந்த மகத்தான சவாலை விழிப்புடன் கவனிப்பது அவசியமானதால் விசேஷமாக அவசியமான நடவடிக்கைகளைத் தீர்மானம் செய்து இளைஞர்களிடையே அந்த செயலூக்க திட்டங்களை அமல்படுத்துவது உறுதி செய்யப்பட வேண்டும்.

**H:** **<u>சிறுவர் இடையே செயல்பாடுகள்</u>.**

நாம் இப்பொழுது எதைப் பற்றி பேசினோமோ அவை அனைத்தும் இந்த உலகத்துச் சிறுவர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது. இன்று உலகில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட ஊழியத் தளங்கள் ஆகும். என்றாலும் நிச்சயமாகவே இது மிகவும் யுக்தி பெறும். மிகவும் முக்கியமான உயர்ந்த தளமாகும். இந்த ஊழியத் திட்டப் பகுதியில் தான் ஒவ்வொரு திருச்சபையும் தனது முயற்சியையும் கட்டுக் கடங்காத உணர்ச்சியையும் ஊற்றி செயல்பட வேண்டும் என்று நான் பலமாக நம்புகிறேன். இது ஏன் இவ்வாறு இருப்பதற்குப் பல நல்ல காரணங்கள் இருக்கின்றன:

- இன்று நம் உலகில் அதிகமான சதவிகிதம் சிறுவர்கள் இருக்கிறார்கள்.
- அவர்கள் சகல விதமான சோதனைகளையும் சவால்களையும் சந்திக்கின்றனர்.
- பல வழிகளில் சிறுவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவது மிக எளிது.
- ஒரு வாலிபனை இரட்சித்தால் நீ ஒரு ஆத்துமாவை இரட்சிக்கிறாய். ஒரு குழந்தையை இரட்சித்தால் ஒரு உயிரைக் காப்பாற்றுகிறாய்.

ஒரு விசித்திரமான காரணங்களால் சிறுவர் ஊழியங்கள் வழக்கமாக எல்லாவற்றை விட புறக்கணிக்கப்பட்டதாகும். ஆனாலும் அதை நடத்துவதற்கு உண்மையாகவே சுலபமானதாகும். மன நிறைவு தருவதுமாகும். நீ மிகவும் ஜெபத்துடன் உனது சபையில் இது வித்தியாசமாக இருக்கும்படி தீர்மானம் செய். சில தகுதி பெற்ற அர்ப்பணிக்கப்பட்ட சிறுவர் ஊழிய பணியாளர்களுக்காக விசுவாசி. மேலும் அதை ஒரு மிகப் பெரிய துறையாக உனது சபையில் அதை உருவாக்கு.

## 8: ஒரு சபை வளர்ச்சியைக் கட்டி அதை சக்தி வீடாக்கு.

மிகுந்த செயலூக்கமுள்ள சபையாகத் தோன்றி விளங்கிய சபை என்பது ஒன்று இருந்தால் அது ஒரு ஜெபக் கூட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. (அப்: 1&2) இன்று வல்லமை மிக்க வளர்ச்சியை அனுபவிக்கும் சபைகள் ஜெபத்தை வற்புறுத்துகின்றன.

**உலகம் கனவில் காண்கிறதை விட அதிகமான காரியங்கள் ஜெபத்தால் சாதிக்கப்படுகின்றன.**

மிகவும் வல்லமையுடைய யுக்தியான காரியத்தை எந்த ஒரு சபையானது வளர்க்க வாஞ்சித்தால் முதன் முதலாக ஒரு ஜெபக் குழுவை ஆரம்பித்து வளர்ச்சிக்காகவும் பெருக்கத்திற்காகவும் ஜெபிக்கும்படி அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

- ஆரம்பத்தில் அது பெரிய ஜெபக் குழுவாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.
- அதன் தலைவர் அதற்குச் (சரியானவராக) தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். அது சபையின் மேய்ப்பராகக் கூட இருக்கலாம்.
- அது மிகவும் சிறப்பாக அல்லது குறிப்பாக வளர்ச்சிக்கும் பெருகுவதற்கும் ஜெபிப்பதாக இருக்க வேண்டும்.
- அது ஒரு அர்ப்பணிக்கப்பட்ட குழுவாக இருக்க வேண்டும். இந்தப் பங்கை மிகுந்த சிரத்தையுடன் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- இதன் அங்கத்தினர்கள் சரியான உறவு தொடர்புகளில் இயங்க வேண்டும்.

- அது ஒரு நல்ல விஷயம் தெரிந்த குழுவாக சபையின் நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.
- அது தங்களுக்கு முன்பாக ஒரு உறுதியான தரிசனத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
- அது உண்மையாகவே தேவனை விசுவாசிக்கும் ஒரு விசுவாசம் மிகுந்த கூட்டத்தைச் சேர்ந்த மக்களால் அமைந்திருக்க உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- அதில் மெய்யான தாழ்மையுள்ள மக்களால் அமைந்து அவர்கள் தேவனுக்கு மகிமையைக் கொடுக்க வேண்டும்.

## 9. உன்னிடமுள்ள எல்லா வாய்ப்புகளையும் உபயோகி

ஒரு சபையில் உள்ள மகத்தான வாய்ப்பு அதன் அங்கத்தினர்களே. ஒரு திருச்சபையில் குறைவாகப் பயன் பெற உபயோகப்படுத்தப் படாதவர்கள் அதன் அங்கத்தினர்களே. அநேக போதகர்கள் மிக அதிகமாக பேசியும் போதித்தும் அங்கத்தினர்கள் கொண்ட சபையைப் பற்றியே பேசுகிறார்கள். ஆனால் அவர்களில் மிகச் சிலரே மெய்யான விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அந்த அங்கத்தினர்களிடம் எடுத்துக்காட்டுகிறார்கள். இது அவர்களை மிகக் குறைவான சந்தர்ப்பங்களில் பூரணமான அனுகூலத்திற்காக உபயோகிக்கிறார்கள் என்ற போக்கினால் உறுதிப்படுத்தப்படுகிறது. திருச்சபை என்பது ஒரு சேனையாகும். ஆனால் அது இயல்பாகவே முகாம்களில் தனிப்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய கூடிவரும் எல்லா சபைகளிலும் விசேஷமான திறமையும், வலிமையும் உள்ள மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களை அனுகூலத்திற்காகவும் இராஜ்ஜியத்தின் முன்னேற்றத்திற்காகவும் போதகர்கள் அவர்களைத் தெரிந்து எடுத்து சேவை பணியில் பயிற்சி தந்தும் ஊக்கப்படுத்தியும் வருவார்களானால் நன்று. ஒரு மகத்தான தனிப்பட்ட காரியமாக எந்தவொரு போதகரும் செய்யக் கூடியது என்னவென்றால் அதன் அங்கத்தினர்களை நடைமுறைப் பணியில் ஈடுபடுத்தி அவர்களுடைய வேறுபட்ட திறமையான வழிகளில் தேவனுடைய இராஜ்ஜியம் விரிவடையச் செயல்படுவதாகும்.

**ஒரு வளர்ச்சி அடைய திட்டமிடும் திருச்சபை அதன் மகா உன்னதமான வாய்ப்பாகிய அங்கத்தினர்களை பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் அங்கத்தினர்கள்.**

- கிறிஸ்து சபை ஊழியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு வரிசையான போதனையை ஆரம்பியுங்கள்.
- மிகவும் சுறுசுறுப்பாக உனது கூடிவரும் சபையில் திறமை வாய்ந்த அங்கத்தினர்களை கண்டு கொள்.
- அவர்களை உற்சாகப்படுத்தி சீஷர்களாக்கி, சீர்படுத்துங்கள்.
- அவர்களை சாதாரணமான சிறிய வழிகளில் பயன்படுத்தவும்.
- அவர்கள் விருத்தி அடைந்து பூரணமாக ஆன பிறகு அவர்களை மிக அதிகமாகப் பயன் படுத்த முயற்சி செய்யவும்.
- கூடிவரும் சபையினரை இந்த ஊழியங்களை கனப்படுத்தி மரியாதை கொடுக்கும்படி உற்சாகப்படுத்தவும்.

நீ இந்த மகத்தான வசதியைப் பெற்றுக் கொண்டால் - அதாவது உனது அங்கத்தினர்களை - பயிற்சி கொடுத்து நீ விருத்தி செய்யக் கூடிய வேறு பல வசதிகள் உண்டு.

✷ **ஒரு போய் பார்த்தால் என்ற நிகழ்ச்சியைத் தொடங்கு.** அதாவது உன்னால் புதிதாகப் பயிற்றுவிக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டு போய் பார்த்தல் ஆகிய திட்டத்தைச் செயல்படுத்து. அவர்களுக்கு போய் பார்த்தல் என்ற ஊழியத்திற்குக் குறிப்பிட்ட பயிற்சி கொடுக்கவும். அதாவது சிலரை குறிப்பிட்டு அனுப்ப:

– மேய்ப்பனுக்கான போய் பார்த்தல் அதாவது அதிகமான உதவி தேவைப்படும். அங்கத்தினர்களை வியாதி, பிரச்சனைகளிலுள்ளவர்களை.
– புதிய விசுவாசிகளைப் போய் பார்த்தல் புதிய விசுவாசிகளை பின் தொடர்ந்து சென்று அவர்கள் வீடுகளில் சந்தித்தல்.
– சுவிசேஷ பிரபல்யத்திற்காகப் போய் காணுதல் ஆதாயப்படுத்தக் கூடியவர்களை அவர்கள் வீடுகளில் போய் சந்தித்து அவர்களை இயேசுவண்டை வழி நடத்திக் கொண்டு வரும்படியாக.

✷ இல்லம், ஆலய திருச்சபை நிகழ்ச்சிகள்.
உன்னுடைய நகரத்திலாவது அதன் சுற்றுப்புற குடியிருப்புகளிலாவது சுவிசேஷம் அணுகிக் கிட்டிச் சேர்க்கும் கூட்டங்களை ஏற்படுத்தி அதற்கான இடங்களுக்காக தலைவர்களுடைய வீடுகளை கூடும் இடங்களாகப் பயிற்சி கொடுக்கப்பட்ட தலைவர்கள் அவர்களை மேற்பார்வை செய்யும்படி பயன்படுத்தி இந்த விதமான கூடுகைகளை தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக ஆள் சேர்க்கும் கேந்திரங்களாக பயன்படுத்திக் கொள்க.

எல்லாவற்றிற்கும் மூத்த போதகர் இந்த கிட்டிச் சேர்க்கும் கூடுகைகளின் மீது அதன் ஏகபோக மேற்பார்வையை தன் கைக்குள் வைத்துக் கொண்டு அந்த ஸ்தலத்து நடத்துபவரை உடன் மேய்ப்பனாக இருத்திக் கொள்ள வேண்டும். அந்த ஸ்தலத்து நடத்துபவர் அவரோ/அவளோ அந்த மேய்ப்பர் குழுவின் ஒரு பகுதியான அங்கமாக உணர வேண்டும். அந்த எல்லா விதமான தலைமை வழி நடத்திச் செல்பவர்களிடையே ஒரு குழு உணர்ச்சியை ஊக்குவித்து அதை விருத்தி செய்ய வேண்டும். அவர்களிடையே அதிகாரத்துவம், பணிவு, அவர்களுக்குள் மரியாதை ஆகியவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

✷ விசேஷமான விருந்தினர் சேவை
- இந்தப் பிரதான ஆலயத்தில் கூடி வரும் சபையில் அல்லது விழாக்களில் மதாந்திர விருந்தினர் சேவைக்கானத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்க.
- ஒவ்வொரு அங்கத்தினரையும் விருந்தினராக ஒரு நபரை கூடுகைக்கு அழைத்து வரும்படி ஊக்குவிக்க வேண்டும்.
- இந்த கூடுகைக்கு முன்னதாக ஒவ்வொரு நபரும் மற்ற விசுவாசிகளுடன் கலந்து பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒரு விருந்தை ஆயத்தம் செய்ய வேண்டும்.
- ஒரு விருந்தினர் சொற்பொழிவாளரை வரவழைத்து பேசும்படி செய்தல் நல்லது.
- ஒரு விருந்தினர் பாடகரை அழைத்துக் கொள்ளவும் அல்லது வல்லமையான சாட்சி கொடுக்கக் கூடிய ஒரு விருந்தினரை ஏற்பாடு செய்யவும்.
- அந்த கூடுகை ஆராதனையை ஒரு வல்லமையான சுவிசேஷ பிரச்சார வற்புறுத்துதலை உணர்த்தும் ஆராதனையாக அமைக்கவும்.
- இறுதியாக இரட்சிப்புக்காக ஒரு வல்லமையான அழைப்பைக் கொடுத்து முடிக்கவும்.

## 10: அதனதன் ஜாதியின் படியே பெருக்கம் அடையச் செய்யவும்
அந்த பிரதானமான சபையை அணுகிக் கிட்டிச் சேர்ந்து கிளை சபைகளான புத்திரி சபைகளை ஏற்படுத்தக் கூடிய சபையாகத் தீர்மானித்துக் கொள்ளவும். சுகாதாரமான முதிர்ச்சிக்குரிய தெளிவான அடையாளங்களில் ஒன்று பிறப்பித்தல் அல்லது பெருக்கம் அடைதலாகும். தேவன் மனிதன் பலுகிப் பெருகுமாறு சிருஷ்டித்தார். ஆனால் அதற்கு சுகாதாரமான விருத்தியும் ஓரளவு முதிர்ச்சியும் பலுகிப் பெறுகும் நிலையை அடைவதற்குத் தேவைப்படுகிறது. உன்னுடைய திருச்சபை தரிசனத்தில் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் தானே உன்னுடைய திருச்சபையின் ஐக்கியமாவது திருச்சபை ஐக்கியத்தை நாட்டும் ஐக்கியம் என்று எழுதிக் கொள்ளவும்.

# அதிகாரம் 6 - திருச்சபை வளர்ச்சிக்கான வியூக யுக்திகளை அமைத்தல்

இந்த வியூக யுக்திகள் என்ற வார்த்தை சில போதகர்களை கலக்கம் அடையச் செய்கிறது. அவர்களுக்கு தேவன் பேரில் சார்ந்திருப்பதை விட மனித முயற்சியில் சார்ந்திருக்க வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்தப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் தேவன் தாமாகவே ஒரு யுக்தி யோசனையுடையவராயிருக்கிறார். நாம் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவ வேண்டுமானால் நாமும் யுக்தி யோசனை உள்ளவர்களாக ஆக வேண்டும்.

## 1: இந்த வியூக யுக்தி என்றால் என்ன?
இதன் கீழ் சில எளிமையானதும் சுருக்கமானதுமான செய்பொருள் விளக்கம் தரப்படுகிறது.
- ஒரு நீண்ட கால திட்டம் அல்லது கொள்கை முறையைத் தீர்மானித்துக் கொள்ளவும்.
- இவ்வாறு வகுக்கப்பட்ட கொள்கையான ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றிச் சாதிக்கக் கூடியதாக தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

– அதை நிறைவேற்றப் பயன்படுத்தும் நடைமுறைகள் அந்த குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும்படி பயன்படுத்தப்பட வேண்டும்.

அந்த வியூக யுக்தியை விளக்கும் அகராதி வார்த்தைகளில் சில பின்வருமாறு: திட்டம், அட்டவணை, கொள்கை கோட்பாடுகள், ஒருங்கிணைந்த அமைவு, நடத்திச் செல்லும் திறமை, ஒழுங்கு முறை, நடைமுறை முதலியன. வியூக யுக்தி என்பது யுத்த நடைமுறை நெறிகளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொல்லாகும். அது படைகள் மரக்கலங்கள், விமானங்கள் முதலானவற்றை அணி வகுத்து களத்தில் முன்னேறுவதற்கு அதற்குத் தகுதியான ஸ்தானங்களைக் கண்டறிந்து பகைவர் மேல் தோல்வியைக் கொண்டு வர பயன்படுத்தப்படும் கலையாகும்.

**ஒரு வியூக யுக்தி நன்கு நிர்ணயிக்கப்பட்டு நீண்ட காலத் திட்டத்தின் படி வகுக்கப்பட்டு சீரான, ஒரு நிரந்தரமான பயனை அடையும்படி உருவாக்கப்படுகிறது.**

**ஆகவே வியூக யுக்தியான தன்னுள் ஆக்கப்பட வேண்டுவனவாக:**

- அந்த சூழ்நிலைமையை பரீசிலனை செய்யவும்.
- அந்த பிரச்சனைக்களுக்கான நிவாரணங்களை நிர்ணயித்தும்
- வியூக யுக்திகளை தீர்மானஞ் செய்தும்.
- நடைமுறை நடபடிக்கைகளைச் செயல்படுத்தியும்
- அதன் செயலூக்க விளைவுகளை அவ்வப்போது மேற்பார்வையிட்டு நிர்ணயஞ் செய்தும்
- அதன் நடைமுறைகளை ஒன்றுக்கொன்று சீர் செய்தும்
- அதன் இலக்கை அடைவதற்கும்.

**2: நமது திருச்சபை வளர்ச்சிக்கு நாம் ஏன் வியூக யுக்திகளை கையாள வேண்டும். அதன் அவசியமும்**

இலட்சிய வாதிகள் ''திருச்சபை வளரும்படி தேவன் விரும்பினால் அது நம்முடைய திட்டமும் முயற்சியும் இல்லாமலே இயல்பாக வளர முடியும்'' என்று சொல்லலாம். ஆனால் அந்த வெளிப்படையான உண்மையாவது தேவன் தாமே ஒரு வியூக யுக்தி திட்டமுடையவர். அவர் மனித குலத்தின் இரட்சிப்புக்காக ஒரு வியூக யுக்தியையே கையாண்டார். வேதாகமம் சொல்லுகிறது. இது அனாதி காலமாகவே முன் குறிக்கப்பட்டது. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமது மூலமாய் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசி காலங்களில் வெளிப்பட்டார். (I பேதுரு 1:20) உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வெளி 13:8) அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே (எபேசி 1:4) உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். (மத் 25:34).

- **உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் ஒரு திட்டத்தை வகுத்திருந்தார்.** (எபேசு 1:4)
- **இயேசு தமது இரட்சிப்பின் பணிக்காக முன் குறிக்கப்பட்டிருந்தார்.** (வெளி 13:8)
- **பரிசுத்த ஆவியானவர் இந்த இரட்சிப்பின் வியூக யுக்தி திட்டத்தில் மிகவும் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தார்.**
  இந்த பரிசுத்த ஆவியானவர் இந்த இரட்சண்ய பணிக்கு பிரதிநிதியாக இருந்து திருச்சபையைக் கட்டி எழுப்பி அதை விரிவுபடுத்தும் பொறுப்பில் முன் குறிக்கப்பட்டு உள்ளவர்களை ஊக்குவித்து பலப்படுத்தும் பணியை நிறைவேற்றினார்.
- **இந்தத் திருச்சபையின் வியூக யுக்தியானது நித்தியத்தில் முன் குறிக்கப்பட்டதாகும்.** இந்தத் திருச்சபையின் வரலாறு அதன் தோற்றம் முதல் முடிவு பரியந்தம் உலகத் தோற்றத்திற்கு முன்னரே மிக நுணுக்கமான விவரங்களுடன் திட்டமிடப்பட்டது. தேவனுடைய தீர்க்கதரிசன நோக்கங்களை அது கர்த்தருடைய அனாதி தீர்மானத்தை மிக நுணுக்கமான முறையில் நிறைவேற்றும். தேவன் தமது அனாதி நோக்கத்தை நம்முடைய ஒத்துழைப்போடு அல்லது ஒத்துழைப்பு இல்லாமலும் நிறைவேற்றுவார் என்ற சிந்தனை மனதிற்கு ஒரு இதமான யோசனையாகும். நமது ஒத்துழைப்பும் விசுவாசமும் ஆகிய அம்சங்கள் அவருடைய அனாதி திட்டத்தின் நோக்கத்தில் நாம் எந்த விதமான பங்கெடுக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பவைகளாகும்.

- **இயேசு திருச்சபைக்கு ஒரு தெளிவான வியூக யுக்தியை கொடுத்தார்.** (அப் 1:8)
  **புறநோக்கு:** உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி.
  **வியூக யுக்தி:** அவருடைய சீஷர்கள் அந்தப் பணியை நிறைவேற்றுவார்கள்.
  **செயல்முறை:** சிஷர்கள் சுவிசேஷத்தைப் பிரபல்யப் படுத்துவார்கள்.
  **அவர்களுடைய அதிகாரம்:** இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களோடு இருக்கிறேன்.
  **குறுகிய கால இலக்கு:** எருசலேம் பட்டணத்தில்
  **நீண்ட கால இலக்கு:** உலகத்தின் முடிவுபரியந்தம்
  **காலக்கெடு:** சகல நாட்களிலும்
- **திருச்சபையானது வளர்ச்சி அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முன் குறிக்கப்பட்டது.**
  இயேசு சொன்னதாவது "பயப்படாதே, சிறு மந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." (லூக்கா 12:32) திருச்சபையானது ஆபிரகாமின் வித்தின் ஒரு வல்லமையான பாகமாக உலகத்தின் சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதமாக இருக்கும்படி முன் குறித்திருக்கிறார்.

## 3: ஒரு செயலூக்கமான வியூக யுக்தியை இலக்காக அடைவதற்கான 10 படிகள்.

1ம் படி: **வெளிப்படையான மதிப்பீடு.** இந்த முதலாம் படிக்கு பூரணமான செயலூக்க வாய்மை தேவைப்படுகிறது. அது உன்னுடைய கடந்த காலத்து, நிகழ் காலத்து நிலைமையை பகுத்தறிய அவசியமாகிறது. உன்னுடைய திருச்சபையின் முன்னேற்றம் அல்லது முன்னேற்ற குறைவைப் பற்றிய சில நிர்பந்தமான கேள்விகள் கேட்கப்படவும் விடையளிக்கப்படவும் வேண்டும்.

A: உன்னுடைய திருச்சபை எவ்வளவு காலமாக வழக்கில் இருக்கிறது?
B: தற்போதைய செயல்படும் அங்கத்தினர்களின் எண்ணிக்கையின் அளவு என்ன?
C: Bயை Aயால் வகுத்து = ஆண்டுதோறும் வளர்ச்சியின் அளவை நிர்ணயிக்கவும்.
D: இந்த போக்கை புள்ளி விவரமாக ரேகையாகக் காட்டு. அது எப்படிக் காட்டுகிறது.
E: நாம் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை யாது?

2ம் படி: **முன்னோக்கு படம் காணுதல்.** இந்தத் தற்கால நிலைமையான போக்கு நீடிக்குமானால் பின்வரும் 10 ஆண்டுகளில் உனது திருச்சபையின் ஸ்தான நிலைமை யாது? இந்த வளர்ச்சியின் காரண காரியம் குறைவான அளவில் நீடித்தால் அதாவது இளைஞர்கள் குறிப்பாக சேர்க்கப்படும் முறையால் இந்தத் திருச்சபை இன்றிலிருந்து 10 ஆண்டுகளில் இருக்கவே முடியாது. அந்த வளர்ச்சியின் வேகமானது எதிர்பார்த்தை விட, திருப்தியில்லாமல் இருக்குமானால் நீ உடனடியாக ஒரு புதிய வியூக யுக்தியை நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகிறது.

3ம் படி: **குறிப்பான நிச்சயிக்கப்பட்டத் தீர்மானங்கள்.** திருச்சபையின் தலைமைத்துவம் ஜெபத்துடன் ஒரு புதிய பெருக்கம் தரும் செயலூக்க திட்டத்தைக் கண்டுபிடிக்கத் தீர்மானிக்க வேண்டும். ஆகவே சில கடினமான, நிச்சயிக்கப்பட்ட தீர்மானங்கள் இப்பொழுதே எடுக்கப்படவேண்டும். யாராவது ஒருவர் குண்டு வெடியை வெடித்தே ஆக வேண்டும். இன்றைய போக்கானது திருப்திகரமற்றதாக இருக்கிறதென்பதை ஒப்புக் கொண்டு ஒரு புதிய பலமிக்க வியூக யுக்தி அவசரம் உடனடியாக தேவைப்படுகிறதுதென்பது பிரச்சனைத் தீர்வுக்கு முதல் படியாகும்.

4ம் படி: **அந்த செயலூக்க நோக்கங்களைப் பிரித்துப் பரிசீலனை செய்யவும்.** கடினமானதும் நேர்மையும் ஜெபத்துடன் கூடிய கருத்தொருமித்தல் திருச்சபையின் உண்மையான நோக்க செயல்பாடுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஒரு புதிய பரிசீலனை "நாம் ஏன் இங்கு இருக்கிறோம்." நாம் ஆதாயப்படுத்திக் கொள்வது என்னவாயிருக்கும். நாம் அதில் வெற்றி பெறுகிறோமா? அப்படி அல்ல என்றால் ஏன் அப்படி அல்ல என்று புனராலோசனை செய்ய வேண்டும். ஒரு புதிய நோக்கத் திட்ட அறிக்கை தயராக்கப்பட வேண்டும். ஒரு வேளை

நாம் மனந்திரும்பும் காலம் தேவைப்படும். அதில் நாம் அவருடைய மகத்தானத் திட்டத்தை செயலாற்ற வேண்டிய முறையில் நிறைவேற்றவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். நாம் திரும்பவும் அந்த அழைப்பின் கட்டளையை நிறைவேற்றும் நோக்கங்களை வரையறுத்துச் சொல்லுவோம். அவற்றை அட்டவணைப்படுத்தி கர்த்தருக்கு முன்னால் ஜெபத்தில் ஏறெடுப்போம். இந்த இலக்கை அடைவதில் அவருடைய உதவிக்காக கண்ணீர் விட்டு கதறுவோம். ஆகவே எந்த விதமான மானிட வியூக யுக்தியோ அந்தத் தேவைகளைச் சந்திக்கவோ அந்தப் பணியை நிறைவேற்றவோ முடியாதென்பதை இப்பொழுதே புரிந்து கொள். நமக்குத் தேவையானது தேவனால் அருளப்பட்ட செயலூக்க நோக்கங்களும் அவரால் அளிக்கப்படும் வியூக யுக்தியுமே. நாம் அவருடைய நோக்கங்களை அடையும் படி அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதே.

5ம் படி: **அந்தப் பிரச்சனைக்கான தீர்வை விவரித்துக் கூறு.** அந்த நோக்கங்களாவன நாம் எங்கே நோக்கிப் போகிறோம்? நாம் அங்கு எப்படிச் சேரலாம்? ஆகவே நமது பிரச்சனைத் தீர்வுக்கு சில குறிப்பிட்ட நிபந்தனைகள் தேவைப்படுகிறது. ஆகவே நாம் ‘‘நாம் வளர்ச்சி அடையப் போகிறோம்’’ என்பது போன்ற தெளிவற்ற சொற் கூற்றுகளைச் செய்வது போதாது. நாம் தேவனிடம் அமர்ந்து அவர் நம்மை எப்படி வளர்ச்சி அடையச் செய்வார் என்பதை கண்டுபிடித்து அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே நாம் தேவனிடம் காத்திருந்து ஏதோ ஒரு குறிப்பிட்ட ஆரம்பம் நமது பார்வையில் வரும்வரை ஏறெடுப்பது அவசியமாகிறது. நாம் நேர்மையும் உண்மையும் உள்ளவர்களாயிருந்தால் தேவனும் நம்முடன் சில குறிப்பிட்டவைகளை பகிர்ந்து கொள்ள ஆரம்பிப்பார். நாம் இவைகளை முழு மனதுடன் பின்பற்றினால் பரிசுத்த ஆவியானவர் வளர்ச்சியையும் விருத்தியையும் அடைய வழி செய்வார். சில சமயங்களில் அவர் சுத்திகரித்து கிளை அறுத்தும் காலா காலத்தில் ஆரம்பிப்பார். சில சமயங்களில் தேவன் தொடங்கினால் சிலர் அவர் செயல்படுவதற்கு விரோதமாக எழும்புவார்கள். சிலர் மகிழ்ச்சி அடையமாட்டார்கள். சிலர் சபையை விட்டு விட்டுச் செல்வார்கள். தேவன் திருச்சபையில் வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கு முன் துர்அதிர்ஷ்ட வசமாக இது சில வேளைகளில் அவசியமாகிறது.

6ம் படி: **அதன் நோக்கங்களை சோதித்துப்பார்.** இந்த குறிப்பிட்ட சமயத்தில் அந்தப் பிரச்சனையின் நோக்கமானது கவனத்துக்கு உரியதாகிறது. அது எழுப்புதலுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகி அந்த நோக்கங்கள் உண்மையும் நியாயமும் ஆகிறது. சில சமயங்களில் போதகரோ அல்லது சபையின் தலைமைத்துவம் தங்கள் திருச்சபை வளர வேண்டும் என்பதற்கு சில மாம்சீகக் காரணங்களாக இருக்கலாம். ஒரு வேளை அது மாம்சீகமான சுயத்தின் உணர்வின் காரணமாக அல்லது சமயவாதப் பெருமையினால் கூட இருக்கலாம். ஒரு வேளை அது ஏதோ ஒன்றை சாதித்து மக்களின் கவனத்தைப் பெறவோ அல்லது பொறாமை படவோ செய்யலாம். ஆனால் இவைகள் அனைத்தும் தகுதியற்ற நோக்கங்கள் ஆனதால் தேவன் அவற்றை ஒரு பொழுதும் ஆசீர்வதிக்கமாட்டார். மேலும் எந்த அளவு வியூக யுக்தியினாலும் திட்டமிடுதலாலும் இந்த நிலைமைகளில் தகுதியானதொன்றும் நேரிடாது.

7ம் படி: **இந்த வியூக யுக்தியானது ‘‘முன்னோக்கி திட்டமிடுதல்’’ ஆகும்.** வருங்காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். தேவனுக்குள் நடக்கக் கூடிய கிரியைகளின் சம்பவிக்கும் அனுகூலங்களைத் தீர்மானம் செய். இந்த வியூக யுக்தியை உருவாக்கி, திட்டமிட்டு சமயோகித வழிகளை நிர்ணயித்து அதனால் வளர்ச்சியை நேரிடக் காரணமானதாக வேண்டும். அந்த விதமான வியூக யுக்தி மறைமுக தத்துவ போர்வையில் இருக்கக் கூடாது. ‘‘அது குறிப்பிட்ட அறிவுரைகளை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.’’ தேவன் வருங்காலத்தை முன் குறித்துள்ளார். அதுவும் உன்னுடைய திருச்சபையுடையதும் உன்னுடையதையுமே. அதுவும் குறிப்பிட்ட அறிவுரைகளால் நிரப்பப்பட்டு உன்னுடைய திருச்சபை எவ்வாறு வளர்ச்சி அடையக் கூடும் என்பதால். இந்த வகை நடைமுறைகள் அத்தகைய திருச்சபை வளர்ச்சியை கொண்டு வரக்கூடும். அது அவ்வாறு வளர்ச்சி அடையும் பொழுது அதில் யார் யார் ஈடுபடுவது, இந்த குறிப்பிட்ட அறிவுரைகள் எப்படி, எப்பொழுது? என்ன? யாரோடு? என்பதை நிர்ணயிக்கும். இந்த குறிப்பிட்ட அறிவுரைகள் எண்ணிக்கை, தேதி நாட்கள், பரிமாணம், மதிப்புச் செலவுகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டது. இவைகள் குறுகிய காலத்து இலக்குகளையோ தன்னுள் கொண்டு பயனளிக்கும்படி வரையறுக்கப்பட்ட காலத்தின் பரிமாணத்தையும் வரையறுக்கும்.

8ம் படி: **உன்னுடைய வியூக யுக்தியின் பலா பலன்களை மதிப்பீடு செய்யவும்.** உன்னுடைய வியூக யுக்தியில் சில கொள்கைகளையும் அதை அடையும் வழிகளையும் கொள்கை மாறாததோர் பரிசீலனையை மேற்கொள்ளத் தக்கதாக அவற்றை தன்னுள் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக புள்ளி விவரங்களை வைத்திருக்க வேண்டும். அதாவது வருகைப் பதிவேடு, எல்லா கூடுகைகளிலும் நிகழ்ச்சிகளிலும் வருகை தந்திருப்பதைக் குறித்து வைத்தல் அவசியம். மேலும் கிறிஸ்துவுக்காக ஓர் ஒப்புக் கொடுத்தலைத் தந்த நபர்களின் எண்ணிக்கை, ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கையும் (புள்ளி விவரத்தில்) அடங்கும். இந்த வகையான விஷயங்கள் அனைத்தும் வளர்ச்சி குறித்த தரிசனத்தின் ஓர் அங்கமாக இருப்பதால் மிகவும் விசுவாச நேர்மையுடன் எழுதி வைக்கப்பட்டு ஒழுங்காக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். (உ.ம்) உங்களது முதலாண்டு இலக்காக 250 நபர்களை கிறிஸ்துவண்டை நடத்தப் படுவதைக் காண்பதற்கு அதை அப்போதைகப்போது ஒவ்வொரு மாதமும் மேற்பார்வை செய்து கொண்டு வருதல் நல்லது. ஏனென்றால் அது வாரந்தோறும் 5 நபர்கள் வீதம் மாதத்திற்கு 20 நபர்கள் கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுத்தால் உன்னுடைய இலக்கை நிறைவேற்ற வேண்டும் என்றிருந்தால் இது நல்லது.

9ம் படி: **அந்த நிகழ்ச்சி நிரலை மறுபடி மாற்றி வரிசைப்படுத்து.** நிர்ணயிக்கப்பட்ட பலன்களை சாதித்தாலும், சாதிக்க முடியா விட்டாலும் அந்த விளைவுகளின் படி நிகழ்ச்சி நிரல்களில் மாற்றி அமைத்தல் செய்யப்படக் கூடும். புதிய சகோதர நபர்களை உள்ளே கொண்டு வரலாம். புதிய முறைகளை நடைமுறைப் படுத்தலாம். தகுதியான மாற்றங்கள் செய்யலாம். வியூக யுக்தியை விளைவுக்காக இனிமையான ஸ்வரம் ஏற்றலாம். இந்த விதமான விரும்பத்தக்க மாற்றங்கள் ஆனவை விமானம் ஆகாயத்தில் பறந்து செல்கையில் செய்யப்படும் மாற்றங்கள் போன்றவை. அவைகள் அந்த நிகழ்ச்சி நிரல் நடைமுறையில் இருக்கும்பொழுது மட்டுமே செயல்படுத்த முடியும். மேலும் அவற்றை அந்தந்த சமயங்களில் மேற்பார்வை செய்து அதன் உண்மையான விளைவுகளை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் அளிக்கும். இந்த விதமான சீரான மாற்றங்களை உன்னுடைய வியூக யுக்தியின் தொடக்க காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாது. இவைகள் அந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறையில் உபயோகப்படுத்தப் படும்பொழுது மட்டுமே வெளிப்படையாகத் தெரியும்.

10ம் படி: **ஊழியர்களுக்கு சன்மானம் கொடு.** இந்தப் புதிய வியூக யுக்தி முன்னேறிப் போய், நாம் விரும்பிய பலா பலன்களை அடைந்த பொழுது தலைமைத்துவத்தின் குழு உணர்ச்சியை நல்ல நிலைமையில் வைத்திருப்பது அவசியம். இந்த வகையான வளர்ச்சியை நாம் அடைய முடிந்து ஒரு குழுவினால் நிலை நிறுத்தப்பட்டு அதுவும் ஓர் நல்ல ஐக்கியத்தில் இணைந்து செயலாற்றும் பொழுது மட்டுமே பெற முடியும். இந்தக் காரணத்திற்காகவே ஊழியர்கள் அனைவரும் அதன் பிரதிபலன்களான சன்மானத்தில் பகிர்ந்து கொள்ளவும் யுத்தத்தில் பெற்ற வெற்றி பொருள்களில் பங்கு பெறவும் முடியும். இந்த சாதனைகளும் முன்னணிப் போக்கும் ஒவ்வொரு அங்கத்தினரும் செயலூக்கத்துடன் தங்கள் பங்கை நிறைவேற்றும் பொழுது மாத்திரமே அடைய முடியும்.

## 4: ஒரு முறையற்ற நல்ல வியூக யுக்தியினால் பெறக் கூடிய தனிச் சிறப்புள்ள நற்பயன்கள்

- நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய் என்பதை நீ அறிவாய் (உனக்குத் தெரியும்)
- உனது திருச்சபை எங்கே போய் கொண்டிருக்கிறதென்பதை அறியும்.
- நீ நல்லதொரு குழு உணர்ச்சியை உருவாக்க முடியும்.
- நீ அநேகமான ஊழியர்களைப் பயன்படுத்தலாம்.
- நீ அந்த வேலைப் பளுவை செயலூக்கத்துடன் பகிர்ந்து கொள்ளலாம்.
- நீ வேலையை ஒப்படைப்புச் செய்வதால் திறமைப் படுவதை பெருக்கச் செய்ய முடியும்.
- நீ மிகவும் பயனை வற்புறுத்தும் கணக்கில் வைப்பதை அதிகமாகத் தேவைப்படலாம்.
- நீ மேலும் பலாபலன்களை மிகவும் சரியாக மேற்பார்வை செய்யக் கூடும்.
- நீ போகும் வழியில் திருத்தங்களையும் இசைவான மாற்றங்களையும் செய்யலாம்.
- நீ எப்பொழுது உன் இலக்கை அடைந்தாய் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

## 5: புள்ளி விவரங்கள் உண்மையாகவே தேவையா? (அல்லது தேவைப்படுமா?)

சில போதகர்களும் திருச்சபைகளும் எண்கள் மேல் ஒரு விதமான வெறுப்பைக் கொண்டு எண்ணிக்கை தொகையிடுதல் மாம்சீகம் என உரிமை கொண்டாடுகின்றனர். அவர்கள் மேலும் சில சமயங்களில் தாவீது இராஜா இஸ்ரவேல் மக்களைக் கணக்கெடுக்கையில் காட்டின ஆக்கினையைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். (I நாளா 1:21) அதாவது தாவீதுடைய நோக்கத்தையே தேவன் கண்டித்தார். அவனுடைய செயல்பாட்டை அல்ல. ஏனென்றால் தேவன் தாமே மோசேயைப் பார்த்து ஜனங்களைத் தொகையிடும்படி கட்டளையிட்டார். (எண் 1:12) ஆகவே எண்களை பெருமைக்காகவும் சுய திருப்திக்காகவும் பயன்படுத்துவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனாலும் புள்ளி விவரங்கள் அனைத்தும் நியாயமானதும் பயன் தருவதில் உதவி செய்வதாகவும் அமையும்.
ஆதித் திருச்சபை வரலாற்றில் (அப்போஸ்தலர் நடவடிக்கைகளில்) எண்களும் எழுதப்பட்ட புள்ளி விவரங்களும் மலிந்து காணக் கிடக்கின்றன.

<u>எண்களும் புள்ளி விவரங்களும்</u>: (1) அளக்கப்படக் கூடியவை (2) பொதுவாக புரிந்து கொள்ளக் கூடியவை (3) மிகவும் சரியானவை மற்றும் நம்பத் தகுந்தவை (4) முன்னேற்றத்திற்கு எடுத்துக் காட்டிகள் அல்லது அதற்கு மாறனதும்கூட
<u>அவைகள் தகுந்ததாகச் செய்பவை</u>: (a) சரியான கணக்கெடுப்பு செய்பவை (b) செயலூக்க உக்கிராணம் (c) பயனுள்ள நிறைவேற்றப்பட்ட சாதனைகள்.

## 6: இலக்கை முன் வைப்பதன் வல்லமை.

மறுபடியும் ஒரு தடவை நமது புள்ளி விவர விமர்சனங்களைப் போலவே, அநேக போதகர்கள் இலக்கை அமைத்துக் கொள்வதில் வெறுப்பைக் கொண்டுள்ளனர். (இந்த விதமான புள்ளி விவரங்கள் மேலும் இலக்கைக் குறித்து வைத்தல் மீதும் காட்டப்படும் வெறுப்பானது இந்த இரண்டின் மீதும் கண்டிப்பான சிந்தனையைத் தர வேண்டியவர்களிடம் அடிக்கடி காணப்படுகிறது.) அது ஓர் திருப்தியற்ற செயல்பாட்டின் தன்மையையும் உண்மைகளையும் நேரில் சந்திக்கத் தயக்கம் காட்டுவதை மூடி மறைக்க பார்ப்பதாகும்.) அதனால் நிரூபிக்கப்பட்டக் காரியமாவது இலக்கை பரிமாணக் காட்சியாக்கப் படுவதும் முன்னோக்க திட்டம் போன்றவை உபயோகத்தில் இல்லாமல் மதிப்புள்ளதும் பயனுள்ளதுமான சில காரியங்கள் ஒரு பொழுதுமே சாதிக்க இயலாமல் போய்விடும்.
இங்கே சில அடிப்படையான விமரிசனங்கள் சிந்தனைக்கு தரப்படுகின்றன.

**– இலக்கை அமைத்துக் கொள்ளுதல் வேதாகமத்தைச் சார்ந்தது.**
பவுல் அடிக்கடி பந்தயத்தைப் பற்றிய உபமான எடுத்துக்காட்டுகளை பயன்படுத்தி அவர் எவ்வாறு ஆவிக்குரிய ஜீவியத்தை நடத்தி வாழ்ந்து காட்டினார் என்பதைத் தெரியப்படுத்துகிறார். அவர் ஓட்டப் பந்தயத்தைப் பற்றி பேசுகிறார். பொறுமையுடனும் வைராக்கியத்துடன் ஓடுவதைப் பற்றி பேசுகிறார். எந்த ஒரு ஓட்டக் காரனுக்கும் அவனுடைய இலக்குத் தெளிவாக இல்லாவிட்டால் இதைச் செயல்படுத்த முடியாது. மற்ற பந்தயக்காரர்களுக்கு முன்னால் ஓடி கடைசிக் கோட்டை அடைய முடியாது. எல்லா வகையான பந்தயங்களிலும் ஓர் அதீதமான ஈடுபாடுள்ள ஒரு பந்தயக்காரனுக்கு ஒரு இலக்கைக் குறிப்பாக வைத்திருப்பது வெற்றிக்கு அவசியமாகிறது.

**– இலக்கை அமைத்திருப்பது நேரடியானது பயனுள்ளது.**
ஒரு மனிதனுக்கு குறிப்பிட்டதோர் திசை அறிவும் நோக்கமும் இருந்தால் மட்டுமே நாம் சிறப்பாக செயல்பட்டு செயலூக்க சாதனைகளைச் செய்யும்படி அவனுடைய உடலமைப்பு ஒரு வகையான பாணியில் அமைந்துள்ளது. ஆகவே மெய்ம்மை சார்ந்ததும், சாதிக்கக் கூடியதுமான இலக்குகள் இருக்குமானால் அவை நன்மை பயப்பதாகவும் தூண்டி ஊக்குவிப்பதாகவும் இருக்கும். அவைகள் ஓர் நேரடியான தசை வலிமை மிக்க விளைவை நம்மில் உண்டாக்கி நமக்குள்ளே மறைந்து கிடக்கும் சிறந்த திறமையையும் கொண்டு வந்து நம்மை நம்மிடம் உள்ள உயர்ந்த வலிமையுடன் செயலாற்றுமாறு செய்கிறது.

**– இலக்கை அமைத்துக் கொள்ளுதல் நல்ல சாதனைக்கு இன்றியமையாதது.**
நமது எந்த வாழ்க்கை துறையிலும் நாம் சிந்தனை செய்யும்பொழுது அது வியாபாரம், விளையாட்டுச் செயல்கள் ஆகும். எந்த விதமான சாதனையானாலும் எங்கெல்லாம் சிறந்த செயலாற்றல் அவசியமோ அங்கெல்லாம் இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதற்கு உன்னைத் தானே

அர்ப்பணித்துக் கொள். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஓர் இலக்குத் தேவை. அது இல்லை என்றால் வாழ்க்கை திசை தவறி, நோக்கமின்றி ஆகிறது. நாம் ஓர் இலட்சியமின்றித் திரிந்து வாழ்க்கையில் திசையின்றி, நிறைவு இல்லாமல் நாம் நமது இலக்குகளை வரையறுத்து நிலை நிறுத்திக் கொண்டு அதை நிறைவேற்ற மெய்யான திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

**– இலக்கை அமைத்துக் கொள்ளுதல் கர்த்தரை மகிமைப்படுத்துவதாகும்.**
பவுல் தனது ஜீவியத்தின் இறுதிக் கட்டத்தை அடைந்த பொழுது தன் தேவனைச் சந்திக்க ஆயத்தமாக இருப்பதாகக் கூறி மகிழ்ச்சி அடைந்தார். ‘‘அவன் நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக் கொண்டான்.’’ இந்த விதமான நிறைவேற்றப்பட்ட திருப்தியை ஒருவர் தனக்கென்று இலக்கை நியமித்துக் கொண்டு அர்ப்பணிப்பு கொண்ட நோக்கத்தோடு இடைவிடா முயற்சி செய்தால் மட்டுமே கை கூடினதாகும். நாம் இப்பொழுதே அந்த மாதிரியான இலக்கை அமைத்துக் கொள்ளா விட்டால் இந்த விதமானதோர் பேரானந்தத்தைப் பவுலோடு பகிர்ந்து கொள்ள முடியாது.

**– இலக்கை நிர்ணயித்துக் கொள்ளாவிட்டால் எதையும் கொஞ்சமாக சாதிக்க முடியாது.**
இது வாழ்க்கையின் எந்த பகுதிக்கும் உண்மையானது. மேலும் ஆவிக்குரிய சாதனையிலுங்கூட இது மெய்யானதாகும். உன்னுடைய திருச்சபைக்கென்று நிர்ணயிக்காவிட்டால் சிறிது முன்னேற்றமாவது, வளர்ச்சியாவது அனுபவிக்க முடியாது. இதன் இரகசியமாவது தேவனுடைய ஒத்துழைப்புடன் இலக்கை அமைத்துக் கொள்வதாகும். அவருடைய இலட்சியமே உனது இலக்காக ஆகட்டும். உனக்கென்று சில இலக்குகளை அமைத்துக் கொள்ளா விட்டால் உனது தரிசனத்திற்கு உருவமும் பரிமாணமும் இல்லாமல் போய் விடும். அது உருவமற்ற மறைபொருளாகவும் மேக மூட்டம் உடையதாகவும் இருக்கும். நீ உன்னுடைய இலக்கை சாதித்தாயா அல்லது அல்லவா என்பதை எப்பொழுதுமே நீ அறிய முடியாது.

## 7: மாற்றங்களுக்கு ஆயத்தமாக இரு

அநேகமான திருச்சபைகளுக்கு இருக்கும் மிகக் கடினமான விஷயங்களில் ஒன்று மாற்றங்களை சமாளிக்க முடியாமை தான். ஒரு பிரியமான சொற்கூற்றாகத் தோன்றுவது ‘‘எங்களது திருச்சபையில் இந்த வழிகளில் நாங்கள் காரியத்தைச் செய்வதில்லை’’ என்பதுதான். ஆனால் நாம் சந்திக்க வேண்டிய விஷயமாவது அந்த விதமான வழிகளில் நாம் எப்பொழுதும் செய்தது போல காரியங்களைச் செய்யவதானால் ஒரு வேளை எந்த பெரிய அளவிலாவது வளர்ச்சியை அடையாமல் இருக்கலாம். மேலும் அந்த வழிகளில் நீ தொடர்ந்து காரியங்களைச் செய்வாயானால் அதே வகையான பலனை சற்று அதிகமாக எதிர்பார்த்துக் காணலாம். காரியங்கள் மேலும் முன்னேறி, வளர்ந்து, விருத்தியடைந்தால் அங்கே சில புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படலாம். ஆகவே தலைமைத்துவத்தில் இருந்து அங்கத்தினர்கள் வரை ஒவ்வொருவரும் ஈடுபாடு கொண்டவர்கள் சில மாற்றங்களை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். தொடக்கத்தில் இது சுலபமான காரியமாக ஆகாது.

சில மக்கள் தங்கள் பாரம்பரியத்திலும் வழிகளிலும் அவர்கள் ஆழ்ந்திருப்பதை நீயோ அல்லது அவர்களோ உன்னை விட நினைத்துப் பார்த்திருக்க முடியாது. சிலர் அந்த மாறுதல்களுக்காகச் சீற்றம் அடைந்து திருச்சபையை விட்டுச் செல்லும் அளவுக்குப் போய் விடுவார்கள். அங்கத்தினர்களை இழப்பது விசாரிக்கத் தக்கதென்றாலும் சில சமயங்களில் தவிர்க்க முடியாததும் அடிக்கடி அம்மாதிரியான மக்கள் விட்டு விட்டுச் செல்வதுங்கூட அவசியமுமாகும். ஆகவே அடிக்கடி அவர்களுடைய இழிவான செல்வாக்குகள் நமது பார்வைக்குட்படாதபடிக்கு வளர்ச்சியைக் குறைவு படுத்தினாலும் அந்த விதமான செல்வாக்குகள் மறக்கப்பட்டாலோ அல்லது எடுபட்டு போனாலோ, அந்த மாற்றங்கள் புத்துயிர் அளிப்பவையாக வளர்ச்சி அடையச் செய்யக் கூடியவை நேரிடாமல் போகலாம். மற்றவர்கள் தங்கி இருந்து மாறுதல்களை எதிர்க்கலாம். அந்த விதமான எதிர்ப்புகளைக் கண்டறிந்து அவைகளை சரியான முறையில் சந்தித்துக் கொள்ளவும். ஏனென்றால் நோக்கத்தின் ஐக்கியமாவது வெற்றியுடன் வியூக யுக்தியைச் செயல்படுத்த அவசியமாகிறது. மேலும் அது செயலூக்க வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கும்.

## அதிகாரம் 7 - திருச்சபை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஏதுக்கள்

சில நோக்கு முறைகளாலும் ஒருங்கிணைக்கும் ஏதுக்களாலும் ஆன ஒரு வெற்றி பெறும் திருச்சபையின் வளர்ச்சி திட்டமானது இடத்திற்கு இடம் மாறுபடலாம். அதுவும் ஸ்தலத்து சம்பந்தப்பட்ட சிறந்ததோர் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் சார்ந்தது எனலாம். ஆனால் அங்கு பல நோக்கு முறை அம்சங்கள் உண்டு. அவை வேதாகமத்தின் அங்கீகாரம் பெற்றவையாகும். அவைகள் பொதுவானவைகள் என்றாலும் செயலூக்க வளர்ச்சி முழுமையாக இன்றியமையாததும் எங்கு திருச்சபை வளர்ச்சி ஏற்படக் கூடுமோ அங்கெல்லாம் பயன்படவும் கூடும், நாம் சற்றுக் சுருக்கமாக சில ஏதுவான காரணங்களைப் பார்க்கலாம்.

### 1: அர்ப்பணிக்கப்பட்டதும் செயலூக்கமுடையதுமான தலைமைத்துவம்.

முதலாவதாக ஒரு தலைவர் செயலூக்கம் உடையவராக அல்லா விட்டாலும் மெய்யாகவே அர்ப்பணிக்கப்பட்டவரா என்று கவனத்தறிய வேண்டும். (அதாவது எதிர்பார்க்கும் பலன்களைத் தருகிறதா) என்று கண்டறிய வேண்டும். அத்தகைய தலைவர்கள் அர்ப்பணிக்கப்பட்டவர்களாகவும், வேலையில் ஈடுபாடு உடையவர்களாகவும் நேர்மையான கடின உழைப்பாளர்களாக இருந்தாலுங் கூட செயலூக்கம் அற்றவர்களாக இருக்கலாம். அவர்கள் தங்கள் பணியைச் செய்து முடிப்பதில்லை. செயலூக்கம் என்பது அடிப்படையாக, ‘‘திறமையாக ஒரு வேலையைச் செய்து முடிப்பதாகும்.’’ அவர் எந்த ஒரு பகுதியிலும் திறன் படைத்தவராக இருந்தாலும், அந்தக் கொடுக்கப்பட்ட பணி சரிவர வெற்றியாகச் சாதிக்கப்படாவிட்டால் அந்த தலைவர் செயலூக்கம் உடையவர் அல்ல.

<u>ஒரு தலைவரைச் செயலூக்கம் உடையவராகச் செய்யும் சில ஏதுக்கள் எவை?</u>

**– அவர் தான் எங்கு போய்க் கொண்டிருக்கிறார் என்பதை அறிய வேண்டும்.**

ஒரு செயலூக்கமுடைய தலைவர் முக்கியமாக தரிசனம் உடையவர் ஆவார். அவர் வருங்காலத்தை உற்று நோக்கி தேவன் தமக்கு எதைச் செய்து முடிக்க விரும்புகிறார் என்பதை அறிந்து அதை நிறைவேற்றுவதில் தன்னையும் ஒரு அங்கமாக அர்ப்பணித்துக் கொள்கிறார்.

**– அவர் மற்ற ஜனங்களையும் அந்த தரிசனத்தின் ஒரு பாகமாக இருக்கும்படி வற்புறுத்தக் கூடும்.**

ஒரு கால் ஒரு தலைவரை நல்ல தலைவராகக் காணக்கூடிய அடையாளமாவது மக்கள் அவரைத் தொடர்ந்து பின்பற்றிச் செல்வார்கள். உன்னை ஒருவரும் பின்பற்றி வராவிட்டால் நீ ஒரு செயலூக்கமுடைய தலைவராக ஆக முடியாது.

**– அவர் அந்தத் தரிசனத்தைத் தெளிவாகக் கூறி அறிவிக்க வேண்டும்.**

இந்த செயலூக்கத் தலைவர் தரிசனமுடையவர் அல்ல என்பது அவருடைய நோக்கங்கள் துல்லியமற்றதாகவும் மேகத் திரையால் மறைக்கப்பட்டும் இருந்தால் அந்தக் கருத்தின்படி அவ்வாறு இருப்பதாகக் கருதப்படுவார். அவர் தன்னுடைய தரிசனத்தை விவரமாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லியும் மிகவும் வல்லமையாகவும், புரிந்து கொள்ள எளிதாகவும் இருக்கக் கூடிய முறையில் அதைத் தெரியப் படுத்த வேண்டும். (அதை) அந்த தரிசனத்தைத் தொடர்புப் படுத்தித் தெரிவிக்க வேண்டும். அதாவது அவர்களும் அந்த தரிசனத்தில் ஒரு அங்கமாக ஆக்கப்படுவார்கள்.

**– அவர் ஒரு சவால் விடும், செயலாற்றும் ஆவலைத் தூண்டுபவர் ஆவார்.**

அவர் அந்த திருச்சபையை நடத்திச் செல்லும் போக்கையும் நன்கு கண்டு அறிந்து கொண்டு அதை வரை முறைப்படுத்தியும் மற்றவர்களுக்கு அறிவுரை தந்து செயலாற்ற ஆவலைத் தூண்டியும் செயல்படுவதால் அதன் அங்கத்தினர்கள் அந்தத் தரிசனம் நிறைவேற்றப்படுவதில் அதன் வளர்ச்சிக்காகவும், பெருக்கத்திற்காகவும் பாடுபடும் அர்ப்பணிக்கப்பட்ட அங்கமாக ஆகிறார்கள்.

**– அவர் ஆர்வ உணர்ச்சியைத் தூண்டும் எடுத்துக்காட்டு மாதிரியாக ஆகிறார்.**

ஒரு செயலூக்கத் தலைவர் அவர்களுக்கு முன்னாகப் போய் நடத்திச் செல்வதால், எப்படித் தொடர்ந்து முன்னேறி செயல்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

**– அவர் ஒரு விசுவாசமுள்ள மனிதர்.**

கர்த்தருடைய நோக்கத்தை நிறைவேற்றுதல் என்பது விசுவாசம் இல்லாமல் முடியாத ஒரு காரியம்.

(எபி 11:6) இந்தத் தலைவர், (நிகழக்கூடிய ஆலோசகர்) அதை முடியும் என்று நடத்திக் காட்டும் ஆலோசகராக இருக்க வேண்டும். அவர் விசுவாசக் கிரியைகளோடு கூடிய யோசனையோடு ஆலோசித்தும் பேசியும் நடக்கவேண்டும். இவற்றிற்கு மேலாக அவர் ‘‘அந்தக் கோட்பாடுகளுக்கு ஊன்றி நிற்க கால்கள் தந்து’’ அவை விசுவாசத்தினால் கிரியை செய்ய வைக்க வேண்டும்.

**– அவர் ஒரே சீரான நன்னடத்தைக்கு உண்மையானவர்.**

ஒவ்வொரு திருச்சபையின் அதன் சிறப்பியல்புகளாக நன்னெறியையும், ஆளுடைமையும் பெற்றிருக்கின்றன. இலட்சியமாக இது தேவனுடைய நல்லொழுக்க நெறியை பளிங்கு போல பிரதிபலிக்கும். மேலும் அது தலைமைத்துவம் உடையவரின் நல்லொழுக்கத்தையும் பிரதி பலிக்கும். யாரோ ஒருவர் சொன்னதாவது, தேவன் தம்முடைய திருச்சபையை கட்டுவதென்பது தன்னுடைய தலைமைத்துவம் உடையவர்களை பெரிதாகக் கட்டுவதை விட மேலாக ஒன்றும் செய்ய முடியாது. தேவனுடைய கொள்கையானதாக இயற்கையின் ஒவ்வொரு வித்து வகையும் தன்னுடைய ஜாதியின்படியே பிறப்பிக்கிறதென்ற உண்மை திருச்சபையின் சம்பந்தத்திலும் உண்மையாகவே இருக்கின்றது. திருச்சபைத் தலைவர்களுக்கு எப்படிப்பட்டதோர் கடினமான பொறுப்பும், மிகுந்த மகத்தானதோர் சவாலும் ஆகும்.

## 2: ஓர் அர்ப்பணிக்கப்பட்ட சுறுசுறுப்பானதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான அங்கத்தினர் அந்தஸ்து

ஒரு போதகரின் முக்கியமானதோர் பொறுப்பாவது தனது அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளித்தும் ஊழியப் பணியை நிறைவேற்றுவதற்காக அவர்களை ஆயத்தப்படுத்தியும் வைப்பதாகும். (எபேசி 4:11-12) ஆகவே அந்த அங்கத்தினர்கள் மிகப் பெரிய அளவில் அவரால் உண்டாக்கப்பட்டவர்களாக இருப்பார்களே தவிர அல்லது அவரால் உண்டாக்கப்படாதவர்களாக அல்ல. திருச்சபை மக்களுக்கென்று சில குறிப்பிட்ட குணநலன்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு உண்டு. நாம் அதை நம் மனத்தில் விழிப்புடன் இருந்து நமது சக்திக்கு முடிந்தவரை அதை நம்மில் விருத்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

**– ‘‘தங்கள் தேவனை அறிந்ததோர்’’ ஜனக் கூட்டம்.**

‘‘தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள்.’’(தானி 11:32) கிறிஸ்தவம் என்பது ஒரு செய்தி அல்ல. மேலும் அது ஒரு தத்துவமோ, இறைவனைப் பற்றிய ஆய்வோ அல்ல. அது ஒரு ஆளுமை தன்மையுடையது. பவுலுடைய அதீதமான வாஞ்சையாவது அந்த ஒரு ஆளுமையுடையவரை அறிந்து கொள்வது தான். ‘‘அவருடைய உயிர்த் தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிகிறதற்கும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி’’ இருப்பதையே (பிலிப் 3:10) வாஞ்சிக்கிறார். நமது கடமையாவது நமது உயிர் மீட்சியின் நோக்கமாவது ஜனங்களை அந்த ஆளுமையுடையவரிடத்தில் அறிமுகம் செய்து வைப்பது தான். இதைச் சரிவரச் செய்வதற்காக நாம் அந்த ஆளுமையுடையவரை நன்கு அறிந்திருக்க வேண்டும். அவரை நன்கு அறிந்திருப்போமேயாகில் நாம் அவருக்காக மிகுந்த செயலூக்கம் உடையவர்களாக இருப்போம்.

**– ஜெபத்திற்கோர் ஜனக் கூட்டம்**

ஜெபம் என்பது கர்த்தரோடு மிகவும் அவசியமாக நாம் கொள்ளும் ஐக்கியத் தொடர்பு தான். அவரோடு அதிகமான நேரத்தைச் செலவிட்டுப் பயன்படுத்தினாலும் அவரை நன்றாக மென்மேலும் அறிந்து கொள்வதற்கும், பின்னர் அவருடைய சாயலில் மறுரூபம் ஆவதற்குமே. இந்த ஜெபத்தின் மூலம் பெறும் அந்நியோந்நியம் ஆனதான சூழ்நிலைமையில் தேவன் தாமே தமது ஜனங்களை உருவங்கொடுத்தும், வனைந்தும் அந்த எல்லா நல்ல பணிக்கும் அவர்களை ஆயத்தமாக்குகிறார்.

**– ஆவியினால் நிறைந்ததோர் கூட்ட மக்கள்**

இந்த மிக உன்னதமான வல்லமையான அனுபவம் பற்பல சொற்களில் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் விளக்கங்களுக்கும் பல விதமான சர்ச்சைகள் எழுப்பப்பட்டுள்ளன. நம்முடைய குறிப்பிட்ட நோக்கமும் நமது ஆழ்ந்த தீர்க்கமான கருத்தும் என்னவாக இருந்தாலும் சரி. தேவன் நம்மில் ஒவ்வொருவரையும் ‘‘ஆவியில் நிரப்பப்படவேண்டும்’’ என்று கட்டளையிட்டிருக்கிறார்.

நம்முடைய இறைவனைப் பற்றிய கோட்பாடுகளோ அல்லது சொற்பொருள் விளக்கங்கள் என்னவாகவிருந்தாலும் நாம் ஆவியால் நிரப்பப்படவேண்டும் என்ற கட்டளைக்கு கீழ்பட்டிருக்கிறோம். அதற்காக நமக்கு, வல்லமை, அதிகாரம், திறமை ஆகியவை தேவையானது. அதை தேவன் ஒருவர் மட்டுமே தர முடியும்.

**– இராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு**

நமது பாடத்தின் பொருளாவது திருச்சபை வளர்ச்சியைப் பற்றியதாய் இருந்தாலும் நமது மனநோக்கும் தரிசனமும் இராஜ்ஜியத்தின் வளர்ச்சியைப் பற்றியதாக இருக்க வேண்டும். இந்த மிகப் பெரிய அகன்ற பார்வையில் தானே கனப்படுத்துவதில் தேவனும் மகிழ்ச்சி அடைகிறார். நாம் சுரங்கப் பாதையான தரிசனத்தோடு, நமது திருச்சபை வளர்ச்சியை மாத்திரம் கவனத்தில் கொண்டிருந்து நாம் ஒரு சுய நலமான பார்வைக்குள் நன்றாகச் சிறைபட்டு இருப்போனால் தேவன் நம்மை உண்மையாகவே ஆசீர்வதிக்கக் கூடாது. ஆகவே நாம் நமது திருச்சபை அல்லது நமது மிஷன் என்ற பெயருக்கு மேலாக அப்பால் உயர்ந்து நின்று தேவனுடைய இராஜ்ஜியம் என்ற மகத்தானதோர் படக் காட்சியைக் காணவேண்டும். இது மிகவும் சுகந் தருவதும் அதிகமானக் கனி கொடுக்கும் கோட்பாடாகும்.

**– அவசியமான மாறுதல்களுக்கு வெளிப்படையாகி**

வளர்ச்சிக்குத் தடையாக மிகப் பரவலாக இருக்கும் காரணமாவது நாம் இருக்கின்ற நிலைமையில் மாறுதல்களைப் பார்ப்பதற்கு விரும்ப தயாராக இல்லாமல் இருப்பது தான். சமயப் பாரம்பரியங்கள் கடந்த காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்றன. மேலும் அவைகள் கடந்து போனவைகளையே சார்ந்துள்ளன. ஆனால் வளர்ச்சி என்பது மாறுதல்களை வேண்டி நிற்கிறது. நாம் அவற்றை நமக்குள் தங்கியிருக்க விரும்பி தயாராக இல்லாவிட்டால் நாம் வளர்ச்சியை அனுபவத்தில் காண முடியாது. திருச்சபையின் சுவிசேஷ பிரசாரம் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நிச்சயமான பாதையாகும்.

**– சுறுசுறுப்புடன் இயக்கப்பட்டு ஒருங்கிணைந்து அமைதல்**

ஆதித் திருச்சபை பற்றிய படமாவது தெய்வீகத்தால் இயக்கப்பட்ட சரீரமாக (திருச்சபையாக) செயலூக்கத்திற்காகவும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த நியதி இன்றும் திறம்பட இடைபடுகிறது. அங்கத்தினர்கள் ஊக்குவிக்கப்பட்டும், சவாலை எதிர்த்தும், சுறுசுறுப்பாக இயக்கப்பட்டும் இருக்கிறது. ஒரு திருச்சபையை எனக்குக் காட்டுங்கள். மேலும் அதன் அங்கத்தினர்கள் பயிற்றுவிக்கப்பட்டும் ஒருங்கிணைக்கப்பட்டும் செயலூக்க சேவையில் இயங்க வேண்டும். அத்தகைய திருச்சபையை நான் பார்க்க வேண்டும். ஆகவே நான் வளரக் கூடியதேயன்றி வளர்ச்சி அடைய உதவக் கூடிய சபையை நான் காட்டுவேன். திருச்சபைச் சுவிசேஷப் பிரச்சாரமே வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நிச்சயமான வழியாகும்.

**– ஒன்றுபட்டும், இராஜ விசுவாசத்துடனும்**

தாவீது சொல்கிறான் இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் இன்பமுமானது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். (சங் 133:1,3) மேலும் இன்னும் ஆதி 11:6ல் நாம் இங்கே நினைவூட்டப்படுவதாவது “ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள். இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கின்றார்கள்.” இது தேவனற்றவர்களுக்கு உண்மையாக இருக்குமானால் எவ்வளவுக்கு அதிகமாக இது உண்மையாக தேவ ஜனங்களோடிருக்கும்? உண்மையானதோர் ஒன்றுபடுதல் தேவ ஜனங்களை வெல்லப் பட முடியாதவர்களாக ஆக்குகிறது. இந்த வகையான ஒன்றுபடுதலை அடைய வேண்டுமானால் இதற்கு இராஜ விசுவாசம் என்பது அத்தியாவசியமாகிறது. இந்த வகையான விசுவாசம் இல்லாவிட்டால் ஒன்றுபடுதலை நாம் அடைய முடியாது. தேவனுக்கு விசுவாசமாயிருத்தல், திருச்சபைக்கு விசுவாசம், மேலும் தலைமைத்துவத்திற்கும் திருச்சபை நிகழ்ச்சிகளுக்கும் விசுவாசமாயிருப்பதும் அடங்கும்.

## 3: ஒரு கூடிவரும் சபைக்கு உண்டான தேவைகளுக்காக சேவை புரியும் ஓர் நிகழ்ச்சி நிரல்

ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய ஜீவியத்தில் ஊழியம் செய்து கிரியை செய்யத் தேவைப்படும். சில அடிப்படையான பகுதிகள் உண்டு. இது அவர்களுடைய தனிப்பட்ட, இல்லத்து, குடும்ப

தொழில் ஜீவியத்தோடு சம்பந்தப்பட்டது. போதகர்கள் தங்களுடைய சபையிலுள்ள அங்கத்தினர்கள் பகை நிறைந்ததோர் சூழ்நிலையில் மெய்யான பிரச்சனைகளோடு வாழ வேண்டியதிருக்கிறதென்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அதோடு அவர்கள் எதிர்த்து நின்று சவாலாக தினந்தோறும் சந்திக்க வேண்டியதிருக்கிறதென்பதையும் போதகர்கள் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஊக்கமூட்டுதலும் போகும் திசையும் உண்மையான ஐக்கியத்தோடும் யதார்த்தமான போதனையும் தேவைப்படுகிறது. இவை அவர்களை வெற்றி பெறவும், அவர்களுடைய அனுதின ஜீவியத்தில் மன நிறைவையும் கொண்டு வர உதவி செய்கிறது. இந்த வகையான உண்மையான தேவைகள் சந்திக்கப்படவேண்டுமானால் திருச்சபையான மூன்று அடிப்படையான மட்டங்களில் ஊழியம் செய்ய வேண்டியதிருக்கிறது. அந்த மூன்று மட்டங்கள் ஆவன:

a: **சிறப்புக் கொண்டாட்டங்கள்.** அந்த முழுமையான ஐக்கியமானது ஒன்றுபட்டு கூட்டமாக சந்தித்து, மகிழ்ச்சியுடன் தேவனை ஆராதிக்கும் பொழுது ஏற்படுகிறது.

b: **கூடிவரும் சபை.** இதில் பல வேறுபட்ட விசேஷித்த ஆர்வமுள்ள குழுக்கள் ஒன்றாக சபை கூடி வந்து (உம்) வாலிபர்கள், இள வயதினரான தம்பதிகள், முதியோர், இசை குழுக்கள், தனிப்பட்ட பெற்றோர், சிறுவர் சபை, புதிய விசுவாசிகளுடைய வகுப்புகள் முதலியன (இந்தக் குழுக்கள் சிலவற்றில் 40 முதல் 50 நபர்கள் இருக்கலாம்)

c: **செல் குழுக்கள்.** (சில சமயங்களில் இது இல்லத்து பாதுகாப்பு ஐக்கியம் என்றும் அழைக்கப்படும்) சிறிய, ஒப்புக் கொடுத்த அக்கறை கொண்ட குழுக்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்து கொண்டு சமூகத்தில் பணிக்காக அணுகிக் கிட்டிச் சேர்தல்.

நாம் இப்பொழுது மிக நுட்பமாக ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

## # கொண்டாட்டங்கள்

இது மிகப் பெரியதுமான, முழு ஸ்தல ஐக்கியமும் பொதுவாக ஒன்று கூடி தேவனுக்கு ஆராதனை செய்தும், கர்த்தருடைய வசனத்தை வியாக்கியானம் செய்தும் அங்கு ஆஜராயிருக்கும் முன்னாள் கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் ஆனது. இது வழக்கமாக வாரம் இரு முறை சந்திக்கிறது. (உம்) ஞாயிறு காலையும் மாலையும்.

அநேக திருச்சபைகள் ஒன்று கூடி வருதலானது திருமணம் போல் இல்லாது அடக்க ஆராதனை போல இருக்கின்றது. கர்த்தர் தமது ஜனங்களுக்கு இந்த விதமான பெரிய விருந்து கொண்டாட்டங்களை ஒன்று கூடி மகிழ்ச்சியாகக் கொண்டாடும்படி கட்டளையிட்டார். தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய மகிழ்ச்சியான துதிகளை மற்ற ஒருமனப்பட்ட ஜனங்களோடு சேர்ந்து வெளியில் காட்டித் தெரிவிக்க சந்தர்ப்பம் தேவைப்படுகிறது. சங்கீத இசையும் வெளியரங்கமாக மகிழ்ச்சியுடன் வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியும் களிப்புமான சமயங்களைக் கொண்டாட அவசியமாகிறது. அது ஜீவிய ஒழுக்கத்தை நன்னெறிப்படுத்தி வாழ்க்கையை பலப்படுத்துகிறது. ஒரு வளர்ச்சி அடையும் திருச்சபையின் கவர்ச்சியான அம்சமாக இசையையே வழக்கமாகக் கொண்டு இருக்கிறது. மேலும் பாட்டுகளும், துதியும் ஆராதனையும் மகிழ்ச்சியான சூழ்நிலையும் போதுமான கவர்ச்சியைத் தருகிறது. மேலும் இது மிகவும் வெளிப்படையாக அந்த ஐக்கியத்தில் மொத்தமாக அமைந்திருக்கும் குறிப்பிட்ட மக்களின் வகைக்கு ஏற்றவாறு ஓரளவு ஒருங்கிணைக்கலாம். ஆனால் பிரத்தியேகமான ஒருமைப்படுத்தும் பகுதிகளான, துதி, ஆராதனை மகிழ்ச்சியான களி கூறுதல், உணர்ச்சி வெளிப்பாடுகளானவை ஒவ்வொரு ஐக்கிய கூடுகைகளிலும் பொதுவாக அமைந்திருக்க வேண்டும். நான் ஒரு எளிமையான கூற்றைச் சொல்லுவேன். ஒவ்வொரு போதகரும் அதை நம்ப வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ‘‘அதாவது மகிழ்ச்சியாக இருப்பது மிகவும் நன்று’’ என்பதே. அதைப் போதித்துப் பிரசங்கித்து பழக்கப்படுத்திக் கொள்.

இது வல்லமையானதும் சமயத்திற்கு பொருத்தமானதுமான பிரசங்கம் செய்வதற்கான தகுந்த நல்ல சமயமுமாகும்.

இயேசுவுடைய வல்லமையான பிரசங்கம் திரள் கூட்டமான ஜனங்களை அவர் எங்கு சென்றாலும் கவர்ந்து இழுத்தது. சராசரி மனிதன் அவருடைய பிரசங்கத்தினால் வசீகரிக்கப்பட்டான். நமது பிரசங்கமும் கவர்ச்சிகரமானதும், கட்டாயப் படுத்துகின்றதுமான சிறப்பம்சமாக கொண்டாட்டத்தில் இடம் பெறலாம். பிரசங்கம் எப்பொழுதும் சலிப்படையச் செய்வதாக இருத்தல் கூடாது. சில புறநோக்கு ஊக்குவிப்போர் AIDA என்ற கொள்கையை செயலூக்க மனிதத் தொடர்புகளுக்காக சிபாரிசு செய்கின்றனர்.

A Attention getting - கவனத்தைப் பெறுதல் மக்களுடைய ஆர்வத்தைப் பிடித்துக் கொண்டு அதை முழு நேரமும் கெட்டியாக பிடித்துக் கொள்.

I Ingormative - விஷய ஞானம் உன்னுடைய பேச்சுக்கு செவி கொடுப்போருக்கு ஏதோ விசேஷமான கருத்து செறிவுள்ள போதனைத் தருக.

D Decision oriented - தீர்மானம் நிறைந்த உறுதியான பலன் பெறப் பிரசங்கிக்கவும்.

A Action - செயல்பாடு முழுவதுமாகப் பின் தொடர்ந்து நேரடியான செயல்பாட்டுக்கு ஊக்கம் அளிக்கவும்.

“போதகரே, உம்முடைய பிரசங்கத்தையும், பிரசங்க பீடத்தின் திறமைகளையும் சாதுரியத்தையும் உயர்ந்த நிலைக்கு அபிவிருத்தி செய்து கொள்ளவும். சுய ஞானத்தினாலே, தேவனை அறியாதிருக்கையில் பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று.” (I கொரி 1:21).

**“இயேசுவை பிரசங்கி. சத்திய வேதத்தைப் பிரசங்கி. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் கீழ் பிரசங்கி. மக்களுடைய புண்பட்ட வேதனையைக் குணமாக்கப் பிரசங்கி. சத்தியத்தை பேசு, மத நோக்குடன் பேசாதே, நகைச் சுவையுடனும் உதவியாக இருக்கவும் பேசு. யதார்த்தமாக பேசு, பலன்களுக்காகப் பிரசங்கி.”**

**ஒன்று கூடி வரும் சபை பங்கெடுத்துக் கொள்ளுதல்**

உங்களது ஒன்று கூடி வரும் சபையானது அவர்கள் அனைவரும் அந்த விழாவின் முக்கியமான ஒன்றுபட்ட பங்காளிகள் எனவும், அவர்கள் பார்வையாளர்களோ அல்லது கேட்க வந்தவர்களோ அல்ல என்பதை உய்த்துணர்ந்து அதன் பங்குதாரர்கள் என்பதை உணர வேண்டும். இதை முதன் முதலாகத் துதித்து ஆராதனை செய்வதால் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஏனென்றால் மக்கள் தாங்களாகவே அதில் கலந்து கொள்வார்கள். ஆராதனை செய்யும் கூட்டமாகிய சபையாரோடு ஒன்றுபடுதலாவது ஒரு உற்சாக மூட்டும், நல்லொழுக்கத்தைக் கூட்டி எழுப்பும் அனுபவமாக அது அளவுக்கு மீறிய நோய் நிவாரணமும் திருப்தி அளிக்கக் கூடியதாயிருக்கிறது.

ஆகவே நீயும் உன்னுடைய சபையை அதன் அனுபவத்தில் ஒரு பங்காக்கி அதை உண்மையாக சொல்லி உணர்த்த வேண்டும். மக்களுடன் ஒரு ஆவிக்குரிய அந்நியோந்நியத்தையும் உறவுத் தொடர்புகளையும் உண்டாக்கிக் கொள்ளவும். அந்த விதமான பார்வையாளர்களை உன்னுடைய கொண்டாட்டத்தைப் பார்க்க வந்த கூட்டத்தினர் என்று எண்ணாதே. அதாவது உன்னை பிரதான ஆசாரியனாகக் கருத்தில் கொண்டு அந்த மக்களை தேவனுடைய சிம்மாசன மண்டபத்திற்கு நடத்திச் செல்லும் சலுகையைப் பெற்றவர் என்று உன்னை எண்ணிக் கொள்.

மக்கள் அனைவரையும் உன்னுடன் ஜெபத்தில் கூட்டிச் சேர்த்து அங்கு சொல்லப்படுகிற பல திறப்பட்ட தேவைகளுக்காக ஜெபிக்கவும். அவர்களுக்கு பிரசங்கம் செய்தால் மட்டும் போதாது. சில சபைகளில் மக்களை செயலூக்கத்துடன் ஜெபிக்கும்படி ஜெப குழு வட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு ஆராதனையின் ஒரு பகுதியில் அவ்வாறு செய்யும்படி உற்சாகப்படுத்தப்படவேண்டும். பின்னர் ஒவ்வொரு ஜெப வட்டக் குழுவும் தங்கள் வட்டத்திற்குள்ளே ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஜெபிக்க வேண்டும்.

**ஊழியத்திற்கும் ஜெபத்திற்கும் சந்தர்ப்பம் கொடுத்தல்**

ஒவ்வொரு ஆலய ஆராதனையிலும் அங்கே சிலர் மனத்தில் காயம்பட்டவர்களாக ஜெபத்திலும் உற்சாகப்படுத்துதலும் தேவையானதாக ஒரு நிலைமையில் இருப்பார்கள். அவர்களுக்கு பிரசங்கம் செய்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு தனிப்பட்ட ஊழியமும் ஜெபத்தில் தாங்கப்படவும் சந்தர்ப்பம் தர வேண்டும். இது மிகவும் சடுதியாக ஆராதனை முடிவில் பீடத்திலிருந்து அழைப்புக் கொடுத்து அவர்கள் முன் வந்து இந்த நிறைவைப் பெற நிறைவேற்ற வேண்டும். மேலும் மக்களை பினனர் காத்திருந்து இருக்கும்படி சொல்லி முடிவில் வரவேற்று அவர்களுக்கு உம்மால் பெறக் கூடியதோ அல்லது உம்மால் நியமிக்கப்பட்டவர் மூலமாகவோ உதவியைத் தந்து உதவ வேண்டும்.

## # கூடிவரும் சபை

இந்த விதமான கூடுகையில் விசேஷித்த ஆர்வமுள்ள குழுக்களை உண்டாக்குவதுடன் அதன் கூட்டங்களில் மக்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும் கூடும். ஆகவே இது திருச்சபையை ஓர்

மிகுந்த குறிப்பிட்ட வழியில் ஊழியஞ் செய்யும்படி அந்தக் கொண்டாட்டத்தின் பொதுவான சூழ்நிலையில் அல்லாது தகுந்த முறையில் செயல்பட உதவுகிறது. சில திருச்சபைகளில் தகுந்ததோர் மாலைப் பொழுதைத் தேர்ந்தெடுத்து அதில் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டோர் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ள வசதிப்படுத்தி உதவுகிறது. உதாரணமாக அந்தக் குடும்பத்தினர் அனைவருமே ஒன்றாகச் சேர்ந்து ஆலயத்திற்கு வருவார்கள். அவ்வாறு அவர்கள் வரும்பொழுது தந்தையானவர் ஆண்கள் ஐக்கியத்திற்கும் தாயார் பெண்கள் ஐக்கியத்திற்கம் வருகை தருவார்கள். அப்பொழுது இளம் வாலிப வயதினர் பல வேறுபட்ட துறைகளுக்கு உதாரணமாக இசைக் குழு, ஆராதனைக் கூட்டம் அல்லது இசைக் குழு பயிற்சியையும் நாடகக் குழு ஆத்தும ஆதாய ஐக்கிய குழு முதலியவற்றில் பங்கெடுத்துக் கொண்டு பலவித ஊழியங்களையும் விருத்தி பெறச் செய்வார்கள். ஒவ்வொரு கூடிவரும் சபையும் தகுதியால் நிறைந்து நியமனம் செய்யப்பட்ட தலைமைத்துவத்தின் கீழ் இயக்கப்பட்ட ஒரு போதகர் குழுவுக்குட்பட்ட ஒரு அங்கத்தினரின் நிழலில் அது பொறுப்புள்ளதாகிறது.

# செல் குழுக்கள்

இந்த ஊழியமானது பல பெயர்களால் அமைக்கப்பட்டு அதனுடைய செயலாற்றம் பாணியில் சிறிது வேறுபட்டும் திருச்சபையிலிருந்து திருச்சபைக்கும் பணியாற்றி செயல்படுகிறது. அந்த சிறிய குழுக்களின் அடிப்படையான கொள்கைக் கருத்தாவது சிறு குழுக்களாக அவை தவறாது கூடி ஐக்கியம், போதனை, பணி இயக்கம், சுவிசேஷ பிரச்சாரம் ஆகியவற்றில் ஈடுபாடு கொள்ள வேண்டும். இதன் உண்மையான விஷயமாவது இயேசு நமக்குச் சொல்லி ஒருவர் மற்றவர்களுக்காக செயல்படும் ஊழியங்களைக் கொண்டு, மிகவும் விரிந்த தனிப்பட்ட பாணியில் அமைந்திருக்கும் விழாக்கள் ஒன்று கூடிவருதல் போன்றவற்றில் செயல்படக் கூடாத ஊழியங்களில் நிறைவேற்றப்பட வேண்டியனவாகும். ஆகவே அவைகளுக்காக சிறிதாக அமைந்து பொதுவான செயல்பாடு குறைந்ததும் ஒன்றுக்கொன்று அந்நியோந்நியம் கொண்ட சூழ்நிலையில் செயல்படக் கூடிய சிறிய குழுக்கள் தேவைப்படுகிறது.

ஆகவே ஒரு கால் இரண்டு முக்கியமான வழிகளில் செல் குழுக்கள் திருச்சபையில் உயிரோட்டத்தில் செயல்படலாம்.

1: விழாக்கள் ஒன்று கூடி வருதல் ஆகியவற்றிற்காக கூட்டம் கூடும் சபைகளில் செல் குழுக்கள் கூட அமைந்திருக்கும்.

2. இந்த செல் குழுக்களில் இயங்கும் திருச்சபையானாலும் காலாகாலத்தில் விழாக்கள், ஒன்று கூடி வருதலும் சந்தித்துக் கொள்ளும்.

நான் இந்த இரு மாதிரிகளும் நியாயமானது என்று நம்புகிறேன். ஆனால் அந்த மாதிரிகளில் இரண்டாவதாக உள்ளது. ஒரு கால் அதிகமான வேதாகமச் சார்புடையதாகும். (புதிய ஏற்பாட்டு முறைக்கு ஏற்ப அமைந்தது.) மேலும் பிற்கால மாதிரிகளுக்காக அமைந்தது என்று நம்புகிறேன். உலகமெங்கிலும் சில நேரங்களில் தேர்வு முறையாலும், சில நேரங்களில் வற்புறுத்துதல் காரணமாகவும் இந்த மாதிரியானது பிற்காலத்து திருச்சபைகளுக்கான மாதிரித் திட்டமாக உருவாகிறது. இந்த இரண்டு மாதிரிகளும் தகுதி பெற்றும் இரண்டுக்கும் பொதுவாக பல சிறப்பம்சங்களைப் பெற்றுள்ளன. அவை இரண்டும்:

- சிறிய குழுக்களாகக் கூடுகின்றன. சுமார் 8-15 நபர்களைக் கொண்டு.
- அவைகள் வழக்கமாக தனிப்பட்ட வீடுகளில் கூடிச் சந்திக்கும்.
- அவைகள் பொதுவான குணச்சாயல்கள் கொண்டது.
- அவைகள் நல்லொழுக்கத்தைக் கட்டி எழுப்புமாறு கூடுகின்றன.
- அவைகள் செல் குழு அங்கத்தினர்களின் தேவைகளைச் சந்திக்க முயற்சிக்கின்றன.
- அவைகள் சாதாரண தலைவர்களால் மேற்பார்வை செய்யப்படுகிறது.
- ஸ்தல ஸ்தாபனத் திருச்சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

இதில் முதல் மாதிரியானது நன்றாக அறியப்பட்டும் மிகுந்த அளவில் கையாளப் படுகிறதுமான இந்த இரண்டில் ஒன்றாக விளங்குகிறது. ஆனால் நான் என்னுடைய மீதியாக வரும் விமரிசனங்களை இந்த இரண்டாவதாக உள்ள செல் குழுத் திருச்சபையைப் பற்றி ஒருமுகப் படுத்திக் கூறுவேன். இந்த செல் குழுத் திருச்சபை வலைப்பின்னல் போன்ற செல் குழு பெருக்கத்தால் ஆகி அவைகள்

வாரந்தோறும் கூடிவந்து ஐக்கியம், செயல்பாடுகள் ஆகியவற்றிற்கும் அந்தந்த தகுந்த சமயங்களில் விழாக் கொண்டாட்டத்திற்கும் ஒன்று கூடி வருதல் ஆகிய நடைமுறைகளை உடையனவாகும். ஒவ்வொரு செல் குழுவிலும் ஒரு சிறிய கூட்டமான விசுவாசிகளால் அமைந்து வழக்கமாக 8-15 நபர்களைக் கொண்டும் இருப்பன. ஒவ்வொன்றிற்கும் தலைவர் ஒருவரும் உபதலைவர்களையும் உடையது. அவர்களது நிகழ்ச்சி நிரல் 4 வகையான இயக்கங்களைக் கொண்டதாகும்.

**a: அன்பு மிகுந்தது.**

இதில் ஒருவருக்கொருவர் நேச பாசம் கொண்டு வளர்ச்சிக்கு உதவுவதாகும். இங்கே ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் உறவுத் தொடர்புகளைக் கட்டி எழுப்பும் பிரத்தயேக ஸ்தலமாகும். இது தனி நபர்கள், தம்பதிகள் குடும்பங்கள் உறவுத் தொடர்புகளாக ஏதாவது ஒரு குடும்பத்தில் ஒரு தனி நபரைத் தத்து எடுத்துக் கொள்வதாகும். ஒழுங்கு முறை சாராத அந்த செல் குழுவின் சூழ்நிலையானது மக்களை சுலபமாக்கி அவர்களைத் தாங்கள் தாங்களாக இருக்குமாறு உதவி செய்கிறது. அவர்கள் மற்றவர்களை அவர்களுடைய மெய்யான இயல்பினை நன்கு தெரிந்து கொள்ளவும் பெரிய சாதாரணமான கூட்டங்களில் அறிந்து கொள்வதை விடச் சிறப்பாகத் தெரிந்து கொள்ளவும் போதுமானதாகிறது. இந்த மாதிரியான கூட்டத்தில் ஒரு நபர் தங்களை மனிதர்கள் அறிந்து ஒப்புக் கொள்ளவும் அவர்களிடம் ஆர்வம் கொண்டும் ஐக்கியப்பட்டும் அவர்களுக்காக அக்கறைப்படுவதுமான அனுபவங்களைப் பெறச் செய்கிறது. இந்த செல் குழுவின் கூடுகைகள் மற்றொரு ஆலய ஆராதனையாக உருவெடுக்கக் கூடாது. இதனுடைய நடவடிக்கைகள் வேறு விதமாக அமைய வேண்டும். அவைகள் ஓர் ஒழுங்கு முறையைச் சாராதவையாகவும், சுலபமானதும், ஆலய ஆராதனைகளிலிருந்தும் வேறுபட வேண்டும். இவைகளுக்காக நடைபெறக் கூடிய சில நியாயமான செயல்பாடுகளானவை ஒன்று சேர்ந்து விருந்து வைத்தல் சாதாரணமான சம்பாஷணைகள், ஒருவருக்கொருவர் அனுபவங்களையும் பிரச்சனைகளையும், நம்பிக்கை, ஒன்றை அடைவதற்கான பேராவல் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளுதலும் அடங்கும். சில சமயங்களில் மாலை நேர நடவடிக்கைகளில் திறந்த வெளி விருந்துகள், ஆளுக்கோர் இல்லச் சமையல் விருந்து (ஒரு கூட்டு விருந்தில் ஒவ்வொருவரும் ஒரு வகை சமையலை கொண்டு பகிர்ந்து கொள்ளுதல்) விளையாட்டு போட்டிகள், சாட்சிகள், துதிப் பாடல்கள் முதலியன இடம் பெறும். மற்ற நிகழ்ச்சிகளான வார இறுதிக் கூடுகைகள், விசேஷமான விடுமுறை நாட்கள் வெளியூர் நிகழ்ச்சிகள், வன விருந்து, வெளிப்புற விளையாட்டுகளும் ஆகியவை அடங்கும்.

**b: கற்றுக் கொள்ளுதல்.**

வேதாகமமே பயிற்சிப் புத்தகமாக உபயோகிக்கப்பட்டு அதன் மூலமாக நன்னடத்தை நெறிகளும், வாழ்க்கை நடைமுறைக் கொள்கைகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டு ஒன்றாகக் கூடிக் கற்றுக் கொள்ள வகை செய்கிறது. அதற்குப் பயன்படுத்தப்படும் போதனை முறையாவது பிரசங்கமாகவோ அல்லது சொற்பொழிவாகவோ இருக்கக் கூடாது. ஆனால் அது ஒருவருக்கொருவர் சுமுகமாக ஒன்று சேர்ந்து கற்றுக் கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் பயன்படுத்தப்படுவது நலம். ஒவ்வொருவருக்கும் அதில் பங்கெடுத்துக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். மேலும் முக்கியமான பாடங்களாக அனுதின விவாத விஷயங்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளான திருமணம், குடும்ப ஜீவியம், பொருளாதார நிதி நிர்வாகம், சோர்வை சமாளித்தல், குற்றவுணர்வை மேற்கொள்ளுதல் ஆகிய சில இது போன்ற விஷயங்களுக்கு அழுத்தம் தரப்பட வேண்டும். இந்த போதனை முறை அனைத்தும் சம்பிரதாய முறையிலோ அல்லது அறிவுத் திறன் சார்ந்த வழியிலோ போதிக்கப் படக்கூடாது. ஜனங்கள் உண்மையாகவே அதன் கருத்தைப் புரிந்து கொண்டு அவர்கள் கற்றுக் கொண்ட சத்தியத்தை நடைமுறையில் பயன்படுத்துமாறு உதவ முயற்சி எடுத்துக் கொள்ளப் படவேண்டும்.

**c: தீர்மானம் எடுத்தல்.**

ஒவ்வொரு செல் குழுவுக்கும் நியமிக்கப்பட்ட வழி நடத்தி முன் செல்லும் தலைவர் இருந்தாலும், குழு முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து அந்த குழுவின் நிகழ்ச்சி நிரல்களையும் நடவடிக்கைகளையும் தீர்மானிப்பதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் சுமுகமாக பகிர்ந்து கொள்ளுதல், திட்டமிடுதல், தீர்மானங்கள் நடவடிக்கைகளையும் நீண்ட காலத் திட்டங்களையும் காலக் கிரமத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த வகைத் தீர்மானங்கள் பல திறப்பட்ட நிகழ்ச்சி திட்டங்களையும், வரப் போகும் கூடுகைகளையும் மட்டுமின்றி பெரிய திட்டங்களைத் தீர்மானஞ் செய்தல் மிஷினரி

பயணங்கள் போன்றவற்றையும் கூட அதில் சேர்த்து அடங்கும். கீழே எடுத்துக் கொள்ளக் கூடிய சில தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

- எங்கே கூடுவது எந்த சமயங்களில், எப்பொழுது?
- அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கான போதனை முறையை வற்புறுத்தி அழுத்தம் தருதல்.
- வரும் ஆண்டுக்கான இலக்குகளை நியமித்தல்
- முன்னாள் கிறிஸ்தவர்களின் வருகையை ஊக்குவித்தல்
- புதிய அங்கத்தினர்களை எவ்வாறு ஒருமித்து இணைத்துக் கொள்வது?
- அந்த குழுவுக்கு பரிசுத்த ஆவியானவரது ஆலோசனை.
- நாம் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று இருக்கிறோம்?

**d: நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல்.**

ஒவ்வொரு செல் குழுவுக்கும் விசேஷமான கடமைகளும் தூதுக் குழுக்களும் இருக்க வேண்டும். அதனால் அவைகளுக்கு தங்களை விட்டு வெளியுலகத்தில் ஒரு கேந்திரமான மையம் இருக்க வேண்டும். மேலும் அது சில நடைமுறைத் திட்டங்களை மேற்கொண்டு அதில் ஒரு அங்கத்தினரின் நலனுக்காக குழுவினர் அனைவருமே பங்கெடுத்துக் கொள்ள உதவ வேண்டும். இந்த விதமான நடைமுறைகளில் பின் வருவனவும் அடங்கும்.

- முதியோருக்குச் சேவை.
- தோட்ட வேலை, வீடுகளுக்கு வர்ணம் பூசுதல்
- சுத்தம் செய்தல், சலவை செய்தல் அவசியமான சமயங்களில் போக்குவரத்து வாகன வசதி.
- தனியான ஒரு நபரான பெற்றோருக்குச் சேவை.
- குழந்தை கவனித்தல், உபசரித்தல், வீட்டுக்கு தேவையான போது பழுதுபார்த்தல்
- சிறுவர்கள்/குழந்தைகளிடையே ஊழியம்.
- குழந்தைகளுக்காக சங்கங்களை அமைத்து நடத்துவது. சிறுவர்களுக்காக சங்கங்களை அமைத்து நடத்துவது.
- இளைஞர்களுக்காக ஊழியம்.
- தனிமையை உணரும் இளைஞருடன் நட்பு, வார இறுதி சாகசப் பயணங்கள் - மீன் பிடித்தல் போன்றவை.
- சமூகத்திற்கு ஊழியம்.
- முதியோர் இல்லங்களில் சந்தித்தல், ஆஸ்பத்திரிகள், சிறையில் உள்ளவர்களைச் சந்தித்தல்
- அயலகத்தாருடன் அணுகிக் கிட்டிச் சேர்ந்து ஊழியம்.
- திறந்த வெளி விருந்துகள், குடும்ப வேடிக்கை இரவுகள், வீடியோ மாலைக் காட்சிகள்.
- உலக மிஷன் மெகா திட்டம்.
- கடல் கடந்த நாடுகளில் வீடு, கட்டடம் கட்டும் திட்டங்களில் வேலை செய்ய பயிற்சி பெற்றவர்கள்.
- சுவிசேஷ பிரச்சாரம்
- பல திறப்பட்ட சுவிசேஷ பிரச்சார வெளிப் புற அணுகி கிட்டிச் சேர்ந்து ஸ்தாபனங்களையும் நிகழ்ச்சிகளையும் நிதியுதவியால் தாங்குதல்.

## இந்த விதமான பணி அமைப்பினால் பெறும் சில பயன்கள்:

- **அது மிக அதிகமானத் தலைவர்களை (மேய்ப்பர்கள்) தனக்குள் வரவழைத்துக் கொள்கிறது.**
  மேய்ப்பர் தொழிலின் பாரத்தை மேலும் சமமாகப் பரவலாக்கி அதிகமான மேய்ப்பர் தொழில் திறமை பெற்றவர்களை பயன்படுத்திக் கொள்கிறது.
- **புதிய தலைமைத்துவம் உடையவர்களுக்கு அதிகமான சந்தர்ப்பங்களை அளித்து உதவுகிறது.**
  அந்த பணிக்கான பயிற்சியை அதிகமான எண்ணிக்கையுள்ளோருக்கு பெற்றுக் கொடுக்க வசதி அளிக்கிறது.
- **ஜீவிய மனமாறுதலை அடைய நல்லதொரு சூழ்நிலையை உண்டாக்குகிறது.**
  சீஷத்துவமும் ஜீவிய மனமாறுதலும் கொண்டாட்டம் கொண்டாடும் சூழ்நிலை மாதிரியில் செயலூக்கத்துடன் உண்டாக்கிக் கொள்ள முடியாது.

- **ஆகவே தனக்குத் தானே நேர் உறவுத் தொடர்பு கொண்ட மாதிரியான செல் குழுக்களே மிகவும் பொறுத்தமானதாகும்.**
  இது மிகுந்த செயலூக்கத்துடன் அங்கத்தினர்களுக்காக விசாரிப்புக் கொள்வதற்கான வழியாகும். இந்த விதமான செயல் முறையினால் அதிகமான நடைமுறை கவனமும் விசாரிப்பும் கிடைக்க வழி வகை செய்யும்.
- **மிகவும் தயாராக பெருக்கத்தைப் பெற மறுபடியும் பிறப்பித்தல் மூலமாக அடைய முடியும்.**
  பலம் வாய்ந்த தலைவர்கள் இந்த வழி முறை முன்னேற்றத்தால் அனுபவம் பெறப் பெற, குழுக்களை உருவாக்க அதிகமான சந்தர்ப்பம் பெறுவதுடன் குழுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் ஏற்கனவே தலைமைத்துவம் தயாராக இருப்பதுடன் தலைமைத்துவ பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவும் ஆயத்தமாகிறது.
- **மேலும் பயனுள்ள அடிப்படைகளை சுவிசேஷ பிரச்சாரத்துக்குத் தந்து உதவுகிறது.**
  செல் குழுக்களின் கூடுகைகள் மிகச் சிறந்த ஸ்தலங்களையும், சூழ்நிலைகளையும் சுற்றிலுமுள்ள அயலக சமூகத்தினரை சுவிசேஷ அறிவிப்பின் செயல்பாடுகளின் மூலமாக அணுகி கிட்டிச் சேர்ந்து செயல்பட உதவி அளிக்கிறது. புதிய விசுவாசிகளையும் ஒருங்கிணைத்து ஒன்றைக் கலந்து சேர்த்துக் கொள்ளச் சிறந்த செயல்பாட்டு நிகழ்ச்சி ஸ்தலமாகிறது.
- **ஸ்தல ஸ்தாபன திருச்சபையுடன் சூழ்நிலைக் கேற்றவாறு இணைந்து தகுதியாக்கிக் கொள்ள சுலபமாகிறது.**
  இந்த செல் குழு திட்டங்களை ஸ்தல ஸ்தாபனத் திருச்சபையுடன் சூழ்நிலைக் கேற்றவாறு ஒருங்கிணைத்துத் தகுதியாக்கிக் கொள்ள இலகுவாகிறது. எந்த விதமான குறிப்பிட்ட பாணியான முறையை கையாண்டாலும் அதை ஸ்தல ஸ்தாபனத் திருச்சபையுடன் இணைத்து தகுதியாக்கிக் கொள்ள மிக இலகுவான காரியமாக முடியும். (மாதிரி #1 இந்த எடுத்துக்காட்டு மாதிரி #2 விட அமைத்துக் கொள்வதில் எளிதான தொன்றாகும்.)

## 4: சமூகத்திற்குள் அணுகி கிட்டிச் சேர்ந்து ஊழியம் செய்தல்

எந்தத் திருச்சபையும் தன்னுடைய தரிசனத்தை உள் பக்கத்திலிருந்து வெளிப்பக்கத்திற்கு இடம் பெயரச் செய்தாலன்றி செயலூக்கமான வளர்ச்சியைக் காண முடியாது. இயேசு சொன்னதாவது ‘‘உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். அவைகள் அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கிறது’’ என்றார். செயலூக்கமான சுவிசேஷ பிரச்சாரத்திற்கும் சபை வளர்ச்சிக்கும் இதுவே முதற் படியாகும். உங்கள் பார்வையை ஸ்தல சம்பந்தப் பட்டவையும் குறுகிய மனப்பாங்குகளானவற்றையும் ஸ்தல திருச்சபையின் காரியங்களிலிருந்து சற்று உயர்த்தியும் உங்களைச் சுற்றியுள்ள அறுவடை வயல்கள் மீது உங்கள் கவனத்தை செலுத்த அனுமதியுங்கள். எந்த ஒரு விவசாயியும் பண்ணைத் தோட்டத்து வீட்டில் தங்கிக் கொண்டு எந்த விதமான அறுவடையையும் செய்ய முடியாது. முதலாவது தனது கவனத்தை வயல்கள் மீது செலுத்தி அங்கே வெளியில் போய் இருந்து அறுவடைக்கானவற்றை ஆயத்தம் செய்ய வேண்டும். என்றென்றும் மாறாத நித்தியமான அறுவடைக்கான நியமங்கள் விதைகள் விதைக்கப்பட வேண்டும் என்றும், நீர்பாய்ச்சி, உரமிட்டு, களையெடுத்து அறுவடை நடைபெறும் நாள் வரைக்கும் கவனமாக பாதுகாக்கப்படவேண்டுமென்று பிரகடனஞ் செய்யப்படுகிறது. ஆகவே திருச்சபையான ஸ்தல சமூகத்திற்குள் செயல்படுத்த ஒப்பேறக் கூடியதோர் அணுகிக் கிட்டிச் சேரும் மார்க்கத்தை உடையதாயிராவிட்டால் முடிவில், வாடி வதங்கி செத்துப் போகும். ஆனால் தனது தரிசனத்தை உயர்த்தும் ஓர் திருச்சபை தன்னுடைய கவனத்தை அந்த வயல்கள் மீது செலுத்தி பின்னர் வெளியில் வந்து வேலை செய்ய ஆயத்தமாகவும் உழைக்கவும் தயாராக இருந்தால் நிச்சயமாகவே ஓர் அறுவடையைப் பெற முடியும். ஆகவே ‘‘கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுது கொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்.’’
(சங் 126:5-6)

## 5: அறுவடையை அழியாமல் பாதுகாத்தல்

நான் நன்றாகக் கவனித்துத் தானாகவே நிரூபிக்கப்பட்டதாவது உண்மையான சவால் மக்களை கிறிஸ்துவுக்காக ஓர் தீர்மானத்திற்குள் கொண்டு வருவதை விட பெரியதோர் சவால் ஆவது புதிய

விசுவாசிகளை நிலைநிறுத்திச் சீஷர்கள் ஆக்குவதுதான். அநேகமான திருச்சபைகளில் வல்லமையான சுவிசேஷ பிரச்சாரத் திட்டமானது வழக்கில் இருந்தாலும் அவைகள் வளர வேண்டிய வேகத்தில் வளர்வதில்லை. ஏனென்றால் அவைகளில் அதன் விளைவுகள் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. அவை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டிய ஊழியமாவது அதைப் பற்றிய முக்கியத்துவத்தை பெரிதாகச் சொல்லிக் கொள்ள முடியாததோர் காரணமாகும். ஆகவே அதனால் அடிக்கடி சுவிசேஷப் பிரச்சாரத்தை விட வசீகரம் குறைந்து காணப்பட்டாலும் உண்மையில் அது மிகவும் முக்கியமானதாகும். அந்த லாபங்கள் நசுக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டாலன்றி முன்னாள் முந்தைய முயற்சிகள் வீணாகப் போய்விடும். ஆகவே வளர்ச்சியில் பொறுப்பு ஒப்படைப்பு செய்யப்பட்ட திருச்சபையானது இந்த அழியாமல் பாதுகாக்கும் காரியத்தை மிகச் சிரத்தையுடன் கவனித்துப் பாவிக்க வேண்டும். அர்ப்பணித்துக் கொண்ட ஊழியர்கள் மிகவும் பூரணமாகப் பயிற்சி பெற்று ஆயத்தமாக்கப் பட வேண்டும். அதற்காகத் தகுதியான புத்தகங்கள் வாங்கப் படவேண்டும். புதிய விசுவாசிகளுக்கு வகுப்புகள் நடத்தப் படவேண்டும். அவர்களுடன் அடிக்கடி சந்திப்பு நடைபெற வேண்டும். எந்த வகையான முயற்சியும் தவற விடக்கூடாது. எல்லா விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளப் பட வேண்டும். ஆகவே புதிய விசுவாசிகளை திருச்சபையுடன் ஒருங்கிணைத்து செயலூக்கத்துடன் சீஷர்கள் ஆக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## அதிகாரம் 8 - திருச்சபை வளர்ச்சியின் இயந்திர நுட்பம்

நான் இந்த இயந்திர நுட்பம் என்ற வார்த்தையை கொள்கைகள் அல்லது இயக்கி ஒன்றை செயல்படுத்தி இயங்கச் செய்தல் என்ற கருத்தில் பயன்படுத்தியுள்ளேன்.

### A. நீண்ட கால செயல்பாட்டு நோக்கத்துடன் பார்.

சில சமயங்களில் நாம் தரிசனம் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறோம். ஆனால் சிலர் அதை வேதாகமத்து அதீதமானதும் அமானுஷ்யமானதுமான ஒரு வகையான தரிசனமாகவும் கருதுகின்றனர். ஆனால் நாம் கருத்தில் கொண்டு பேசும் கோட்பாடாவது, பொதுக் கருத்தாகவோ அல்லது கர்த்தர் நம்மைக் கொண்டும் நமது திருச்சபையைக் கொண்டும் எதை நிறைவேற்ற விரும்புகிறார் என்பதைக் காட்டும் படமாகும். நாம் வருங்காலத்திற்குள் உற்றுப் பார்க்க முயற்சிக்கிறோம். அந்த முயற்சியின் பயனாக தேவன் நம்மைக் கொண்டு சாதிக்க விரும்புகிற நீண்ட கால நோக்கத்தின் ஒரு காட்சியைப் பார்க்க முயலுகிறோம்.

இது நாம் ஆவிக்குரிய கண்களோடு பார்க்க விரும்பும் ஏதோ ஒன்றாகும். தேவன் நமது இருதயத்திலும் ஆத்துமாவிலும் பற்றி எரியக் கூடியதோர் படக் காட்சியாகும். நம்மோடு அனுதினமும் இரவும் பகலும் நடக்கும்பொழுதும் அல்லது தூங்கும் பொழுதும் ஒன்றியிருக்கும் ஓர் காட்சியாகும். நமது திருச்சபையின் வருங்கால ஜீவியத்திற்கும், ஊழியத்துக்கும் தேவன் விரும்புகிறதோர் எக்காலத்திலும் நிலைத்திருக்கிற விழிப்புணர்வு ஆகும். நாம் எவ்வளவுக்கு அதிகமாக அதைப் பற்றி சிந்தித்தும் ஜெபித்தும் வருகிறோமோ அதற்கேற்ப அந்தக் காட்சியும் மிகத் தெளிவாகக் காணப்படும். ஆகவே இந்த நோக்கத்திற்காகத் தான் நமது ஜீவியமும், ஊழியமும் நம்மை எடுத்துச் செல்கிறது.

இந்த விதமான நோக்கமாவது ஒரு தெளிவற்ற மாயமான கனவாக இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்த நாம் தேவனிடம் காத்திருந்து அந்தத் தெளிவானதும் அந்த தரிசனத்தின் சிறந்த வரையறுக்கப்பட்ட விளக்கத்தின் புரிந்து கொள்ளுதலுக்காக ஆவியில் காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இந்த சபையின் உருவகம் எப்படி இருக்கும் என்பதை குறிப்பிட்ட அதிகமான விவரங்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டியது அவசியம். தேவன் தாமே அந்த தரிசனத்தை பல திறப்பட்ட கோணங்களில் அமைத்துக் காட்டுவார். நாம் அதைப் பார்ப்போம். உணர்வோம், அதைப் பற்றிக் கேள்விப்படுவோம். நமது ஆவியில் நாம் அதற்குள் கொண்டு போகப்பட்டு அதனால் தீர்க்கதரிசன (அறிவை) உணர்வை பெற்றுக் கொள்வதுடன், அதனையும் பற்றி உணர்வோம். அது நமக்கு நமது திருச்சபை தற்காலிகமாக இருக்கும் உண்மையான நிலைமைய விட நமக்கு அதிகமான உண்மையுடன் வெளிப்பாடாகும்.

இதன் பிறகு நாம் எல்லாவற்றையும் எழுத்தில் வடிவமைத்துக் கொள்வது அவசியமாகும். பொறுமையாக அமர்ந்து தேவன் உனக்குப் பகிர்ந்தளிக்கும் உந்தன் தரிசனத்தின் ஒவ்வொரு

விவரங்களையும் எழுதிக் குறித்துக் கொள்ள வேண்டும். அதை அதிகமாகக் குறிப்பாகவும், உண்மையாகவும் உன்னால் முடிந்தவரை அதைச் செய்ய வேண்டும். (ஆபகூக் 2:2)

## B. அதன் போகும் மார்க்கத்தை தீர்மானம் செய்.

பாதைகளையோ அல்லது எடுத்துச் செல்லும் மார்க்கத்தை தீர்மானஞ் செய்து நிர்ணயிப்பது நம்மை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும். நாம் எங்கிருக்கிறோமோ அவ்விடத்திலிருந்து தேவன் நம்மை எங்கு நடத்திச் செல்ல விரும்புகிறார் என்பதைக் காட்டும். இந்த முறையானது சில சமயங்களில் இலக்குகளையும் எடுக்கும் நடபடிக்கைகளையும் நாம் எங்கு செல்ல விரும்புகிறோமோ அங்கே போக நாம் எடுக்க வேண்டிய அடிகளை ஸ்தாபித்தல் என்பதைக் குறிக்கும்.

நான் இதை விளக்கிச் சொல்வதற்கு ஒரு எளிய பயிற்சியை யோசனையாக அந்த அடிப்படையான கருத்தை விளக்கத் தருகிறேன். நாம் அடுத்த ஆண்டில் அயல் நாட்டில் நடக்கும் ஒரு தலைமைத்துவ மகா நாட்டைப் பற்றிக் கேள்விப் பட்டதாக வைத்துக் கொள்வோம். அதன் முக்கியமான பேச்சாளரைப் பற்றியும் திருச்சபையைக் கட்டி எழுப்புபவராக அவரது கீர்த்தியைப் பற்றியும் உமக்குச் சற்றுத் தெரிந்திருப்பதாகவும், நீவிர் அந்த மகா நாட்டை போய் வருவதற்கு ஓர் வலிமையான ஆசையை உடையவர் என்பதாகக் கொள்வோம்.

உம்முடைய அதீதமான நோக்கமாவது அந்த மகா நாட்டில் கலந்து கொள்வதாகும்.
அதை அடையும் மார்க்கத்தில் அந்த நோக்கத்தை அடைய நீவிர் எடுத்துக் கொள்ள வேண்டிய பல நடவடிக்கைகளும் அடங்கும்.

ஆகவே நாம் நீவிர் எடுத்துக் கொள்ள அவசியமான நடபடிக்கைகளை எடுத்துக் கொள்வோம்.
அமர்ந்திருந்து அதைப் பற்றிச் சிந்திக்கவும். நீ எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை கிரமமாக எழுதி வைத்துக் கொள்க. அதைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து தெரிந்து கொள்க.

- அது எப்பொழுது நடக்கிறது?
- அது எங்கு நடைபெறுகிறது?
- அதில் பேசுபவர்கள் யார் யார்?
- அவர்கள் பேசும் தலைப்புகள் எதுவாக இருக்கும்?
- அதற்கு கலந்து கொள்வதற்கு எவ்வளவு செலவாகும். பதிவுக்கும் தங்கும் இடவசதிக்கும்.
- உனது மனு விண்ணப்ப படிவத்தை அனுப்பி விடுக. நீ உன்னை தகுதியாக நிச்சயப்படுத்திக் கொண்டு (விண்ணப்பம் ஏற்கப்படும் என்பதையும்)
- நீ அங்கு செல்லக் கூடிய விமானப் போக்குவரத்துக்களைப் பற்றி விசாரித்துக் கொள்.
- எல்லா விமான போக்குவரத்துகளுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு போகும் மார்க்கங்களைப் பற்றி விசாரித்து கேட்டு கொள்ளவும்.
- அதன் விலைகளைப் பற்றி விசாரித்து அறிந்து கொள்.
- பாஸ்போர்ட் உன்னுடன் சரியான பாஸ்போர்ட் உள்ளதா?
- விசாக்கள் - எந்த வகையான விசா உனக்குத் தேவைப்படும்.
- அதற்காக உன் பணித்தளத்திலிருந்தோ அல்லது திருச்சபையிலிருந்தோ விடுமுறை கிடைக்குமா?
- நீ அங்கு இல்லாமல் இருக்கும் பொழுது உனது திருச்சபையை யார் கவனித்துக் கொள்வார்.
- உன்னுடைய இல்லாத காலத்தில் உன் குடும்ப நலனுக்காக ஒழுங்கு செய்து கொள்.
- இவைகள் அனைத்தையும் உனது நாட்குறிப்பில் எழுதி வருங்கால ஆண்டு அட்டவணையிலும் பதிவு செய்து கொள்.
- உன்னுடைய விமான பயணச் சீட்டுகளை முன்னதாகவே பதிவு செய்து கொள்.
  நீ போகும் நேரத்தைத் திட்டம் செய்து கொள்.

இந்த எளிதான யோசனையானது ஒரு அயல் நாட்டில் நடக்கும் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் நோக்கத்தை நிறைவேற்ற நீவிர் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பல திறப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியதாகும். இப்பொழுது தேவன் உன்னுடைய திருச்சபையை

எங்கு எடுத்துக் கொண்டு போக விரும்புகிறார் என்பதை உன் மனக்காட்சியில் பார். மேற்கொண்டு நீ அங்கு சென்று சேரக் கூடிய மார்க்கத்தை குறிப்பிட்டுக் கொள்ளவும்.

## c. அந்த பணியாட்களை தெரிந்தெடுத்துக் கொண்டு அவர்களைத் தயாராக்குக.

உன் தரிசனத்தை நிறைவேற்றுவதில் உனக்கு உதவக் கூடிய சரியான ஆட்களை தெரிவு செய்தல் முற்றிலும் முக்கியமானது. உன்னுடைய பணிக்குழுவை எவ்வளவு விரைவாகக் கட்டி எழுப்பக் கூடுமோ அவ்வளவு விரைவாக செயல்பட வேண்டும். ஆரம்ப காலங்களில் அளவு போதாத நிதி நிலைமை அதைக் கடினமாகச் செய்தாலும் விரைவில் செயல்படுவது நல்லது.

இந்த விதமான தகுதிகளை கண்டுபிடித்து பார்க்கவும்:

**– தகுதியும் திறமையும் வாய்ந்தவர்கள்**

அந்த நபர் ஏற்கனவே பயிற்சி பெற்று தகுதி பெற்றவராக அல்லாவிட்டாலும் அந்தப் பணிக்குத் தேவையானவராக தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அதைச் செய்து முடிக்கும் பலம் பெற்றவரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**– பணிபுரிய விருப்ப வாஞ்சையுள்ளவர்கள்**

பணிக்குத் தகுதி பெற்ற எந்த ஒருவரும் உண்மையாகவே கடினமாக உழைக்க மாட்டார்கள். ஆகவே உன்னுடைய உடன் பணியாளர்கள் அந்த தரிசனத்தை நிறைவேற்ற கடினமாக உழைப்பார்களா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**– கற்றுக் கொள்ளும் ஆர்வ ஆவியையுடையவரா?**

மனத்தாழ்மையும் கற்றுக் கொள்ளும்படி போதிக்கும் ஆவியும் மிகவும் அவசியமானவைகள்.

**– ஒருமித்து இருத்தல்**

ஒரே குழுவாக மற்றவர்களுடன் இணக்கமாக பழக தயாராக இருக்கும் திறமையுடையவர்கள்.

**– விசுவாசம்**

உனது ஊழியக் குழு திருச்சபை முழுவதற்கும் ஒரு உதாரணமாக இருப்பதுடன் உன்னுடைய தலைமைத்துவத்திற்கும், குழுவுக்கும், மகாத் திட்டத்திற்கும் திருச்சபைக்குமே விசுவாசம் உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும்.

மேலும் இங்கே சில கருத்தாலோசனைகள்

- எப்பொழுதும் உன் ஊழியத்திற்கு தோள் கொடுத்துத் தாங்கும் பணியாளர்களை ஏற்படுத்து அதனுடன் போட்டியிடுவதற்கல்ல.
- சில பணியாளர்களை தேர்ந்தெடுத்து உன்னுடைய மகா பலம் அல்லாத காரியங்களை செய்பவர்களை நியமித்துக் கொள்.
- ஒரு சம நிலையான பணியாளர்களை வைத்துக் கொண்டு மிக அகன்ற பணி வகைகளை மேற் கொள்ள வழி செய்யவும்.
- நிர்வாகத் திறமையும் வரங்களும் மிகவும் சமமான முக்கியத்துவத்தை உடையதாகும்.

## D. பொறுப்புகளை பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தல்.

பொறுப்புகளை ஒப்புக் கொடுத்தல் என்பதில் அடங்குபவை:

- **நிறைவேற்றி முடிக்கப்படவேண்டிய பணியை பொருள் விளக்கம் செய்தல்.**
- **அந்தப் பணிகளை விவரித்துக் கூறுதல், இலட்சியமாக** (காகிதத் தாளில் பதிவு செய்தல்)
- **அந்தப் பணிகளை ஒப்படைப்புச் செய்தல்** (அதாவது மற்றொருவரிடம் நம்பி ஒப்புவித்தல்)

குறிப்பு: பொறுப்புகள் ஒப்படைப்புடன் கொடுக்கப்பட வேண்டும். அதன் பிறகே அதிகாரம் தரப் பட வேண்டும். எப்பொழுதுமே பொறுப்புகளை ஏற்பவர்களையே பார்க்க வேண்டும். அதிகாரத்தை விரும்புகிறவர்களை அல்ல. அவர்களை அந்தப் பொறுப்புகளுக்கு கணக்கொப்புவிக்கவும் செய்து அந்தந்த காலங்களில் அவர்கள் பணிகளை ஆய்வு சோதனை செய்யவும் மறக்காதே. நீ பரிசோதனை செய்து ஆய்வு செய்வதே முக்கியமானதாகும். நீ எதிர்பார்ப்பதை மிகவும் அவசியமானதாக அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்.

## E. அதன் முன்னேற்ற வளர்ச்சியை மேற்பார்வையிடு.

திருச்சபை வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரல் திட்டமானது ஆரம்பிக்கப்பட்ட ஏக காலத்திலே அதை அப்போதைக்கப்போது அடிக்கடி மேற்பார்வை செய்யப்பட வேண்டும். ஒழுங்காகவும் சீராகவும் அது செய்யப்படவேண்டும். இதை சிறப்பாக செயல்படுத்தி நிறைவேற்றும் வழியாவது அவ்வப்போது ஊழியர்கள் கூட்டத்தைக் கூடச் செய்து அதில் அனைத்து அங்கத்தினர்களும் வருகை தர வேண்டும். வருகை தருவதுடன் தத்தம் இலாக்காக்கள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதைச் செய்வதற்கு வாரத்தில் செவ்வாய் கிழமையே சிறந்ததாகும். அதுவும் காலைப் பொழுதே நல்லது. அதன் பிறகு வார இறுதியில் ஆக்க சம்பந்தமான மீள் பார்வை செய்யக் கூடும். கூர்ந்து கவனிக்கப்பட்டும், அறிக்கைகள் கொடுக்கப்பட்டும் மேலும் வருங்காலம் பற்றி ஜெபத்துடன் பேசப் படவும் வேண்டும். இந்த விதமான வழியில் இந்த முழுக் குழுவும் தற்கால விருத்தி வளர்ச்சியில் முன்னேறிச் செல்லும்படி வைக்கப்படலாம்.

## F. குறைகளை நிறைவு செய்து அந்த திட்டத்தை ஒருங்கிணைந்து போக உதவ வேண்டும்.

சில பிரச்சனைகள் அந்த திட்டம் நடைமுறையில் வரும் வரைக்கும் வெளிப்படப் போவதில்லை. ஆனாலும் அவைகள் வெகுவான சீக்கிரமாக கண்டறியப்பட்டு அதற்கான தீர்வு வழிகளை உடனடியாக எடுத்து பிரச்சனையை தீர்வு கண்டும் அதில் நன்றாக செயல்படாத அந்தத் திட்டத்தின் அம்சத்தில் அவசியமான சில மாறுதல் செய்து சீர் செய்யப்பட வேண்டும். அதற்காக அங்கத்தினர்களுடன் பிரத்தியேகமாக சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுடைய செயல் நிறைவேற்றுதலைக் குறித்து அந்தரங்கமாக சம்பாஷித்து உமக்கும் அவர்களுக்குள்ளும் நடைபெறும் படி காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

## G. களிகூர்ந்து மகிழ்ச்சியுடன் திரும்பவும் அர்ப்பணித்துக் கொள்.

வளர்ச்சியும் விருத்தி அடைதலும் கண்டறிந்து கொள்ளப்பட்டால் அந்த குழு முழுவதும் ஒன்றாகக் கூடி சந்தோஷப்பட்டு கர்த்தர் தரும் வெற்றிக்களுக்காக மகிழ்ச்சி அடையவும். எந்த விதமான அசமந்தமான போக்கையும் அல்லது ‘‘நாமே அதைச் செய்தோம்’’ என்ற உணர்வையும் தவிர்த்து விட வேண்டும். உன்னுடைய ஊழிய பாதையின் ஓரங்களை கருக்காக தயாராக வைத்திரு. நீ உன்னுடைய சாதனைகளை கொண்டாடும்பொழுது பல தடவைகளில் மறு அர்ப்பணிப்புச் செய்வதை ஞாபகத்தில் வைத்திரு. அதாவது அந்தக் குழு முழுவதுமே கர்த்தர் பேரில் முற்றிலும் சார்ந்திருத்தலை அங்கீகரித்தலின் பொழுது அவருடைய சரீரமாகிய திருச்சபையில் அன்புடனும் அவருக்கு ஊழியம் செய்வதற்கும் ஓர் புதிய ஒப்புக் கொடுத்தலைச் செய்யும் பொழுதுதான்.

# அதிகாரம் 9 -சிறியவைகள் கூட மிக அழகானவைகளாயிருக்கக் கூடும்.

திருச்சபையின் வளர்ச்சியின் பேரிலும் அது சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களின் பேரிலும் நாம் வைத்திருக்கும் அழுத்தத்தின் காரணத்தால் ‘‘மிகப்பெரியது மாத்திரமே அழகாக இருக்கக் கூடும்’’ என்ற கருத்துணர்வை எளிதில் பெற்று கொள்ளலாம் என்பது நிச்சயமாக அது வல்ல. வெளிப்படையான பெரிய திருச்சபைகள் நமது கவனத்திற்கு உரிமை கொண்டாடினாலும், அவைகளே சில சமயங்களில், நாம் ‘திருச்சபை வளர்ச்சி’ என்னும் கோட்பாடடை பிரசித்தமாக்குவதற்கு ஏற்ற நிர்ணயம் செய்யும் நியதி ஆகும். நாமே நமது திருச்சபை சிறியதாக இருக்கிறது என்ற குற்ற உணர்வை கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையாகவே பெரிய திருச்சபைகள் சட்டமாக அல்லாது விதி விலக்காக அமைந்து விடும். ஒரு நம்பத் தகுந்த மூலத்திலிருந்து தரப்படும் பின்வரும் புள்ளி விவரங்கள் உலகமெங்கும் உள்ள சபைகளின் சராசரி பரிமாணத்தைத் தருகின்றன:

**அதாவது 5% சபைகளில் அங்கத்தினர்கள் 350க்கு அதிகம்.**
**95% சபைகளில் அங்கத்தினர்கள் 350க்கும் குறைவு.**
**50% சபைகளில் அங்கத்தினர்கள் 75க்கும் குறைவு.**

**ஆகவே உம்முடைய சபையில் 76 அங்கத்தினர்கள் இருப்பார்கள் என்றால் அது உலக சராசரிக்கு சற்று அதிகமே.**

**பாலகர்கள் அழகானவர்கள்.**
ஒவ்வொருவரும் ஒரு சிறிய பாலகனை/பாலகியை நேசிக்கிறோம். அவர்களுடைய கவர்ச்சி அழகு மிகவும் பொதுவானது. சிறிய குழந்தைகள் உண்மையில் பால் வடியும் அழகுள்ளவர்கள். ஆனால் அவர்கள் வயதிற்கேற்ற அளவு வளர்ச்சியும் விருத்தியும் அடையா விட்டால் அது கவலைக் கிடமாகும். வளர்ச்சியும் விருத்தியும் சாதாரணமான ஆரோக்கியமும் தேக நலத்திற்கும் அடையாளச் சின்னங்களாகும். சாதாரணமாக விருத்தியும் வளர்ச்சியும் தகுந்த வயதில் காணப்படாவிட்டால் அதன் காரணமாவது ஆய்வு செய்யப்பட வேண்டும்.

<u>சிறிதானவை இயல்பாகவும், நியாயமாகவும் இருப்பதற்கு சில சந்தர்ப்ப காரணங்கள் உள்ளன:</u>

a: ஒரு சிசுவான திருச்சபையின் ஆரம்ப காலங்களில்
ஒவ்வொரு சிசுவும் பிறக்கும் பொழுது சிறிதாகவே இருக்கும். அது இயல்பானது, ஒப்புக் கொள்ளக் கூடியது மேலும் விளங்கிக் கொள்ள கூடியதுமாகும். எப்படி என்றாலும் வாரங்களும் மாதங்களும் செல்லச் செல்ல அங்கே வழக்கமாக வளர்ச்சி விருத்தியைக் காட்டக் கூடிய வியக்கத் தகுந்த அடையாளங்கள் உள்ளன. ஆகவே இந்த வியக்கத் தகுந்த அடையாளங்களே பெற்றோருக்கு ஓர் விதமான ஆனந்தத்தைக் குறிப்பாக அளிக்கிறது. அவைகள் காணப்படாவிட்டால் அது கவலைக் கிடமாகும். இவை நீண்ட நாட்கள் நீடித்தாலும் அதிகமான கவலைக் கிடமாகும்.

b: கிராமங்களிலும் சிறிதாகப்பட்ட சமுதாயங்களிலும்
ஒரு கிராமத்திலுள்ள திருச்சபையானது ஒரு வேளை பெரிதான மகா திருச்சபையாக வளரக்கூடாமல் இருக்கும். குறிப்பாக அந்தக் கிராமம் சற்று தனிமைப்பட்ட இடத்தில் அமைந்து, போக்குவரத்து வசதிகளின்றி பக்கத்து இடங்களிலிருந்தும் வசதி இன்றி இருந்தாலும் மகா சபையாக வளர முடியாது என்பது கண்கூடு. அந்த சபையின் பரிமாணத்தை அந்த பிரதேசத்து ஜனத் தொகையுடன் ஒப்பிட்டால் அந்த திருச்சபைக்கு வருகை தரும் ஜனத் தொகையின் சதவிகிதம் அந்த பார்வைக்கு சிறிய சபையாக இருந்தாலும் மனதில் மிகவும் ஆழமாகப் பதியக் கூடியதாகும்.

c: பாதகமான சூழ்நிலைகளிலும்
வெளிப்படையாகவே திருச்சபை வளர்ச்சி மிகவும் கடினமானதாக அந்த ஸ்தலத்து ஜனங்களின் எதிர்ப்புகளாலும் பகைமையினாலும் ஆகி விடுகிறது. இவை அரசியல், சமய சம்பந்தமான தப்பெண்ணங்களினாலும் உண்டாகலாம். இந்த விதமான இடங்களில் மத மாற்றம் அடைந்த ஒரு நபரை ஆதாயப்படுத்தினாலும் அது விலை மதிப்பற்றது. மேலும் அந்த சிறியதான சதவிகித வளர்ச்சி விகிதம் கூட மிகுந்த மகிழ்ச்சிக்கும், நன்றி கூறுதலுக்கும் மகத்தான காரணமாகும். அறுவடைகளின் தேவனாகிய கர்த்தரும், இந்த சந்தர்ப்பத்தில் ஆதாயப்படுத்தப்பட்ட ஆத்துமாவிற்காக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார் என்பதில நான் நிச்சயமாக உணர்கிறேன்.

d: திருச்சபை பெருக்கத்தை உண்டாக்குதல்
எங்கே ஒரு சபை தன்னை பிறப்பித்து பெருக்கிக் கொள்கிறதோ அதன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை சில சிறிய கூடிவரும் சபைகளில் ஒரு பெரியதான சபையை விட சிறந்தது.

எப்படி என்றாலும் இந்த விதமான சொற்கூற்றுகளுக்கு சில விதி விலக்குகள் உண்டு. சந்தர்ப்பங்களிலும் சிறிதான கூடிவரும் சபைகள் ஆரோக்கியமானதாகவும், இயல்பானதாகவும் முற்றிலும் பூரணமான வேதாகமத்துப் படியும் நியாயமானதாகவும் இருக்கக்கூடும்:

**# தேவன் பல திறப்பட்ட தேவனாக இருக்கிறார்.**
இந்த அண்ட சராசரமும் இயற்கையும் பல வகைப்பட்டதற்கான தேவனுடைய அன்பை வெளிப்படுத்துகிறது. இயேசு தம்முடைய சிறிய அடைக்கலான் குருவிக்காக காட்டும் அன்பைப் பற்றி பேசுகிறார். அப்படி அவர் தம்முடைய அன்பை அத்தகைய சிறியவைகளானதும் மனுஷரால் அற்பமாகக் கருதப்படுகிறவைகளுக்குக் காட்டும் அன்பை வெளிப்படுத்துகிறார். இந்த விதமான திருச்சபை வளர்ச்சி பற்றிய ஒரு தைரியமான வற்புறுத்துதலால் அந்த சிறிய சபையைக் குறித்து மிகவும் துக்ககரமானதும் அசாதரணமான ஏதோ ஒன்றை அவசியமானதாகக் கருத்தில் கொள்வது எளிதாகிறது. ஆகவே தேவன் பார்த்து மகிழ்ச்சியடையும் மில்லியன் கணக்கான திருச்சபைகள்

உள்ளன. அவைகளின் எண்ணிக்கை பரிமாணம் பெரிதான அழுத்தமான உணர்வை உண்டாக்காமல் இருக்கலாம். ஆனால் அவைகளின் ஆவிக்குரிய வளர்ச்சி எந்த விதமான பொருட்டுமின்றி தேவனுக்கு உகந்ததாக இருக்கலாம். இதற்காக சில நியாயமானதும் ஒப்புக் கொள்ளக் கூடியதுமான காரணங்கள் ஏன் சில ஆரோக்கியமான திருச்சபைகள் ஆச்சரியமான தீடீரென காணப்படும் வியக்கத்தக்க அனுபவங்களைப் பெறுவதற்கு முடியாமல் இருப்பதற்கான காரணங்களாக இருக்கலாம். (ஆனாலும் அந்த திருச்சபைகள் சில சிறிய மாறுதல்களை கொண்டு சரி செய்தும் மிகுந்த பெரிதான அனுபவங்களைப் பெறலாம் என்று நினைக்கிறேன்.)

**# எல்லா வகை ஊழியங்களும் ஒன்று போன்றது அல்ல.**

வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியானவர் ஒருவரே, ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு. கர்த்தர் ஒருவரே, கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கும் தேவன் ஒருவரே. (I கொரி 12:4-6) கர்த்தர் நமக்கு பலவிதமான வித்தியாசமான வகை ஊழிய வரங்களைத் தந்திருப்பதால் இந்த மாதிரியான கிரியைகளும், பலவித வரங்களின் செயல்பாடுகள் பற்றியும் பலவிதமான பலாபலன்களைக் கொண்டு வரும் என்று நியாயமாக நாம் நம்பலாம். ஆகவே நாம் ஒவ்வொரு சபையும் ஒன்று போல் இருக்கும் என்றோ அதன் பலாபலன்கள், சாதனைகள் ஒன்று போல் இருக்கும் என்றோ எதிர்பார்க்கக் கூடாது. மேலும் நாம் ஒரு வகையான பலாபலன் மற்றதை விட மகத்தானதென்றோ அல்லது சிறந்தது என்றோ நாம் ஊகம் கொள்ளக்கூடாது.

**# எல்லா மனிதர்களும் ஒன்று போன்றவர்கள் அல்ல.**

கர்த்தர் மிகவும் பலவிதமான வித்தியாசமான மனித இனத்தவர்களை சிருஷ்டித்திருக்கிறார். இந்த அகில உலகத்தின் ஜனத் தொகையில் எந்த இருவகை ஜனத்தாரும் ஒன்று போல் இருப்பதில்லை. இது அவர்கள் தோற்றத்தில் மாத்திரமல்ல. அவர்கள் ஒழுக்கம் இயல்பு ஆள்தன்மை, இயல்பான பண்புகள் ஆகியவற்றிலும் இது உண்மையானது தான். மேலும் அது அவர்களுடைய தேவைகளிலும் பேரார்வமான வேட்கைகளிலும் உண்மையே. ஆகவே இந்த வேறுபட்ட மனிதவர்க்கத்தின் தேவைகளைச் சந்திக்க பல திறப்பட்ட ஊழியங்களும், பல வகையான திருச்சபைகளும் தேவையாயிருக்கின்றன.

**# எல்லா விதமான திருச்சபைகளும் ஒன்று போல் இருப்பதில்லை.**

இது புதிய ஏற்பாட்டு நிருபங்களை வாசிக்கும்பொழுது வெளிப்படையாகத் தெரிகிறது. அவைகளின் அணுகுமுறை ஒன்று போல இருந்தாலும் ஒவ்வொரு காரியத்தின் நிலையிலும் அவை கொடுக்கும் செய்திகளின் நடுமையமாகிய இதயம் ஒவ்வொன்றிலும் வேறுபடுகிறது. ஏனென்றால் ஒரு சபையின் இயல்புகளும் உள் அங்கங்களும் வித்தியாசமாக உள்ளன. நிருபங்கள் எல்லாவற்றிற்கும் பொருத்தமானவை. அவைகளில் சில நிருபங்கள் குறிப்பிட்ட சில திருச்சபைகளுக்கு மிக அதிகமான பொறுத்தம் உடையன. அதே கோட்பாடுகள் இன்றும் உண்மையாகவே பொருத்தமானவையே. விஷயம் என்னவென்றால் சில ஜனங்களின் குறிப்பிட்ட சில தேவைகள் சிறிய திருச்சபை சூழ்நிலைமையில் மிகவும் தகுதியாகவும் செயலூக்கத்துடனும் சந்திக்கப்படுகின்றன. சிறிய திருச்சபை மக்கள் சமுதாயத்தில் சில குறிப்பிட்ட அம்சங்களின் மூலமாக சில தேவைகளைச் சந்திக்க வசதிப்படுகிறது.

**# வளர்ச்சியும் விருத்தியும் சில வேறுபட்ட வடிவங்களில் எடுக்கக்கூடும்**

ஒரு குறிப்பிட்ட திருச்சபையில் அதிக எண்ணிக்கையுள்ள மக்கள் கலந்து கொள்ளாததால் அந்தத் திருச்சபையை நோயுற்றதாகவோ அல்லது ஆவியும் குறைவானதாகவோ ஆனதாக அர்த்தமாகாது. அதனுடைய வளர்ச்சியும் விருத்தியும் ஒன்றல்ல. மேலும் பல வழிகளில் வெளிப்படையாகக் கூடும் எண்ணற்ற திருச்சபைகள் எண்ணிக்கையில் பெரிதாக அல்லாது சிறியதாக இருந்தாலும் தங்களது சமுதாயத்திற்கு ஒரு வலிமை மிக்க அங்கமாக அதன் உண்மையான தேவைகளைச் சந்திக்கிறார்கள்.

## ஒரு சிறிய திருச்சபையின் சில அம்சங்களும் அனுகூலங்களும்.

**= தனி மனிதர் அல்லாதார் சார்பை விட தனி மனிதர் சார்பு**

ஒரு பெரிய திருச்சபையில் தனி மனிதர் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது எப்பொழுதுமே எளிதல்ல. சில சமயங்களில் திருச்சபையில் கலந்து கொள்ள வரும் மக்களின் எண்ணிக்கையின்

கனமே அந்த சூழ்நிலையை தனி மனிதர் சார்பற்றதாக ஆக்க முடியும். சில தன்மையுடைய மனிதர்கள் இந்த வகையான நிலையை மன நிறைவு குறைந்தாகக் காண்பார்கள். அவர்களுடைய குறிப்பிட்ட இயல்புக்கு ஏதுவாக ஒரு நெருக்கமாக இணைந்த குழுவின் பாதுகாப்பும் உறுதிப்பாடும் மிகவும் அவசியமாகும்.

**= ஒரு குடும்பமான சூழ்நிலை**

சில சிறிய குழு ஐக்கியங்களில் குறிப்பாக ஒரு போதகருக்கு இயல்பாகவே தன்னுடைய ஜனங்களுக்காக ஒரு தகப்பனுடைய இதயம் இருக்குமானாலும், அந்த அங்கத்தினர்களுடன் ஒரு குடும்ப உணர்வை விருத்தி செய்யும் சாதனையை ஒரு பெரிய திருச்சபையின் ஐக்கியத்தில் எப்பொழுதுமே அதை பிரதி செய்து காட்ட முடியாது.

**= உட்படுத்துதலுக்கான சமய சந்தர்ப்பங்கள்.**

சில சமயங்களில் சிறிய திருச்சபைகளில் பெரிய திருச்சபைகளைக் காட்டிலும் தானே விரும்பி தொண்டு செய்யும் உதவியாளர்கள் தேவை என உணரப்படுவதுண்டு. மேலும் குறிப்பாக ஒரு விதமான இயல்புடைய நபர்கள் சிறிய திருச்சபை கூட்டங்களில் சிறப்பாக செயல்படுவது போல் காணப்படுவார்கள். சில நபர்கள் அந்த விதமான சமய சந்தர்ப்பங்களில் உதவி செய்வதில் மன நிறைவு காண்பார்கள். மேலும் சில மனிதர்கள் இந்த மாதிரியான சமயங்கள் இவ்விதமான உதவி தேவைப்படுமாகில் சிறப்பாக செயல்படுவார்கள்.

சில சிறிய திருச்சபைகளில் அவர்களுடைய பணிக்கான மன நிறைவு பெறுவதை கடினமாக உணருவார்கள். காரணமாவது: (1) மிகக் குறைந்த ஆள்பலம் கிடைக்கிறதால் (2) அளவு குறைந்த நிதி நிலைமை வருவாய்கள் (3) குறைந்த அனுகூலங்கள்.
இந்தக் காரணங்களில் சிலவற்றை ஆராய்வோமானாலும் நமது சொந்த திருச்சபை குடும்பத்தின் நிலைமையை பரிசீலனை செய்தாலும் இவைகள் காரணங்களேயன்றி சாக்குபோக்குகளல்ல.

**அடிப்படை கோட்பாடுகள் என்றும் ஒன்று போலவே இருக்கும்.**

திருச்சபையின் பரிமாணத்தின் அளவையன்றி அந்த திருச்சபை செயலூக்கத்துடன் கிரியை செய்யும்படி உதவும் கோட்பாடுகள் என்றும் ஒன்று போலவே இருக்கும். ஆவிக்குரிய ஆரோக்கியத்தை அனுபவிக்கவும், தேவனுடைய நோக்கத்தையும் அழைப்பையும் நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு சபைக்கும் பின்வருபன தேவையாகும்.

a: செயலூக்கத்துடன் கூடிய தலைமைத்துவத்துடன் நடத்திச் செல்லுதல்.
b: திருச்சபையை ஒழுக்கத்தில் கட்டி எழுப்புதல்
c: சுவிசேஷ பிரச்சார அலுவல்கள்.

ஒவ்வொரு திருச்சபையும் அதற்கென்று ஒரு தரிசனத்தைக் கொண்டிருக்க வேண்டும். அது இருப்பதற்காக ஒரு நோக்கம் வேண்டும். போகும் வழியைப் பற்றிய தெளிவான உள்ளுணர்வு அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்று அறிய சில நிபந்தனைகள் வேண்டும். அந்த தரிசனமானது குறிப்பிட்ட இலக்குகளையும் தொலை நோக்குகளையும் கொண்டிருக்க வேண்டும். அந்தத் திருச்சபைதான் எத்திசை நோக்கி சென்று கொண்டு இருக்கிறதென்பதையும் அதன் இலக்கை நோக்கி முன்னேறுகிறதா என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

## சிறிய திருச்சபைகள் வளர்வதற்காக சில வலிமை மிக்க கூட்டுச் சக்திகள்.

a: **ஜீவன்.**

இயேசு சொன்னதாவது, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." (யோவான் 10:10) ஆனால் சில திருச்சபைகளைக் கூர்ந்து கவனித்தால் இதை நீவிர் ஒருகாலும் உணர முடியாது. ஏனென்றால் ஒவ்வொன்றும் மிகவும் ஒழுங்காகவும், சுத்தமாகவும் இருக்கிறது. ஆனால் அது ஸ்தல ஸ்தாபன கல்லறைத் தோட்டத்தைப் போல சுத்தமாக இருக்கிறது. கர்த்தருடைய ஜீவன் மிகவும் ஆற்றல் வாய்ந்ததும் வல்லமை உள்ளதும் புத்துணர்ச்சி அளிக்கும் ஓர் ஆபூர்வ மூலமாகும். அது நிச்சயமானதோர் போதை போன்றதோர் உணர்வைத் தருவதாகும். அதை ஒரு தடவை நீவிர் ஈடுபாட்டுடன் அனுபவித்தால் அது இல்லாமல் நீவிர் உயிர் வாழ முடியாது. ஒரு தடவை மக்கள் அதை உணர்ந்து, கண்டறிந்து அதை அடைய விரும்பி அதன்

பூரண நிறைவேற்றுதலை உடைமையாக்குவார்கள். <u>ஒவ்வொரு திருச்சபையும் ஜெபத்துடனும், விசுவாசத்துடனும், துதியுடனும், களிப்புடனும் தேவனுடைய பிரசன்னத்தையும் அவருடைய ஜீவனும் வெளிப்படும்பொழுது அதை அனுபவித்து உணரவேண்டும்.</u>

**b: சத்தியம்.**

இயேசு சொன்னதாவது, ‘‘சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்’’ என்றார். (யோவான் 8:32) தேவனுடைய சத்தியமாவது, நிலையற்ற சாதாரணமான உயிரற்ற ஒரு வஸ்து அல்ல. அது உயிர் துடிப்புடன், பிரமிப்பூட்டுவதும் மனக்கிளர்ச்சியுண்டாக்குவதுமாகும். அது ‘‘ஜீவனுள்ள சத்தியம்’’ இயேசுவே அந்த சத்தியத்தின் மொத்த உருவகமும் ஆவார். ஆகவே ஒரு திருச்சபையில் கர்த்தருடைய பிரசன்னமாவது உண்மையாகவே நிறைந்திருக்குமானால் அது மரபு வழிகளையோ, வீண் கிரியைகளான சடங்காச்சாரங்களையோ, மயான அமைதியான உயிரற்ற தன்மையையோ அறிமுகப்படுத்துவதில்லை. இதன் எதிர்மறையே உண்மையாகும். அவருடைய சத்தியம் மனதில் விடுதலை அளிப்பதுடன், உயிர்ப்பிக்கும் சக்தியாகவும் உலகில் விளங்குகிறது. அதை நிறுத்தி அந்த ஜீவனைக் குறைக்காதே. அதை சமய சார்பான சடங்காச்சார கிரியைகளுக்குள் புதைத்து விடாதே. அதை பழமை விரும்பியாக குறைத்து விடாதே. ஆகவே ஜீவனுள்ள சத்தியம் நின்று விளங்கட்டும் அவருடைய பூமியிலுள்ள திருச்சபை பிரகாசம் அடையட்டும்.

**c: நோக்கம்.**

அநேகமான ஜனங்கள் திருச்சபையானது காலத்திற்கேற்ப தேவையற்றதாகவும், நோக்கமற்றதாகவும் இருப்பதாகத் தீர்மானிக்கின்றனர். இது அவர்களுக்கு அதனுடன் ஏற்பட்ட மேலோட்டமான தொடர்பினால் உண்டாகும் நயந்த போக்காகும். ஆனால் காரியம் என்னவென்றால் தேவனுடைய இரட்சிப்பின் நோக்காவது தற்காலிகமாக அவருடைய திருச்சபையில் கிரியைகளை நடப்பித்து வெகு சீக்கிரத்தில் எல்லாரும் காணும்படி பூமியில் பிரத்தியட்சமாகுவதே இன்று உலகத்திற்கு அவசியமான அர்த்தமுள்ள நோக்கமாகும். ஒவ்வொரு சபையும் கர்த்தருடைய இரட்சிப்பின் நோக்கத்தை அறிந்து முற்றிலும் விழிப்புணர்வுள்ளவர்களாகி அதை அவர்களுடைய முழு ஆத்துமாவோடும் பின்பற்றத் தொடங்க வேண்டும். ஒரு தடவை அந்த திருச்சபை பலமுடன் அதில் ஒன்றிப் போய் கர்த்தருடைய உன்னதமான நோக்கத்தின் நிறைவேறுதலுக்காக முழு மூச்சுடன் ஊழியம் செய்தும் வந்தால் அது ஒருவரும் தடுத்து நிறுத்தக் கூடாத ஒரு மகத்தான பணியாகும்.

**d: நடபடிக்கைகள்.**

நான் இங்கே நிகழ்ச்சிகளின் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. மேலும் முடிவில்லாத விளையாட்டும் திருச்சபையைப் பற்றியும் பேசவில்லை. ஆனால் ஜனங்களுக்கு மத்தியில் இடைபடும் தேவனுடைய செயல்பாடுகளையே குறிப்பிடுகிறேன். அதீதமான வேகத்துடன் செயல்பாடுகளுடைய பரிசுத்த ஆவியானவரது வேகம் மிகுந்த நடபடிக்கைகளை, அந்த ஆவியானவரை உண்மையாகவே திருச்சபையை பொறுப்பில் விட்டுவிட்டால் மட்டுமே அவற்றை அனுபவத்தில் உணர முடியும். அவை சொஸ்தமாக்குதல், விடுதலை, சிறைப்பட்டவர்களுக்கு மீட்பு, சொல்லி முடியாத சந்தோஷம், மகிமையின் நிறைவு ஆகியவற்றைக் கொண்டு வந்து தந்து விடும். எங்கெல்லாம் ஆரோக்கியமான ஜீவியம் உண்டோ அங்கு ஆவியின் செயல்பாடுகளும் உண்டு.

**e: நட்பு என்ற சிநேகம்.**

சிறிய திருச்சபைகள் மிகவும் சிறப்பாக விளங்கக்கூடிய அம்சங்களில் ஒன்று சிநேகித உறவாகும். ஒரு சிறிய கூட்டத்தில் ஒருவருக்கொருவர் அந்நியோந்நியமாக பழகும் உணர்வைப் பெருக்கி வளர்த்தல் எளிதாகும். என்னவென்றாலும் இது தானாகவே அந்தக் குழு மிகச் சிறியதாக இருக்கும் காரணத்தினால் மட்டும் உண்டாகாது. அதை அன்புடன் வளர்த்து தாங்கி வர வேண்டும். ஏனென்றால் இந்த சிறு குழுக்கள் தன்னாய்வு செய்பவர்களாகவும் உட்குழுக்களாகவும் பிரியக் கூடும் என்பது உண்மையாகும். இந்த விதமான அபாயம் எந்த வித முயற்சிகளாலும் தவிர்க்கப்பட வேண்டும்.

**f: நம்பிக்கை**

நம்பிக்கை என்பது நேரிடையானது. நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்புகள் உடையது. இந்த விதமான ஓர் ஈடுபாட்டுக்காகவே உலகில் கணக்கற்றவர்கள் ஏக்கத்தோடு எதிர்பார்க்கின்றனர். தேவனுடைய இராஜ்ஜியம் என்பது மட்டுமே இந்த விதமான நம்பிக்கைக் கொடுக்கக்கூடிய

செய்தியாகும். இந்த இராஜ்ஜியம் ஏற்கனவே தற்காலத்தில் இருக்கின்றது. ஆனால் இன்னும் வெளிப்டுத்தப்படவில்லை. இந்த இராஜ்ஜியத்தைப் பற்றிய உண்மையான வெளிப்பாடுகள் இன்றைய நாட்களில் திருச்சபையில் வல்லமையாக காணக் கிடக்கின்றது. ''அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.'' (ரோமர் 14:17) வருங்காலத்தில் கர்த்தருடைய மகிமையான பூமியில் அரசாட்சி செய்தல் விரைவில் வரவிருக்கின்றது. உலகத்தின் இராஜ்ஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகலாங்களிலும் ராஜ்ய பாரம் பண்ணுவார். (வெளி 11:15)

ጀ: **சுற்றுப்புற சூழ்நிலை**

சூழ்நிலைமை என்பது மிகவும் முக்கியமானதும் திறனாய்வு பற்றியதுமான ஒரு செயலூக்கத் திருச்சபையின் அம்சமாகும். எனினும் அதை விளக்கம் சொல்லுவதோ வரையறுத்து சொற்பொருள் விளக்கம் கூறுவதோ மிக மிகக் கடினமாகும். புதிய விசுவாசிகளுக்கு மற்றெல்லாவற்றையும் மிக முக்கியமாக மனதில் ஆழமாகப் பதிவது என்னவென்றால் கர்த்தருடைய பிரசன்னத்திலும் அவரது மக்களுடனும் அனுபவிக்கும் சூழ்நிலைமை ஆகும். நாம் இந்த விசேஷமான சூழ்நிலைமைக்குள் ஒருங்கிணைந்துள்ள பல்வேறு உப கருப்பொருட்களைக் கருத்தில் கொண்டாலும் இன்னும் அவர்களுக்குள் வல்லமையாகவும், ஆழமாகவும் பதிய வைக்கும் அந்த ஒன்றை முழுவதுமாக விளக்கிக் கூறுதல் கடினம். ஐயப்பாடு எதுவுமின்றி அங்கே எண்ணற்ற விளக்கக் கூடிய காரணங்களானவை சங்கீதம், விடுதலை, மகிழ்ச்சி, துதி ஆராதனை போன்றவை இருந்தாலும் இவை எல்லாவற்றிற்கும் அப்பால் ஏதோ ஒன்று அமானுஷ்யமாக பிரசன்னமாகி உள்ளது. அது தான் பரிசுத்த ஆவிக்குள் விளக்கிக் கூற முடியாத கர்த்தருடைய பிரசன்னமே. இந்த சூழ்நிலைமையை நாம் மிகவும் மதித்து பெற வேண்டியதொன்றாகும். அதன் மதிப்பை கணிக்க முடியாத விலையேற்ற பெற்ற ஒரு காரியமாகும்.

முடிவுரை.

திருச்சபையைப் பற்றிய இந்தக் கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொண்டும், சில நியாயமான வளர்ச்சியை அனுபவத்தில் காண முடியா விட்டாலும் நான் இந்த விஷயங்கள் அனைத்தும் விதி முறை அல்ல விதி விலக்குகளே என்று வற்புறுத்திக் கூறி முடிக்கிறேன்.

ஆனால் எவற்றிற்கெல்லாம் ஜீவன் உண்டோ அவையெல்லாம் விருத்தி அடைந்து வளர்ச்சி அடைய வேண்டும் என்பது பொதுவானதோர் கருத்துக் கொள்கை ஆகும். ஆனால் அந்த ஜீவனுள்ளது ஆரோக்கியமானதாக இல்லாவிட்டால் இந்த வளர்ச்சி நேரிட முடியாது. திருச்சபையைப் பொறுத்தமட்டில் அது எதிர்பார்ப்புகளுடன், வளர்ச்சியை அடைந்தாலன்றி இது பயன்படாது.

விருத்தி, வளர்ச்சி, விரிவடைதல் ஆகியவை வரவேற்கப்பட்டு ஒவ்வொரு திருச்சபையாலும் அடையப் பெற வேண்டிய பாங்குகள் ஆகும். என்னவென்றாலும் தலைமைத்துவம் விசுவாசத்தையும் எதிர்பார்ப்புகளையும் ஊக்குவித்தாலன்றி அது அங்கே செயல்பட முடியாது.

## அதிகாரம் 10 - சராம்சத்தைக் கூறுவோம்

இந்த இறுதியான அத்தியாயத்தில் திருச்சபை அடைய வேண்டிய வளர்ச்சிக்கான பலவிதமான இந்த காரண காரியங்களை திரும்பவும் வற்புறுத்தி கடைசியாக முடிவான கருத்துக்களான சிந்தனைகளை இந்த முக்கியமான தலைப்புக்காக அறிமுகம் செய்வோம்.

## 1. வளர்ச்சி என்பது ஜீவியத்தில் இயற்கையாக அமைந்துள்ள நடைமுறையாகும்.

கர்த்தர் சிருஷ்டித்த ஒவ்வொன்றும் தனக்குள் வளர்ச்சி முறையையும், விருத்தியடையும் நிகழ்ச்சியையும் தானே உள்ளடக்கி இருக்கின்றன. இது இயற்கையின் அடிப்படையானதோர் நியமம் ஆகி சிருஷ்டிப்பின் எல்லா அம்சங்களிலும் வெளிப்பாடாகின்றன. இந்த பொது நியமத்திற்கு விதி விலக்காவது பொதுவாக மரபு வழி அவயவ குறைபாடுகள் ஆகி அவைகள் அசாதாரணமானவை என்று கருதப்படுகிறது. இதற்கான மற்ற காரணங்களாவது விருத்தியையும் ஆரோக்கியமான வளர்ச்சியையும் தனக்குள்ளே உள்ளடக்கி வைத்து இருக்கும். ஏதாவது ஒரு நோயாய் இருக்கலாம். இயேசுக் கிறிஸ்துவின்

திருச்சபையானது சிறப்பாகவும் முதலாவதாகவும் உள்ள ஒரு ஜீவனுள்ள உயிரி ஆகும். ஆகவே இந்த தெய்வீகத்தால் முன் குறிக்கப்பட்டவைக்கு அப்படியொரு விதி விலக்கு இல்லை. ஏனென்றால் அது தானே தனக்குள் கட்டி அமைக்கப்பட்ட அம்சங்களுடன் இருப்பதால் அவை சரிவர கவனித்துப் பாதுகாக்கப்பட்டால் ஆரோக்கியமான வளர்ச்சியை அடைய முடியும். மிகவும் கடினமான சூழ்நிலைமைகளிலுங்கூட இது உண்மையாகும். என்னவென்றாலும் திருச்சபையானது மரபு அணு குறைபாடுகளோ அல்லது பரம்பரையாக சுதந்தரிக்கப்பட்ட நோய்களின்றி சுயமாக அமைந்திருக்க வேண்டும்.

மரபணு குறைபாடுகள் பொதுவாக பிரசவத்தின்போதும் அல்லது குழந்தை பிறப்பின் சமயத்திலும் உண்டாகும். அவைகள் திருச்சபைப் பிறப்பின் காலத்தில் அறிமுகம் ஆகும். சில குறைகளும், சில தவறுகளுமாம். அவைகள் பொய்யான உபதேசமாகவும் இச்சை அடக்கமில்லா நடத்தை, வேதாகமத்தின் படி அல்லாத அஸ்திபாரங்கள் அவைகள் வளர்ச்சியை உள்ளுக்குள் அரித்துத் தடைபடுத்தி விடுவதாலும் உண்டாக்கப்படுகிறது. ஏனென்றால் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இந்த விதமான திருச்சபை பெற முடியாது.

பரம்பரையாக அனுபவிக்கும் வியாதிகள் பாவமான சூழ்நிலைமைகளில வெளிப்படுகிறது. ஏனென்றால் அவைகள் கண்டிப்பின்றி வளரும்படி அனுமதிக்கும் காரணத்தினால் ஆகும். அதிர்ஷ்டவசமாக அவற்றிற்கு வேதாகமத்து பரிகாரங்களான, பாவ அறிக்கை, மனந்திரும்புதல், இழந்ததை திரும்ப பெறுதலும், மீண்டும் முந்திய நிலையை பெறுதல் ஆகியவை உள்ளன. இந்த பரிகாரங்களை நம்பிக்கையுடன் அளித்தால் அதனால் உண்டாகும் பலன்களாவது வழக்கமாக ஆவிக்குரிய புதுப்பித்தலும் மீண்டும் உயிர் மீட்சி பெறுதலுமே. ஆரோக்கியமான வளர்ச்சி என்பது பல திசை கோணங்களில் அமைந்து சமநிலையில் உள்ளதாகும். சம நிலையை அடைதல் என்பது அடிக்கடி ஆரோக்கியமானது சீரானதுமான வளர்ச்சிக்குத் திறவுகோல் ஆகும்.

திருச்சபை என்பது முதலாவதாக ஒரு ஆவிக்குரிய உயிரியல் ஜந்துவாகும். மேலும் அது ஒரு மனிதவர்க்கத்து அமைப்பாகும். அது தெய்வீகமும், மனுஷீகமும் சேர்ந்த ஒரு கலந்த அமைப்பாகும். ஆவிக்குரியதாகவும் இயற்கையாகவும் அமைந்து ஒரு சமநிலையாகவுள்ளதும் அதை மிகவும் அழுத்தமான மனநிலையில் வைத்திருக்க வேண்டிய தொன்றாகும். இந்த வளர்ச்சியின் சில அம்சங்களை அவைகளின் தேவைகளின் வரிசையில் முன் வைத்தும் சீரான வளர்ச்சியைப் பெற ஒரு சம நிலையில் வைத்து பராமரிக்கப்படுவது அவசியமாகும். அவைகளாவன:

- a: ஆவிக்குரிய ஜீவியம்
- b: எண்ணிக்கையில் பெருக்கம் அடைதல்
- c: ஒன்றை ஸ்திரமாக ஸ்தாபிக்கும் நுட்ப திறன்களும் திறமைகளும்.

இவைகள் திருச்சபையின் ஜீவியத்திலும் விருத்தியிலும் பெருக்கத்திலும் அமைந்துள்ள மூன்று முக்கியமான பாங்குகள் ஆகும். அவைகளில் ஒன்றையும் அசட்டையாய் விட்டு விடுவதோ அல்லது வீணென்று கருதவோ கூடாது. உண்மையாகவே அதற்கு காரணமான சீரானதும், ஆரோக்கியமானதுமான வளர்ச்சிக்கு அவைகளை ஒன்றுக்கொன்று ஓரே வேகத்தில் விருத்தி செய்ய வேண்டும்.

## 2. சில அடிப்படையான இன்றிமையாத உண்மைகள்.

எந்த ஒரு திருச்சபையிலும் சீரானதொரு வளர்ச்சியை அடைய வேண்டுமானால் சில உண்மையான நிகழ்ச்சிகளை சந்திக்கவும் அவைகளை ஒப்புக் கொள்ளவும் வேண்டும்.

a: திருச்சபை வளர்ச்சி அடைவதில் விருப்பம் கொள்ளவேண்டும். இது வளர விரும்புவதற்கு விருப்பத்தை விட அதிகமானது. அது தான் வளர்ச்சி அடைவதற்குச் சித்தமான ஆவலாகும். அதுவே ஒரு வாஞ்சையும், ஒப்புக் கொடுத்தலும் கொண்டு வளர்வதற்கு நேரிடுவதானவற்றை பார்க்க விரும்புவதாகும்.

b: அந்த வளர்ச்சிக்குப் பெறுமதியான விலையைக் கொடுக்க அந்தத் திருச்சபை தயாரான விருப்பம் உடையதாய் இருத்தல் அவசியம். இதை இவ்விடத்திலே சந்திப்போம். அங்கே நாம் விலையாகச் செலுத்த வேண்டிய ஒரு தொகை உண்டு. அது சில சமயங்களில் மிகவும் அதிகமாக உயர்ந்ததாகவும் இருக்கும். இந்த விலையானது முயற்சி, உழைப்பு மனித நேயங்கள், பணம்,

தியாகம் இவற்றில் அடங்கும். இயேசு நமக்கு உழைக்கும் பணியாளர்களே அறுவடையைக் கொண்டு வருவார்கள் என்று நினைப்பூட்டுகிறார். அங்கே வசதிக் குறைவுகள், ஏமாற்றம், வளர்ச்சியில் தடைகள் உண்டாகலாம். சில சமயங்களில் ஒரு இரவு முழுவதும் அழும்படி நேரிடலாம். ஆனால் காலையில் மகிழ்ச்சி உண்டாகலாம்.

c: ஆகவே அந்தத் திருச்சபைக்கு அவசியம் சில குறிப்பிட்ட கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பது தேவை ஏற்படும். எந்த இரண்டு திருச்சபைகளும் ஒன்று போல் இராது. ஒவ்வொரு கூடிவரும் சபையும் ஒழுக்க நெறியில் ஒரு தனித் தன்மையை பெற்றிருக்கும். ஆனால் அறுவடைக்கும் பெருக்கத்திற்கும் என்று ஏற்பட்ட சில கொள்கைகள் உண்டு. பெருக்கத்தை அடைந்து அனுபவிக்க வேண்டுமானால் இவற்றைக் கைக் கொண்டே ஆக வேண்டும். ஒவ்வொரு அறுவடைக்கும் முன்னதாக உழவு, விதைத்தல், நீர் பாய்ச்சுதல், சூரிய வெளிச்சம் ஆகியவை முன்னதாக அவசியமானவை. இந்தக் கொள்கைகள் மாறாதவையும், தவிர்க்கக் கூடாதவையாகும். இவைகள் கைக் கொள்ளப்படவேண்டும்.

## 3. நாம் ஒரு மெய்யான மதிப்பீட்டைச் செய்வோம்.

‘‘உண்மையாகவே சிறந்த கொள்கை’’ என்பது நன்கு அறியப்பட்ட முதுமொழி. ஆனால் ஒரு திருச்சபை வளர்ச்சியை செயல்படுத்தும் நியதிகளில் அது அந்த ஒரே விதமான நடைமுறைக் கொள்கை ஆகும். நாம் நமது உண்மையான சந்தர்ப்ப நிலையை ஒப்புக் கொண்டாலன்றி நாம் ஒருக்காலும் அதற்காக மிகவும் கடினமானதோர் நோக்கத்தோடு பரிகாரத்தைத் தேடிக் கொள்ள முடியாது. ஒரு திருச்சபையின் ஆரோக்கியமான வளர்ச்சியை நிர்ணயிக்கும் நம்பக்கூடிய வழிமுறைகள் உண்டு. நாம் அவைகளை தைரியமாகவும் போதுமான உண்மையான முறையிலும் பொருத்திக் கொள்ள வேண்டும்.

நாம் உண்மையுடன் பரிசீலனை செய்து அந்த சூழ்நிலைமையை மூன்று இன்றியமையாத பகுதிகளில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

**a: ஆவிக்குரிய ஜீவியமும் சாட்சியும்**

நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் நமது ஐக்கியத்தின் தன்மையாது?
(இதை 1-10 என்ற அளவு முறையில் செத்துப் போனவற்றிற்கும் வல்லமை ஊக்கமுடையதற்கும் இடையில் அளவிடுக)
நமது செயலூக்கமானது ஸ்தல சமுதாயத்தில் எவ்வளவு பாதிப்பை உண்டாக்குகிறது?
(இதையும் 1-10 என்ற அளவு முறையில் நடைமுறையில் இல்லாதவற்றிற்கும் வல்லமையான தென்பதற்கும் இடையே அளவிடுக)
ஏதாவது ஒரு திருச்சபையின் ஆரோக்கியத்தை மற்றவைகளோடு ஒப்பிடும்பொழுது சுலபமாகும். அடுத்து வரும் ஓய்வு நாளில் சாதாரணமாக இரண்டு கேள்விகளைக் கேளுங்கள்.

1: திருச்சபை ஊழியத்தில் எத்தனை பேர் சுறுசுறுப்பாக ஈடுபடுகிறார்கள்?
 50%க்கு மேல் = ஆரோக்கியமானது.
 30%க்கும் குறைவு = நோய்வாய்பட்டது.
 20%க்கும் குறைவு = செத்துப்போனது.

2: இந்த ஆண்டில் எத்தனைபேர் மறுபடி பிறந்தவர்கள்?
 10%க்கு மேல் = ஆரோக்கியமானது
 5%க்கும் குறைவு = நோய்வாய்பட்டது
 ஒருவருமில்லை = செத்துப்போனது

**b: எண்ணிக்கையில் அதிகரிப்பு**

எண்ணிக்கையில் அதிகரிப்பாவது ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு எடுத்துக்காட்டும் ஒரே ஒரு அடையாளம் ஆக முடியாது. ஆனால் அது மிகவும் முக்கியமானது. பின்வரும் அட்டவணைக் குறிப்பு ஒரு திருச்சபை வளர்ச்சியை பிரித்து ஆராய்பவரால் தொகுக்கப்பட்டது. அது பத்தாண்டு கால அளவை வேகத்தை அடிப்படையாகக் கொண்டது. (10 ஆண்டு கால அளவு)

 25% = மிகவும் இரங்கத்தக்கது.
 50% = சிறிது நலமானது.

100% = நலமானது.
200% = மேன்மையானது.
300% = ஆச்சரியப்படத்தக்கது.

**c: ஸ்தாபன அமைப்பின் செயலூக்கம்**

ஆதித் திருச்சபையானது அப்போஸ்தலர்கள் தங்களது நிர்வாகத்தின் பிரச்சனைகளின் உச்ச கட்டத்தை அடைந்தபொழுது மிகவும் உயர்ந்த வேகத்துடன் இயங்க ஆரம்பித்தது. தங்களது குழு ஊழியத்தை விரிவாக்கம் செய்தார்கள். தங்கள் பணிகளை முன்னிலைப்படுத்தினர். நிர்வாகப் பணிகளையும் தகுதி படைத்தவர்களிடம் பிரித்துத் தந்தனர்.

திருச்சபை வளர்ச்சியின் ஆவிக்குரிய அம்சங்களானவை மிகவும் வெளிப்படையாக முக்கியத்துவம் உடையது. ஆனால் ஸ்திரமான ஸ்தாபன அமைப்பும், நிர்வாகமும் கூட மிக மிக முக்கியமானவை ஆகும். திருச்சபையானது பெரிதாக வளர வளர இந்தப் பிரச்சனைகளும் அதிகமான முக்கியத்துவம் பெறுகின்றன.

## 4. நம்முடைய மெய்யான நோக்கமாவது என்ன?

ஒரு திருச்சபையின் உண்மையான ஆரோக்கியத்தை அதனுடைய நிறைவடைதலில் அல்லது அதன் உண்மையான நோக்கத்துடன் சம்பந்தப்படுத்தி அதைக் கண்டு யூகித்து அறிந்து கொள்ளலாம். அது உண்மையாகவே ஒரு சுவிசேஷ பிரபல்யத் திட்டத்தை நிறைவேற்றுகிறதா? எப்படி செயலூக்கத்துடன் நிறைவேற்றப்படுகிறதா? ஆகவே நாம் புதிதாக மறுபடியும் நம்மை நாமே வினாக்களால் கேட்டு அறிய வேண்டும்.

இந்த உலகில் திருச்சபையானது எதை இங்கே உண்மையாகச் சாதித்து நிறைவேற்றப் போகிறது?
நமது திருச்சபை எதைக் குறிப்பாகச் சாதிக்க வேண்டும் என்கிறது?
நாம் இலக்கை நோக்கித் தொடர்கிறோமா?
நாம் உண்மையாகவே நமது திட்டத்தையும் நோக்கத்தையும் தேவனுடைய திருப்திக்கு நிறைவேற்றுகிறோமா?

<u>இயேசுக் கிறிஸ்துவின் திருச்சபையின் ஆரம்ப நோக்கத்தின் பயன்களாவது.</u>

- கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பின் நற்செய்தியை பிரஸ்தாபிக்கிறோம்.
- கிறிஸ்துவுக்காக ஜனங்களை ஆதாயப்படுத்துகிறோம்.
- அவருடைய சரீரமாகிய சபையுடன் ஒருங்கிணைக்கிறோம்.
- அவர்களை சீஷர்கள் ஆக்குகிறோம்.
- மற்றவர்களையும் ஆதாயம் செய்யும்படி தூண்டுவோம்.
- இயேசுவின் இராஜ்ஜிய பாரத்திற்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிறோம்.

நமது மதிப்பீடு மிகவும் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் குறைபாடு உடையவர்களாயிருந்தால் இயேசுவின் வார்த்தைகளுக்கு செவி கொடுக்க வேண்டும். ‘‘ஆகையால் நீ இன்ன நிலைமையில் இருந்து விழுந்தாய் என்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லா விட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்.’’ (வெளி 2:5)

## 5. நியாயமான முன்னுரிமைப் பட்டவைகளை ஸ்தாபித்தல்

முன்னுரிமை படுத்துதல் என்பது மிகவும் முக்கியமானவைகளை கண்டு அறிந்து அவைகளுக்கு முதல் கவனத்தையும் ஆழ்ந்த சிந்தனையையும் தர வேண்டும். அநேக திருச்சபைகளில் ஏற்படும் துன்பமான சோக நிகழ்ச்சிகளுக்கு காரணம் அவைகள் குறைந்த முக்கியம் பெற்ற காரியங்களுக்கு அதிகமான முக்கியத்துவம் தருவது தான். அதன் பயனாக அதிகமான செயல்பாடுகளும் கால விரயமும் பண விரயமும் செய்யப்பட்டு அதிகக் கவனம் பெரும் காரியங்கள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகிறது.

நாம் (உலகில்) இருப்பதன் காரணம் யாது? நமக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட திருச்சபை சம்பந்தப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுகிறோமா? அங்கே கவனிக்கப்பட வேண்டிய

அடித்தளத்து வேலைகள், ஆரம்பப் பணிகள் அஸ்திபாரங்கள் இருக்கின்றன. நாம் அவைகளைச் செய்கிறோமா என்று நம்மை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லவென்றால் மனம் வருந்த நேரிடும். (வெளி 2:5)

## 6. வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஆன யுக்தி முறைகள்.

நாம் யுக்திப் பிரயோகம் என்பதைச் சாதாரணமாக, பிற்காலத்திற்காக பொறுப்பான திட்டங்களைச் செய்தல் என்பதாகப் பார்த்தோம். அந்த விதமான திட்டங்களும் ஆழ்ந்த ஆராய்தலின்றி உண்மையான நோக்கத்தை நாம் சாதித்தல் என்பது ஒருக்காலும் முடியாததாகும். ஆகவே நாம் அதைச் செய்வோம். செயலூக்கமான யுக்திகள் என்பதில் அடங்கி இருப்பவை:

a: நோக்கத்தைப் பற்றியதோர் தெளிவு (நாம் உண்மையாக எதை நிறைவேற்ற விரும்புகிறோம்)
b: ஆழமான வாஞ்சை (நம்முடைய இருதயம் இதில் ஈடுபாடு கொண்டுள்ளதா)
c: வருங்காலத்திற்கான வெளிப்பாடுகளையும் தேவைகளையும் அறிந்து கண்டு கொள்ளும் திறமை.
d: எல்லா விதமான கோணங்களையும் பரிசீலனை செய்.
e: தீர்வுகளை முன்னறிவித்துக் கொள். (நீண்ட காலம், குறுகிய காலத்தினுடையவை)
f: எல்லா விதமான தேவைகளையும் சேர்த்துக் கொள். (ஆள் பலம், தளவாடங்கள், வரவு செலவு திட்டம்)
g: எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக் கொள். (ஒரு முற்றிலும் பூரணமான செயல்பாடாக ஆக்குக.)

## 7. சரியான வகை முறையான திட்டங்கள்.

யுக்தி செயல்பாடாவது துரதிஷ்டத்தைக் கண்டறிந்து பிறகு யோசனை செய்து, தூரப் பார்வையின் வெளிச்சத்தில் திட்டமிடு. திட்டமிடுதல் என்பது யூக்தியை செயலில் செய்து காட்டுவது ஒவ்வொரு யுக்தி முறையும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாக ஆக வேண்டும். ஒவ்வொரு கருத்துக்கும் நடக்கக் கால்கள் தரப்பட வேண்டும். அந்த நிகழ்ச்சி நிரலாவது எப்படி நமது கருத்துக்களும் திட்டங்களும் உண்மையாக செய்து காட்டப்படவேண்டும்.

## 8. செயலூக்கமான தலைமைத்துவத்தின் முக்கியம்

தலைமைத்துவம் என்பது செயலூக்கத் திறன்பாட்டுக்கு இறுதியான திறவுகோல் ஆகும். அதற்கு வெற்றிக்கும் ஆத்ம திருப்திக்கும் முன் செல்வதற்கான முடிவான வல்லமையுண்டு அல்லது அதைத் தடுத்து நிறுத்தி முன்னேற்றத்தை குறைக்கவும் முடியும். சரியான தலைமைத்துவம் உடையவர்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்வது திறனாய்வின் சிறப்பு ஆகும்.

## 9. சீஷர்களை உண்டாக்குதல்

தேக்கம் என்பதற்கும் வளர்ச்சி என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்பது அங்கத்தினர்களுக்கும் சீஷர்களுக்கும் உள்ள வித்தியாசமே. விசுவாசிகளை சீஷர்களாக்குவது மிகவும் உன்னதமான சிறப்பு வாய்ந்தது. அநேகமான பிற பொறுப்புகளுக்கிடையில் அதற்கு முன்னுரிமை கிடைக்கும். மிகவும் அத்தியாவசியமும் இன்றியமையாத அங்கமான மகா திட்டமாவது ‘‘சகல ஜாதிகளையும் சீஷராக்குவது தான்’’ (மத் 28:19-20)

## 10. பரிசுத்தவான்களை நன்னெறியில் கட்டி எழுப்புதல்

அப்போஸ்தலர் ஊழியங்கள் எல்லாவற்றிற்கும் இது ஆரம்பத்தில் முதன்மையான பணியாக இருக்கிறது. (எபேசி 4:11-12) பயிற்றுவிக்க நல்லொழுக்க நெறியில் கட்டி எழுப்ப, எல்லா பரிசுத்தவான்களையும் ஆயத்தம் செய்து திருச்சபையாகிய சரீரத்திற்கு ஊழியம் செய்ய அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்கு -வதாகும். ஊழியர் என்பவர் தாமாகவே எல்லா ஊழியங்களையும் செய்ய முயற்சிக்கக் கூடாது. அவர் தனது முன்னதான பணியாக மற்றவர்களைப் பயிற்றுவித்து தன்னுடன் அவர்களை ஊழியம் செய்யுமாறு வைக்க வேண்டும்.

## 11. செல் குழுக்களின் முக்கியத்துவம்

இந்த செல் குழுக்களின் கட்டுமான அமைப்பும் அதன் உள்ளடங்கியவைகளும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையின் அங்கமாக அதன் ஆரம்ப காலத்திலிருந்தே செயல்படுகிறது. நமது ஊழியங்களின் சில அம்சங்கள் ஒன்றுக்கொன்றுடன் அவைகள் தொடர்பு கொண்டு பணியாற்ற சிறிய குழுக்களின் சூழ்நிலைமைகளிலன்றி மற்ற சமயங்களில் இயங்க முடியாது. இந்த சூழ்நிலைமையின் முக்கியத்துவமானது திருச்சபைக்கு அது எப்பொழுதும் இருந்தபடியே (நேற்றும் இன்றும்) இன்றும் செயல்பாட்டில் இருக்கிறது. அதன் முக்கியத்துவம் வருங்காலத்தில் சம்பவங்கள் உலகில் நேரிடுங் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு கட்டளையாக கவனம் எடுத்துக் கொள்ளும் விசுவாசிகளின் சிறு குழுக்கள் சம்பந்தப்பட்ட வரையில், மிகவும் அதிகமாகப் பெறுகிறது.

## 12. சுவிசேஷ பிரபல்யமே இறுதியான திறவுகோல்

சுவிசேஷ பிரபல்யம் அதாவது இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பது நமது முன்னுரிமைகளில் முதலாவதாக இருக்க வேண்டும். அது அந்த சூழ்நிலை மண்டலத்தில் ஊடுருவி திருச்சபையின் எல்லா பகுதிகளிலும் செல்ல வேண்டும். நமது திட்டங்கள் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் அது புறநோக்குடன் இருக்க வேண்டும். விசுவாசிகள் சுவிசேஷ பிரபல்யத்திற்காக ஜீவித்து அதை சுவாசிக்க வேண்டும்.